வாழ்க செங்குந்தம்
வளர்க ஒற்றுமை

ஈரோடு மாவட்ட செங்குந்த மகாசன சங்கம் - ஈரோடு



சிறப்பு மலர் - 1990



ஈரோடு 10·3·90

உ

வாழ்க செங்குந்தம்! வளர்க ஒற்றுமை!!

பெரியார் மாவட்ட

செங்குந்த மகாசன சங்கம்

மாநாடு



★ சிறப்பு மலர் ★

10-3-1990

ஈரோடு.

வணக்கம்.........

வீரத்தால் - கொடையால் — அறிவால் - உழைப்பால் உயர்ந்த இனம் நம் செங்குந்த இனம் ஆயுதம் ஏந்திப் போர்முனையிலும், இயற்றியதை ஈந்த அறநெறியிலும், இலக்கியம் பலபடைத்தும் ஏற்றமிகு கருத்துகள் உருவாக்கிய ஞான வழியிலும், ஊக்கத்துடன் உழைத்து ஆக்கம் பலகண்ட தொழில்துறைகளிலும் நம்மவர்கள் கொடுமுடிகளைத் தொட்டுள்ளனர்.

வீரவாகுவையும், ஒட்டக் கூத்தரையும், வள்ளல் பச்சையப்பரையும், கொடிகாத்த குமரனையும் எண்ணி நாம் பெருமைப் படலாம் நம் இனத்தார் ஈட்டிய புகழை நாம் சொல்லித் திரிவது போதுமா? நாமும் புகழ்ஈட்ட வேண்டாவா? புவியில் யாருக்கும் சளைத்தவர் அல்லர் என்ற மொழியை நாம் பெறவேண்டாவா? கல்வித்துறையில், அறத்துறையில், அறிவியல் துறையில், தொழில் துறையில் சான்றவர்கள் என்ற பெயரை நாம் நிலைநாட்ட வேண்டாவா? இதற்கு என்ன செய்ய வேண்டும்! உழைக்க மேண்டும். மேலும் உழைக்க வேண்டும்! ! மேலும் மேலும் உழைக்க வேண்டும்!!!

பெரியார் மாவட்டத்தில் நடைபெறும் பேரணியும் மாநாடும் பாரதம் எங்கும் பரந்திருக்கும் நம்மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் ''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப்பெறின்'' என்ற வள்ளுவரின் மொழியை மெய்ப்பிக்க நாம் திண்ணிய நெஞ்சம் படைத்தவராக தெளிந்த நல் அறிவு பெற்றவராக வாழ இம்மாநாடு வழிகாணவேண்டும்.

மாநாட்டு மலரைச் சிறந்த முறையில் மலர்ப்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பெரியார் மாவட்ட செங்குந்தர் குலத்தலைவர் கல்வித்தந்தை உயர் திரு. R. A. N. முத்துசாமி முதலியார் அவர்கள் பொறுப்பை நம்பிக்கையுடன் எங்களிடம் அளித்தார் 'செய்வனத் திருந்தச் செய்யவேண்டும்' என்பது அவர் எண்ணம் அந்த எண்ணத்தை எங்களால் இயன்ற அளவு ஈடேற்ற முடிந்திருக்கிறது என்று நம்புகிறேன்.

கவிதை-கட்டுரை வேண்டி நாங்கள் மடல் தீட்டியவுடன் பல மாவட்டங்களிலிருந்து நம் குலச் சான்றோர்களும், அறிஞர்களும் படைப்புகளை விரைந்தளித்தனர். அவர்களுக்கு நன்றி.

காலக்குறைவே எங்களுக்கு பெரும்பிரச்சனை. இதை எதிர்கொண்டு வெற்றி கண்டவர் சக்தி அச்சக உரிமையாளர் திரு. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள். அவருடைய அழகுணர்வுக்கு நன்றி.


இம்மலரின் சிறப்பிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பலர் உதவியுள்ளனர். அவர்களுக்கும் எங்கள் நன்றி.

மலரில் சிறப்பிருந்தால் பிறரிடம் கூறுங்கள் குறையிருந்தால் எங்களிடம் கூறுங்கள் மலரின் மணம் நுகர அழைக்கின்றோம்.

அன்போடு

மலர்க்குழு







தெய்வப் புலவர் திருவள்ளுவர்



கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்




தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகள்




பாவேந்தர் பாரதிதாசன்
புதுச்சேரி



சுதந்திரக் கொடிகாத்த
திருப்பூர் குமரன் செங்குந்தர் சிலை




மேன்மைமிகு. R. வெங்கட்டராமன் அவர்கள்
பாரத குடியரசுத்தலைவர்



பாரதப் பிரதமர்


மாண்புமிகு. விஸ்வநாத் பிரதாப்சிங்



டாக்டர் கலைஞர்

மு. கருணாநிதி அவர்கள்

முதலமைச்சர் தமிழ்நாடு




டாக்டர் பேராசியர்

க. அன்பழகன்

கல்வி அமைச்சர் தமிழ்நாடு

உ


முருகா



திருமுருக கிருபானந்தவாரியார்

வாழ்த்துப்பா

சீராரும் ஈரோடு செங்குந்தர் மாநாடு
பேராரும் மேன்மைநிறை பெற்றியுடன் - தாராரும்
எந்தை முருகேசன் இன்னருளால் இன்பமுடன்
செந்தமிழ்போல் வாழ்க செழித்து.




உத்யோகரத்னா


ஜெ. சுத்தானந்தன்

மாநிலத் தலைவர்


தென்னிந்திய செங்குந்தர் மகாசன சங்கம்



R.A.N. முத்துச்சாமி முதலியார்
தலைவர் பெரியார் மாவட்டச்
செங்குந்தர் மகாசன சங்கம்




RANA K. V. லட்சுமணன், M.A., B.Com., M.B.A.,



M. S. பழனியப்பன்

பொதுச் செயலாளர்
பெரியார் மாவட்டச் செங்குந்தர்
மகாசன சங்கம்



P. K. நஞ்சப்ப முதலியார்

பொருளாளர்
பெரியார் மாவட்டச் செங்குந்தர்
மகாசன சங்கம்


ஈரோடு நகர செங்குந்தர் சங்கம்



பெரியண்ண முதலியார்
துணைத் தலைவர்



A.D வெங்கடாசல முதலியார்
துணைத் தலைவர்



K. N. முருகேசன்
தலைவர்



A. P. கணபதி
செயலர்



B. P. மாணிக்கம்
இணைச் செயலாளர்




K. P. மணி
இணைச் செயலாளர்

பெரியார் மாவட்டச் செங்குந்த மகாஜன சங்கம்

துணைத் தலைவர்கள்




T. R. சுவாமிநாத முதலியார்




M. A. காந்தி



K. K. பாலுச்சாமி



A. K. ரங்கசாமி




V. S. N. பழனிவேலு

துணைத் தலைவர்கள்:
M K அருணாசல முதலியார்
S வெங்கடசாமி

செயலாளர்கள்:
Dr. M அண்ணாத்துரை
T ஜெகதீசன்

பெரியார் மாவட்ட செங்குந்தர் மகாசன சங்கம்
மாநாடு பேரணி - வரவேற்பு குழுவினர்




அதியூர்மணி என்கிற
D. இளங்கோ
அதியூர்



R. S. பெரியசாமி
சிவராம் ஆயில் மில்
தாராபுரம்




R. V. இராமகிருஷ்ணன்
முதல்வர்
ஈரோடு கலைக்கல்லூரி, ஈரோடு.



A. சுந்தரமூர்த்தி
சூரம்பட்டி வலசு
ஈரோடு



S. பெரியண்ண முதலியார்
துணைத்தலைவர்
நகர செங்குந்த மகாசன சங்கம்




S V பாலசுப்ரமணியம்




A M அவிநாசியப்பன்



குப்புசாமி முதலியார்
கவுந்தபாடி



K சண்முகம்
சண்முகா கட்பீஸ்
ஈரோடு




R நந்தகுமார்
A R ராமசாமி முதலி
& சன்ஸ்






யாளி மதிவாணன்
B.Com.,
ஈரோடு

N. சிவசுப்ரமணியம்
வீரப்பன் சத்திரம், ஈரோடு.



M. N. நாகப்ப முதலியார்
ஈரோடு





N. ராமலிங்கம்
ஈரோடு

P. S. ரங்கநாதன்
சூரம்பட்டி, ஈரோடு.




பிராபாத்
J. K. நாராயணன்
பவானி




சுந்தரம் என்கிற
V. P. சண்முகசுந்தரம்
ஜெகநாதபுரம்



கஸ்தூரி
A. குழந்தைவேல் முதலியார்
திருப்பூர்



P. அப்பாதுரை
தலைவர்
கவுண்டிச்சிபாளையம்
ஊராட்சி



V. ராமலிங்கம்
V. L. டெக்ஸ்,
ஈரோடு.



K. கணேசன்
ஈரோடு




M. பழனியப்பன்
ஈரோடு



M. அங்கப்ப முதலியார்
ஈரோடு



K. K. அர்த்தநாரி
ஈரோடு



R. முத்துவேல்
ஈரோடு



K. M. தண்டபாணி
ஈரோடு



N. R. நாச்சிமுத்து
ஈரோடு



V. பாலகிருஷ்ணன்
ஈரோடு-4



M. வாசு
ஈரோடு




ஸ்வஸ்திக்
பன்னீர்செல்வம்
ஈரோடு

மலர்க்குழு



டாக்டர் மே அ பாலமுருகன்
தலைவர்



டாக்டர் மா அண்ணாதுரை
உறுப்பினர்



K N முருகேசன்
உறுப்பினர்



B P மாணிக்கம்
உறுப்பினர்



V K மாணிக்கம்
உறுப்பினர்

வரவேற்புக்குழு

நிழற்படம் கிடைக்கப் பெறாமையால்
வரவேற்புக் குழுவினர் பெயர் மட்டுமே
இங்கு இடம் பெறுகிறது.



1.	புஷ்பா கருப்பண முதலியார்	ஈரோடு
2.	K.K. ராமலிங்கம்	,,
3.	G. சுப்பிரமணியம்	,,
4.	S வையாபுரி முதலியார்	,,
5.	S.P. பழனியப்பன்	,,
6.	ஆறுமுகம்	கோபி புதுப்பளையம்
7.	S. லட்சுமணன்	ஈரோடு
8.	தேவி இண்டஸ்ட்ரீஸ்	கோபி
9.	N.S. சண்முகசுந்தரம்	துடுப்பதி
10.	V.R A. பாலகிருஷ்ணன்	துடுப்பதி
11.	S.R. ஸ்ரீனிவாசன்	சென்னிமலை
12.	P. செல்வராஜ்	ஈரோடு
13.	S. நடராஜன்	,,
14.	A.K.V. மாணிக்கம்	,,
15.	S. நல்லசாமி	,,
16.	K.N. கோவிந்தராஜ்	,,
17.	M. செங்கோடு	,,
18.	K.P.G.M. பழனிசாமி	,,
19	S N. பழனிசாமி	,,
20.	சுந்தர் துரை	,,
21.	K. முத்துசாமி	,,
22.	V N. சண்முகசுந்தரம்	வி. சத்திரம்
23.	தங்கவேல் டெக்ஸ்டைல்	ஈரோடு
24	P. பூர்ணம்	,,
25.	R. மோஹன்	,,
26.	C.K. ராமநாதன்	,,
27.	சண்முகசுந்தரம்	,,
28.	E. சித்தநாதன்	,,
29.	A.C. கங்காதரன்	,,
30.	C. குமாரசாமி	,,
31.	பாலு (அஜந்தா)	,,
32.	P. சந்திரசேகர்	,,
33.	R. G நாகப்ப முதலியார்	,,
34	C. ஆறுமுக முதலியார்	,,
35	அங்கமுத்து (தவமணி)	,,
36.	N. ராஜகோபால்	,,
37.	M செல்வராஜ்	,,
38	A. V. நேதாஜி (ராஜகணேஷ்)	,,
39.	A. ராமசாமி முதலியார்	,,
40.	S பெருமாள் முதலியார்	,,
41.	N சதாசிவம்	,,
42.	E. K. மோகன்	,,
43	A ஈஸ்வரன்	,,
44.	V. K. மாணிக்கம்	,,
45.	Dr. S. சுப்பிரமணியன்	,,
46.	சௌந்தரராஜன்	,,
47.	N. கிருஷ்ணன் (மஞ்சுளா)	,,

ரூபாய் 500 நன்கொடை வழங்கியவர்கள்

1.	P. சின்னுசாமி	காங்கயம்
2.	T.A. தங்கவேல்	ஈரோடு
3.	மு. பழனியப்பமுதலியார்	மல்லசமுத்திரம்
4.	A. சென்னியப்பன்	ஈரோடு
5.	P வைத்தியலிங்க முதலியார்	தூரம்பட்டி
6.	J ராமச்சந்திரன்	ஈரோடு
7.	A.C. கன்னியப்பன்	,,
8.	V. அங்கமுத்து சம்பூர்ணம்	,,
9	M. ஆறுமுகம்	,,
10.	P. சக்ரவர்த்தி	,,
11.	M. கணேசன்	,,
12.	கந்தசாமி	,,
13.	P. சந்திரன்	,,
14.	V. பெரியசாமி	,,
15.	ஸ்ரீராம்	,,
16.	ஸ்ரீபழனியப்பா	,,
17.	N. சிவப்பிரகாஷ்	,,
18	ராமுகட்பீஸ்	,,
19.	A. முனிசாமி	,,
20.	திருவேனிடெக்ஸ்டைல்ஸ்	,,
21.	சதர்ன் பிரிண்டிங் மில்ஸ்	,,

நன்கொடை ரூபாய் 200 முதல் ரூ. 500 வரை வழங்கியவர்கள்



1.	A.K.V. குப்புசாமி	ஈரோடு
2.	V.M. பெரியசாமி	தூரம்பட்டி
3.	V. மாணிக்கவாசகம்	,,
4.	A. குணசேகரன்	,,
5.	P. ராஜமாணிக்கம்	,,
6.	A.P. வெங்கடாசலம்	ஈரோடு
7.	N. சந்திரன்	,,
8.	R. மகாலிங்கம்	,,
9.	V. ராமச்சந்திரன்	,,
10.	A. ரத்தினமுதலி	,,
11.	K. வெங்கடாசலம்	,,
12.	வீரமுத்து	,,
13.	V. முருகேச முதலியார்	,,
14.	V. சிவகுருநாதன்	,,
15.	மா. முருகேசன்	,,
16.	S. முருகேசன்	,,
17.	S. R. ஸ்ரீனிவாசன்	,,
18	R. கிருஷ்ணன்	,,
19.	A. பாலசுப்பிரமணியன்	,,
20.	P A. கிட்டுசாமி	,,
21.	P. M. செல்வராஜ்	,,
22.	S. கார்த்திகேயன்	ஈரோடு கலைக்கல்லூரி
23	T. செந்தில்நாதன்	,,
24	S. சுகுமாரன்	,,
25.	P. E குமார்	,,
23.	P. சுந்தரம்	,,
27.	K. G. செந்தில்வாசன்	,,
29.	R கந்தசாமி	,,
30.	K. ராஜா கார்த்திகேயன்	,,

வரவேற்புரை

M. S. பழனியப்பன்
பெரியார் மாவட்டச்
செங்குந்த மகாசன சங்கம்

பெரியார் மாவட்டம் - வரலாறு படைத்த தலைவர்களை உருவாக்கிய மாவட்டம், சென்னிமலை ஆண்டவராலும் பாரியூர் அம்மனாலும், பண்ணாரி மாரியம்மனாலும் அருளால் காக்கப்படும் மாவட்டம், காவிரியும் பவானியும் கூடிக்குலாவும் மாவட்டம், துணி, எண்ணெய் வித்து மஞ்சள் விற்பனையில் நாட்டின் கவனத்தை ஈர்க்கும் மாவட்டம், ஐந்து கலைக்கல்லூரிகளையும், இரண்டு பொறியியல் கல்லூரிகளையும் இரண்டு தொழில் பயிற்றுவிக்கும் நிறுவனங்களையும், ஒரு மருத்துவக் கல்லூரியையும் எண்ணற்ற பள்ளிக்கூடங்களையும் கொண்டு அறிவில் உயர்ந்து நிற்கும் மாவட்டம்.

இத்தகு சிறப்புகள் பலகொண்ட மாவட்டத்தில் பெரும்பங்கு வகிப்பவர்கள் செங்குந்த இன மக்களாவர். இம்மாவட்டத்தில் செங்குந்தர்களின் எழுச்சியைக்காட்ட ஏற்கனவே இரண்டு மாநில மாநாடுகள் நடைபெற்றுள்ளன. இப்பொழுது முதல் மாவட்ட மாநாடும் பேரணியும் நடைபெறுகின்றது இம்மாவட்டச் செங்குந்த இனமக்களை ஒன்றுதிரட்டி அயராது பாடுபட்டுவரும் கல்வித்தந்தை உயர்திரு R. A. N. முத்துசாமி முதலியார் அவர்கள் இம்மாநாட்டிற்குத் தலைமை ஏற்றுள்ளார். அவரை வருக! வருக என வரவேற்கிறேன்.

ஆளும் அரசுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு செங்குந்தர்களுக்கு இயன்ற அளவு சலுகைகளைப் பெற்றுத்தரும் உத்யோகரத்னா J. சுத்தானந்தன் அவர்கள் இம்மாநாட்டினைத் தொடக்கி வைத்து உரையாற்ற உள்ளார்கள் அவரைப் பெரியார் மாவட்டச் செங்குந்த மகாசன சங்கத்தின் சார்பில் வருக வருக என வரவேற்கிறேன்.

பார்போற்றும் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் படத்தைத் திறந்துவைத்து அவரது நூற்றாண்டு விழாச் சிறப்புரை ஆற்ற வந்துள்ள கவிஞர் மன்னர் மன்னன் அவர்களை வருக! வருக என வரவேற்கிறேன்.

கொடிகாத்த குமரன் நம் இனமுத்துக்களுள் தெரிந்தெடுத்த முத்து. அன்னாரின் திருஉருவப் படத்தைத் திறந்து வைத்து உரையாற்ற உள்ளார். தென்னிந்திய மகாசன சங்கத்தின் பொதுச் செயலர் பேராசிரியர் டாக்டர் தி. ரா. செல்வராசன் அவர்கள். அவரைப் பெரியார் மாவட்ட மகாசன சங்கத்தின் சார்பில் வருக வருக என வரவேற்கிறேன்.

நம் செங்குந்த இனம் தலை நிமிர்ந்து நிற்க காரணமானவர் கைத்தறிக் காவலர் பத்மஸ்ரீ எம். பி நாச்சிமுத்து முதலியார் என்றால் மிகையாகாது அந்த சான்றோரின் திரு உருவப்படத்தினை திறந்துவைக்க இருக்கும் பிரபல தொழில் அதிபர் J. K. நாராயணன் அவர்களை வருக வருக என வரவேற்கிறேன்.

இன்று இம்மாபெரும் பேரணி சிறப்பாக நடைபெற்றதென்றால் அதற்கு மூல காரணமானவர் வள்ளல் திரு ராணா K V இலட்சுமணன் ஆவர். அவருடைய சலியா உழைப்பும் செய்வன திருந்தச் செய்யும் பாங்கும் நாம் அறிந்த ஒன்று. அவரையும் இங்கு இப்பொழுது குத்து விளக்கு ஏற்றிவைத்த திருமதி சரோஜினி லட்சுமணன் அவர்களையும் வருக வருக என வரவேற்கிறேன்.

பேரணிக்கு முன்னிலை வகித்த உயர்திரு K. K. பாலுசாமி அவர்களையும் மாநாட்டு முதல் மலரைப் பெற இருக்கிற உயர்திரு K. K. பழனிச்சாமி அவர்களையும் வருக வருக வரவேற்கிறேன்

பேரணியின் தொடக்கத்தில் நம் குலக்கொடியை ஏற்றிவைத்த உயர்திரு N. கோவிந்தசாமி முதலியார் அவர்களையும் மாநாட்டுப்பந்தலின் கொடியேற்றி வைத்த உயர்திரு A. V. Rm. V. சங்கரநாராயணன் செங்குந்தர் அவர்களையும் வருக வருக என வரவேற்கிறேன்,

மாநிலப் பொறுப்பாளர்களையும் மாவட்டப் பொறுப்பாளர்களையும் வருக வருக என வரவேற்கிறேன். அலையென திரண்டு வந்திருக்கும் நம் இன மக்களை இருகரம் கூப்பி வருக வருக வரவேற்கிறேன், தொண்டர் படையாய் நின்று செயல்பட்ட நம்இன இளைய மறவர்களையும் வருக வருக என வரவேற்கிறேன், பேரணியில் கலந்து கொள்வதும் இம்மாநாட்டில் பங்குபெறுவதும் நம் அனைவரின் கடமை என்ற நிலையில் மீண்டும் வருக வருக என வரவேற்று அமர்கிறேன். நன்றி வணக்கம்.

★ ★ ★

மாநாட்டுத் தலைமை உரை

R. A. N. முத்துசாமி முதலியார்

தலைவர், பெரியார் மாவட்டச் செங்குந்தர்
மகாசன சங்கம் ஈரோடு-1

தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கத்தலைவர் அவர்களே! பொதுச் செயலாளர் அவர்களே! பேரணியின் தொடக்கத்தில் கொடியேற்றிய திரு. N. கோவிந்தசாமி முதலியார் அவர்களே! பேரணிக்கு முன்னனியை வகித்த திரு K. K. பாலுசாமி அவர்களே! பேரணியைத் தொடக்கி வைத்த திரு ராணா K V லட்சுமணன் அவர்களே! மாநாட்டுப்பந்தலில் குத்துவிளக் கேற்றி வைத்த திருமதி. சரோசா லட்சுமணன் அவர்களே! கொடியேற்றிவைத்த A V Rm V சங்கரநாராயண செங்குந்தர் அவர்களே! பாவேந்தர் பாரதிதாசன் படத்தைத் திறந்து வைத்து உரையாற்ற இருக்கும் கவிஞர் மன்னர் மன்னன் அவர்களே! பத்மஸ்ரீ M P நாச்சிமுத்து முதலியார் படத்தை திறந்து வைக்க உள்ள பிரபாத் J K நாராயணன் அவர்களே! மாநாட்டு மலரை வெளியிட உள்ள திரு. P K நஞ்சப்ப முதலியார் அவர்களே முதல் மலரைப் பெற இருக்கும் திரு. K. K. பழனிச்சாமி அவர்களே! வாழ்த்துரை வழங்க வந்திருக்கும் சான்றோர்களே! பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்து மாநாட்டைச் சிறப்பித்துள்ள பெரியோர்களே! தாய்மார்களே! அலையெனத் திரண்டு வந்திருக்கும் இளைஞர்களே! வணக்கம்!

பெரியார் மாவட்டத்தில் முதன் முறையாக மாவட்ட மகாநாட்டைக் கூட்டியுள்ளோம். எழுச்சிமிகு பேரணிமுடிந்து மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கியுள்ளன இம்மாநாடு சீரோடும் சிறப்போடும் நடைபெற எல்லாம் வல்ல முருகப்பெருமானை வணங்குகிறேன்.

தமிழகத்திலும் பிற தென்மாநிலங்களிலும் வசிக்கும் நம் இனமக்களில் பெரும்பாலான-வர்கள் கைத்தறியை நம்பியே வாழ்கிறார்கள். கைத்தறியைக் கொண்டு வாழ்க்கை நடத்தும் நம் இனமக்களின் லட்சக்கணக்கானோர் வாயிறாரச் சோறுண்ணவும் வழியற்றவர்களாக இருக்கிறார்கள் நூல் விலையேற்றமும் கைத்தறித் துணி தேங்கிப் போவதும் நம்இனமக்களை அச்சுறுத்தி வருகிறது. குஜராத் மாநிலத்தில் நெசவாளிகளைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினராக அரசு அறிவித்துள்ளது இங்கும நம் இனமக்களைத் தாழ்த்தப்பட்டோர் பிரிவில் சேர்த்துக் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் முன்னுரிமை வழங்க வேண்டும். காலைமுதல் இரவு வரை குடும்பத்தில் உள்ள அனைவரும் பாடுபட்டாலும் வாழ்க்கைப்பாடு திண்டாட்டமாயிருக்கிறது. சலியாது உழைக்கலாம் என்றாலோ ஆண்டு முழுதும் வேலையும் கிடைப்பதில்லை இந்த நிலை என்று மாறுவது.?

நாம் பழம் பெருமைகளைப் பேசியே காலத்தைக் கழித்து வருகிறோம். மாபெரும் மக்கள் தொகையைக் கொண்டிருந்தும் நம்மிடம் ஒற்றுமை இல்லாதால் பின்னடைந்து வருகிறோம் இந்த நிலை மாறுவதற்கு நம் முயற்சி செய்யவேண்டும்.

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் சிதறிக்கிடப்பதால் நாம் வலிமையற்றவர்களாய் இருக்கிறோம். நல்லதொரு அமைப்பையும் தலைவரையும் கொண்டிருக்கும் நாம் முதலில் செய்ய வேண்டியது என்ன? அந்தந்தப் பகுதியில் வாழும் நம்குலமக்கள் செங்குந்தர் சங்கத்தில் உறுப்பினராக வேண்டும். நம்மில் ஒற்றுமையை நீங்கில் நம் அனைவர்க்கும் தாழ்வு அல்லவா? ஒன்றுபடுவோம். பிரச்சினைகளை வென்றெடுப்போம்.

இந்த இனிய நல்ல நாளில் ஒவ்வொரு செங்குந்தரும் தெய்வீகப்பணி, சமுதாயப்பணி கல்விப்பணி ஆகியவற்றில் தாங்களால் இயன்ற பணிகளை ஆற்றி வணிகத்துறை ஆனாலும் உத்தியோகத்துறை ஆனாலும் தாங்கள் சார்ந்துள்ள துறைகளில் புகழ்பெற்று வளம் பெற்று உயர்வடைந்து நீண்ட நாள் இனிதே வாழ உளமார வாழ்த்துகிறேன்.

காஞ்சிபுரம் மாநாட்டில் பத்மஸ்ரீ எம். பி. நாச்சிமுத்து முதலியார் அவர்களால் அறிவிக்கப்பட்டு பெரியார் மாவட்டச் செங்குந்தர் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றேன் ஐந்துபேர் கொண்டகுழு எல்லாத் தாலுக்காவிலும் சுற்றுப்பயணம் செய்து பிறகு சங்கம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. அனைவரும் நேரில் அழைத்துப் பேசி முடிவுசெய்யப் பட்டு சங்கம் உருவாக்கப் பெற்றது.

செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர் பெருமக்களின் துணைக் கொண்டு நமது மாவட்டத்தில் 12 ஒன்றியத் சங்கங்களையும் 135 கிளைச் சங்கங்களையும் ஏற்படுத்திச்சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ஒவ்வொராண்டும் பள்ளியிறுதித்தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் பெரியார் மாவட்ட நம்குல மாணவ மாணவியர்க்குப் பரிசும் பாராட்டு இதழும் வழங்கி வருகிறோம்.

சென்னையில் நடைபெற்ற நமது செங்குந்தர் குலமக்களின் எழுச்சிப் பேரணியும் நம்மாவட்டத்தின் சார்பாக 106 பஸ், லாரி, வேன்களில் திரளாகக் கலந்துகொண்டு சிறப்புச் செய்ததை நினைத்துப் பார்க்கிறேன்.

மேலும் நமது சங்கத்தின் சார்பாக இந்து மெட்ரிகுலேஷன் பள்ளியருகே 16 ஏக்கர் நிலம் வாங்கி 200 வீட்டுமனைகளாகப்பிரித்து 'செங்குந்தர் நகர்' என்ற பெயரில் நம்குலமக்களுக் குப் பகிர்ந்தளிக்க உள்ளோம்.

பெரியார் மாவட்டத்தில் நகராட்சி, பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கானதேர்தலில் வெற்றி பெற்ற நம்குலப் பெருமக்கள் 170 ஆடவர்களுக்கும், 26, மகளிருக்கும் பாராட்டுவிழா நடத்தி பொன்னாடை போர்த்தி நினைவுப்பரிசு வாழ்த்தி வழங்கப்பட்டது.

இதுவரை, நமது பெரியார் மாவட்டத்தில் ஏறக்குறைய இரண்டாயிரம் பேர் சங்கத்தின் ஆயுள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். அவர்கள் செலுத்திய சந்தாத்தொகை வைப்பு நிதியாக வங்கியில் வைத்துள்ளோம். அதன் மூலம் கிடைக்கும் வட்டியைக் கொண்டு 12 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்றுத் தேறும் மாணவ மாணவியருக்கு வட்டத்திற்கு மூன்று பேர் வீதம் 21 பேருக்கு ஊக்கப்பரிசு வழங்கப்படுகிறது.

இன்று கிளைச் சங்கங்களின் பொறுப்புகளை ஏற்றுள்ள சான்றோர்கள் மிகத்திறமை யோடும் பொறுப்போடும் சங்கத்தை நடத்தி நம்குலப்பெருமக்கள் வாழ்க்கையில் வளம்பெற ஒத்துழைப்பு நல்குமாறும் துணைநிற்குமாறும் சங்கத்தின் மூலம் சேவை செய்யுமாறும் பணி வன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் பெரியார் மாவட்டத் தலைமை சங்கத்தில் நம் இனமக்கள் அனைவரையும் ஆயுள் உறுப்பினராக்கப் பாடுபடுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக மாநில சங்கத்தின் வழிகாட்டுதல்படி ஒவ்வொரு கிளைச்சங்கத்திற்கும் நேரில் சென்று நம் கோரிக்கையைச் சொல்லி முப்பது சதவீத ஒதுக்கீட்டை நாற்பது சதவீத மாக்கவேண்டும் என்று முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பினோம். இக் கோரிக்கை யை நிறைவேற்றி நெசவாளர் துயர் துடைக்க கேட்டுக் கொள்கிறேன்.

விண்ணதிர மண்ணதிர நடைபெற்ற எழுச்சிப் பேரணி கண்டுபெரும் மகிழ்ச்சி கொண் டேன் இன்று காட்டும் ஒற்றுமையை என்றும் கடைபிடித்து நாம் இனம் வாழப்பாடுபடுவோம்.

பெருமைமிகு பெரியார் மாவட்டத்தில் செங்குந்தர்கள் தொழில்துறையில் உயர்வடைய வும் பதவிப் பொறுப்பில் முன்னேறவும் கல்விப்பணியில் சிறப்படையவும் தெய்வீகப் பணி மணக்கவும் அனைத்து செங்குந்தர் வாழ்வு வளம்பெற-துன்பம் நீங்கி இன்பம் பெருக என்னால் ஆன எல்லா முயற்சிகளையும் எப்பொழுதும் செய்து பணிஆற்றுவேன் என்று பணிவன்புடன் கூறி உரையை நிறைவுசெய்கிறேன். வாழ்கசெங்குந்தம்! வளர்கசெங்குந்தர்வாழ்வு! வணக்கம்.

❋ ❋ ●

பெரியார் மாவட்ட செங்குந்த மகாசன சங்க முதலாவது மாநாடு

இடம் : ஈரோடு,
நாள் : 10—3—90.

தீர்மானங்கள் :

1. செங்குந்த வகுப்பினரை மிகவும் பின் தங்கியவர்கள் என மாநில அரசு அறிவித்து குஜராத் மாநிலத்தில் உள்ளது போல் அதற்குண்டான சலுகைகள் செங்குந்தர்களுக்குக் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமாக தமிழக அரசை இம்மாநாடு வேண்டிக் கொள்கிறது.

2. நெசவுத் தொழிலைப் பரம்பரையாகச் செய்து வேறு மாற்றுத்தொழில் செய்ய வாய்ப்பில்லாத செங்குந்தர்களுக்கு விசைத்தறி போட ஆகும் செலவில் பாதியை மான்யமாகவும், எஞ்சிய துகையை குறைந்த வட்டியிலும் நீண்ட கால கடனாக வழங்க ஆவன செய்யுமாறு தமிழக அரசை இம்மாநாடு வேண்டிக்கொள்கிறது.

3. வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் நெசவுத்தொழில் செய்யும் நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குமாறு தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

4. ஏழை நெசவாளர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்குமாறு தமிழக அரசை இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

5. செங்குந்தர்கள் பாரம்பரியமாக பயன்படுத்தும் பாவடி நிலையங்களை மற்றவர்கள் ஆக்கிரமிக்கும் அபாயம் உள்ளது. அதன் விளைவாக கலவரம் தோன்றும் வாய்ப்பு உள்ளது. அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணை பிறப்பித்து இந்நிலங்களை செங்குந்தர்களுக்கே பட்டா செய்து கொடுக்க வேண்டுமென இம்மாநாடு தமிழக அரசை வேண்டிக்கொள்கிறது.

6. நூல் விலையில் அடிக்கடி ஏற்படும் ஏற்றத் தாழ்வால் நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். நெசவுத்தொழிலும் மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே, மத்திய மாநில அரசுகள் மில் உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி சீரான விலையை நிர்ணயம் செய்து நெசவாளர்களின் துயரினை துடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென இம்மாநாடு வேண்டிக்கொள்கிறது.

7. இந்தியத் துணைக்கண்டத்தில் தன்னிகரில்லாத தலைமகனாக நின்று கொடிகாத்தத் தன்னுயிர் ஈந்து ''கொடிகாத்த குமரன்'' எனப் பெயர் பெற்ற அம்மாவீரன் பெயரை மேட்டூர் சாலைக்கு 'கொடிகாத்த குமரன் சாலை' எனப் பெயர் சூட்ட ஈரோடு நகர மன்றத் தலைவரையும் அனைத்து உறுப்பினர்களையும் இம்மாநாடு வேண்டுகிறது.

8. பார்போற்றும் செங்குந்தப் பாவலன் பாவேந்தர் பாரதிதாசன் பெயரினை ஈரோடு பேருந்து நிலையத்திற்கு சூட்டவேண்டுமென நகர் மன்றத் தலைவரையும் அனைத்து உறுப்பினர்களையும் இம்மாநாடு வேண்டிக்கொள்கிறது.

9. வன்முறைப் போராட்டங்களுக்கு மட்டும் செவி சாய்க்கும் தமிழக அரசின் போக்கு அமைதியாக இருக்கும் மக்களையும் வன்முறையில் நம்பிக்கை கொள்ளத்தூண்டும் வாய்ப்பு உள்ள அபாயத்தைச் சுட்டிக் காட்டி, அறவழிப்போராட்டத்தின் நியாயத்தினை உணர்ந்து செயல்படுத்தவும் இம்மாநாடு தமிழக அரசைவேண்டிக்கொள்கிறது

10. இட ஒதுக்கீட்டில் வஞ்சிக்கப்பட்ட செங்குந்தர்கள் தங்கள் உரிமையைப் பெற்றிட எல்லா நியாயங்களுக்கும் தயாராகும்படி அழைப்பதோடு எந்தவிதமான கடுமையான போராட்டங்களையும் சந்திக்கத் தயாராகும்படி தமிழக செங்குந்தர்களை இம்மாநாடு வேண்டுகிறது.

நம் இனமக்களின் பெருமை காக்க ஒரு பயணம்

ஆர். ஏ. என். முத்துசாமிமுதலியார்
தலைவர், பெரியார் மாவட்ட செங்குந்தர் மகாசன சங்கம்

''தொண்டைநாடு சான்றோர் உடைத்து'' என்பது முதுமொழி தொண்டை நாட்டின் தலைநகராய் விளங்குவது காஞ்சிபுரம். காஞ்சிபுரத்தில் நடைபெற்ற செங்குந்த மகாஜன மாநாட்டில் கைத்தறிக்காவலர் உயர்திரு M. P. நாச்சிமுத்து முதலியார் அவர்கள் என்னைப் பெரியார் மாவட்டத்தலைவராக நியமித்தார். செங்குந்த சங்கத்தை தோற்றுவித்தவரும் நம் இனமக்களின் குரலாய் அமைந்த செங்குந்தமித்திரனைத் தோற்றவித்தவருமான வள்ளல் தி. நா. சபாபதிமுதலியார் அவர்கள் சென்னை சேத்துப்பட்டியில் 18 கிரவுண்ட் நிலத்தை நம் இனமக்களுக்காக வாங்கினார். முப்பது ஆண்டுகளாக எந்தவருமானமும் இன்றி இருந்த அந்நிலத்தை விற்கவேண்டும் என்ற கருத்து நிலவியது. இந்நிலையில் காஞ்சியில் நடைபெற்ற மாநாட்டில் நிலத்தைவிற்கக்கூடாது என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தேன். அம்பா சமுத்திரத்தைச் சார்ந்த திரு. சங்கரநாராயண முதலியார் நிலத்தை விற்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அக்கூட்டத்தில் திரு. சங்கரநாராயண முதலியார் தலைமையில் ஒரு துணைக்குழு அமைத்து இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என முடிவு செய்தது.

திரு. சங்கரநாராயண முதலியார் அவர்கள் சென்னை அரண்மனைக்காரத் தெருவில் உள்ள நம் தலைமையிடத்தில் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். நானும் அந்நால் எம். எல். ஏ., திரு. வேங்கடசுப்பிரமணியம் அவர்களும் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு முன்பாக சேத்துப்பட்டில் உள்ள இடத்தைப் பார்க்கச் சென்றோம். பிறகு கூட்டத்தில் கலந்து கொண்டோம். கூட்டத்திற்கு ஐவர் மட்டுமே வந்திருந்தனர். திரு. சங்கரநாராயண முதலியார் அவர்கள் தாம் வெகு தொலைவான ஊரான அம்பா சமுத்திரத்தில் இருப்பதால் அடிக்கடி சென்னை வர இயலாது ஆகவே, ஓய்வு பெற்ற ஐ. ஏ. ஏஸ். அதிகாரி திரு. பிரகாசம் அவர்களிடம் இப்பொறுப்பை ஒப்படைப்பதாகக் கூறிக் கூட்டத்தை முடித்தார்.

பல ஆண்டுகளாகப் பயனற்றும், வருமான மற்றும் கிடக்கும் வள்ளலார் இல்லம் என்ற பெயர் கொண்ட அவ்விடத்தை பயனுள்ளதாகவும் வருமானம் தருவதாகவும் ஆக்க வேண்டும் என்ற 21-4-85இல் பாண்டிச்சேரியில் கூடிய தென்னிந்திய மகாசன சங்க செயற்குழு முடிவு செய்தது. பெரியார் மாவட்டத் தலைவரான என்னை இப்பணியில் ஈடுபடவேண்டும் என அக்குழுவிற்குத் தலைவனாக நியமித்தது. எனக்குத் துணையாக முன்னாள் பதிவாளர் திரு. C. K. குமாரசாமி, திரு. J. சுத்தானந்தன், திரு. M. S. ரெங்கையா, திரு. T. சேதுராமன் ஆகியோரை நியமித்தது.

மாணவர்களுக்கும் பயன்படும் என்ற பெருநோக்கில் கட்டத் தொடங்கிய 'இல்லம்' முழுமை பெறாமல், சிறிதும் பயன்படாமல் பாழ்பட்டுக் கிடக்கிறது. இந்நிலையை மாற்றத் திட்டமிடவும் தொடர்ந்து செயல்படவும் வேண்டிய நிதி திரட்டவும், ஆலோசனை கூறவும் 2-6-85 ஞாயிறு காலை 10 மணிக்கு என் தலைமையில் சென்னையில் கூட்டம் கூட்டப் பெற்றது

இக்கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு தலைமைச் சங்கம் அனுப்பிய அழைப்பிதழ் மட்டும் போதும் என்று திருப்தி அடையாமல் நானே தனியாக அத்தனை உறுப்பினர்களுக்கும் திரும்பப் பதில் பெறும் நோக்கத்தோடு ரிப்ளை கார்டு மூலம் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்திக் கடிதம் எழுதினேன்.

2-6-85 ஞாயிறு காலை பத்து மணிக்கு பத்மஸ்ரீ எம். பி. நாச்சிமுத்து முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் 500 செங்குந்தப் பெருமக்களைத் தேர்வு செய்து மாதம் தோறும் ரூ 100 வசூல் செய்து 60 மாதங்கள் சீட்டு நடத்துவதென்றும், அதன் வருவாயைக் கொண்டு ஆங்கிலப்பள்ளி, ஐ. டி. ஐ., சமுதாயக்கூடம் ஆகியவற்றை அமைப்பது என்றும் நம் சமுதாயப் பெருமக்களிடமிருந்து பெருந்தொகையை நன்கொடையாக வசூல் செய்வது என்றும் முடிவு செய்ய பெற்றது. இத்திட்டத்தின் மூலம் பல லட்ச ரூபாய்களைத் திரட்ட முடியும் எனக் கணக்கிட்டுக் காட்டினேன்.

'வள்ளலார் மாணவர் இல்லத்தை' சீர் செய்ய வேண்டும் என்ற நோக்கோடு தமிழகம் முழுவதும் பரந்திருக்கும் நம் இன மக்களின் கருத்தறிய விரும்பினேன். மாவட்டம் தோறும் சுற்றுப்பயணம் மேற் கொள்ள வேண்டும் என்ற திட்டத்துடன் ஒரு குழுவை அமைத்தேன். இக்குழுவில் என்னுடன் பெரியார் மாவட்ட செங்குந்த மகாசன சங்கத்தின் பொருளாளர் திரு. P. K. நஞ்சப்ப முதலியாரும், மாவட்டப் பொதுச் செயலாளர் டாக்டர் நா. ஆறுமுகம் அவர்களும், 'செங்குந்தமணி' ஆசிரியர் திரு பா. சொக்கநாதன் அவர்களும் இடம் பெற்றனர்.

4-10-86 இரவு 10-30 மணிக்கு ஈரோடு மாநகரிலிருந்து புறப்பட்டோம். ஈரோடு அரிமா சங்கத்தலைவர் திரு. U. N. முருகேசனும் மற்றுமுள்ள பெரியோர்களும் எங்களை வழி அனுப்பி வைத்தனர். பயணத்தின் போது நம் இனமக்களின் உயர்விற்காக எவ்வெவ் வகையில் செயல் படலாம் என உரையாடி இரவுப்பொழுதைக் கழித்தோம்.

அடுத்தநாள் காலை 3-30 மணிக்கு திருப்பத்தூர் சென்றடைந்தோம். அங்கு இருபத் தொரு ஆண்டுகளாகத் தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கத்தின் தலைவராகப் பணியாற்றிய திரு. கா. அ. சண்முக முதலியார் வீட்டில் வட ஆர்க்காடு மாவட்ட செங்குந்த மகாசன சங்கத் தலைவர் திரு. K. A. S. பத்மநாபன் அவர்களும், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. S. P. மணவாளன் அவர்களும் எங்களை வரவேற்றனர். காலை 11-00 மணிக்குக் கூட்டம் தொடங்கியது. வள்ளலார் மாணவ இல்லத்தின் வரலாற்றை மிகத் தெளி வாக விளக்கி உரையாற்றினேன். பெருமை வாய்ந்த நம் முன்னோர் கட்டிக் காத்த சொத்தை கட்டிக் காப்பதா ? அல்லது விற்று விடுவதா ? என்ற வினாத் தொடுத்தேன். கட்டிக் காக்க வேண்டியதன் அவசியத்தை விளக்கி உரைத்தேன். இறுதி என் கருத்தைக் கூறிவிட்டேன் இனி உங்கள் கருத்து எதுவாக இருந்தாலும் தெரிவியுங்கள் என்றேன்.

வட ஆர்க்காடு மாவட்டத்தின் கிளைச் சங்கங்களான ஆரணி, திருவண்ணாமலை, வேலூர், சோலிங்கியபுரம், திருவராயப்பேட்டை, குடியேற்றம், வாணியம்பாடி, விலாப்பாக்கம் அரக்கோணம், செய்யாறு, காங்கேயநல்லூர் போன்ற எண்ணற்ற சங்க உறுப்பினர்கள் வள்ளலார் மாணவ இல்லத்தைக் கட்டிக் காப்பதென்றும் மேலும் பணம் வசூல் செய்து கட்டடத்தை அபிவிருத்தி செய்வதென்றும் ஒரு மித்த கருத்தை வழங்கினர். கூட்டத்தில் கூடி இருந்தோர் கேட்ட ஐயவினாக்களுக்குத் தெளிவாக விடையளித்தேன். நண்பகல் உணவிற்குப் பின் அங்கிருந்து புறப்பட்டோம்.

காஞ்சிபுரம் :

வேலூர் வழியாக காஞ்சிபுரத்தை மாலை 6-00 மணிக்கு அடைந்தோம். செங்கல்பட்டு மாவட்டப் பொதுச் செயலாளர் திரு. A. சம்பந்தம் எங்களை அன்புடன் வரவேற்றார் அங்கும் கூட்டத்தினர் நமது சமுதாயத்திற்கென இருக்கின்ற மிகப் பெரிய இடத்தை விற்கக்கூடாது என்றும் அதைப் பாதுகாத்து கட்டடத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்றும் கூறினர். மாவட்டப் பொதுச் செயலாளர் அதற்காகும் பொருளை முடிந்த அளவு திரட்டித் தருவதாகக் கூறினார்.

பாண்டிசேரி :

இரவு 10-00 மணிக்கு பாண்டிச்சேரியை அடைந்தோம் அடுத்த நாள் காலை 9-15 மணி அளவில் புதுவை செங்குந்த மகாசன சங்கத் தலைவர் திரு. N. கோவிந்தசாமி முதலியார்

தனது ஆனந்தா திருமண மண்டபத்தில் சிறப்பான முறையில் வரவேற்றார். கூட்டத்தில் செங்குந்த மக்களின் முன்னேற்றம் குறித்து நீண்ட நேரம் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டோம். மேலும், என் திட்டத்திற்கு ஆதரவு பெருகியிருப்பதை உணர்ந்தேன்.

தென்ஆர்க்காடு :

புதுவையிலிருந்து நண்பகல் புறப்பட்டு உளுந்தூர்ப்பேட்டை வந்து சேர்ந்தோம். தென் ஆர்க்காடு மாவட்ட செங்குந்த மகாசன சங்கப் பொதுச் செயலாளர் திரு. A. ராஜவேலு அவர்களும் அமைப்பாளர்கள் திரு. T. V. கோவிந்தராஜன், திரு. S. M. ரங்கநாதன் ஆகியோரும் அன்புடன் வரவேற்றனர். மாலை 5-00 மணிக்கு மாவட்டத் தலைவர் திரு. M. S. பச்சைமுத்து, M. A. B. L. தலைமையில் கூட்டம் நடைபெற்றது. நானும் என் உடன் வந்தவர்களும் வள்ளலார் மாணவ இல்லம் பற்றிப்பேசினோம். திரு. M. S. பச்சைமுத்து அவர்கள் சென்னையில் உள்ள இல்லத்தை விற்கக்கூடாது என்ற கூட்டத்தின் முடிவைக் கூறி அவ்வில்லத்தைப் புதுப்பிக்க முதல் தவணையாக ரூ 2500 மாவட்ட சங்கம் சார்பில் தருவதாகக் கூறினார்.

தஞ்சை :

அடுத்த நாள் காலை 9-30 மணிக்கு தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை வந்து சேர்ந்தோம். தஞ்சை மாவட்ட செங்குந்த மகாசன சங்கப் பொதுச் செயலாளர் திரு. சா. கு. பா. பழனிவேலு அவர்களும், திரு. T. சேதுராமன் அவர்களும் அன்புடன் வரவேற்றனர். காலை 10-00 மணிக்கு மாவட்டத் தலைவர் திரு. R. N. சந்தானராஜ் கோபாலன் அவர்கள் தலைமையில் கூட்டம் தொடங்கியது. என்னுடைய விளக்க உரைக்குப் பின் மாவட்டத் தலைவர் பெரியார் மாவட்ட செங்குந்த மகாசன சங்கத்தின் சுற்றுப்பயணத்தையும், கருத்தையும் வரவேற்பதாகக் கூறினார்.

திருச்சி :

மாலை 6-00 மணிக்கு திருச்சியை அடைந்தோம் மாவட்டப் பொதுச் செயலாளர் டாக்டர் மு. கருணாநிதி அன்புடன் வரவேற்றார். சென்னையிலுள்ள இல்லத்தை விற்காமல் மேலும் சீரமைப்பதற்கு திருச்சி மாவடட செங்குந்தர்கள் உதவுவர் என உறுதியளித்தார். பிறகு புதுக்கோட்டை வழியாகக் குன்றக்குடியை அடைந்தோம். அங்கு அடிகளாரைக் கண்டு நீண்ட நேரம் ஆன்மீகம் பற்றி உரையாடினோம். பின் திருப்பதூர் வழியாக மதுரை நகருக்கு வந்தோம்.

மதுரை :

மதுரை K. K நகரில் மதுரை மாவட்ட செங்குந்த மகாசன சங்கத் தலைவர் திரு. C. காந்திதாஸ் அவர்களும் மாவட்டச்செயலாளர் திரு. S. A. சோலை அவர்களும் வரவேற்றனர். காலை 11-00 மணிக்கு 'கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் சங்கக்' கட்டடத்தில் கூட்டம் நடைபெற்றது. திரு C. காந்திதாஸ் அவர்கள் தலைமையேற்றார். நான் வள்ளலார் இல்லம் விரிவாகப் பேசினேன் பலரும் திரளாகக் கலந்து கொண்டு என் கருத்துக்கு ஆதரவு தந்தனர். பிறகு அங்குள்ள 'செங்குந்தமணி' அலுவலகத்திற்குச் சென்றோம். அவ்விதழின் செயல்பாடுபற்றி அறிந்தோம்.

பகல் 2-30 மணிக்கு அன்பர்கள் வழியனுப்ப இராமநாதபுரம் மாவட்டம் நோக்கிப் புறப்பட்டோம். வழியில் தேவர் திருமகளார் மாவட்ட அமைப்பாளரைக் கண்டு பேசினோம். அவரும் ஆதரவு நல்குவதாக உறுதியளித்தார். மாலை 4-30 மணிக்கு பரமக்குடி வந்து சேர்ந்தோம் மாவட்டத் தலைவர் திரு. I. தனசீலன் அவர்களும் நம் சமுதாயப்பிரமுகர்களும் அன்புடன் வரவேற்றனர். மாலையில் கூட்டம் நடைபெற்றது நம்இனமக்களின் இன்னல் குறித்து நீண்ட நேரம் உரையாற்றினேன். புதிதாக ஒன்றை வாங்காவிட்டாலும் உள்ளதை விற்க வேண்டுமா ? எனக்கேட்டேன். உடனே இளைஞர்கள் முன் வந்து சங்கவளர்ச்சிக்கு

தங்களால் ஆன அளவு உதவுவதாகக் கூறினர். இராமநாதபுர மாவட்டத் தலைவர் தங் மாவட்டத்தின் வறிய நிலை கூறி சென்னையில் உள்ள இடத்தை விற்றால் நம் இனமக்களுக்கு ஏதாவது உதவி கிடைக்கும் என்ற எண்ணத்தில் சென்னையில் உள்ள இடத்தை விற்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றினோம். இப்பொழுது உண்மையை உணர்ந்தோம். எப்பாடுபட்டாவது இடத்தைக் காப்போம் என்று கூறினார், மேலும், உடனே செயற்குழு கூட்டத்தைக் கூட்டி மறுபரிசீலனை செய்கிறோம் என்று கூறினார். ஈரோடு திரும்பும் வழி யில் மீண்டும் மதுரை வந்து இறைவனை வணங்கி எடுத்த காரியத்தை ஓரளவு நிறைவேற்றி யுள்ளோம் என்ற மகிழ்வுடன் ஊர் திரும்பினோம்.

'எண்ணிய முடிதல் வேண்டும் நல்லவே எண்ண வேண்டும்' என்ற உறுதிப்பாட்டுடன் செயல் பட்டேன். நான் 1946 ஆம் ஆண்டில் பொதுச் சேவையில் ஈடுபட்டு பல காரியங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளேன். 1953 ஆம் ஆண்டு கவுந்தப்பாடி கைத்தறி ஜவுளி வர்த்தக சங்கத்தைத் தோற்றுவித்து ரூ 4 லட்சம் வரை முதலீடு சேர்த்து வெற்றிகரமாக நடத்திவருகிறேன். 1953ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற அருள் நெறித் திருப்பணி மன்றப் பள்ளியின் பொறுப்பை 1962ஆம் ஆண்டு முதல் அடிகளார் தலைவராகவும் நான் செயலாளர் மற்றும் பொருளாளராகவும் இருந்து நடத்தி வருகிறேன். அன்று நூறு மாணவர்கள் மட்டுமே பயின்ற பள்ளியில் இன்று இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயில்கின்றனர். 1971 ஆம் ஆண்டு முதலியார் கல்வி நிறுவனத்தைத் தோற்றுவித்தேன் 40 ஏக்கர் பரப்பில் ஈரோடு கலைக்கல்லூரி சிறப்பான தன்னாட்சிக் கல்லூரியாக இவ்வட்டாரத்தில் செயல்பட்டு வருகிறது. 1981-ஆம் ஆண்டு ஈரோடு தொழில் நுட்பக் கல்லூரி தொடங்கப் பெற்று 50 ஏக்கர் நிலப்பரப்பில் சிறப்பாகச் செயல்படுகிறது எடுத்தகாரியத்தை சிறப்பாக நடத்தும் எனக்கு 'வள்ளலார் மாணவர் இல்லத்தை' சிறந்த முறையில் உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டு. தடைகள் பல இருந்தாலும் அவற்றை வெற்றி கொள்ள வேண்டும் என்ற உறுதி உண்டு. நம் இனப்பெருமக்கள் என்னுடன் ஒத்துழைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

பெரியார் மாவட்டத்தில் பிஎச். டி. ஆய்வுப்பட்டம் பெற்றவர்கள்



பெயர் : டாக்டர் **வெ. ஆறுமுகம்**

பெற்றோர் க. வெங்கடாஜல முதலியார் - லட்சுமி

கல்வித்தகுதி : எம். எஸ்ஸி பச்சையப்பன் கல்லூரி
பிஎச். டி. சென்னைப் பல்கலைக் கழகம்

ஆய்வுத் தலைப்பு விலங்கியல், A Study of Chromosomes in Termites (isoptera)

பணி மற்றும் இடம் : தலைவர், விலங்கியல்துறை,
ஈரோடு கலைக்கல்லூரி,
ஈரோடு.

பெயர் டாக்டர் **எம். அர்த்தநாரி**




த. பெயர் ப. மாரியப்பமுதலியார்

பிறந்தஊர் மற்றும் இடம் சேலம் 1-5-1948

கல்வித்தகுதி எம். எஸ்சி சேலம் கலைக்கல்லூரி
எம் பில். சென்னைப் பல்கலைக் கழகம்
பிஎச். டி do
பிஜி டிசி ஏ ஈரோடு கலைககல்லூரி
ஈரோடு

ஆய்வுத்தலைப்பு கணிதம், Associative Triple systems':

பணிமற்றும் இடம் தலைவர், கம்பூட்டர்துறை
ஈரோடு கலைக்கல்லூரி



பெயர் டாக்டர் **மா அண்ணாதுரை**

த பெயர் மாணிக்கமுதலியார்

குடும்பம் பாவேந்தர் பாரதிதாசன் இல்லத்தினன்

பிறந்த ஊர் தேதி மேல்பட்டாம் பாக்கம், தெனனார்க்காடு
மாவட்டம 15 10 1946

கல்வித் தகுதி எம் ஏ, மதுரைப் பல்கலைக் கழகம்
பி லிப்ஸ் சென்னைப பல்கலைக கழகம
பி. எட் அண்ணாமலைப் பல்கலைக்கழகம
பிஎச் டி சென்னைப் பல்கலைக் கழகம்

ஆய்வுத்தலைப்பு தமிழ், பாரதிதாசனின் இதழப்பணிகள

எழுதிய நூல்கள் 1 பாவேந்தா படைப்பும வாழ்க்கையும்
2 பாவேந் ா வுகமும் புறமும்
3 பாரதிதாசன் இதழ்ப் பணிகள்
பிஎச் டி ஆய்வுரை

பணி மற்றும் இடம் நூலகா ஈரோடு கலைக் கல்லூா ஈரோடு
(தன்னாட்சி)

பெயர் டாக்டர் **எஸ். அண்ணாமலை**



த. பெயர் எஸ். சுப்ரமணிய முதலியார்

பிறந்த ஊர் தேதி தர்மபுரி, 1-6-1952

கல்வித்தகுதி எம். ஏ., எம். பில். சென்னைப் பல்கலைக் கழகம்.
பிஎச் டி do

ஆய்வுத்தலைப்பு பொருளியல், 'Price Formation in Indian Manufacturing Sector'

பணி மற்றும் இடம் விரிவுரையாளர் (முதுநிலை)
ஈரோடு கலைக்கல்லூரி,
ஈரோடு.



பெயர் டாக்டர்	**மே. அ. பாலமுருகன்**
த. பெயர்	செ. அங்கமுத்து முதலியார்
பிறந்த ஊர் தேதி	பெ. மேட்டுப்பாளையம் 12-2-1948
கல்வித்தகுதி	எம். ஏ. பச்சையப்பன் கல்லூரி
	பிஎச். டி. சென்னைப்பல்கலைக் கழகம்
ஆய்வுத்தலைப்பு	தமிழ் டாக்டர். தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரின் ஆய்வுத்திறன்
பணி மற்றும் இடம்	தலைவர், தமிழ்த்துறை, ஈரோடு கலைக் கல்லூரி (தன்னாட்சி) ஈரோடு

பெயர் டாக்டர்	**கே. எ. ஆறுமுகம்**
பிறந்த ஊர்	குட்டிபாளையம்
கல்வித்தகுதி	எம். ஏ. சென்னைப் பல்கலைக் கழகம்
	பிஎச். டி. do
ஆய்வுத் தலைப்பு	வரலாறு
பணிமற்றும் இடம்	விரிவுரையாளர். வரலாற்றுத்துறை ஸ்ரீ வாசவிகல்லூரி ஈரோடு 16.







பெயர் டாக்டர்	**ஆ. குழந்தைவேலு**
த பெயர்	எஸ் ஆறுமுக முதலியார்
பிறந்த ஊர் தேதி	ஈரோடு 7-3 1946
கல்வித்தகுதி	எம். ஏ சென்னைப் பல்கலைக்கழகம்
	பிஎச் டி. do
ஆய்வுத்தலைப்பு	தமிழகத்தில் மது குறைப்பு மற்றும் மது விலக்கு இயக்கங்கள் (1900-1950) வரலா
பணிமற்றும் இடம்	விரிவுரையாளர் (தேர்வு நிலை) ஸ்ரீ வாசவி கல்லூரி, ஈரோடு.

பெயர் டாக்டர்	**சி. நடராஜன்**
த. பெயர்	சி. ப சின்னு முதலியார்
பிறந்த ஊர் தேதி	சேலம் 16-1-1941
கல்வித்தகுதி	எம் ஏ சென்னைப் பல்கலைக்கழகம்
	எம், எட் do
	எம். பில் do
	பிஎச், டி, do
ஆய்வுத்தலைப்பு	Economic History of Erode Municipality with particular referenes to its Income and Expenditure
பணிமற்றும் இடம்	விரிவுரையாளர், (தேர்வுநிலை) ஸ்ரீ வாசவி கல்லூரி, ஈரோடு.





எம். பி. நாச்சிமுத்து நகர்
சென்னிமலை



எம். பி. நாச்சிமுத்து, எம். ஜெகநாதன் பாலிடெக்னிக்
சென்னிமலை - 638 051

பெரியார் மாவட்ட செங்குந்தர்
முதல் மகாநாடு சிறப்புடன் நடைபெற
நல்வாழ்த்துக்கள்!





V. சோமசுந்தரம்,

தலைமை ஆசிரியர்
அருள்நெறி திருப்பணி மன்ற மேல்நிலைப்பள்ளி,
ஈரோடு-3

செங்குந்தா நிமிர்ந்து நில்!
செங்குந்தம் தழைக்க!

பெரியார் மாவட்ட செங்குந்தர்
முதல் மாநாடு சிறப்புடன்
நடைபெற நல்வாழ்த்துக்கள்



P. வடிவேல்

அருள்நெறி திருப்பணி மன்ற ஆரம்பப்பள்ளி
ஈரோடு-3

செங்குந்தம் வாழ்க !—வளர்க !



நல் வாழ்த்துக்கள்

வி. கோபாலன், எம்.ஏ., பி.எட்.,
இடைநிலை ஆசிரியர்.
அருள்நெறித் திருப்பணி மன்றம்,
ஆரம்பப்பள்ளி, ஈரோடு-3

பெரியார் மாவட்ட செங்குந்தர் முதல் மாநாடு சிறப்புடன் நடைபெற வாழ்த்துக்கள்





A. அங்கமுத்து, B.Com.,
8. N. P. K. நிலையம்,
கவுந்தப்பாடி-635 456

பெரியார் மாவட்ட செங்குந்த மகாசன மகாநாட்டிற்கு

நல்வாழ்த்துக்கள்



இப்படிக்கு

டாக்டர். மா. அர்த்தநாரி
M. Sc. MPhil., Ph. D. PGDCA.,

தலைவர் கம்ப்யூட்டர் துறை
ஈரோடு கலைக்கல்லூரி ஈரோடு-9
Ph : 77903 (Resi)
78004 (off)

திருமதி. வை. பத்மினி M. A. M. Ed.,
கலைமகள் கல்வி நிலையம்
ஈரோடு.

அ. கணீஷ் கார்த்திக்

அழகான தரமான 'மதுரை குமரன் கூட்டுறவு சொசைட்டி' டவல்கள், டர்க்கிடவல்கள் ஈரோட்டில் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்குமிடம்.

'மயூரா'

29-D வெங்கடாசலம் வீதி ஈரோடு-1
Prop : **M. சண்முக சுந்தரம்**
Dr MS சுகந்திமணி
M. B. B. S. DGO
M பெருமாய்அம்மாள்



தரமான கல்கத்தா பீம் பைப், டாபி, டாபி ஸ்பேர்ஸ், பிக்கர்ஸ், இரும்பு அச்சு, கைவார் முதலிய பவர்லூம் தறி சாமான்களை குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரை யாகவும் கிடைக்குமிடம் :


H. O. ஸ்ரீகார்த்திக் டெக்ஸ்ஸ்பேர்ஸ்
2, சொக்க நாதவீதி, ஈரோடு
B. O கோழிக்கால் நத்தம் ரோடு,
திருச்செங்கோடு.

○—★—○

H.O. மயூராடெக்ஸ் பேர்ஸ்
26-A, வெங்கடாசலம் வீதி ஈரோடு 1.
Prop: **M பெரியசாமி**

நல்ல தரமான காட்டன் லுங்கிகள் பாலி யெஸ்டர் லுங்கிகள். டவல்கள், காடாபீஸ் (Export) முதலியன குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்குமிடம்

ஸ்ரீ கார்த்திக் டெக்ஸ்டைல்ஸ்
29-D வெங்கடாசலம் வீதி
ஈரோடு-1
தொலை பேசி : வீடு 77903
கடை 72115



செய்யாற்றில் செங்குந்தர்

க. இரா. குட்டியப்பன்,

நகராட்சி ஆணையர் (ஓய்வு),
செயற்குழு உறுப்பினர், தென்னிந்திய மகாசன செங்குந்தர் சங்கம்
தலைவர் செங்குந்தர் திருமண ஏற்பாட்டுக்குழு.
செய்யாறு, சம்புவராயர் மாவட்டம்
திருவண்ணாமலை

'பாலாடையன்ன மேலாடை'யை-வண்ணமும், வனப்பும், மென்மையும், தின்மையும் நிறைந்த கவர்ச்சி மிக்க கலை நுணுக்கம் வாய்ந்த கவினார்த்த ஆடைகளே நெய்யும் ஆற்றல்மிக்க நெசவாளர்கள் செங்குந்தர் பெருமக்கள் ஆவர். அகில உலக மக்கள் அனைவர்க்கும் அறம் புகட்டிய வள்ளுவப் பெருந்தகையைச் செங்குந்தர் மரபினர் என்றே சாற்றுவர் சான்றோர். இதோ ஓர் அழகான காட்சி. இலக்கியப் படைப்பு.

கயிலை மலையில் கண்ணுதற் பெருமான், உமாதேவியுடன், களிநடனம் ஆடுகின்றான். வானவரும் மாதவரும், இசைவானரும், சிவ கணங்களும், அரமகளிரும் அவன் திரு நடனத்தைக் கண் கொட்டாது கண்டு களிக்கின்றனர். கழிபேருவகை கொண்டு கைகளைத்தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் புரிகின்றனர். அப்போதும் அற்புதம் ஒன்றை நிகழ்த்துகின்றார். ஆடலரசன் தன் காதணிகளாம் குழைகளில் ஒன்றைக் கீழே விழச் செய்து மீண்டும் இலாவகமாக அதனைக் காலால் எடுத்துக் கையில் வாங்கிக் காதில் அணிந்து கொள்கிறான் அவன் ஆடல் இன்பத்திலேயே மூழ்கிக் களித்த அமரரும், பிறரும் அறிந்தாரல்லர். ஆடல் முடிந்தவுடன் பெருமானே அவர்களை நோக்கி ''என் நடன ஆடலில் இடையிலே நடைபெற்ற அதிசயத்தை அறிந்தீரோ?'' என்றான். விழித்தவர் விண்ணவர் ''மயிலையில் வாழும் அறத்தின் ஆசான் வள்ளுவன்பால் சென்று கேட்டு நும் ஐயம் தெளிவீர்'' என்றனன். அவர்கள் போந்து குறள் வகுத்த கோமானைக் கேட்டனர். உடனே வள்ளுவர்.

'பூவில் அயனும் புரந்தரனும், பூவுலகைத்
தாவி அளந்தோனும் தாம் இருக்க. - நாவில்
இழை நக்கி நூல் நெருடும் ஏழை அறிவேனோ
குழை நக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து.

என்று பைந்தமிழ்ப்பாடர் ஒன்றார் விடை பகர்ந்தார்.

அயனும் திருமாலும், அமரர் தலைவனும் பிறரும் குழுமியிருந்த கூட்டத்தின் நடுவில் நடனமாடியபோது தன் குழையை கீழே விழச் செய்து மீண்டும் எடுத்து அணிந்து கொண்ட சிவபெருமானின் திருவிளையாடலை என்னால் மட்டும் எவ்வாறு அறிய இயலும்? என்றாராம்.

விண்ணவர் வியந்து வள்ளுவரின் கூர்த்த மதியைப் போற்றினராம். 'நாவில் இழை நக்கி நூல் நெருடும் ஏழை' என்பதாலும், அவர் ஆடை வாணிபம் புரிந்தும், ஆடைகளை நெய்தும் வந்தார் என்று சில நூல்களில் காணப்படுவதாலும், ஒட்டக்கூத்தர் நூல் ஒன்றின் வாயிலாகவும், அவர் செங்குந்தர் இனத்தவர் என அறிகிறோம். முருகனின் நவவீரர் அமருக்கு அஞ்சா அடல் மறவர். அறத்தின் வழி செல்லும் சிலர் செங்குந்தர் என்பதும் சான்றோர் கருத்தாகும். இரட்டைப் புலவர்கள். அந்தக்கக கவி வீரராகவ முதலியார் போன்ற அந்தக் கால பாவலரும். அறிஞர் அண்ணா பாவேந்தர் பாரதிதாசனார் போன்ற இந்த நூற்றாண்டின் அறிஞர்களும் செங்குந்தர் குல திலகமணிகளேயாவார். தம் இசையால், இனிய குரலால் எண்ணற்ற இலக்கியச் சான்றுகளால், நகைச்சுவைத் துணுக்குகளால் படித்தாரை மட்டுமின்றிப் பாமர மக்களையும் தம்பால் ஈர்த்துப் பேருரையாற்றிவரும் தன்னலமற்ற பெருந்தகையார் திருமுருக கிருபானந்த வாரியார் செங்குந்த மேதையாவார்.

செய்யாற்றில் மிளிரும் திருவோத்தூர் அருள்மிகு வேதபுரீஸ்வரர் ஆலயம் மிகத் தொன்மை வாய்ந்தது கி. பி. 900 ஆண்டுக்கு முற்பட்டது. கி. பி. 960ஆம் ஆண்டின் திருவோத்தூரில் பெருவெள்ளப் பெருக்கு செய்யாற்றில் ஏற்பட்டு ஊரும், உயர் விளைச்சல் நிலங்களும் சேதம் அடைந்தன என்றும் அந்தத் துயர நிலை யிலும் ஈண்டு வாழ்ந்த செங்குந்த மக்கள் சேதமுற்ற தம் நிலங்களில் சிலவற்றை விற்று அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரியை நாணயத்துடனும், நேர்மையுடனும், கடமையுணர்வுடனும் செலுத்தினர் எனவும் அன்றைய கல்வெட்டு ஒன்று பேசுகிறது. தவிர செல்வர் பலர் ஊருணி நீர் நிறைந்தாற் போன்று, பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தால் என்ன தம்பால் இருந்த நெல் தானியங்களை வெள்ளத்தால் வேதனையுற்ற ஏழை எளிய மக்கட்கு ஈந்து இன்பம் பூத்தனர் எனவும் அறிகிறோம். மக்கள் தொண்டே மகேசன் தொண்டாகக் கொண்டு ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணும் இயல்பினராக அன்னார் ஒளிவீசினர்

செய்யாறு என்றால் செம்மை சான்ற அறவழி என்பது பொருள். ஆம் செய்யாற்றுச் செங்குந்தர் அன்றும் இன்றும் செம்மைசான்ற அற வழியில்தான் தம் இல்லற வாழ்வை நடாத்தி வருகின்றனர். அவர் களுக்குள் கட்டுப்பாடு உள்ளது. தவறு செய்பவரைத் தம் நடுவர் மன்றம் மூலம் தண்டித்தும், அன்புரை அற வுரை புகன்றும் திருத்தி வந்தனர். வருகின்றனர். பொதுப் பணியில் நாட்டம் மிக்கவர் அவர்கள். திருவத்தூர் செய்யாற்றில் நெய்யப்பட்ட ஆடைகள் எனில் அவை தரத்தால், சாயத்தால், கலைச் சிறப்பால் தனி சிறப்புப் பெற்றவையாகும்.

நான் செய்யாறு திருமண ஏற்பாடுக் குழுவின் தலைவனாக இருக்கிறேன். வரதட்சணைக் கொடுமை தலைகாட்டா வண்ணம் யான் திருமணங்கள் பலவற்றைச் சிறப்பாக நடத்தியிருக்கிறேன். அந்த மன்றல் தம்பதியர் அன்று செம்மை சான்ற இல்லறச் செல்வர்களாக அன்பு மணம் கொண்டு இணைந்து, சிறப்புடன் வாழ்கின்றனர்.

சமூகத் தொண்டிலே முன்னணியில் திகழ்கின்றனர்
'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு' — என்பதற்கிணங்க வாழ்ந்து வருகின்றனர்

வருகின்றனர்.

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' — என்னும் குறட்பாவுக்கேற்ப

இவ்வூர் மக்கள் 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று தாம் பெற்ற உணவைப் பகிர்ந்து, இல்லை யென்று இல்லை நாடிவரும் எளியவர்கட்கு இல்லையென்னாது வாரி வழங்குகின்றனர் என்றால் மிகை யாகாது. மிக்கார்வந்து விரும்பிப் பலி கொளத் தக்கார் தம் மக்களிர் என்று எனத் திருஞான சம்பந்தப் பெருமான் இவ்வூர் பதிகத்தில் பாடியிருப்பதற்கு ஏற்ப விருந்தினரையும், வறியவரையும், தம் மக்களே போன்று கருதி உபசரித்து வந்துள்ளனர்.

செங்குந்தர் குடும்பம் என்றால் ஆடவர், மகளிர், குழந்தைகள் அத்தனை பேரும் சேர்ந்து உழைக்கும் பண்புச் சோலை எனில் மிகையன்று

தமிழ் காக்கும் ஆர்வலர் அவர்கள் அமைதி வழியே, அற விழியே அவர் தம் குறிக்கோல். அரசிட மிருந்து தம் இனத்திற்கேற்ப இட ஒதுக்கீடு பெறுவதிலும் கூட மற்றவரைப் போன்று வன்முறை நெறிகளை நாடாமல் அமைதிவழி வேண்டுகோள்களின் துணை கொண்டே உரிமையைப்பெற விழையும் பெருமை மிக்கவர் அவர்கள். உழைக்கும் உத்தமர், எல்லோரும் இன்புற்று வாழப் பாடுபடும் இயல்பினர்.

செங்குந்தர் குலம் சார்ந்த பாவோடும் பெண்களை இவ்வாறு பாரட்டிப் பாடுகிறார் பாவேந்தர் பாரதிதாசனார்.

'நடு வீதியில் பாலோடும் மடவார் நடை ஓவியங்கள், இடது கைத்திரி வட்டம் ஏழிலோடு சுழலும் தன்னடையாடிடும் காலில் கென்டை விழ போகும் நூலில் கோண்டைமேல் மலர்க்காடு.

உலகினுக்கு உடை தேவை, உடைக்கு நூற்பாவே தேவை.
உலவும் மங்கைமார் இதனை எண்ணுவார்'
உயிரும் உணர்வுமாய்த் தொண்டு நண்ணுவார்?
உழைப்பின் செல்வியர் இயல்பை இப்படி விவரிக்கிறார் பாவேந்தர்.
''தார் கொண்ட நாடாவைக் கையினால் — நான்
தறியில் கோப்பதும் தேவை அன்றோ?
பார் கொண்ட மானத்தை நான் பாதுகாப்பதும் தேவை

என்று தறித் தொழிலாளி பாடுகின்றானாம்.

பாவேந்தரின் பாக்கள் ஒவ்வொன்றும் தேன் துளிகள். தொன்று தொட்டுப் புகழ்ப் பூங்காவிலே உலா வரும் நம் செங்குந்தர் பெருமக்கள் பண்டைப் பெருமையை மட்டும் எண்ணி வாளா இருந்துவிடாமல் இந் நிலையில் நம் நிலை உயர முயல்வர்களாக யடித்தறிந்து, மேல் பதவியிலே உயர்ந்து, செல்வச் செழிப்பிலே திளைக்கின்ற நம் குல திலகர் அடித்தட்ட மக்களின் வாழ்வு அருகுபோல் வேரூன்றி ஆல்போல் தழைக்க ஆவன புரிவார்களாக!



நம்பிக்கை நட்சத்திரங்கள்

எஸ். ஏ. தங்கவேல்,
இராஜபாளையம் செங்குந்தா உறவின்முறை தலைவர்.

சிறிது காலத்துக்கு முன்பு நூல் ஜவுளிக் கட்டுப்பாடு அமுலில் இருந்த நேரம். மொத்த விற்பனையாளராக ஒரு முஸ்லீம். மதுரையைச் சேர்ந்தவர். அவரிடமிருந்துதான் இதர சில்லரை வியாபாரிகள் கண்ட்ரோல் ஜவுளியைப் பெற்று விற்பனை செய்ய வேண்டிய நிலை. திருவில்லிபுத்தூரில் பிரபலமான ஒரு ஜவுளி வியாபாரி. ஆனால் அவருக்குச் சில்லரை விற்பனைக்கு கண்ட்ரோல் ஜவுளி கொடுக்கப்படாமல் அதே ஊரில் உள்ள ஒரு முஸ்லீம் வியாபாரிக்கு சிபாரிசு செய்யப்படுகிறது. இதை எதிர்த்து பிராமண வியாபாரி மேலதிகாரிக்கு முறையீடு செய்கிறார். உடனே அவருக்கு ஆதரவாக உத்தரவிடப்படுகிறது – மேலதிகாரியும் ஒரு பிராமணர்.

ஒரு பிரபலமான ஜவுளித் தயாரிப்பு நிறுவனம் – உரிமையாளர் ஒரு ஜாதி. மேலாளர் வேறொரு ஜாதி. நிறுவனத்தில் காலியுள்ள வேலையிடங்களை நிரப்ப எல்லா வகுப்பாரையும் சேர்ந்த நபர்கள் கொண்ட பட்டியல் உரிமையாளரிடம் சமர்ப்பிக்கப்படுகிறது. நிறுவனத்தின் உரிமையாளரைச் சார்ந்த வகுப்பினருக்கு மட்டும் வேலை கொடுக்கப்படுகிறது. மீதமுள்ள இடங்களிலும் உரிமையாளரின் வகுப்பாருக்கு மட்டுமே வேலை கொடுக்கும்படி உத்தரவு இடப்படுகிறது. கொஞ்ச நாளில் மேலாளரும் வேலையிருந்து நீக்கப்பட்டு அந்த இடத்திலும் உரிமையாளரின் வகுப்பினரே நியமிக்கப்படுகிறார். இது அந்த வகுப்பினரின் இன வளர்ச்சியைக் காட்டுகிறது.

ஒரு சன்னியாசி - பிச்சை கேட்டு ஒரு கடை முன்பு நிற்கிறார். அந்தக் கடையில் கடன் வாங்கியிருந்த ஒரு நபர் உரிய காலத்தில் பணம் கொடுக்காமல் காலங்கடத்தியதால் கடையின் உரிமையாளர் அவரிடம் கோபங்கொண்டு அவரை ஜாதியைக் குறிப்பிட்டு ஏசுகிறார். உடனிருந்த சன்னியாசி கடன் வாங்கியவருக்கு ஆதரவாகப் பேசி கடைக்காரரிடம் வாதாடுகிறார். காரணம்கடன் வாங்கிய நபரும் சன்னியாசியும் ஒரே ஜாதியினர் என்பதுதான். அதாவது ''சன்னியாசிக்கும் உண்டு ஜாதிப்பற்று'' என்பதை நிரூபித்து விடுகிறார்.

மேலே சொன்ன நிகழ்ச்சிகள் எதைக் காட்டுகின்றன? நாட்டு நடப்பில் அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொருவரும் தனது இனத்தாருக்குத்தான் ஆதரவாக நடந்து கொள்கிறார்கள் என்பதைத் தானல்லவா?

என் இனிய செங்குந்த உறவினர்களே! சற்று சிந்தியுங்கள். நாம் எப்படி இருக்கிறோம்? நமக்குள்ளேயே சண்டை போட்டுக் கொள்கிறோம். நமது ஒற்றுமைக் குறைவால் நமது சமுதாயத்துக்குரிய கோவில்களையும், பொதுச் சொத்துக்களையும் இழந்து விட்டு பிறரது அதிகாரத்துக்கு நாம் உட்பட்ட நிகழ்ச்சிகள் ஏராளம். ஒருவருக்கொருவர் பொறாமையினால் நமக்குரிய கைத்தறி கூட்டுறவு சங்கங்களில் நமது பிரதிநிதிகள் இல்லாமல் போய்விட்ட நிகழ்ச்சிகள் எத்தனையோ உண்டு. நமது சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு சிலர் தமது அயராத

உழைப்பினால் முன்னேறினால் அதைக் கண்டு மகிழ்ச்சி கொள்ளாமல் அவர்களை-யும் தாழ்வுறச் செய்த நிகழ்ச்சிகள் நிறை உண்டு. நன்கு வளர்ச்சி பெற்ற ஒரு பெரிய ஆலமரம் இருந்தால் எல்லாரும் அதனடியில் தங்கி இளைப்பாறலாம். அது போல் நம்மவர்களில் ஒரு சிலராவது நல்ல நிலைமையில் இருந்தால் நமக்கு வேண்டிய சந்தர்ப்பங்களில் அவர்களை முறையோடு அணுகினால் அவர்கள் நிச்சயம் நமக்கு முடிந்த அளவு ஆதரவு கொடுக்கத்தான் முயற்சி செய்வார்கள். நாமும் அவர்களிடம் உரிமையோடு உதவி கேட்கவும் செய்யலாம். இதை மறந்து காழ்ப்புணர்ச்சியால் புறம் பேசினால் யாருக்குத்தான் நன்மை கிடைக்கும்.

பிற்பட்ட வகுப்பினருக்கு கல்வி நிலையங்களிலும் வேலை வாய்ப்புகளிலும் அதிக இடம் பேற வேண்டும். ஏற்கனவே பிற்பட்ட வகுப்பாருக்கு கிடைத்து வந்த விழுக்காடு அளவு கூட இன்றைய அரசு ஆணையால் குறைந்துவிட்டது. இதை எதிர்த்து போராடி முன்பு கிடைத்து வந்த சலுகைகளைவிட அதிகமான அளவு சலுகை பெறவும் மண்டல் கமிஷன் அறிக்கையை உடனே அமுல் செய்யும்படி மத்திய அரசை வற்புறுத்தி மைய அரசுப்பணிகளிலும் கல்வி நிலையங்களிலும் நம்மவர் அதிக அளவில் பணியாற்றும்படியான நிலைமையை ஏற்படுத்த வேண்டும். மாநில அளவில் உள்ளதைவிட மத்திய அரசுப் பணிகளில் பிற்பட்ட வகுப்பினருக்கு போதிய வேலை வாய்ப்புகள் இல்லை. குறிப்பாக GLASS - I அலுவலர்கள் மத்திய அரசில் எண்ணிக்கை மொத்தம் 1,74,043. ஆனால் ஷை எண்ணிக்கையில் பிற்பட்டவர்கள் சமூகத்தைச் சார்ந்தவர்கள் மொத்தம் 8169 பேர்தான். தயவு செய்து கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். மிகவும் அவலநிலை இது மாற்றியமைக்க வேண்டும்.

ஒரு மகிழ்ச்சியான செய்தி. தற்பொழுது உள்ள நமது மாநிலத் தலைவர் தமிழ்நாடு முழுவதும் பிரயாணம் செய்து நமது மக்களிடையே இன உணர்வு ஏற்படுத்தி வருவதும், ஆங்காங்கே மாவட்ட மாநாடுகள், பேரணிகள் நடப்பதும் நமக்கு ஓரளவு நம்பிக்கை ஊட்டுகின்றன. நமது இன மக்களின் மாநில மாநாடும் விரைவிலேயே சென்னையில் கூட இருப்பதும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். தற்பொழுது நமது இன மக்களிடையே கொஞ்சங் கொஞ்சமாக ஏற்பட்டுவரும் விழிப்புணர்வை நமது தலைவர்கள் சரியான முறையில் பயன்படுத்தி நமது மக்களின் ஆக்க பூர்வமான முன்னேற்றத்துக்கு வழி வகுத்து நடத்தி செல்ல வேண்டும். வெறும் மாநாடும் தீர்மானங்களும் மட்டும் போதாது. மாநாட்டு தீர்மானங்களை அமுல் செய்ய தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். எல்லா வகையிலும் பின் தங்கிவிட்ட நமது குல ஏழை எளிய மக்களிடம் ஒரு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தி அவர்கள் வாழ்வில் ஒளி வீச நமது தலைவர்கள் ஆவன செய்ய வேண்டும்.

அதிர்ஷ்டவசமாக நமக்கு தற்பொழுது கிடைத்துள்ள மாநில தலைவர் திரு. **சுத்தானந்தம்** அவர்களும், பெரியார் மாவட்டத் தலைவர் கர்மவீரர் திரு. **ஏராணா முத்துச்சாமி முதலியார்** போன்ற பெரியோர்களும் நம்பிக்கை நட்சத்திரங்களாகத் திகழ்கிறார்கள்.

அவர்களின் சீரிய தலைமையை ஏற்போம்.
அவர்தம் வழி நடப்போம்.

வாழ்க நமது சமுதாயம்! வளர்க நமது ஒற்றுமை!!



சமுதாயத் தேவை?

டாக்டர் மு. கருணாநிதி,
M.B.B.S., D.C.M.,

பொதுச் செயலாளர்,
திருச்சி மாவட்ட
செங்குந்த மகாஜன சங்கம்,
ஜெயங்கொண்டம்.

சமுதாய விழாக்கள் கூட்டங்கள், மகாநாடுகள் அனைத்திலும் எல்லா பேச்சாளர்களும் தவறாமல் குறிப்பிடுவது இரண்டு கருத்துக்கள்

1. நெசவுத் தொழிலைவிட்டு வெளியேற வேண்டும்
2. நம்மவாகளிடயே ஒற்றுமையே இல்லை

யாரும் பெரும் விருப்போடு நெசவுத் தொழிலில் ஈடுபடவில்லை. வேறு வழியில்லாமல் குறிப்பாக வேறு தொழில் ஆரம்பிக்க போதுமான மூலதனம் இல்லாத காரணத்தாலேயே-சாகும்வரைநெசவுத தொழிலை விடுவதில்லை அனேக மேடைப் பேச்சாளர்களே மேடையிலிருந்து இறங்கியதும் நெசவையே நாடுகின்றனா என்பதே பேருண்மை எங்கள் பகுதியில் கடன் வாங்கி படித்து பட்டம் பெற்றப் பின்னா திரும்பவும நெசவுத் தொழில் ஈடுபடுவதை வீட்டுக்கு வீடு பார்க்க முடிகிறது சிறுக சிறுக படித்த கடனாளியாவதைவிட படிக்காமலே நெசவுத்தொழில் செய்து-ஓரளவு சிரமம் இல்லாமல் காலத்தை ஓட்டலாமே என்னும் எண்ணம் எங்கள் பகுதியில் மேலோங்கி வருகிறது அதிலும் இன்றைய இடஒதுக்கீடு கொள்கைக்கு பின்னர் பெற்றோர்களுக்கு படிக்க வைக்கும் தைரியமே இல்லை

கல்லூரிகள் வேலைகளில்-அறிவு மிகுந்த முற்பட்ட சாதியினரிடம் போட்டியிட நம்மவர்களை மிகமிகச்சிறு வயதிலிருந்தே தயார் செய்தால் மட்டுமே சங்கத்தின் நோக்கங்கள் நிறைவேறும் கல்வி உதவித்தொகை வழங்குவதை விட்டுவிட்டு, கல்வியில் பின்தங்கிய நம்குல மாணவர்களுக்கு முதல் வகுப்பிலிருந்தே-மாலைநேர சிறப்பு வகுப்புகள் நடத்தி அறிவை வளர்த்து 80 – 90 விழுக்காடுகளுக்கு குறையாமல் மதிப்பெண்கள் பெற நம்மவர்களை தயார் செய்தால் மட்டுமே, நெசவுத் தொழிலிருந்து நம்மவாகளை வெளிக்கொணர இயலும்.

மாலைநேர சிறப்பு வகுப்புகளை நடத்துவதற்கு ''நிதியே'' மிகப் பெரும் பிரச்சினை ''நிரந்தர கல்வி நிதி அறக்கட்டளையை'' மாநில அளவில்-வலுவுள்ளதாக அமைந்து-கிராம அளவில் வகுப்புகள் நடத்த நீண்ட காலத்திட்டம் தீட்டினால் மட்டுமே, சிறப்பு வகுப்புகளை சிறப்பாக செய்ய இயலும், மேடைப் பேச்சாளர்களை முடுக்கி விட்டு ஒவ்வொரு கூட்டத்திலும் ''நாடார் சமூகவத்தவரைப் போன்று ஒவ்வொருவரும் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை கல்வி நிதிக்கு வழங்க

வேண்டும்'' என்பதை திரும்ப திரும்ப சொல்லி, நம்மவர்கள் தாமாகவே முன் வந்து நிதிவழங்கும் அளவிற்கு-மனதை பக்குவப் படுத்தவேண்டும்.

அதே போன்று, தொழில் துறையில் உள்ள அனைத்து வாத்தகப் பெருமக்களும் செங்குந்தர்கள் அனைவரும் நமது நெருங்கிய உறவினர்களே என்னும் பரந்த மனதோடு-தகுதிவாய்ந்த நம்மவர்களை துணை தொழில்கள் தொடங்க, தகுந்த ஆலோசனைகளை வழங்கி ஊக்குவிக்க வேண்டும்.

நம்மவர்களிடையே தொழில்தொடங்கி மிக அதிக அளவில்பணம் ஈட்டலாம் என்னும் நம்பிக்கை பெருமளவில் இருந்தும் கூட தக்க ஆலோசனைகள் கிடைக்காத காரணத்தாலேயே பயஉணர்வு மற்றும் தயக்கம் காரணமாக தொழில் துறையில் இறங்க தயங்குகிறார்கள் ஆலோசனை மையங்கள பெயரளவில் அமையாமல், உண்மையான தொண்டுள்ளத்தோடு அமையும் பட்சத்தில், நம்மவர்கள் அறிவாற்றல் காரணமாய், மற்றவர்களை எளிதில் மிஞ்சிவிடமுடியும்.

இப்படி ஏதாவது உருப்படியான காரியம் செய்தால் மட்டுமே'' நம்மவர்களிடையே ஒற்றுமை உணர்வை ஊட்டமுடியும் மற்ற சமூகத்தவர் பொறாமைப்படும் அளவிற்கே நம்முடையே ஒற்றுமை உணர்வு உள்ளது, ஆனால் போதவில்லை என்பதே உண்மை,



வாழ்க தமிழ்! வளர்க செங்குந்தம்!

ஈரோடு மாநகரில் 1990 மார்ச்சு திங்கள் 10ஆம் நாள் நடைபெறும் பெரியார் மாவட்டச் செங்குந்தர் மகாசன சங்க மாவட்ட முதல் மாநாடு செங்குந்தர் குலத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைந்து சீரோடும் சிறப்போடும் நடைபெற எங்கள் நல்வாழ்த்துக்கள்

அன்புடன்



டாக்டர் வெ. ஆறுமுகம் எம். எஸ்ஸி., பி. எச்டி.,

தலைவர் விலங்கியல்துறை,
ஈரோடு கலைக்கல்லூரி, ஈரோடு-9.

திருமதி இந்திராணி ஆறுமுகம்
எம். ஏ., எம். எஸ்ஸி., எம். எட்..

திரு ஆ. பத்திரிநாத் செந்தில்குமார்
எம் பார்மஸீ-முதலாண்டு,
ஜே. எஸ். எஸ் பார்மஸி கல்லூரி
ஊட்டி.

திரு ஆ. பசுபதி கணேஷ்
எம் பி., பி. எஸ் இரண்டாமாண்டு
ஜே. எஸ். எஸ். மருத்துவக்கல்லூரி
மைசூர்.

பெரியார் மாவட்டச் செங்குந்த மகாசன சங்கம் நடத்தும் இம்மாநாடு

சிறப்பாகவும் நல்லமுறையிலும் அமைய வாழ்த்தும் உள்ளங்கள்.



பேராசிரியர் **S. K. செங்கோட்டையன்**
ஈரோடு கலைக்கல்லூரி ஈரோடு-9

S கமலவேணி
S வசந்தகுமார்
S யுவராஜ்
S ரேவதிஐஸ்வர்ய

பெரியார் மாவட்ட முதல் செங்குந்த
மாகாசன மாநாடு சிறப்புற நடைபெற
வாழ்த்தும் நெஞ்சங்கள்.





கே.எஸ். பாலகிருஷ்ணன், எம்.எஸ்ஸி., எம்.பில்.,
விரிவுரையாளர், ஈரோடு கலைக் கல்லூரி, ஈரோடு

" இசைக் கலைமணி " **B. தமிழ்ச் செல்வி**
வாய்ப்பாட்டு-வீணை வித்வான்
19 சிதம்பரம் காலனி பெரியார் நகர் ஈரோடு
வாய்ப்பாட்டு-வீணைகற்றுக் கொடுக்கப்படும்

பெரியார் மாவட்ட செங்குந்தர்மகாசன சங்க முதல் மாவட்ட மாநாடு
சீரோடும், சிறப்போடும் நடைபெற எங்கள் நல் வாழ்த்துக்கள்





கு. மீனாட்சிசுந்தரம்,
எம்.எஸ்சி., எம்.சி.ஏ.,
விரிவுரையாளர்,
கணிப்பொறியியல் துறை.
ஈரோடு கலைக்கல்லூரி,
ஈரோடு-9

கு. செங்கோட்டையன், பி.இ.,
சிவில் காண்ட்ராக்டர்,
எம்-1 பெரியார் நகர்,
ஹவுசிங் யூனிட், ஈரோடு-9
போன் நெம்பர்: 76762.

நல் வாழ்த்துக்கள்!



எங்களிடம் விஜய், ஸ்பிக், பாரி, பாக்ட், கதிர், சக்தி உரங்களும், அனைத்து கம்பெனி பூச்சி மருந்துகளும் பாரி மாட்டுத்தீவனமும் மற்றும் சங்கர், **A. C. C.**, செட்டிநாடு, அரசு சிமெண்ட் வகைகளும் கிடைக்கும்.



M/s. A.S. ஆறுமுக முதலியார்

மளிகை, உரம் & சிமெண்ட் வணிகம்,

1/28, முதன்மைச்சாலை,

அரச்சலூர் - ஈரோடு Tk.

போன்: 43 & 53

வாழ்க தமிழ்! வளர்க செங்குந்தம்!!



பெரியார் மாவட்டச் செங்குந்தர் முதல் மாநாடு சிறப்புற நடைபெற எங்களது மனங்கனிந்த நல் வாழ்த்துக்கள்!



அன்புடன்,

வி. வெங்கடேஸ்வரன்,

தலைவர், இரசாயனத்துறை,

ஈரோடு கலைக்கல்லூரி, ஈரோடு.


வி. தமிழ்செல்வி வெங்கடேஸ்வரன்

வி. விஜய் ஆனந்த்

வி. செந்தில் முருகன்

மேட்டுப்பாளையம்.

சாதி மாநாடுகள் தேவையே!



திரு. **அ. பீதாம்பரம்,**
மாநில செயற்குழு உறுப்பினர்,
தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்கம். சென்னை.
அமைப்புச் செயலாளர், வ. ஆ. அம்பேத்கார் மாவட்டம்.
தலைவர், அரக்கோணம் வட்ட செங்குந்தர் சங்கம்,
சம்பத்துராயப்பேட்டை அஞ்சல்

ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமானால் சிறந்த அரசியல் அமைப்பு வேண்டும். அதுபோல முற்காலத்தில் மக்கள் ஒற்றிமையுடன் வாழவும், தங்களின் தேவைகளைப் பெருக்கிக் கொள்ளவும் ஒவ்வொரு சமுதாய மக்களும் தங்களுக்குப் பாடுபடுகின்ற சான்றோர்கள் அடங்கிய குழுக்களை அமைத்துக் கொண்டனர். அக்குழுக்களே பிற்காலத்தில் அந்தச் சமுதாயத்தின் சங்கமாக மாறியது.

ஆனால் நம் தமிழகத்தில் தோன்றிய புலவர்கள் ''சாதி இரண்டொழிய வேறில்லை'' என்றும், 'ஒன்றே குலம்; ஒருவனே தேவனே' என்றும், சாதிகள் இல்லையடி பாப்பா' என்றும் 'இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே' என்றும் பாடிச் சென்றுள்ளனர். அவர்கள் பாடிய அக்கால கட்டத்தில் அந்த நிலைமையில் நாட்டின் அமைப்பும், மக்கள் என்றும் இருந்தது. ஆனால் நாடு சுதந்திரமடைந்து நம்மை நாமே ஆண்டு கொள்ளுகின்ற இன்றைய சூழ்நிலையில் 'சாதி, மத, பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என நமது அரசியல் சாசனம் கூறினாலும், அத்தகுநிலைகள் மக்களாட்சி முறையில் இயங்குகின்ற மாநில அரசுகளால் சாதியை நீக்கமுடியாத சூழல் அரசுக்கே உள்ளது.

அன்று முதல் இன்றுவரை சாதிகள் ஒழிய வேண்டுமென்று பலர் கூறிவந்த போதிலும் சாதிகள் ஒழிந்தபாடில்லை. எந்தத் தொகுதியில் எந்த சாதியில் உள்ளவரை நிறுத்தினால் சாதி அடிப்படையில் அதிக வாக்குகள் பெற்று வெற்றிபெற வாய்ப்பு உள்ளது என்றே இன்றைய எல்லா அரசியல் கட்சிகளுமே கணக்கிடுகின்றன. ஆனால் அதே அரசியல் கட்சிகள் சாதிகள் ஒழிய வேண்டுமென்று போலியாகமேடைகளில் பேசுகின்றன.

ஆன்மீக அறிவை வளர்க்கவும், ஒழுக்கத்தைப் போதிக்கவும், மக்கள் மத அடிப்படையில் ஓர் இனமாக கூட்டாக வாழ்ந்தனர். மற்றும் அந்தந்தப் பிரதேசமக்கள் மொழியாலும், பழக்க வழக்கங்களாலும் பிணைக்கப்பட்டு ஆந்திரர், தமிழர், வங்காளியர்' என்ற முறையில் இனமாக வழிவகுத்துக் கொண்டனர். சமயங்களை வளர்க்கவும் பல சங்கங்கள் தோன்றியது. அப்படி இன, சமய அடிப்படையில் வாழ்ந்த மக்கள் தங்கள் தொழிலின் காரணமாக பல பகுதிகளில் பிரிந்து வாழ்ந்தாலும், தம் சாதியைச் சேர்ந்த மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய காரியங்களைச் செய்வதற்கு ஒரு அமைப்பு தேவை என்று உணர்ந்தார்கள். அவ்வாறே அந்த உணர்வின் காரணமாக ஏற்பட்டதே 'செங்குந்தர் சங்கம்'.

இச்சங்கத்தை உருவாக்கிய நம்குலப் பெரியோர்கள் அரசிடம் சலுகைகளைப் பெற தனி தனியே குரல் கொடுத்தால் எடுபடாது எனக்கருதி தலைமைச் சங்கத்தினை ஏற்படுத்தினர் அதன்மூலம் நம் இனத்தவர்க்கு வேண்டிய பல உதவிகளையும், சலுகைகளையும் அரசி மிருந்து பெற்றனர். பெற்றும் வருகின்றனர்.

இன்றைய நிலையில் நாம் சிற்றூர், பேரூர், மாநகரங்கள் தோறும் சங்க அமைப்பி சார்பில் கூட்டங்கள்கூட்டி நம் இனத்தவரின் நிலைமைகளையும், நாம் தொழிலாலும், சமுதாய தாலும், கல்வி, வேலை வாய்ப்பாலும் உயரும் வழிகளை ஆராயவேண்டும். ஆண்டுக்கொ முறை மாவட்ட, மாநில மாநாடுகளை நடத்தி, நம் தேவைகளைத் தீர்மானம் போட்டு அரசுக் அனுப்பவேண்டும். ஆகவே சாதி மாநாடுகள் தேவையே!

காலங் கடந்துதான் செங்குந்தா!
நீ கண்விழித்துள்ளாய் - பரவாயில்லை
கோலம் அழியுமுன்னே செங்குந்தா! - நீ
குதித்தெழுந்து கூடுவாய் ஈரோட்டிலே!

வெல்க செங்குந்தம்!





இளைஞர்களே விழியுங்கள்

நல்லாசிரியர். சி. அருணாசலம்
திருநெல்வேலி

செங்குந்தர் சமுதாயம் குமரி முதல் திருவேங்கடம் வரையுள்ள தமிழ் திருநாட்டில் பரவியுள்ளது. போற்றுதலுக்கும், புகழுக்கும் தகுதியுடையது. ஆம்; இத்தனையும் பண்டைக்கால நிலை. இன்று நிலைஎன்ன? பெரும்பகுதி செங்குந்தர் வறுமையாலும், கல்வி அறிவின்மையிலும் வாடி வதங்கிக் கிடக்கின்றனர். இந்நிலையிலுள்ள இப்பழம்பெரும் சமுதாயத்தை ஒரு சிறந்த சமுதாயமாய் உயர்த்துவது செங்குந்தர் இளைஞர் கையில் இருக்கிறது. இளைஞர்கள் நினைத்தால் கைகூடுவது மிக எளிது. பல நாடுகளும், பல நிறுவனங்களும் இளைஞராலன்றோ திகழ்ந்து விளங்குகின்றன. ஆகையால் செங்குந்தர் குல இளைஞர்கள் எண்ணிப்பார்க்க வேண்டாமா?

கல்வி அறிவு இல்லாத எந்த சமூகமும் தொழில்துறை, கல்வித்துறை, பொருளாதாரத்துறை, அரசியல்துறை என்ற எந்த துறையிலும் முன்னேற முடியாது. சில ஆண்டுகளுக்கு முன்னர்கடைக்கோடியிலிருந்த சில சமூகங்கள் இன்று கொடிகட்டிப் பறக்கின்றனவே காரணம்? அவர்கள் கல்வியின் பயனை உணர்ந்து அறிவாளிகளாயும், கல்விமான்களாயும் தொழில்துறை வல்லுனராயும், அரசியலில் முன்னின்றும், தம்சமூகத்தை பல கோடிமைலுக் கப்பால் கொண்டு சென்றுள்ளனர் என்பது வெள்ளிடைமலை. எனவே செங்குந்தர் இளைஞர் ஒவ்வொருவரும் நன்கு கல்வி பயில வேண்டும். நம்குலத்தொழில் நம்மை பிற சமூகத்துடன் போட்டியிடச்செய்யாது. வறுமைக்கோட்டிலிருந்து தம்மை முன்னேறச்செய்யாது. ''இளமையில் கல்'' ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.'' ''கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே'' என்ற உண்மையினை மனதில் கொண்டு கல்வி அறிவு பெறவேண்டும். கல்வி அறிவைப் பெற இக்காலத்தில் வாய்ப்புகள் பலப்பல. அரசாங்கம் நம் சமூகத்திற்கு பல சலுகைகளை வழங்கியுள்ளது. அவற்றை நாம் நன்கு பயன்படுத்த வேண்டும்.

கல்வியென்றால் பட்டப்படிப்பு மட்டும் என்ற காலம் மலையேறிவிட்டது. வெறும் பட்டப்படிப்பில் இக்காலத்தில் பயன் ஒன்றும் கிடையாது. செங்குந்தர் ஆணும், பெண்ணும் குறைந்தது 10-ம் வகுப்பு வரை படிக்க வேண்டும். அதன் பின்னர் தங்கள் திறமைக்கேற்ற தொழில் கல்வியை மேற்கொள்ளவேண்டும். எட்டாம் வகுப்பு வரை படித்த மாணவர்கள் I.T.I.யில் சேரலாம். பத்தாம் வகுப்பு படித்து முடித்த மாணவர்கள் Polytechinic சேரலாம். பன்னிரண்டாம் வகுப்பு படித்து முடித்த மாணவர்கள் தொழில்துறை பட்டப் படிப்பில் சேரலாம். பின்னர் திறமையாய் தேறியவர்கள் பட்டப் படிப்பில் முதுநிலைப் படிப்பை மேற்கொள்ளலாம். பின்னர் அன்னிய நாடுகளுக்குச் சென்று மேல் படிப்பைப்பெற்று சிறந்த தொழில்துறை வல்லுனராய் வர வாய்ப்பு இருக்கின்றது.


அதிக வருமானமில்லாத பெற்றோர்களின் குழந்தைகள் அரசாங்கம் கொடுக்கும் கல்விச் சலுகைகளை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு தங்கள் ஊரில் வாழும் செல்வாக்கு பெற்ற நம் சமூக பெரியோர்களை நாடவேண்டும். அவர்களை நன்கு பயன்படுத்த வேண்டும். நம் சமூகத்தில் சிலர் கல்விக் கூடங்களை ஏற்படுத்தியுள்ளனர். தொடக்கப் பள்ளி முதல் தொழில் பள்ளிகள் வரை நம் சமூகத்தவரால் நடத்தப்பட்டு வருகின்றன. அவைகளை மாணவர்கள் நன்கு பயன்படுத்த வேண்டும். அவர்களிடமிருந்து பல சலுகைகளைப் பெற முற்படவேண்டும். பிற சமூகங்களை மனதில் கொண்டு பாருங்கள் தங்கள் சமூக மாணவர்களுக்கென்று பல சலுகைகளைச் செய்து, மாணவர்களை முன்னேறச் செய்து, மறைமுகமாக நம் சமூகத்தையும் முன்னேறச் செய்கிறார்கள். இதை நம் சமூக மாணவர்களும் அன்னாரது பெற்றோர்களும் மனதில் கொள்ளவேண்டும். நம் சமூகத்தினரே ஒரு சிலர் தாம் நடத்தும் கல்விக் கூடங்களில் நம் மாணவர்களுக்குத் தனிச் சலுகை கொடுப்பதில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. அவர்கள் பள்ளிக்கூடங்களை வியாபார நோக்குடன் நடத்துகிறார்கள். அவர்களை நாம் புறக்கணித்து விடவேண்டும். பெரும் பாலோர் நம் சமூக மாணவர்களை ஊக்குவிக்கின்றனர். அன்னாரது பரந்த நோக்கத்தை நன்கு பயன்படுத்துவது ஒவ்வொரு செங்குந்த பெற்றோருக்கும், மாணவருக்கும் கடமை யாகும். இவ்வாறு பயன்படுத்தி நம் சமூக மாணவர்கள் நன்கு முன்னேறி, அதனால் நம் சமூகமே முன்னேற முடியும்.

கல்வி அறிவு இல்லாதவன் முழு மனிதன் ஆகமாட்டான்.


குருசி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல நெஞ்சத்து
நல்லம்யாம் எனும் நடுநிலைமையால்
கல்வி அழகே அழகு

மேலே கூறிய செய்யுளை ஒவ்வொரு செங்குந்தமாணவனும், பெற்றோரும் மனதில் கொள்ளவேண்டும்.





செங்குந்தர் மெட்ரிக்குலேசன் பள்ளி, ஈரோடு.
(செங்குந்தர் கல்விக் கழகம், ஈரோடு)




ஈரோடு தொழில்நுட்பக் கல்லூரி, கவுந்தப்பாடி.
(முதலியார் கல்வி நிறுவனம், ஈரோடு)

69 வயதில் யோகாசனம்

T.S. சுப்பிரமணியம்,
(புரவலர் தென்னிந்திய செங்குந்த மகாசனசங்கம்)

32. T. V. S. கோயில் தெரு

மைலாப்பூர், சென்னை 600004



பத்மாசனம்

1 மனிதர்களுக்கு வயது அதிகம் ஆக ஆக அனுபவம் அதிகமாகிறது. வாழ்வதற்காக பொருள் தேடுகிறோம். தேடிய பொருளை மனம் நிம்மதியாக இருக்கும் விதத்தில் உபயோகப்படுத்த தெரிந்திருக்க வேண்டும். மனம் நிம்மதியாக இருக்க உடல் நலம் நன்றாக இருக்க வேண்டும். உடல் நலம் நன்றாக இருக்க உடம்பிற்கு வேலை கொடுக்க வேண்டும். உடம்பிற்கு கொடுக்கும் வேலை மருந்தின்றி உடலை வைத்துக் கொள்வதாக இருக்க வேண்டும். மருந்து சாப்பிட வேண்டிய கட்டாயம் இருந்தாலும் நோய் கட்டுப்பாட்டிலேயே இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

2 எந்த ஒரு பொருளாக இருந்தாலும் தினசரி கவனம் செலுத்தி உபயோகப்படுத்தினால் நீண்ட நாள் உபயோகப்படுத்தலாம். நமது உடலும் இத்தகையதே. வசதி படைத்தவர்களுக்கு வயது கூடுதல் ஆக ஆக உடலை உழைப்பின்றி வைத்திருப்பதால் தோள்வலி, இடுப்பு வலி, கால் மூட்டு வலி, நுரையீரல் கல்லீரல், பித்தப்பை, குண்டிக்காய், இவைகளில் கோளாறுகள் உண்டாகிறது. குறிப்பாக மலச்சிக்கல் அதிகப்பட்டு அதன் காரணமாக உடலில் பல கோளாறுகள் உண்டாகிறது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக உடலில் கோளாறு வரலாம். உடல் கோளாறுக்கு தகுந்தபடி உடற்பயிற்சி இருக்கவேண்டு. இப்பயிற்சியில் உள் பயிற்சி என்பது எழும்புதல், இருத்தல், கும்பிடுதல், நடத்தல், குனிதல், நிமிர்தல், படுத்தல் ஆகியவற்றில் அடங்கிய ஆசன வகைகளே. உழைப்பு குறைவாகவும் பலன் கூடுதலாகவும் உடலுக்கு கொடுக்கக் கூடிய ஆசனங்களே. இதற்காக தனி உணவு தேவை இல்லை.

3 ஒரு அந்தர் படிப்பை விட ஒரு பலம் அனுபவம் பெரியது. உடல் நலம் நன்றாக இருக்க குறைந்த சக்தியில் கூடுதல் பலன் தரக்கூடியது யோக ஆசன வகைகளே. தேகப் பயிற்சியை ஒரு மணி நேரம் செய்து கிடைக்கும் பலனுக்காக எந்த அளவு சக்தியை செலவிடுகிறோமோ அதே அளவு பலனை பெற ஆசனத்தில் கால் பங்கு சக்தி செலவு செய்தால் போதுமானது.

4 நான் 18 வயதிலிருந்து 35 வயது வரை ஆசனம் செய்தேன். உடல் நல்ல நிலையில் இருந்ததை சாக்காக வைத்து சோம்பேறித்தனத்தினால் ஆசனம் செய்வதை நிறுத்திவிட்டேன். 45 வயதில் 6 மாதம், 55 வயதில் 6 மாதம் செய்து விட்டுவிட்டேன்.

5 உணவுக் கட்டுப்பாடு, வாழ்க்கையில் கட்டுப்பாடு, இயற்கையில் முதுமைக்குரியவனா இருந்தும் 65 வயதில் சிறுசிறு சுகக்குறைவு ஏற்பட்டு வந்தது. எதனால் இப்படி எற்பட்டது என்று சிந்தித்ததில் சாப்பிடும் உணவிற்கு தகுந்தபடி உடல் உழைப்பு இல்லாததால் இருக்கலாம். நாம் சிறு வயதில் செய்த ஆசன வகைகளை செய்தால் என்ன, இந்த முதுமையான வயதில் இத்தகைய ஆசனங்களை செய்தால்உடல் தாங்குமா, உடலுக்கு கெடுதல் எற்படுமா என சிந்தித்து முயற்சித்து பார்க்கலாம். என்று ஆசனத்தை திரும்பவும் செய்ய ஆரம்பித்தேன். 65 வயதில் ஆரம்பித்து மூன்று வருடத்திற்கு மேலாக ஆசனம் செய்து வருகிறேன்.

6 1) பத்மாசனத்தில் ரேசகம், பூரகம் 2) புஜங்காசனம், 3) சலபாசனம், 4) தனுராசனம்,

5) அர்த்த பத்திமோதாசனம், 6) பூர்வோத்தாசனம், 7) உறாலாசனம், 8) மறுராசனம், 9) சிரசாசனம் 10) சர்வாங்காசனம், 11) மத்ஸ்யாசனம், 12) அர்த்த மத்யேந்ராசனம், 13) யோகமுத்ரு, 14) பத்த கோணுசனு, 15) ஆகர்ஷண தனுராசனம், 16) ஞாறு சிரசாசனம், 17) பாதஉறஸ்தாசனம், 18) திரிகோணுசனம், 19) உட்யானு, 20) நௌளி, சவாசனம்.

எச்சரிக்கை

7 இடுப்பு வலி, முதுகு வலி, இரண்டும் கடுமையாகவும், உறிருதயம் பலஹீனமாக உடையவர்களும் சிரசாசனம் கண்டிப்பாக செய்யக்கூடாது. ரத்தக் கொதிப்பு உள்ளவர்கள் எப்போதும் சிரசாசனம் செய்யக் கூடாது. ஆசனங்களில் சிராசனம் மட்டும் 14 வயதுக்கு மேல் உள்ளவர்கள் தான் செய்ய வேண்டும். 40 வயதிற்கு மேல் செய்தால் மூளை சம்பந்தப்பட்ட கோளாறு ஏற்படவாய்ப்புண்டு. தொடர்ந்து செய்பவர்கள் வயது வரம்பின்றி செய்துவரலாம் என்று மருத்துவ உலகில் கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. உடல் இயங்க மூளையே முக்கிய அம்சம். இதனுல் ஆசனங்கள் நன்கு பழகிய பின் முழு சிரசாசனத்தில் இறங்காமல் தலையை மட்டும் தரையில் வைக்கும் அர்த்த சிரசாசனம் பழகலாம். அல்லது பழகாமல் விடுவது நல்லது.

ஆசனம் பழகும் முறை

8 காலை 4-00 மணிக்கு அல்லது 5-00 மணிக்கு எழுந்து மலஜலம் கழித்து பல் துலக்கி ஆசனம் செய்ய முற்பட வேண்டும். முதலில் இலகுவான ஆசனங்கள் பழகி படிப்படியாக நுணுக்கமான ஆசனங்கள் பழகமுற்பட வேண்டும். எனது 69 வயதில் நான் தினசரி செய்யும் ஆசனங்கள் தான் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது இவ்வாசனங்களில் மறுராசனம், சிரிசாசனம், பத்த ஷோணாசனம், உட்டியானா, நௌளி இவைகள் ஆரம்பத்தில் பழகுபவர்கள் செய்யக்கூடாது. ஆசனத்தில் உடல் எந்த நிலையில் இருக்கிறதோ அதற்கு தகுந்தபடி மூச்சு விடுவது இழுப்பது நிறுத்துவது இருக்கவேண்டும். பலவந்தப்படுததி ஆசனம் செய்யகூடாது. இருதய பலவீனம், தொடர்ந்த இடுப்புவலி உள்ளவர்கள் ஆசன வல்லுனர்களிடம் கலந்து இலகுவான ஆசனங்கள் செய்யலாம். ஆசனம் செய்யும்போது பெரு மூச்சு வரக்கூடாது, பெருமூச்சு வருவதானால் ஆசனம் செய்வதில் தவறு இருக்கும் அல்லது பலவந்ததத்துடன் செய்ததாக இருக்கும். வியர்வை வழியக்கூடாது. ஆசனங்கள் அனைத்தும் தரையில் அமர்ந்து செய்யகூடியதாகையால் தரையில் உள்ள தூசுகள் மூச்சுக் குழாயில் செல்ல வாய்ப்புண்டு. இதைத்தவிர்க்க தரையில் பாய் விரித்து அதன் மேல் பெட்ஷிட் அல்லது தடித்த டவல் விரித்து அதில் அமர்ந்து செய்யவேண்டும்.


9 ஆசனம் என்பதின் உண்மையான கருத்து இருக்கை. இருக்கை என்பது உடம்பை பலநிலைகளில் வைப்பது. அப்படி செய்யும்பொழுது களைப்பு ஏற்படின் அது ஆசனம் அல்ல. அறுபதுக்கு மேல் நாற்பதுக்கான யோகாசனங்களே சிறந்த வழி.

10 பிற்ந்த நாள் தொடக்கம் நாம் ஒவ்வொருவரும் ஆசனம் என்று அறியாது ஆசனம் செய்கிறோம் பிறந்த குழந்தை "புஜங்காசனம்" செய்கிறது. முறையாக ஆசனம் பயின்றால் நற்பலன் அடையலாம்.

ஆசனம் பிரணாயாமம்
அறுதினம் பயில
ஆட்டும் பிணி அகன்று
ஆரோக்ய உடலும்
ஆனந்த உளமும்
ஆயுள் நூறும்
ஆண்டவன் அருளும்
அடைவது உறுதி
நான் பெற்ற இன்பம்
பெறுகஇவ்வையகம்



அருள்மிகு சுப்ரமணியசுவாமி கோவில்
திண்டல்மலை - ஈரோடு



செங்குந்தர் பேரணி துவக்க இடம்
RANA திருமண மண்டபம்
ஈரோடு-11

உ
சிவமயம்

பெரியார் மாவட்ட செங்குந்தர் மாநாடு
சிறப்படைய நல் வாழ்த்துக்கள்!




தந்தி: THIRUMANAM

தொலைபேசி: 74931 / 73916 / 73390

RANA திருமண மண்டபம்

பெருந்துறை சாலை, ஈரோடு - 638 001.



அருள்மிகு
மகிமாளீஸ்வரர் கோவில்
ஈரோடு



அருள்மிகு
திருத்தொண்டீஸ்வரர் கோவில்
ஈரோடு

தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி–623 206
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்
தொலை பேசி: குன்றக்குடி-27

வாழ்த்துரை

மனிதகுலம் ஒன்றேயாம். ''ஒன்று பரம் பொருள்; நாம் அதன் மக்கள்'' என்ற பாரதி வாக்கு நினைத்தற்குரியது. காலப் போக்கில் பல்வேறு சமூகப் பிரிவுகள் தோன்றி, வளர்ந்து வந்துள்ளன. அவற்றுள் செங்குந்தர் என்ற பிரிவும் ஒன்று. செங்குந்த மகாசனங்கள் உழைத்து வாழும் சமூகத்தினர் நன்கு உழைக்கும் பழக்கத்தினர், கடவுள் நம்பிக்கையுடையவர்கள் அண்மைக் காலமாகக் கல்விப்பணிகளிலும ஈடுபட்டு, சமூகத்தைக் கல்வித் துறையில் வளர்த்து வருகின்றனர். நல்ல தொழில் மேதைகள், நிர்வாகிகளை நாட்டுக்குத் தந்து உள்ளனர்.

செங்குந்த மகாசன சங்கம் நாளும் வளர்க, வளர்க, அவர்கள் பணி.



C.காந்திதாஸ் எம்.ஏ.,பி.எல்.,
தலைவர்

மதுரை மாவட்ட
செங்குந்தர் மகாசன சங்கம்

பேரன்புடையீர்,

வணக்கம்

10 3-90 சனிக்கிழமை ஈரோடு நகரில் பெரியார் மாவட்ட செங்குந்தர் மாநாடு நடப்பதும் அதனையொட்டி மலர் ஒன்று வெளியிடும் செய்தி அறிந்து மிக்க மகிழ்ச்சி.

மாநாடும், மலரும் இனிது நிறைவேற மதுரை மாவட்ட செங்குந்த மகாசன சங்கத்தின் சார்பாக உளமார வாழ்த்துகிறேன்.

குறுகிய காலத்தில் தங்களின் பெரு முயற்சியாலும் தளராத கடும் உழைப்பின் காரணமாகவும் பெரியார் மாவட்டத்தில் பெருமளவில் கிளைச் சங்கங்கள் அமைத்து அமைப்பு ரீதியாக செயல்பட்டு வருகிறீர்கள். முறையான அமைப்புகள் இருப்பதின் காரணமாகத்தான் தங்கள் மாவட்டத்தில் ஆக்கபூர்வமான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

தங்களது சமுதாய தொண்டுகளையும் தங்களுக்கு உறுதுணையாக இருக்கும் நிர்வாகஸ்தர்களையும் மனமார வாழ்த்துகிறேன் பாராட்டுகிறேன்.

செங்குந்தர் சமுதாயம் பல துறைகளிலும் முன்னேறி செங்குந்தர்கள் வளமான வாழ்வு பெற, தங்களது மாவட்ட சங்கம் மென் மேலும் ஓங்கி வளர்ந்து சிறப்பாக சமுதாய தொண்டு புரிய வாழ்த்துகிறேன்

மாநாட்டில், மதுரையில் இருந்து வெளி வரும் சமுதாய மாதஇதழ் 'செங்குந்த மணி' யின் 7ம் ஆண்டு நிறைவு விழா நடைபெற இடம் தந்துள்ள தங்களது பெரிய உள்ளத்தை வாழ்த்துகிறேன்

'செங்குந்தமணி' யின் வளர்சிக்கு தங்களது மாவட்டம் தொடர்ந்து உதவி புரிய அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கயிலைமுனி வித்துவான்
தவத்திரு. சாந்தலிங்க இராமசாமியடிகள்
பேரூராதீனம்-பேரூர் கோவை-10.

26479

பேரூர்
கோயமுத்தூர்-641 010


வாழ்த்துப்பா

1 செந்தமிழ் நாட்டின் தெய்வம் செவ்வேள் நல்வீரராக
வந்தவர் மரபு போற்றி வளர்ந்துள செங்குந்தர்க்குச்
சிந்தனை வளத்தால் சோழன் திருவோலக்கத்தில் ஓங்கி
முந்தறி புலவர் ஒட்டக்கூத்தர் தம்முதலாய்க் கொள்வார்

2 திருநகர்க் கும்பகோணம் திகழ்வீர சைவப்பீடம்
மருவிவாழ் ஒட்டக்கூத்தர் மரபினில் சிவநெறிக்குப்
பெருமை சேர்பணிகள் செய்வார் பேசுநல் லறங்கள் பேணி
வரும்நம தன்பர் கூட்டம் வளர்வது ஈரோடாகும்.

3 திருத்தொண்டல தொண்டீசர் தம்திருவடி போற்றி நாளும்
அருள்நெறித் திருக்கூட்டத்தில் அன்புறு பெண்டிர் ஆண்கள்
உருகிய உள்ளத்தோடு உவந்து போற்றிடுவர் சைவம்
இருப்பது ஈரோட்டில்தான் எனவிளம்பிட வாழ்கின்றார்.

4 இளஞ்சிறார் உள்ளம் கல்விஎனும் விளக்கத்தினால் செம்மை
வளம்பெற நிறுவனங்கள் வளர்த்து மாவட்டம் எங்கும்
தளர்ந் தவர்க்குதவி அன்பு தழைத்துயிர் சமயத்தொண்டால்
உளங்குளிர முதலியார்கள் ஒருங்கிணைந் துயர்ந்து வாழி



மானம் காக்கும் மறவர்

மு. முத்துகிருஷ்ணன், M.A., B.T.,
தலைமையாசிரியர் (ஓய்வு)
திருவோத்தூர், சம்புவராயர் மாவட்டம்.

1 மானத்தை காக்கின்ற மறவர் கூட்டம்,
மகிழ்வுடனே தமிழகத்தின் மக்கள் யாரும்
கானத்தின் புட்களெனக் களிப்பாய் வாழக்
காலமெல்லாம் பொதுப்பணிகள் ஆற்றும் கூட்டம்
தானத்தின் உளத்தோடே வறியோர்க்கெல்லாம்,
தளராமல் வழங்குகின்ற வண்மைக் கூட்டம்.
தேனத்தும் அளைகள் என உழைக்கும் கூட்டம்,
செங்குந்தர் கூட்டம் எனில் மறுப்பாருண்டோ?

2 உடை வகைகள் உலகினாக்கே வழங்கும் நல்லார்,
உத்தமராம், எனப்புகழ்வர் சான்றோர், அந்தக்
கடமை வழாச் செங்குந்தர் வாழ்வில் இன்பம்,
கண்டிடுவோம்; நாம் அவர் துணையாய் நிற்போம்:
மிடிமையிலா நல வாழ்வை அவர்கட் கீவோம்;
மேதினியில் அவர் உயர விதிகள் செய்வோம்:
திடமுடனே அவர் உரிமை பெறவே காண்போம்;
தித்திக்கும் வாழ்வினிலே திளைக்கச்செய்வோம்;

3 நூலாலே கலைபுரிவர் அறிஞர், தங்கள்
நுண்ணறிவால் பண்பு நலம் விளையச்செய்வர்;
நூலாலே கலைநெய்வர் குந்தர் சீலர்,
நுட்பமுடன் வியத்தகு சாதனைகள் காட்டிச்
சேலை பல துணிகள் பல சிறப்பாய் ஆக்கித்
தினந்தோறும் குடும்பமுடன் உழைப்பர்: காலை
மாலை இரவு என்னாமல் செயல்கள் ஆற்றும்
மைந்தர் செங்குந்தர் திறம் மறக்கற் பாற்றோ?

4 ஆர்ப்பாட்டம், கிளர்ச்சி, சண்டை, பூசல் ஏசல்
அடங்காமை, வன்முறைகள் அறியார் அன்பர்
நார்ப்பட்டமலர்கள் எனக் கட்டுப்பட்டே
நறுமணத்தை நாட்டோர்க்கு நல்கும் நல்லோர்,
தோப்பாகர் போல தம் குடும்பத்தேரைத்
திறமையுடன் செலுத்தும் சாரதிகள், அன்னார்
வேர்ப்புடனே நாள்தோறும் விளங்கும் தூயார்,
வீரர்செங்குந்தர் நலம் வளர்ப்போம் நாமே.

5 கூத்தர், இரட்டையர், மரபில் வந்தோர் குந்தர்,
குமரன், நவவீரர் எனத் தியாகம் செய்வோம்;
ஈத்துவக்கும் இயல்புடையார், பல்லாண்டாக
இலக்கியத்தில் குன்றின் ஒளி விளக்கே போல்வார்
பாத்துண்ணும் பண்புடையார், பக்திமிக்கார்,
பாசமுடன் எவருடனும் பழகும் மேலோர்,
தீத்துறையில் செல்பவரைத் திருத்தும் சீலர்,
செங்குந்தர் என்றென்றும் நலமே வாழ்க!



சீரார்ந்த செங்குந்தர்

அ. கோவிந்தராஜன்செங்குந்தர்
(மாநில செயற்குழு உறுப்பினர்)
தலைவர் செங்குந்த மகாஜனசங்கம்,
காட்டுமன்னார் கோயில்,
Pin. 608301.

அன்பால் பிணைக்கும் ஆற்றலை பெற்றவர்
ஆலயப் பணியும் அறமாய் கொண்டவர்
இமயம் முதலாய் ஈழம் கண்டவர்
இவ்வுலக மாந்தர் மானம் காத்தவர்
ஈட்டி எழுபது இயற்றிய புலமையால்
ஈடிலா புகழை ஏற்றது நம்குலம்
உத்தமர் காந்தி உள்ளம் கவர்ந்த
கொடிகாத்த குமரன் நம்குலச் செல்வம்
தன்னுயிர் தந்த வள்ளல் வரிசையில்
தில்லை யாடி வள்ளி அம்மையும்
இந்திய விடுதலைக்கு இன்னுயிர் தந்தவர்
ஐயம் கொள்ளார் ஐம்புலன் வென்றவர்
ஒட்டக் கூத்தர் புலமைச் சிறப்பால்
ஓதிய நூல்களில் உயர்நிலை பெற்றோம்
ஔடதம் கண்டார் ஔவியம் பேசார்
வெற்றி வேலவர் விரும்பிய கருத்தால்
வீரபாகு தேவர் வழிவந்த குலமே
முசுகுந்த சோழன் முதலாம் பரம்பரை
குந்தக் கொடியே குலத்தின் கொடியாக
கைக்கோளப் படையாய் குவலயம் காத்தவர்
குறள்நெறி நடந்து குற்றம் களைவோம்
குந்தக் குலமே குவலயம் வெல்லும்
வாழ்க செங்குந்தம் வளர்க செங்குந்தர்
மாநாடு பலவும் மலர்ந்து நம்மில்
முத்து சாமியை முதல்வராய் பெற்று
ஈரோடு தன்னில் இணையிலா சிறப்பாய்
ஈடிலாப் புகழுடன் மலர்ந்தது நன்றே

வெல்க பெரியார் மாவட்ட
செங்குந்தர் மாநாடு



அரிமா புலவர் ப தங்கவேலு
பொன் வணிகர் கள்ளக்குறிச்சி

நிலவினிலே மனித இனம் இருக்கு மாகில்
நிச்சயமாய் செங்குந்தர் இருப்பார் அங்கே
பலகாலக் கைவினைஞர் ஆடை நெய்யும்
பாசமிகும் தொழில் முதன்மை கொண்ட மக்கள்
மலைபோல உளவளமும் திசைகள் தோறும்
மாமகிழ்ச்சிப் பொதுப்பணியும் கொண்ட சிலர்
அலைபோல சோறாத நம்கு லத்தின்
அருமைசொலல் மிகஅருமை வாழ்த்து கின்றேன்

தமிழகத்தின் முதலியார்கள் ஒரு சங் கத்தால்
தழைத்திடுவோம்! சமுதாயப் பணிமேற் கொண்டு
அமைத்திடுவோம் பலதிட்டம்! உயிராம் கல்வி
அரும்தொழில்கள் வேலைவாய்ப்பாம் இவற்றி லெல்லாம்
நமதருமை சமுதாயம் வெற்றி காண
நாம்கொள்வோம் எச்சரிக்கை! இலக்கை நோக்கி
அமைத்திடட்டும் ஈரோட்டுப் பாதை! நாட்டில்
இணையில்லா மாநாடு காண்போம் வாழி!



இருப்போர்க்கும் இல்லார்க்கும் பாதை யாக
எல்லோர்க்கும் தொடர்பாக! செயல னைத்தில்
சிறப்பாக செங்குந்தர் சங்கம் வெல்க!
செழிப்புமிகும் ஈரோட்டு சங்கம் காணும்
பெரும்பெரிய மாநாடு(வெல்க) நூறாம் ஆண்டு
பெருங்கவிஞர் பாவேந்தர் கவிதை போல
அரும்வெற்றிக் காண்கவென வாழ்த்து கின்றேன்
அகிலமெல்லாம் செங்குந்தர் வெற்றி காண்க!



நம் இனம்

G. சரோஜினிதேவி,
L 474, பெரியார் நகர்.
ஈரோடு - 9.

நான் பெருமைப்படுகிறேன், செங்குந்தர் குலத்தில் பிறந்ததற்காக. நம் நாட்டில் எத்தனையோ இனங்கள் இருக்கின்றன. அவரவர் இனம் அவர்களுக்குப் பெரியதுதான் ஆனால் மற்றவர்களும் பாராட்டும் பண்பு நம் இனத்திற்கே அதிகம் உண்டு .

தலைமகனின் 1000 தலைகளின் மேல் அமர்ந்து ஒட்டக் கூத்தரால் செங்குந்தர்களின் புகழ் ஈட்டி எழுபதில் இயற்றப்பட்டது.

ராஜராஜசோழரின் செங்கோல் செழிக்க உதவியது நம் இனப்படையான தெரிஞ்ச கைக்கோளர் படை வீரத்தில் நம் இனத்தவர்கள் சிறந்தவர்கள் என உலகம் அறிந்ததே

கண் இமைபோல் நூல் இழை பார்த்து நெசவுத் தொழிலில் மேன்மை பெற்றது நம் இனம் ''ஆள்பாதி ஆடைபாதி'' என்ற பழமொழிக்கே இலக்கணம் வகுத்தது செங்குந்த சமுதாயம் மனித நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்டதே நம் நெசவுத் தொழில் தான்.

சேவல் அதிகாலையில் துயில் எழுப்ப ''சேவற்கொடி'' தாங்கிய செங்குந்த இன மாந்தரை இழிவுபடுத்தும் வரதட்சணை வேர் பிடிக்காமலேயே வேரறுத்து குரல் கொடுக்கிறது.

சுதந்திரப் போராட்ட தியாகிகளாலும் தமிழறிஞர்களாலும், தன்னலமற்ற பெரியோர்களாலும் புடம் போட்ட தங்கம் போல் பிரகாசித்து வருகிறது.

சாதாரண நிலையில் பிறந்த நம் இனத்தினர் பலர் தங்கள் விடாமுயற்சி தன்னம்பிக்கை நேர்மை, ஒழுக்கம் இவற்றால் இன்று சமுதாயத்தின் தூண்களாக விளங்கி வருகிறார்கள். செங்குந்த குலத்தில் பிறந்த செல்வச் சீமான்களும் நல்லிதயம் கொண்ட நல்லோர்கள் பலரும் பல நிறுவனங்கள் மூலம் நம்மவர்-களுக்கு முன்னுரிமை கொடுத்து குலப்பெருமையை காத்து வருகின்றனர். இன்னும் அவர்கள் தாராள மனத்துடன் தளராத உழைப்புடன் செயல்பட்டு குல வளர்ச்சியை மேம்படுத்த வேண்டும்.

சிறிது காலம் நலிந்திருந்த நம் சமுதாயத்தைச் சீர்திருத்தி ஒற்றுமையைக் காக்க குந்தர்களின் பெருமையைப்பேண தன்னலமற்ற பெரியோர்கள் பலர் முன் வந்து செயலாற்றுகிறார்கள். அவர்கள் முயற்சி வெற்றி அடையட்டும்.

வாழ்க செங்குந்தம்! வளர்க செங்குந்தம்!!



''நம் குல பெரியார் வழி நடப்போம்''

து. பழனியாண்டி,
அமைப்பு செயலாளர்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்.

'நில்லாத செல்வத்தை நிலை செய்த பெருந்தகையீர்
சொல்லாலே நம்குலத்தை உயர்செய்த மாண்புடையீர் உடல்
தள்ளாத போதிலும் தளராத நெஞ்சுடையீர்
உள்ளம் கலங்காது புகழோங்கி பொலிவோடு வாழ்க மனமே'

செங்குந்தர்குல அன்பு உடன்பிறப்பே.

தமிழன் தன்மான உணர்வோடு தலைநிமிர்ந்து வாழ சமுதாய உணர்வை ஊட்டியவர் தந்தை ஈ.வெ.ரா.பெரியார் ஆவார். அவர் போலவே தள்ளாத வயதிலும் நம் குல தந்தை திரு முத்துசாமி செங்குந்தர் அவர்கள் உறங்கி கிடந்த நம் சமுதாயத்தை தட்டி எழுப்பி நம்குல முன்னேற்றத்திற்கு அல்லும் பகலும் உழைப்பதை கண்கூடாக காண்கின்றோம்.

உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நீண்ட நெடுநாட்களாக கட்டிமுடிக்க இயலாத சென்னையில் வள்ளல் திரு சபாபதி முதலியார் மாணவர் இல்லம் பெரியவர் முத்துசாமி முதலியார் அவர்களின் சீரிய முயற்சியால் கட்டிடம் கட்டும் பணி தொடர்ந்து கட்டப்பட்டு பூங்காவாக காட்சியளிக்கின்றது.

இந்த கட்டிடத்தை கட்ட முடியாது என்று நிர்வாகம் எண்ணிய நேரத்தில் தள்ளாத வயதிலும் மனம் தளராது பணியை மேற்கொண்ட பாங்கை என்னும்போது மெய் சிலிர்க்கின்றது.

நான் அந்த இடத்தை விற்கக்கூடாது என்று குரல் எழுப்பும்போது என்னை வலக்கரமாக பயன்படுத்திக்கொண்டு முன்னோரின் சொத்தை விற்கக் கூடாது என்ற பாணியை 'கை' கொண்டவிதம் நெகிழத்தக்கதே. காஞ்சி மணி மொழியார் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களிடம் செங்குந்த மகாசன சங்கத்திற்கு கொடுங்கள் என்று சொல்லி வாங்கப்பட்ட இந்த இடத்தை விற்கக்கூடாது என்று பெரியவர் அவர்கள் மறுத்ததன் காரணமாகவே இந்த இடம் பூங்காவானமாகவும், மாணவர் இல்லமாகவும் திகழ்கின்றது என்பதில் ஐயமில்லை,

முன்னாள் துணைப் பதிவாளர் திரு. சி. கே. குமாரசாமி முதலியார் அவர்களை தாளாளராக கொண்டு இயங்கும் இந்த இல்லம் சிறந்த இளைய தலைமுறையை உருவாக்குவதோடு சமுதாய உயர்வுக்கும் வழி காட்டி வருகின்றது.

ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த மாநில இளைஞர் அணியை வழி நடத்தும் அமைப்பாளர் உயர்திரு. ஜெகதீசன் அவர்களையும் வழி நடத்தும் ஈரோடு பெரியவர் முத்துச்சாமி முதலியார் அவர்களின் சீரிய தொண்டு மலர்ந்து நமக்கும் வழிகாட்டும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

அத்துடன் ஈரோடு மாநாடு ''மே'' திங்களில் சென்னையில் நடைபெறவிருக்கும் மாநாட்டிற்கு இளைஞர்கள் உள்ளத்தை உணர்ச்சி பொங்கவைக்கும் வித்தாக அமைந்ததற்கு காரணம் பெரியவரின் உழைப்பே என கூறி நம் குல பெரியார் வாழ்க! வாழ்க!! என வேண்டி அவர் வழி நடப்போம் என உறுதி எடுப்போமாக.



வாழ்க்கை நெறி

செ. வெங்கடசாமி பி.எஸ்.ஸி

தாராபுரம்,
பெரியார் மாவட்டம்.

அரிது அரிது மானிடராகப் பிறந்தல் அரிது அதனிலும் அரிது மானிடராக வாழ்தல் அரிது என்று முன்னோர்கள் கூறியுள்ளார்கள். நாம் உலகத்தில் பிறந்ததின் பயனை சிந்தித்துப் பார்த்தால் அதன் குறிக்கோளை உள்ளத்தின் மூலம் புரிந்து கொள்ளமுடியும் என்று நம்புகின்றேன். நம்மைப்படைத்த பரம் பொருள் மானிட வாழ்க்கையின் மூலம் சிறந்த ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தும் மக்களுக்குசேவை செய்வதன் மூலம்மரணமிலாப் பெருவாழ்வுவாழலாம் என்றுதெரிய வருகிறது. மானிடப்பிறவியானது ஒரு தேர்வின் மூலம் அவர்கள் நடந்து வந்த பாதையை புண்ணியலோகம் அல்லது நரகலோகம் என்று கணிக்கக்கூடிய வகையில் ஒருவர் வாழ்க்கையின் கடைசி யாத்திரையில் செல்லும்பொழுது மக்கள் என்ன உரையாடுகிறார்களோ அதுதான் ஒரு அத்தாட்சியாக எடுத்துக் கொள்ளலாம் என்று பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். உலகவாழ்கையில் மக்கள் ஆசா பாசத்தில் கட்டுண்டு, பொறாமை, பகைமை போன்ற தீய எண்ணங்களில் செக்கு மாடுகள் போல் உழன்று கொண்டு இருப்பதைப் பார்க்கிறோம். மேற்படி தீய சிந்தனைகளையெல்லாம் விடுத்து சன்மார்க்க நெறியிலும் ஐம்புலன்களையும் அடக்கி ஆளும் சக்தியையும் பெற்று நாம் மரணமிலாப் பெருவாழ்வு அடைய உறுதிகொள்வோமாக

பழனியம்பதியின் வரலாறும் அங்கு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு தண்டாயுதபாணி சாமியை வடிவமைத்த சித்தர் தவத்திரு போகர் அவர்களின் தத்துவத்தையும் நாம் தெரிந்து கொண்டால் உண்மை விளங்க வாய்ப்பாக இருக்கும் என்று நம்புகிறோம். தவத்திரு நாரதர் கொடுத்த கவியை அருள் மிகு சிவபெருமான் தன்மகன்களுக்குள் ஒருவர் முழுமையாச் சாப்பிட்டால் தான் பலன் கிடைக்கும் என்று யுக்தியை ஒரு ஏற்படுத்தினார்

அருள்மிகு முருகனுக்குப் பழத்தின் மீது பற்று வந்ததினால் அது கிடைக்காமல் போகவே தாப் தந்தையர்களைக் கோபித்துக் கொண்டு சென்றதை பார்க்கிறோம். பிறகு தாயின் மூலம் தந்தையின் திருவிளையாடல்களை அறிந்து சமாதானம் அடைந்து பழனியம்பதியைஇருப்பிடமாகக் கொண்டு அருள்மிகு முருகன் அருள் பாலிப்பதை உணர்கின்றோம். பற்று, பாசம் முதலியவைகளின் மூலம் பல பிரச்சனைகள் வருவதைப் பார்க்கின்றோம். ஆகவே பற்றற்ற நிலைமையில் அருள்மிகு முருகன் ஞானப் பழமாக அருள்மிகு தண்டாயுதபாணியாக வடிவமைத்து உலக மக்களுக்கெல்லாம் அருள் மழை பொழிந்து வருவதை நாம் காண்கின்றோம். ஆகவே உலக வாழ்க்கையில் சான்றோர்கள் சொன்ன, போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து. அளவிற்கு மீறினால் அமிர்தமும் நஞ்சாகும். ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும். மக்கள் சேவையே மகேசனுக்குச் செய்கின்ற சேவையாகும், தானத்திலும் சிறத்தது நிதானமாகும் என்ற பொன்மொழிகளை நாம் நம் வாழ்க்கையில் ஏற்று எல்லா நலன்களையும் பெற்று நீடு வாழ எல்லாம் வல்ல பழனியம்பதியில் வீற்றிருக்கும் அருள்மிகு தண்டாயுதபாணிசாமி அவர்களை இறைஞ்சுகின்றேன்.



செங்குந்த மக்களின் சிந்தனைக்கு

K. N. முருகேசன், ஈரோடு.

தமிழகத்து மக்கள் தொகை 5 கோடிக்குமேல் சீர்பெற்ற செங்குந்த மக்களின் தொகை எண்ணிக் ஒருகோடிக்கு மேல் உயர்ந்து கொண்டிருக்கிறது. ஆக தமிழ் மக்களின் எண்ணிக்கையில் நமது இனம் அல்லது 6ல் ஒன்றென வளர்ந்து கொண்டிருக்கிறது.

நமது இனம் போல எந்த ஓர் இனமக்களும் சென்னை முதல் குமரிவரையும் உள்ள அனைத் மாவட்டங்களிலும் இருக்கவில்லை. குமரனடி வழிவந்த நமது செங்குந்த மக்கள் மட்டுமே எல்லா மாவட் திலும் பல்கிப் பரவி வாழ்ந்து வருவது கண்கூடு. இதுமட்டுமல்ல, அண்டை மாநிலமான பாண்டிச்சேரியி தென் மாநிலங்களான கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களிலும் மேலும் மகாராஷ்டி ஒரிசா மாநிலத்தில் பெர்காம்பூரிலும் கைத்தறி துணிவணிகத் துறையில் சிறந்து விளங்கி வருவது நம்இன இதுபோன்று வட மாநிலங்களில் கூட வாழ்ந்து வருவது மட்டுமல்ல அண்டை நாடான இலங்கையி சிங்கப்பூர், மலேசியா, மொரிஷியஷ் தீவுகளிலும் கூட நமது செங்குந்த இனமக்கள் செழிப்புடன் வாழ் வருகின்றனர்.

அனைத்து செங்குந்த மக்களையும் கருத்தில் கொண்டு இன ஒற்றுமை ஏற்பட அவர்களை ஒன் திரட்டிட வேண்டிய காலத்தின் கட்டாயம் நம்மை அழைத்துக் கொண்டிருக்கிறது.

நமது சமூகத்துச் சான்றோர்களும் அறிவிற்சிறந்த ஆன்றோர்களும் அறிஞர் பெருமக்களும் கூ எதிர்பாராமலே இவ்வொருங்கிணைப்பு நடக்கவேண்டிய காலகட்டத்தில் நாம் வாழ்ந்து வருகிறோ என்பது பெருமைக்குரிய ஒன்றாகும்.

அனைத்துச் செங்குந்த இன மக்களும் ஒன்று கூடி வேற்றுமை மறந்து ஒன்றுபட்டு ஒற்றுமையா வாழவேண்டிய அருமையானதொரு நல்ல சூழ்நிலையை காலம் நமக்கு உருவாக்கித் தருவதை சுட்டிக்காட் வேண்டும்.

அத்தகைய முயற்சியில் பெரியார் மாவட்ட செங்குந்தமகாசனசங்கம் தனது முன்கை எடுத்து செய பட்டுவருகிறது. இந்த அருமையான ஒரு நல்ல சூழ்நிலைக்கு நம்மையும், நம் செங்குந்த இன வாலிபர்களை யும், எதிர்கால சந்ததியினரையும் உருவாக்கித் தரவேண்டிய பொறுப்பினை நமது சமூகத் தலைவர்க ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அனைத்துப் பெருமக்களும் உறுதுணையாக நின்று ஒரு சிறந்த முன்னேற்றத்தை அமைதிவழியில் அ வழியில் உருவாக்கி அதனை எதிர்காலச் சந்ததியினர் ஏற்றுக்கொள்ளும் வகையில் அடித்தளம் அமைத்து தரும் பொறுப்பினை நம்மீது சுமத்தப்பட்டுள்ளது,

நாம் இப்போது நினைக்கிறோம், வருந்துகிறோம் நமது முன்னோர்கள் இந்தச் செங்குந்த மக்களுக்கு என ஒரு வழிமுறைகளை ஒருங்கிணைப்பான செயல்பாடுகளை சுட்டிக்சாமல் போய்விட்டார்களே ஏன் என்று ஆராய்கிறோம் காரணம் என்ன என வினவுகிறோம். எனக்குத் தெரிந்தவரையிலும் ஒன்று நிச்சய மாகக் கூறிடமுடியும் என நம்புகிறேன், அதாவது நமது செங்குந்த மக்களிடையே இன ஒற்றுமை என்ற எண்ணம் [உண்டாகாமல் இருப்பதே காரணமாக இருக்கலாம். என எண்ணுகிறேன்.

இந்நிலை நீடித்துவரவிடலாமா இனியும் இப்படி ஒரு இழிவுநிலை நமது பாரம்பரியம் மிக்க செங்குந்த இன மக்களுக்கு வரவிடலாமா?

கூடாது கூடாது இனியும் இந்நிலை தொடரக் கூடாது என அனைத்துச் செங்குந்த மக்கள் மனதில் போராடத் தொடங்கிவிட்ட காலச் சூழ்நிலையில் அல்லவா நாம் இருந்து வருகிறோம். இந்நிலை மாற்றிட வேண்டும் அதற்கு முதன் முதலாக நம்முள் உள்ள வேற்றுமை களைந்து ஒற்றுமை உருவாக்கிட வேண்டும். அத்தகு முயற்சியில் பெரியார் மாவட்ட செங்குந்த மகாசன சங்கத்தின் மாவட்ட மாநாடு முன்நின்று பாடுபடும்-பாடுபட வேண்டிய பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளது. பெரியார் மாவட்டம் செங்குந்த மகா சன சங்கத்தினர் தமிழகத்துக்கு வழிகாட்டியாக முதல் மாவட்ட மாநாடு நடத்தத் தொடங்கியுள்ளனர். நல்லதொரு ஆரம்பத்தை தொடங்கியுள்ளது. இது வரவேற்கப்பட வேண்டிய அம்சமாகும்.

10-3 90 நாள் அன்று ஈரோட்டில் நடைபெற இருக்கும் அந்த மாவட்ட மாநாட்டில் கருத்தரங்கில் அனைத்துச் சான்றோர் பெருமக்களும்- அறிஞர் பெருமக்களும் ஒன்றுகூடி நமது சமூக மக்களை ஒருங்கிணைத்து அதாவது தமிழகம் வாழ் செங்குந்த மக்கள் மட்டுமல்ல கடல் கடந்த அண்டை அயல் நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் அனைத்து செங்குந்த மக்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அதற்கான வழிமுறைகளை ஆராயவேண்டும். என ஈரோடு நகர செங்குந்த மகா சன சங்கம் செங்குந்த மக்களை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறது. தமிழகத்தில் உள்ள எந்த ஒரு இனத்துக்கும் இல்லாத அளவுக்கு நமது செங்குந்த மக்களுக்கும் எல்லா மாவட்டத்திலும் படர்ந்து வாழும் பேறுபெற்றுள்ள ஒரு சமூகம் செங்குந்தமாகும்.

இத்தன்மையுள்ள நமது சமூக மக்களை ஒன்று திரட்டி ஓரணியில் நிறுத்தி செயல்படத் துணிந்து விட்டால் இத்தமிழ் மக்களுக்கு அனைத்து இன மக்களுக்குமே நாம் வழிகாட்டியாக மட்டுமல்ல இந்தத் தமிழகத்தை வேட்டைக்காடாக்கிட துணிந்துவிட்ட அரசியல் வாதிகளை. தமிழக பண்புகளை தமிழ் கலாசாரத்தை பண்பாடு மிக்க தமிழ் நாகரிகத்தை கலங்கப் படுத்திக்கொண்டு தமது சுயநல வேட்டைக்காடாக்கி வரும் சூது, வஞ்சம், லஞ்சத்துக்கே பஞ்சமில்லாத ஒருநிலை உருவாக்கி அதுவே தனது அன்றாட வாழ்க்கையென வாழும் அரசியல் சூதாடிகளை ஒதுக்கி வைக்கவும், அதற்கான வலிமை பெறக்கூடிய அனைத்து இனமக்களையும் ஒன்றிணைத்து தமிழகப் பண்பாடுகளை காத்திடவும் போற்றி வழிநடத்திடவும் முடியும் என்று உறுதியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் நமது சமூக மக்களை ஒற்றுமையுடன் காத்துவருவோமேயானால் எந்தஒரு அரசியல் கட்சியும் நமது துணை இல்லாமல் அரசியலில் பொதுவாழ்வில் வெற்றி பெறக்கூட முடியாத நிலையை உருவாக்கிட நம்மால் முடியும். இத்தகு நிலை உருவாக வேண்டுமானால் பெரியார் மாவட்டம்போல் ஒவ்வொரு மாவட்டமும் தாலுக்கா கமிட்டி அமைத்திடவும் நகர கிராம கமிட்டிகளையும் அமைத்திட்டு பணிபுரிய தொடங்கிட உடனே முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இன்றைய சூழ்நிலையில் பெரியார் மாவட்டம் போல தமிழகம் மாறிடவேண்டும் - மாற்றிட வேண்டும் இது புகழ்ச்சியில்லை உண்மை.

எங்கள் பெரியார் மாவட்டத்தலைவர் செங்குந்த மகாசன சங்கம் பெரியார் மாவட்டத்தில் ஈரோடு நகரில் தொடங்கிய சமயம் அதன் தலைவராக பொறுப்பேற்றுள்ள இளமைத்துடிப்புள்ள பெரியார் ஈரோடு வெண்தாடி வேந்தரான ராமசாமிப் பெரியாரல்ல நம் இனத்து செங்குந்த இனத்துப் பெரியவர் திரு. R. A. N. முத்துசாமி முதலியார் அவர்களின் முடிமுழுவதும் வெண்மை அவரது மனமும் வெண்மை அவர் அணிந்துவரும் கதராடையும் வெண்மை இதுவே உண்மை அவர் வயதில் பெரியவர் மனவளத்தால் இளைஞர் எண்ணத்தால் வாலிபர் செயல்படும் வேகத்தில் இலட்சிய நோக்கில் போர் வீரர். அவருக்கு ஈரோடு நகர செங்குந்த மகாசன சங்கம் என்றும் துணைஏற்கும் அவரது கரத்தை வலுப்படுத்தும்.

திரு. R. A. N. முத்துசாமி முதலியார் அவர்களது தலைமையில் வழிகாட்டுதலில் அனைத்துச் செங்குந்த மக்களுக்கும் ஒரு மனமாற்றத்தை புதியதொரு பாதையை அமைத்துக் கொடுக்கும் வலிமை பெற்றுள்ளவர் என்பதை எதிர்காலம் உணர்த்தும் உணரும் செயல்படும்

செங்குந்தச் சான்றோர்



A. S. A. கனகராஜ், B. Sc,
மொடக்குறிச்சி ஒன்றிய
பொதுச்செயலாளர்,
அரச்சலூர்.

கொடிகாத்த குமரன் பரம்பரை - மண்ணில்
வடிவிழந்து வாழ்வதோ?

தில்லையாடி வள்ளியம்மை வழிவந்தோர் - சமூகத்
தொல்லைகளை ஏற்றுக்கொள்வதோ?

தங்குபுகழ் பாரதிதாசனின் புரட்சிப் பரணியை
செங்குந்தர் நாம் இசைத்திடுவோம்.

கடமை கண்ணியம் காத்திட்ட அண்ணாவழி
மடமை நீக்கி வாழ்ந்திடுவோம்.

வள்ளல் சபாபதி திருப்புகழை - என்றும்
துள்ளல் நடையுடன் பாடிடுவோம்.

சீர்திருத்தச் செம்மல் கிருஷ்ணமுதலியார் தொண்டை
பார்திருந்தப் பரப்பிடுவோம்!

கைத்தறிக் காவலர் நாச்சிமுத்து போதித்த
நைத்திகம் நெசவுக் கூட்டுறவே!

கொடையாளர் துரையப்பர் மனத்தீரம் - போர்ப்
படைவாள் என்றும் நம்மவர்க்கே!

பக்திப் பரவச வாரியார் வாக்கு - பெரும்
சக்தியைத் தந்திடும் குந்தர்க்கு.

சுத்தானந்தன் தம் அமைதி வழியே - நம்
சித்தாந்தம் என ஏற்றிடுவோம்.

சாதனைச் சான்றோன் முத்துசாமி முதலியார் நற்
போதனை கேட்டு நடந்திடுவோம்.

எது இன்பம்

செ. முருகேசன்,
3/40, செங்குந்தர் நடுத்தெரு,
நாங்கூர்-609106,
சீர்காழி வட்டம்.

1927-ல் தென்இந்திய செங்குந்த மகாசன சங்கம் நம் சமூக நல்வாழ்வுக்கு என்று நம்குல முதல்வர் வள்ளல் தி.நா. சபாபதி செங்குந்தர் அவர்கள் முன்நின்று சகஉறவினர்களின் ஒத்துழைப்பால் தோற்றிவிக்கப்பட்டதும். காஞ்சி நாகலிங்க முனிவா், எம். சண்முக செங்குந்தர், எம். ஏ. எல்டி மா அ.- கனகசபை செங்குந்தர், தலைமைச் சங்கத்தின் பிரசாரர்களாக திரு. தி. அ. சண்முகசெங்குந்தர், காஞ்சி மணிமொழியார் அவர்களாலும் செயலாக்கம் பெற்று. தாய்சங்கத்தின் கிளைச்சங்கங்களாக மாவட்டம் தோறும் விரிவடையவும். அதையும் செயல் முறையில் கொண்டுவந்து, 1944-ல் தஞ்சை ஜில்லா செங்குந்த மகாசன சங்கம் தோன்றியது கல்விநிதி என்று ஒருபகுதியாக செயல்படத்தொடங்கியது. தஞ்சை ஜில்லா செங்குந்தமகாசன கல்விநிதிக்கு முதன் முதலில் ரூபாய் இரண்டாயிரத்து ஒன்று வெண்பொற்காசுகளை தந்து உதவினார்கள்., என்பது நம் சமூகத்தவர்களுக்கு நன்கு தெரிந்தது. பெரியவர் தொடங்கி வைக்கும் செயல்கள் தொடர்ந்து வளரும் என்பதை அனுபவ ரீதியாக மாநில சங்கம் ஏற்பாடு செய்து நம் திறனையும். ஒற்றுமையையும் வெளிப்பட செய்தது பேரணியாகும். நிறைமொழி மாந்தர்கள் செய்யும் செயல்கள் வளர்ந்து வரும் நம்குலம் வருங்கால சந்ததிகளுக்கு அஸ்திவாரமாக அமையப் பெற்றுள்ளது பெரியவர்கள் செய்து வந்த காரியங்களையும். செய்து வருகின்ற செயல்களுக்கும் நம் குலத்தவர்கள் நல்ல ஆதரவு தந்து வருவதை நன்கு உணர்கிறேன், மகிழ்ச்சியும் இன்பமும் அடைகிறேன், நம்குல இளைஞர்கள் நன்கு பயன்படுத்தி வருவதையும் காண்கிறேன் மென்மேலும்நம்சமூகத்தொண்டுகள் சீரும் சிறப்பும் பெற்று வளரும் என்றும் உறுதியாக நம்புகிறேன். இந்த அளவிற்குநாம் இன்பத்தை பெறுவதற்கு காரண கர்த்தவாக இருந்தவர்களின் செயல்முறைகளை மறக்காமல் செயல்பட்டு வருவதில்தான் இன்பம்காண முடியும். 'ஈத்து உவக்கும் இன்பம்' என்றும் அன்பர் பணிசெய்ய எனைஆளாக்கி விட்டு விட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே. என்றும் என்கடன் பணிசெய்து கிடப்பதே என்றும் தன்னை உணர்வதே இன்பம் என்றும் ஈதல் இசைபட வாழ்தல் என்பன போன்ற பெரியோர்கள் பாதையிலே செயல்படும். அஹிம்சை, சத்தியம், கருணை அன்பு சகோதரத்துவம் முதலிய நற்குணங்களால் ஆக்கித்தந்த நம் சமூக அமைப்பினை. நாமும் நலம் பெறுவதுடன் நம் சகோதரர்களும் பயன் அடையச் செய்வதுதான் இன்பம் காண முடியும். கட்டடங்களை உயர்த்தி கட்டுவதற்கு தேவையான அளவு அஸ்திவாரங்கள் பலமாக உள்ளது என்பதை அறியும் போது. தன்நலம் கருதாது உழைத்தும். உழைத்துவரும் பெரியோர்கள் யாவரையும் மனதில் கொண்டு. நம்மால் முடிந்த அளவு தொண்டுபுரிய வேண்டும் என்பது தான் என்றன் வேண்டு கோள் பொருளின் மேல் பற்றுவைத்து செயல்படுங்கால் அதில் சிறு தடங்கள் ஏற்பட்டாலும் மனம் சங்கடம் அடையும், அந்தச்செயலை, பற்று அற்ற நிலையில் பற்று அற்றவன் (இறைவன்) பற்றினை நினைத்து நாம் நம் கடமைகளை செய்யும் போது தான் நாம் முழுமையான இன்பம் அடையமுடியும், இறையோடு இசைந்த இன்பம் இன்பத்தோடு இசைந்த வாழ்வு தானும் உயர்ந்து நம் சமூகத்தவர்களையும் உயரச்செய்வதேஇன்பம், உழைத்தால் வாழலாம். உழைத்தால்தான் வாழமுடியும் என்பதை நம்சமூக இளைஞர்கள் உணரவேண்டும். நினைப்பால் வாழ்கிற வாழ்க்கை கனவு வாழ்க்கை அது காரியத்துக்கு உதவாது. உழைப்பால் வாழ்கிற வாழ்க்கை-தான் உண்மையான வாழ்க்கை நம்மை உயர்வடையச் செய்கின்ற வழ்க்கை என்பதனை நம் சமூக இளைஞர்கள் நன்கு உணர்ந்து உயர்வடை வேண்டும் என்பதே எனது வேண்டுகோளும் பிராத்தனையும் ஆகும். அதுவேதான் இன்பம் பயக்கும். அதுவே இன்பம் மகாநாடு நடத்துவது என்பது மிகவும் சிறப்பான காரியம், அத்துடன் மலர்வெளியிடுவது மேலும் சிறப்புடையவை. நினைவில் நிற்பவையும், செங்குந்தர் குலத்திற்கு பெருமையும். ஊக்கமும் தரக்கூடிய செயலைப் பாரட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

வளர்க ஒற்றுமை — வாழ்க வளமுடன்

வணக்கம்



"சிந்தனைக்கும், செயல்பாட்டிற்கும் உகந்தவை."

K.S கல்யாணசுந்தரம், பி. காம்.,
தொண்டைமண்டலசெயலாளர்

1. அவசரமும் ஆடம்பரமும் ஆட்சிக்குதவாது, திட்டமிட்டு ஆய்ந்து அனுபவ அறிவோடு ஆற்றும் பணியே ஏற்றம் கொள்ளும்.

2. இது செய்வேன், அது செய்வேன், எல்லாம் செய்வேன் என்று சொல்வதை விட உண்மையாக-உறுதியாக என்ன செய்ய முடியுமோ அதை மட்டிலுமே கூறவேண்டும்.

3. இறைவனின் பெயரைச் சொல்லி தவறு செய்யாதே ! அத்தவறே உனக்கு கேடாகும்.

4. உதவிகோரி வருவோரிடம் பிறகு செய்கிறேன் எனக்கூறி காலங்கடத்துவதை விட செய்யக் கூடியதை அப்போதே செய்வது விடுவது அறமாகும்.

5. எவ்வளவு காலம் வாழ்ந்தோம், என்னென்ன பதவிகள் வகித்தோம் என்றெண்ணும் போது, யார் யாருக்காக வாழ்ந்தோம், வகித்த பதவிக் காலங்களில் சமுதாயத்திற்காகவும், நண்பர்களுக்காகவும் என்ன செய்தோம் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

6, சமுதாய தொண்டாற்றுவோர் உண்மை, ஒழுக்கம், தைரியம் கட்டுப்பாடு, விட்டுக்கொடுக்கும் பண்பு உடையவர்களாகவும் இவைகளை பிறருக்கு போதிப்பவர்களாகவும் இருக்க வேண்டும்.

7, பெற்றோர் நமக்கு எதுவும் வைக்கவில்லை என்று எப்போதும் எண்ணாதே. நம் பிள்ளைகளுக்கு நாம் என்ன வைக்கிறோம் என்று மட்டும் எண்ணிக் கொள்.

8. பொதுத் தொண்டு புரிவோம் பலருக்கும் அவர்கள் விரும்பாமலேயே சில எதிரிகள் அவர்களுக்கு ஏற்படுவதுண்டு. மனதைத் திடமாகக் கொண்டு துணிந்து செயலாற்றும் பக்குவம் வேண்டும்.

9. பொய்யும் புரட்டும், பகட்டு மேனியும் நிலையாகாது பலியாகிவிடும் வாய்மையே வெல்லும்.

10, மனிதன் தானாக பிறப்பதில்லை. வளருவதுமில்லை. எனவே அவன் தனக்கு மட்டும் உரியவன் இல்லை. தான் சார்ந்துள்ள குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும், நாட்டுக்கும் அவன் உழைத்தே ஆகவேண்டும்.

11. வறுமையில் வாடுபவர்களைக் கண்டு வாட்டமுறுவதைக் காட்டிலும், இயன்ற உதவிகளை அவர்களுக்குச் செய்து அவர்களின் பசியைப் போக்குவது புண்ணியமாகும்.

12. வள்ளல்கள் இல்லாத சமுதாயமேயில்லை. வரவு கருதாது வாரி வழங்கும் வள்ளல் பெருந்தகையோர் செங்குந்தர் சமுதாயத்தில் மட்டுமே உண்டு,

பற்று என்பது எல்லோருக்கும் இருக்கக்கூடிய ஒன்றுதான். ஆனால் இந்தப்பற்று எந்த அளவுக்கு தன்னிடையே மட்டுமில்லாமல் பலருக்கும் உதவக்கூடிய வகையிலே விரிவடையச் செய்வது என்பதில்தான் சிரமம் ஏற்படுகிறது. தான் வாழவேண்டும். தன் குடும்பம் மட்டுமே வாழவேண்டும் என்று சிலர் பாடுபடுவார்கள். அதிலே எவ்வித தவறும் இல்லை, அப்படி முதலில் தன்னையும், தன்குடும்பத்தையும் வளர்த்துக்கொண்டு அதன் பின்னர் அதிலிருந்து சற்று விலகிவந்து, நாம் எப்படி வாழ்கிறோமோ, வளர்கிறோமோ நம் குடும்பம் எப்படி வாழ்கிறதோ, வளர்கிறதோ அதேபோல் முதலில் அவதிப்படும் நம் இனமக்களும் வாழ்வதற்கு வளர்வதற்கு நாம் பாடுபட வேண்டுமென்று எண்ணவாவது வேண்டும் அப்படி சில காலம் எண்ணினாலே அதன் விளைவாக கொஞ்சம் கொஞ்சமாக மனம் விரிவடைந்து அதன்விளைவாக பிறருக்கு உதவ வேண்டுமென்ற பரந்த மனப் பான்மை ஏற்படும் இன்றிலிருந்து நம் இனம் வாழ, வளர, உயர நம் இனமக்கள் ஒவ்வொரு வரும் முயற்சிக்க முன்வருவோமாக.

செங்குந்தம் வெல்க! வாழ்க!! வளர்க!!!

செங்குந்தர் ஒற்றுமை ஓங்குக!



இனப்பற்று அவசியம் தேவை

பொ. க. சாமிநாதன்
சென்னை—28

''எளியவரை வலியர் அடிக்கும் போது
எனது உளம் அடையும் கலக்கத்தை
என்னால் விவரிக்க இயலாது''


என்பது வள்ளலார் பொன்மொழிகளில் ஒன்றாகும் அதேபோல் நம்மவர்களில் ஒருசிலர் அதிலும் எல்லாவகையிலும் வசதிபடைத்தோர், இனப்பற்று என்பதே கொஞ்சமும் இல்லாமல் அல்லது நாம் அவர்களை அணுகும்போதாவது நம்மிடையே கூட காட்டிக்கொள்ளவும் அஞ்சுபவர்களாக காணும்போது என் உளம் அடையும் கலக்கத்தை என்னால் விவரிக்க இயலவில்லை. அப்போது ஏற்படும் மனவேதனையால் இப்படி உணர்வற்ற நம் சமுதாயத்திற்கு நாம் ஏன் பாடுபட வேண்டுமென்ற எண்ணம் தோன்றும். சற்று ஆழ்ந்து சிந்தித்த பின்னர் இன்றைக்கு முன்னைக்காட்டிலும் நம்மிடையே இனப்பற்று, உணர்வு கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வருவதைப் பார்க்கும்போது நாமும் அப்படிப்பட்டவர்களுடன் ஒன்று சேர்ந்து பாடுபட்டால் என்றைக்கேனும் ஒருநாள் இப்படி உணர்வற்றவர்களையும் உணர்வு கொள்ளச்செய்யலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டு அதன் விளைவாக பணி தொடர்கிறது.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் எப்படி நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் முக்கியமோ அதைப்போல் இன்றைய நிலையில் அவரவர் பிறந்த இனத்தின்பால் பற்று இருக்கவேண்டியதும் அவசியமாகும் என்பது என் கருத்து, இனப்பற்று இல்லாதவரிடம், மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் இருக்குமா என்பதே ஐயப்பாட்டிற்குரிய ஒன்றாகும் அப்படி இருப்பதாக எவரேனும் சொன்னால் அவர் வெளியே வெளிச்சம் போடுபவராகத்தான் இருக்கமுடியுமென்பதும் என் கருத்தாகும்.

''வறியார்க் கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து''

என்று வள்ளுவர் ஈகைப்பற்றி கூறியுள்ளார். அதே அத்தியாயத்தில் அவர் ''ஈத்துவக்கும் இன்பம்'' அதாவது தகுதிவாய்ந்த ஒருவருக்கு வறியவருக்கு பொருளுதவி செய்வதால் ஏற்படும் இன்பத்தைப்பற்றியும் கூறுகிறார். அவரது வாக்கிற்கொப்ப நாமும் அவர் அவரது தகுதிக்கேற்ப நம்மால் இயன்றவரை முதலில் நம் இன மக்கள் உயர உதவ முன்வரவேண்டும் இதுவும் அவர்கள் ஒருவகையில் நாட்டிற்குச் செய்யும் ஒரு தொண்டாகவும் கருதலாம்.

ஒருசில குறிப்பிட்ட இன மக்களிடையே மட்டும் எப்படி ஒற்றுமையுணர்வு மிளிர்கிறது. அவர்கள் எப்படியெல்லாம் வளர்கிறார்கள் என்று அவர்களைப் பார்த்து நாம் பொறாமைப்படுவதில் எவ்விதப் பயனுமில்லை. நம்முள் ஒவ்வொருவரும் அப்படி ஒற்றுமையுணர்வோடு ஒன்றுபட்டு செயல்பட்டால் நாமும் அவர்களைப் போல் வாழலாம், உயரலாம். எனவே இன்றிலிருந்தாவது நாம் ஒவ்வொருவரும் ஒற்றுமையுணர்வோடு செயல்பட மன உறுதி கொள்வோம்.



வெற்றிக்கனியைத் தாரீர்!

ச. இரத்தினசபாபதி
துணைச் செயலாளர்,
மதுரை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்.

அன்புள்ள பெரியோர்களே!

செங்குந்தர் குலம் சீரோடும், சிறப்போடும் வாழ்ந்த குலம். சீர்திருத்தக் கருத்துக்களை செம்மையாக கடைப்பிடித்தக் குலம்.

சோழமண்டலத்து படைவீரர்களாய், அமைச்சர்களாய், அரச பதவி வகித்தவர்களாய், அரும்-பெரும் புலவர்களாய் வாழ்ந்த குலம் தான் நம் செங்குந்தர் குலம்.

புரட்சிக் கருத்துக்களை புகுத்தி புதுமை படைத்தவர்கள் நம் செங்குந்தர்கள்

59 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க மாநாட்டில் விதவைத் திருமணத்தை ஆதரித்து தீர்மானம் கொண்டு வந்து செயல்படுத்தியவர்கள் தான் நமது செங்குந்த மரபினர்.

பெண்குலம் ஆண் துணையின்றி அல்லல்படக்கூடாது என்பதற்காக அன்றே நம் முன்னோர்கள் சிந்தித்து பிற சமூகத்தினருக்கு வழிகாட்டியாக விதவைத் திருமணத்தைக் கொண்டு வந்தார்கள்.

அப்படிப்பட்ட அருமை, பெருமை படைத்த நமது சமுதாயம் இன்று உள்ள நிலையை எண்ணிப் பார்க்க வேண்டிய காலகட்டத்தில் நாம் உள்ளோம், என்பதை யாரும் மறந்துவிடவும் முடியாது. மறுத்து விடவும் முடியாது

ஆமாம் பெரியோர்களே !

எந்த ஒரு சமூகக் கொடுமையினால் சமூகங்கள் சீரழிந்து சின்னாப்பின்னப்பட்டு விடும் என்று எண்ணுவார்களோ, அந்த ஒரு சமூகக் கொடுமை நம் சமுதாயத்தில் இன்று வேரூன்ற ஆரம்பித்து விட்டது

அதை இப்போதே உடனடியாக வேரோடு பிய்த்து எறிய வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

பிற சமூகத்தினர் சிலர் அந்தக் கொடுமையை அறவே ஒழித்துக்கட்ட கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படுகின்றனர்.

அரசு கூட அடிக்கடி அந்தக் கொடுமை எந்த சமுதாயத்திலும் பரவக்கூடாது என்று பிரச்சாரம் செய்து செய்து வருகிறது.

அந்தக் கொடுமைதான் இன்று நமது சமுதாயத்தில் வேகமாக பரவிவரும் வரதட்சிணைக் கொடுமை, இந்த வரதட்சிணை கொடுமையால் எத்தனை எத்தனைப் பெண்கள் இன்னும் திருமணம் ஆகாமலே இருக்கின்றார்கள்.

எத்தனை, எத்தனை பெண்கள் திருமணம் முடிந்தும் துன்பத்தின் எல்லையை தாண்ட முடியாமல் அக்னி பகவானுக்கு தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறார்கள்.



நாவினால் மழுவெடுத்த ஞானப்பிரகாசர்

ச. கு. பா. பழநிவேல், பொதுச்செயலர்,
தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன கல்விச் சங்கம்.

இன்றைக்கு 600 ஆண்டுகளுக்கு முன் சான்றோர்கள் நிறைந்த தொண்டை நாட்டின் தலைநகரும் நமது செங்குந்தர் பேரரசின் 72 கிளை நாடுகளின் தலைநாடாகியதும் மகாநாடு என்ற பெயர் பெற்றதுமான காஞ்சியம்பதியில் விசயமார்த்தாண்டன் என்னும் குறுநில மன்னன் ஆண்டுவந்தான். அவன் கொலுச்சபையில் உத்தியோகம் செய்பவருள் ஒரே பெயர் வாய்ந்தோர் இருவர் இருந்தனர். அவர்களில் ஒருவன் செங்குந்தன். மற்றவன் வேளாளன். இவர்களில் ஒருவனை அரசன் அழைக்குங்கால் மற்றொருவன் வந்து எதிரில் நிற்பான். பலகால் இவ்வாறு நிகழ்வதை கண்ட அரசன் இருவரையும் அழைத்துத் தங்கள் இடுகுறி பெயரேனும் சிறப்பு பெயரேனும் வேறுபட மாற்றிக்கொள்ள உத்தர விட்டான். அது கேட்ட செங்குந்தன் தனது இடுகுறிப் பெயரையோ அல்லது சிறப்புப் பெயரையோ மாற்ற இயலாது என்று கூறினான். இதைக் கேட்ட வேளாளன் தானும் மாற்றிக்கொள்ள இயலாது என மறுமொழி கூறினான். (இருவரும் முதலி என்ற பட்டப் பெயரை தனது பெயருடன் இணைத்து இருந்தனர்.) அரசன் இருவர் இடத்தும் சம நோக்கம் செய்து இந்த சந்தேகத்தினை யாரால் உள்ளபடி உணர்ந்து நிவர்த்திக்கக் கூடும் என்று வினவினான். அதற்கு செங்குந்தன் கையிலாய பரம்பரையில் வந்த சந்தானசிரியர் நால்வருள் உப சுப்ரமணியரான வீரவாகு தேவர் அம்சை பெற்று சனக மகா முனிவர் அவதாரமாய் விளங்கும் சுவேதனப் பெருமாள் என்னும் மெய்கண்டதேவர் ஆதீனத்தின்கண் பூர்வம் ஓர் சிவானுபூதிமானய்ப் பிரசித்தி பெற்று இருந்த சிற்றம்பல நாடிகளின் பிரதம மாணக்கருள் ஒருவராய் இவ்வூரின்கண் இவ்வேளாளருக்கும் இவரது மரபினருக்கும் ஆசிரியராகி ஞானப்பிரகாச தேசிகர் என்னும் அபிஷேக திருநாமம் வாய்ந்த ஓர் புண்ணிய சொரூபி உள்ளார். அவரை அழைப்பித்துஉசாவின் உள்ளபடி உணரக்கூடும் என்று கூறினான். அப்போது அரசன் அவ்வேளாளனை உமக்கிது சம்மதமா என கேட்டான். அதற்கு வேளாளன் தனக்கு சம்மதம் என்றும் பின்னர் இச்செங்குந்தன் அத் தேசிகர் சொல்லிய உண்மையில் பிறழ்ந்து வேறு ஒருவரை அழைப்பித்தல் கூடாதென மொழிந்தான்.

அதுகேட்ட அவ்வரசன் அத்தேசிகரை சபைக்கு அழைத்துவரச் செய்து தக்க ஆசனத்தில் இருத்தி நடந்த சரிதத்தினை கூறி சந்தேகத்தினை நிவர்த்தியருள வேண்டினான்.

அதற்கு தேசிகர் ''தன் நெஞ்சால் அறிந்ததில் பிறழாது உண்மையே சொல்பவன் தான் தருமாதிகள் செய்வனினும் தலையானவன். ஆதலால் பொய் சொல்லாமைக்கு ஒப்பான புகழ்ச்சி இல்லை. நான் சற்சூத்திர மரபென்னும் வேளாளர் குலத்தில் பிறந்தேனாயினும் அம்மரபினருக்கெல்லாம் சமய தீட்சை செய்வித்தும் ஆசிரியராகியும் அவர்களால் செய்யப் படும் உபகாரத்தினால் சீவிக்கும் தன்மையன். இத்தன்மையுடைய என்னை இருவகை மரபினருக்கும் உண்டான சிறப்பு நாமத்தை பற்றி உண்மையை விளக்க வேண்டும் என்று கேட்டால் சாதி அபிமானமும் அதனால் பெறும் ஊதியத்தினாலும் நான் முறை பிறழ்ந்து பொய் சொல்வேன் ஆயின் என்னாகும்? ஆதலால் உண்மையே பேசுகிறேன்''. கேளும் என்று கூறினார்.

இந்த வரதட்சிணையால் எத்தனை எத்தனை பெண்கள் ... கொலை

செய்யப்படுகிறார்கள்.

அலையும் பெண்கள் எத்தனை பேர்?

இதுமட்டுமா? வீட்டை விட்டு துரத்தப்பட்டு வீதியிலே அலையும் பெண்கள் எத்தனை பேர்? இரக்கமில்லா மனிதர்களின் செயலால் இரயிலில் விழுந்த பெண்கள்தான் எத்தனை பேர்?

கட்டிய மனைவியோ கல்மனம் கொண்ட பாவிகளால் தூக்கு கயிறுக்கு பலியான செய்திகள்தான் எத்தனை எத்தனை?

இப்படிப்பட்ட கொடுமைகளுக்கு எல்லாம் காரணமான அந்த வரதட்சிணை இன்று நம சமூகத்தில் பரவ ஆரம்பித்திருக்கிறது.

நம் சமூகப்பெரியவர்கள் கூட சிலர் தங்களது பையனுக்கு சிறந்த முறையில் வரதட்சிணை கிடைக்கும் பெண்ணையே மணமகளாகத் தேர்ந்தெடுக்கும் நிலை உள்ளது மிகவும் வேதனைக்குரியது

இந்தக் கொடுமையை நாம் உடனடியாக ஒழிக்கவேண்டும். அதற்கு இளைய சமுதாயத்தினர் தான், துணைபுரிய வேண்டும்.

ஆம், ஒவவொரு செங்குந்த இளைஞரும் நான் வரதட்சிணை வாங்கித் திருமணம் முடிக்க மாட்டேன் என்று சபதம் ஏற்க வேண்டும். அதே போல் செங்குந்தர் குலப்பெண்கள் நான் வரதட்சிணை கேட்கும் மாப்பிள்ளையை திருமணம் முடிக்க மாட்டேன் என்று சபதம் ஏற்க வேண்டும்.

கணவனை இழந்து வாழ்விழந்து தவித்த எத்தனையோ பெண்களுக்கு வாழ்வு கொடுத்த செங்குந்த சமுதாயமே, வரதட்சிணை என்னும் கொடிய நோயினால் எத்தனைப் பெண்கள் வாழ்வு கிடைக்காமல் தவிக்கிறார்கள் என்று நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டாமா?

செங்குந்த இளைய சமுதாயமே நீங்கள் சிந்தியுங்கள், செயல்படுங்கள். இந்தக் கொடிய நோயினால் அல்லல்படும் பெண்களுக்கு விடிவுதரும் வீரமிக்க செங்குந்தராக இளைஞர்களே வாருங்கள்!

போராடுவோம்! நம்முள் இருக்கும் மூடப்பழக்க வழக்கங்களை எதிர்த்து போராடுவோம்.

போராடுவோம்! நம்முள் உள்ள வேற்றுமைகளை மறந்து ஒற்றுமைக்காக போராடுவோம்.

போராடுவோம்! அரசின் சலுகைகளை நாம் அனைவரும் பெறவேண்டி அவனியில் உள்ளோர் வியக்கும் வண்ணம் போராடுவோம்.

போராடுவோம் வரதட்சிணை என்னும் கொடிய தீ நம் சமுதாயத்தில் பரவவிடாமல் தடுக்க போராடுவோம்.

வாரீர்! வாரீர்! செங்குந்த சமுதாய இளைஞர்களே வாரீர்! வாரீர்! வெற்றிக்கனியை இந்த சமுதாயத்திற்கு தாரீர்! தாரீர்!



நான்கு வகை வருணபேதம் உண்டான காலத்தில் முதல் மூவகை வருணத்தாருக்கும் ஐய்யர் முதலிய சிறப்பு நாமங்கள் உண்டானபோது நான்காம் வருணத்தாருக்கு பிள்ளை என்னும் சிறப்பு நாமம் உண்டாகி முதல் மூவர் சிறப்பு நாமங்களில் மாற்றம் ஏற்பட்டதுபோல் நான்காம் வருணத்தாருக்கும் சிறப்பு நாமங்கள் பலவாறாயின என்பது எங்கும் பிரசித்த நிச்சயம். ஆனால் இச் சபையில் நிற்கும் முதலியரென்னும் சிறப்பு நாமம் அவற்றை ஒப்பது அன்று. அஃது தேவர்களுக்கெல்லாம் தலைவரான சிவபிரானுக்குரிய சிறப்பு நாமமாதலால் சிவக்குமாரர்களான செங்குந்தர் மரபினருக்கே எப்போதும் சிறப்பு நாமமாய் விளங்கும். இதை வேறு மரபினர் வகித்தல் விளக்கின் ஒளியை மின்மினி வகித்தலுக்கு ஒப்பாகும். அதன் பெருமையை அயன் அரி அரன் என்னும் முத்தேவர்கள் தான் சொல்ல வேண்டும். முனிவர் களில் அகத்திய முனியும் மானிடரில் கல்விச்சக்ரவர்த்தியும் சிரச் சிங்காதனாபதியுமாகிய ஒட்டக்கூத்தரும் விளக்கக் கூடும். ஆதலின் என்னை ஒத்தவர் கூறவல்லேன் அதனை செங்குந்தர் மரபினர் மாற்றி கொள்ள இயலாது. வேளான் மரபினரே மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கூறி முடித்தனர்.

இவை அனைத்தையும் கேட்டு இருந்த வேளான் முகம் கருகி வியர்த்து விழிசிவப்ப சினந்து ஞானபிரகாச தேசிகரை உருத்துப் பார்த்து, ஓய் தேசிகரே அன்னமிட்டார் வீட்டில் கன்னமிட்டார் கூட்டுள் நீவிர் தலையாவீர் போலும். செங்குத்தர் மரபோர் ஒருவர்க்கே முதலியார் எனும்சிறப்பு நாமம் உரியதென்று சத்தியமாக கூறுவீரா என்றுஉரப்பி க்கேட்டனர். அதற்கு தேசிகர் எனது நாவினால் மழுவெடுத்துக் கூறினேன் எனக் கூறினர்.

அரசன் வியந்து தேசிகரைப் பார்த்து உண்மை அறிய வேண்டும் என்பது என் கருத்து. நாவினால் நீவிர் மழுவெடுத்து கூறவல்லேன் என்று கூறியதால் அவ்வாறு செய்யற்கியல்வீரோ என்று கேட்டனன். அதற்கு தேசிகர் இன்னும் ஒரு சாமத்திற்குள் இவ்விராசசபையில் எரிமூட்டி ஓர் மழுவை அமைத்திரும் நான் சிவபூசை செய்து முடித்துக் கொண்டு வருகிறேன் என்று பூசாமண்டப பூங்காவிற்குச் சென்றார்.

உடனே வேந்தன் தனது நண்பராய் உள்ள பிரபுக்களையும் சில தூதரால் அழைப்பித்து நிகழப் போகின்ற அற்புத நிகழ்ச்சியை நகர் முழுதும் வள்ளுவனைக் கொண்டு முரசறைவித்தான். சிவாச்சாரியார்களும் செங்குந்தர்களும் புறவருணத்தாரும் புறச்சமயத்-தினரும் இராசசபையில் வந்து அமர்ந்தனர். அரசனானவன் தனது சபைக்கு நேரே உள்ள வெள்ளிடை வாசல் மத்தியில் ஓர் நீக்குண்டம் சமைப்பித்து அதில் ஓர் மழுவை அமைக்குமாறு மந்திரிகளுக்கு ஆணையிட்டான். அவர்களும் அவ்வாறு முடிப்பதில் முயன்றிருந்தார்கள்.

தேசிகர் நீராடி மறஉரி முதலியன உடுத்து விபூதி ருத்திராக்கம் முதலிய சின்னங்-களைத் தரித்து ஆன்மார்த்த பூசையை விதிப்படி நிறைவேற்றி ஸ்ரீசண்முக கடவுளுடைய திருவுருவத்தை மனதில் இருத்தி யோகம் செய்து நமது நியம நிட்டைகளை முடித்துக் கொண்டு கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரை மனதில் தியானித்து அவரது பிரபாவத்தை துதித்து ஐயனே பூர்வம் குலோத்துங்க சோழ மகாராசனுடைய கொலு மண்டப வாலின்கண் தனது மரபினரால் அமைத்த சிரச்சிங்காதனத்தில் இருந்து.

''இந்திர னயன் மாறேவர் யாவர்க்கு முதன்மையாக
வந்த பான்மை யினாற்குல மழுப்படை யத்தனார்க்கு
முந்திய நாமந் தானு முதலிய ராகையாற் செங்
குந்தர் சந்ததிக் குமப் பேர் முதலிய ரென்று கூறும்''

என்று தேவரீர் மொழிந்தது சத்தியமேயன்றோ? இத்தகைய சத்திய வாக்கினை நம்பி இவ்விஜய மார்த்தாண்ட மகாராசனுடைய கொலு மண்டபத்தில் யான் நடத்தப் பாகின்ற பிரமாணிக்கத்திற்கு யாதொரு இடையூறும் வராமல் தேவரீரே முன்னின்று

காத்தருள வேண்டும் என்று பிரார்த்தித்து, பூசா மண்டபத்திலிருந்து, கொலு மண்டபத்தை நோக்கி வந்த தேசிகர் கொல்லரால் ஏந்தப்பட்ட மழுவுக்கெதிரில் ஊங்காரம் செய்து வந்து நாவை நீட்டி ஏந்தப் பாய்ந்தனர். அதுகண்ட அரசன் ஓடி தடுத்து ஓ! சுவாமி தங்கள் வாய்மையை நிலை நிறுத்த பிரமாணம் செய்யவும் வேண்டுமா? தங்கள் தரிசனத்தால் சிவாநந்த வாழ்வு பெற்றோம். யாங்கள் நரகிற்காளாவண்ணம் இந்நிலைக் கண் வரச்செய்த எங்களை மன்னித்தருள் வேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்கு அவர் சம்மதியாது முன் சொன்னபடி என்னாவினால் சிறிதளவேனும் தீண்டாது விடேன் என்று கூடி யாக்கிரமித்து மீண்டும் அம்மழுவில் எதிரே நாவை நீட்டிப் பாய்ந்தார்; அந்நாவின் பரிசம் அதன் மீது பட்ட மாத்திரத்தில் அம்மழுவானது வீபூதி குண்டம்போல் வெளுத்து நிராகித்தகரு கொண்டு பறந்தது. அதுகண்ட மக்கள் ஜயஜயவென்று கூறிக்கொண்டு கைகொட்டி ஆர்ப்பாரித்தார்கள். அந்தணராகிய பெரியோர்கள் மலர்தூவி ஆரவாரித்தார்கள்.

அரசனானவன் சகல வாத்திய கோஷம் முதலிய சம்பிரமங்களுடன் ஞானப்பிரகாச தேசிகரை சிவிகையில் ஏற்றி தானும் சதுரங்க சேனைகளாகிய பரிசனங்களுடன் அவரை கூடி நகரியை வலமாக வந்து அவரை அவரது மடாலயத்தில் இறக்கி பணிந்து அளவற்ற திரவியங் களை பரிசாகத் தந்து விடைபெற்று தனது இருக்கையை அடைந்தனன். அன்று முதல் இன்று காறும் அத்தேசிகரை யாவரும் நாவினான் மழுவெடுத்த ஞானப்பிரகாச வள்ளலார் என்னும் சிறப்பு நாமத்தால் துதி செய்வராயினர்.

இதனைக் கண்டிருந்த வேளாண் மரபினர் அவரை சன்மானித்தலும் அவர் பால் உபதேசம் பெறுதலும் அற்று அழுக்காறு அடைந்த மனத்தினராய் அகல நின்றார்கள். அது கண்டு செங்குந்த மரபினர் அவரை சன்மானித்து அவரது மடாலய விருத்திக்கு குறை நேராத படி காத்து வருவாராயினர். அதுபோலவே நாளது காறும் அம்மடாலய பரிபாலணங்கள் செங்குந்த மரபினரே நிறைவேற்றி வருகின்றனர். இத்தகைய பிரபாவத்தை அடைந்த ஞானப்பிரகாச வள்ளலார் தம்மைச் சன்மானித்த செங்குந்த மரபினரைச் சிறப்பித்து 6000 செய்யுளில் ஓர் புராணமும் பல பிரபந்தங்களும் இவ்வுலகுள்ள வரையில் நிகழ்வதாக அருளிச் செய்தனர்.

வள்ளலாரைப் போலவே பலர் தங்கள் இட்ட சித்தியாக வேண்டி கவிச்சக்கரவர்த்தி-யாகிய ஒட்டகூத்தரை பூசித்தும் தியானித்தும் அதனைப் பெற்ற சரிதங்கள் பலவாம்.

பின்குறிப்பு: இஃது 1895-ஆம் ஆண்டு சென்னை இந்து தியலாஜிக்கல் அச்சு இயந்திர சாலையில் ஸ்ரீ காரணீஸ்வரம் திரு. தி. தருமலிங்க முதலியார் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் சரித்திரம் மூலமாகும். இவர் இயற்றிய 6000 செய்யுள்கள் அடங்கிய கந்தபுராண ஓலைச் சுவடி தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன கல்விச்சங்கத்தில் இருக்கிறது.

வளமான வாழ்வை நோக்கி!



திருமிகு. க. பழநி, எம். ஏ., பி. லிட்.,
காட்டுமன்னார்கோயில்.

உலக மாந்தர்தம் உயர்மானம் காக்கும் நல்லாடை வழங்கி நாகரிகம் காக்கும் செங்குந்தர் பேரினம் காலவெள்ளத்தில் நின்று நிலைத்து பெரும் புகழுடன் விளங்கிவருகின்றது. இன்று தமிழகத்தில் மிகப்பெரும் மக்கட்தொகை யைக்கொண்ட இனங்களில் செங்குந்தர் மரபும் குறிப்பிடத்தக்க இடத்தை வகித்து வருகின்றது.

ஆனால் பொருளாதார ஏற்றத்தில், தரமிக்க வாழ்க்கைத் தரத்தில் நமது செங்குத்தர்களின் இன்றைய நிலையை எண்ணும்பொழுது மனதில் மிகுந்த வேதனையும், கவலையும் எழுகின்றது. நாளெல்லாம் பிறர் மானம் காக்க பட்டாடை நெய்யும் நம்மவர் உடலை முழுமையாக மூடக்கூட முடியாத நிலையில் கந்தலாடையுடன் காட்சி தருகின்றனர். நெய்யும் தொழிலில் முழுக் குடும்பமே ஈடுபட்டும் முழு வயிறு நிரப்பும் வண்ணம் உணவருந்த வகையற்று வறுமையில் வாடுகின்றனர்.

இந்த துயரநிலைக்கு மாற்றுகாணவேண்டாமா? நம்மைவிட மிகவும் பின்தங்கியோர் எல்லாம் முன்னேறிச்செல்வதைக் கண்டும் பழம்பெருமை பேசு வதில் போதைகொள்ளலாகுமா? மற்றவர்களைப் பார்த்து பொறாமைப்பட வேண்டாம்! நம்முடைய எதிர்கால கடமைகளை உணர்ந்தாவது பொறுப்புடன் நமது பணிகளை வாழ்வியல் முறைகளை அமைத்துக்கொள்ள வேண்டாமா?

எனவே அன்புமிக்க உறவினர்களே! ஒரு கனம் சிந்திப்பீர்! நமக்காக இல்லாவிட்டாலும் நமது எதிர்கால தலைமுறைக்காவது செயல்பாடுகள், முயற்சிகள் அமையவேண்டுவது இன்றியமையாதல்லவா? இத்தகைய தொலை நோக்குணர்வோடு நாம் நமது பொருளாதார மேம்பாட்டிற்கும் வேலைவாய்ப்பு பெருக்கத்திற்கும் நமது முயற்சிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பாடுபட வேண்டும். உயரிய நிலையில் நமது செங்குந்தர் இனம் அமைய வேண்டு மெனில் அதற்கு எற்ற ஒரு சில செயல் திட்டங்களை உங்களின் சீரிய கவனத் திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

1. நெசவுத் தொழிலில் அதிக வருவாய் ஈட்டும் வகையைக்காணுதல்.
2. புதிய தொழில்களில் பயிற்சிபெறுதல்.
3. நமக்காகவே புதிய தொழில் கல்லூரிகள், பாலிடெக்னிக் போன்ற வற்றை உருவாக்கி செயல்படுத்துதல்.

4. நமது இனத்தவரிடையே புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தி செல்லும் வகையெல்லாம் நமது அனைத்து துறைகளிலும் முன்னேறும் வகையில்ஒருங்கிணைந்து பாடுபடுதல்.

பழங்கால முறைகளையே பயன்படுத்திவருவதால் முழுக்குடும்பமே பணியாற்றினாலும் முழுவயிறு நிறையும் வழியை காணாது இன்னும் தவித்து வருகின்றோம். எனவே புதிய நவீன தொழில் நுட்ப முறைகளை நெசவுத் தொழில்நுட்ப முறைகளை நெசவுத் தொழிலில் புகுத்தி அதிக வருவாய் ஈட்டும் வகையை முதலில் காணவேண்டும்.

நெசவுத் தொழிலில் நசியச் செய்யும் நூல் பற்றாக்குறை போன்ற நடைமுறை சிக்கல்களை கூட்டுறவால் தகர்த்தெரிந்து நிலையான அதிக வருவாய் ஈட்டிட வகைகள் செய்ய வேண்டும். இது சற்று கடினமான பணி என்றாலும் நம்மவர் அதிக வருமானம் பெற்றிட செய்யும் நற்செயலாகும் என்பதை அனைவரும் உணர்ந்து செயலாற்றிட நற்பயன் விளையும் என்பதில் ஐயம் உண்டோ?

அரசு தரும் அத்தனை சலுகைகளையும் கற்றறிந்தோர் அறியாத நிலையில் இருக்கின்றனர். அத்தகையோர் அரசு சலுகைகளை தாமும் அறிந்து கொள்வதோடு மற்றவருக்கும் எடுத்துக்கூறி தக்க பயன் விளைய வழிவகுப்போம்.

அடுத்து குடும்பத்தினர் அனைவருமே நெசவுத்தொழிலில் ஈடுபடுவதை இனி எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்ளுதல் ஆரோக்கியமான பொருளாதார நிலையை உருவாக்க உதவும் எதிர்காலம் கணிபொறிக்காலம் என்பது உறுதியாகிவிட்ட உண்மை. இந்நிலையில் கையால் நெசவு செய்யும் தொழிலையே எப்போதும் நம்பியிருத்தல் பேதமை. எனவே நாம் நமது குழந்தைகளுக்கு புதிய தொழில் கல்வியை ஊட்டவேண்டும். புதிய தொழில் முயற்சிகளில் இறங்க வேண்டும்.

புதிய தொழில்கள் ஏராளம். நட்டத்தை கனவிலும் காணாத தொழில்களில் அரசு ஆதரவில் பயிற்சிகள் தரப்படுகின்றன. கம்யூட்டர் கல்வி தொலைக் காட்சி பழுது பார்த்தல், ஆட்டோ மெக்கானிக், வேளாண்மை தொடர்புடைய பண்ணைத்தொழில்கள், வீட்டு உபயோகப் பெருள்கள் தயாரித்தல், போன்ற பல்வேறு தொழில்களில் நமது இளைய தலைமுறையினருக்கு தக்க பயிற்சிகள் அளித்து சிக்கலில்லாத புது வாழ்வை அவர்களுக்கு நாம் அமைத்துந் தர வேண்டும். இது நமது கடமையும் கூட.

நம்முடைய இனத்துக்கென்றே புதிய தொழிற்கல்வி நிறுவனங்களை அமைத்து செயல்படலாம். நாட்டுக்கோட்டைச் செட்டியார், நாடார், மற்றும் கவுண்டர் போன்ற இனத்தவர் தமது வசதிக்காக புதிய தொழில்கல்வி கூடங்களை அமைத்து வருவாயைத் தேடிக்கொள்வதோடு புதிய தலைமுறை அமையபாடுபடுவதைக் கண்ணெதிரே கண்டும் நாம் நெல்லிக்காய் மூட்டைகளாக விளங்குதல் அழகாகுமா? எனவே ஏறத்தாழ 50 லட்சத்துக்கு மேல் உள்ள நமது இனத்தவர் ஆளுக்கு 1ருபாய் வீதம் அளித்துவரும் தொகையைக் கொண்டு புதிய தொழில் கல்லூரிகள், பொறியியல் கல்லூரி போன்றவற்றை நடத்தலாம்.

வசதி மிக்கவர் ஆயிரக்கணக்கில் தொகைகளை நன்கொடை வழங்கிய எழுச்சிமிகு செங்குந்தர் பொறியியல் கல்லூரி அமைக்கலாம். இத்தகைய புதிய முயற்சிகள் எதிர்காலத்தைப் பொலிவுடன் ஆக்கும். நமது சமுதாயத்தினரிடையே புத்துணர்ச்சி பூக்கும்.

மாநாடுகள், ஊர்வலங்கள், ஒரு நாளில் கொண்டாடப்படும் வாண வேடிக்கைகள், இவைகளில் நாம் செலவழிக்கும் பெருந்தொகைகள் முறையான எதிர்கால முதலீடாகாது. எனவே வீணான ஆடம்பரங்களைத் தவிர்த்து எதிர்கால பொருளாதார தேவைகளை உணர்ந்து நல்லமுறையில் வளர்ச்சிப் பணிக்காக முறையான முதலீட்டுப் பணிகளை நாம் மேற்கொள்ள வேண்டும் இத்தகைய முதலீட்டுப் பணிகளில் நமக்கென்று நாம் துவங்க வேண்டிய தொழில் கல்லூரிகள் பயிற்சிப் பட்டறைகள் அடங்கும் குறைந்தது மாவட்டத்திற்கு ஒன்றெனசெங்குந்தர் தொழிற்பயிற்சி மையங்கள் உருவாக நாம் முன்முயற்சி மேற்கொண்டு செயல்பட வேண்டும்.

நிறைவாக நமது இனத்தின் அனைத்து மேன்மைக்கும் ஆணி வேராக விளங்குவது நமது ஒற்றுமையே. நாம் எவ்வளவுக்கெவ்வளவு ஒற்றுமையுடனும் உற்சாகத்துடனும் செயல்படுகின்றோமோ அவ்வளவிற்கு வெற்றியும் சிறப்பாக கிட்டும் நமது செயல்களில் பயன்கள் நிரந்தரமாக நிறைவாகக் கிட்ட வேண்டு மெனில் நம்மிடையே மிகுந்த விழிப்புணர்வும் ஒற்றுமையும் அவசியம். நம் இனத்தவர் முன்னேற்றமடைய வசதியும் வாய்ப்பும் மிக்க நம்மவர்களே மன முவந்து உதவுதல் அவசியம் ''தேவைன்னா வந்து நம்மை கேட்கட்டும் அப்போது பார்க்கலாம்''! என்ற மனப்பாங்கு மேல்மட்டத்தில் இருக்கும் நம்மவரில் சிலருக்கு உள்ளது. தேவை எதுவென்றே தெரியாது உழல்கின்ற வாடுகின்ற நம்மக்களுக்கு இதனால் விளைவது பெருநஷ்டமே! எனவேதான் மிகுந்த கல்வியும், வசதியும், வாய்ப்பும் மிக்க நம் இனத்தவர் அன்பு கூர்ந்து இனியேனும் வாய்ப் பிருந்தும் முன்னுக்குவர அறியாதிருக்கும் நம்மக்களை முன்னுக்கு கொண்டு வருவதை நமது இனக் கடமையாகப் போற்றிச் செயல்படவேண்டும் என மிகவும் பணிவுடன் கேட்டு கொள்கிறேன்.

புதிய வீறு பெற்று செங்குந்தர் சமுதாயம் அமைக்கும் சீரிய பணியில் நம்மை நாமே முழுமையாக அர்ப்பணித்து செயல்படுவோம், வெற்றி பெறுவோம், உயர்ந்திடுவோம்.

வாரீர்! வாரீர்!! வாரீர்!!!





அமிழ்தினுமினிய தமிழ்

கனகமணி லோகு,
(திருமதி கனகமணி லோகநாதன்,
எம் எஸ்சி எம் பில்)

முது நிலை விரிவுரையாளர்
வேளாளர் மகளிர் கல்லூரி

திண்டல் ஈரோடு

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய அமிழ்தினும் இனியநமது தாய் மொழியாம் தமிழ் மொழியின் சிறப்புகளுள் சிலவற்றை இக் கட்டுரையில் காண்போம்.

தமிழ் மொழியில் உலக இலக்கியங்களுக்கு இணையாகச் சொல்லக்கூடிய சங்க காலம் முதல் இன்று வரை எண்ணற்ற இலக்கிய நூல்கள் தோன்றியுள்ளன தொல்காப்பியமும் நன்னூலும் குறிப்பிட்டுச்சொல்லக்கூடிய இலக்கிய' இலக்கணநூல்கள் சிலப்பதிகாரம் மணிமேகலை சீவக சிந்தாமணி போன்ற பேரிலக்கியங்களும் பெரிய புராணம், கம்பராமாயணம் போன்ற சமயக்காப்பியங்களும், பரணி, பிள்ளைத்தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களும் தமிழுக்குப்புகழ் சேர்ப்பவை இவ்விலக்கியங்களுக்குச் சற்றும் குறைவின்றி இன்றைய காலகட்டத்தில் புதுக்கவிதை. புதினம் சிறுகதை நாடகம். திறனாய்வுக் கட்டுரைகள் போன்ற இலக்கிய வகைகள் தமிழன்னையின் பொற்பாதங்களை அலங்கரிக்கின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக தனி மனிதனுக்கும், சமுதாயத்துக்கும் நீதியை புகட்டும் வண்ணம் எந்த நாட்டவர்க்கும் எக்காலத்துக்கும் ஒத்த கருத்துக்களைக் கூறும் உலகப் பொதுமறையாம் திருக்குறளே தமிழ் மொழியில்தான் உள்ளது ஔவைப்பாட்டியும்தமிழ் மேல் கொண்ட காதலால் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நல்வழி போன்ற பலநூல்கள் யாத்துள்ளார் மூவேந்தரும் குறுநில மன்னர்களும் ஔவையின் தமிழ்ப்பறறைக்கண்டு மனோன்மணியத்தில் சுந்தரம் பிள்ளை தமிழ்த்தாய்க்கு பாடிய ஒரு அழகான வாழ்த்துப் பாவில் அனைத்துலகமும் இன்பமுற எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழணங்கே உன் சீரிளமை திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே எனத்தமிழின் சீரிய இளமையை வாழ்த்துகிறார் ஆம் காலம் பல கடந்தாலும் தமிழ் கன்னித்தமிழ் தெலுங்கு கன்னடம், முதலிய மொழிகள் தோன்றியிருப்பினும் நம் தாய்மொழி மட்டும் என்றும் திருமாலின் குன்றம் முதல் தென் குமரி வரை செங்கோல் ஆட்சி செலுத்திய மொழி.

தமிழ் என்ற சொல்லே தனிச்சிறப்பு வாய்ந்ததுதான் த - வல்லினம், மி-மெல்லினம் ழ - இடையினம் என்று மூன்று இனஎழுத்துக்களிலிருந்து ஓவ்வொரு முத்தாரம் அதிலும் தமிழின் சிறப்பெழுத்தாம் ழகரத்தையும் தன்னுள்ளே கொண்டிருப்பது நம் மொழிக்கு தனிச்சிறப்பு என்னே வியப்பு!

'அம்மா' என்ற அமுத மொழியும் இதற்கு அழகு ஊட்டுகிறது ஐந்தறிவுடைய மிருகங்களும், உலகில் பிறந்த எக்குழந்தையும் மிழற்றுவது "மா" "அம்மா" என்னும் வார்த்தையே இது நமக்கு பெருமை சேர்க்கும் ஒன்றாகும்,

நம் தலைமுறைக் கவிஞர்களாகிய பாரதியும் பாரதிதாசனும் தமிழைப்பலவாறு போற்றிப்புகழ்த்து வளர்த்தனர் ஆம்,

யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம.

என்று பாரதி இதன் இனிமையைப்புகழ்கின்றார்.

தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத்தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று தமிழ் மொழியை தமது உயிராகப்போற்றுகிறார்.


எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு

என்று தங்கள் வாழ்க்கையும் வளமும் தமிழ் மொழிதான் என்று தமிழ்மக்களுக்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் கவிதைகள் எழுதி மென்மேலும் அழகும்,மெருகும் ஊட்டு கின்றனர்

இன்று பெரும்பான்மையான தமிழக மக்களும், இளைய தலைமுறையினரும். அந்நிய மொழி மோகத்தில் சிக்கித் தம் மொழி மறந்து மயங்கித் தவிக்கின்றனர்: பெயருக்கு மட்டும் தமிழர் என்று சொல்லிக் கொண்டு வாழ்வதில் சிறப்பு ஏதேனும் உண்டோ? பிறன்மனை நோக்காத பேராண்மைமக்கட்கு வேண்டும்:அதுபோன்று நம்தாய்மொழியைச் சிதைக்காமல் போற்றி வாழ்ந்து. பிறமொழிக் கருத்துக்களைநம் தாய் மொழியாம் தமிழ் மொழியின் வழி கற்றுணர்வது சாலச் சிறந்தது. இதுவே நமக்கு பயன் தரக்கூடிய வழியுமாம்

வாழ்க செந்தமிழ் நாடு!

வளர்க தமிழ்!!



ஒன்று படுவோம்!　　　　　　　　　　வென்று வருவோம்!

ஒரு செங்குந்தனின் சில சாதனைகள்

க. நடராசன், நூலகர்,
கிளை நூலகம், அம்மாப்பேட்டை (பவானி)

நான் பவானி வட்டம் ஒலகடம் கிராமம் நாகிரெட்டிபாளையம் என்ற கிராமத்தில் ஒரு சாதாரண செங்குந்தர் குடும்பத்தில் பிறந்தவன். தந்தையார் என். எஸ். கணேசமுதலியார். தாயார் பாவாயம்மாள் ஆவர். நான் சுமார் 12 ஆண்டுகளாகப் பவானி வட்டம் அம்மாப்பேட்டை அரசுக்கிளை நூலகத்தில் (லைப்பிரரி) நூலகராகப் பணியாற்றி வருகிறேன். செங்குந்தனாகிய நான் மற்ற நமது சமூக இளைஞர்களுக்கு வழிகாட்டுதலாக இருப்பதற்காகவும் அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் பின்வரும் என் சில சாதனைகளைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்:-

அரசாங்கம் நூலகங்களை ஏ,பி,சி,டி, என்ற நான்கு தரங்களாகப் பிரித்துன. அவற்றில் 'டி' கிரேடு என்ற கடைசித் தரத்தில் இருந்த இந்நூலகத்தை 'சி' தரமாக உயர்த்திகடந்த 5 ஆண்டுகளாகப் 'பி' கிரேடாக உயர்த்தியுள்ளேன். நூலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டுவதற்குப் பொதுமக்களால் வசூலிக்கப்பட்ட நன்கொடைத் தொகைகள் மூலம் ரூ.50,000-00 மதிப்புள்ள 10 சென்ட் நிலம் என் முயற்சியால் பெற்றுள்ளேன், சுமார் 10,000-00 மதிப்புள்ள பொருட்களையும் நூலகத்திற்கு நன்கொடையாகப் பெற்றுள்ளேன். ஒரு நூலகம் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற நியதியில் சிறந்த முறையில் புத்தகங்களை வகைப்படுத்தி அறிஞர்கள், பெரியவர்களின் நூலகத் தொடர்புடைய பொன்மொழிகளையும், பழமொழிகளையும், சிறுசேமிப்பு, குடும்ப நலம், மரம் வளர்ப்புக்களின் முக்கியத்துவங்களையும் நூலகத்தில் அமைத்து அழகுபடுத்தப்பட்டுள்ளன.


இந்நூலகத்தின் சிறப்புக்களை ஆனந்தவிகடன், சாவி, தேவி, தினமலர்-வாரமலர், தி ஹிண்டு ஆங்கில நாளிதழ், சக்தி சுகர்ஸ்-செய்திமடல், தமிழரசு, விசிட்டர் முதலிய பத்திரிக்கைகள் பாராட்டியுள்ளன, மேலும் ''கல்கண்டு'' ஆசிரியர் லேனா தமிழ்வாணன், கதை ஆசிரியர் ராஜேஸ்குமார், ''செங்குந்தமணி'' ஆசிரியர் சொக்கநாதன், ராணா லட்சுமணன், எம்.எல்.ஏக்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், அலுவலர்கள் பார்வையிட்டு இந்நூலகத்தைப் பாராட்டியுள்ளனர். 30-12-89-ல் பிரபல திரைப்பட இயக்குனரும், நடிகருமான திரு. கே. பாக்யராஜ் இந்நூலகத்தைப் பார்வையிட்டு என்னைப் பாராட்டி நூலகத்திற்கு ரூ. 2,500-00 விலையுள்ள இரும்பு பீரோவை நன்கொடையாக வழங்கியுள்ளார்,


இந்நூலகத்தைப் பற்றிக் கேள்விபட்ட அப்போதையப் பெரியார் மாவட்டக் கலெக்டர் திரு, அருண்ராமநாதன் ஐ, ஏ, எஸ், அவர்கள் 17-3-86-ல் பார்வையிட்டுப் பாராட்டினார், எனது சிறப்பான பணிகளுக்கும், சேவைகளுக்கும் பின்வரும் பரிசுகளை நான் பெற்றுள்ளேன்:- 1) பெரியார் மாவட்டக் கலெக்டரின் குடியரசு தினவிழாப் பரிசு, 2) பெரியார் மாவட்டச் செங்குந்த மகாஜன சங்கத்தின் சங்கத்தின் பரிசு, 3) பவானி ஜேசீஸ் சங்கத்தின் பரிசு, 4) ஊமாரெட்டியூர் நஞ்சப்பா அறக்கட்டளையின் பரிசு, 5) அம்மாப்பேட்டை மாதா அறக்கட்டளையின் பரிசு, 6) காடப்பநல்லூர் காந்தல்ராஜின் பரிசு, 7) குரும்பாளையம் பாரதி அன்பரின் பரிசு, 8) ஈரோடு செங்குந்த இன டாக்டர். சி. பி. ஜெகன்நாதன், டாக்டர். எ. ராஜசேகரரின் பரிசு, 9) பள்ளிபாளையம் எஸ்.பி.பி. காலனி செங்குந்தர் சங்கத்தின் பரிசு, 10) மேட்டூர் அணை கே. ஆர். & கோ. நிறுவனத்தாரின் பரிசு, 11) செம்பட பாளையம் பொதுமக்களின் பரிசு, 12) சென்னை வசந்த் & கோ நிறுவனத்தாரின் பரிசு, 13) அம்மாப் பேட்டை சரவணனின் பரிசு, 14) ஆனந்தம்பாளையம் கணேஷ் அறக்கட்டளையின் பரிசு, 15) கவுந்தப்பாடி திருக்குறள் பேரவையின் சார்பாக தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களால் வழங்கப்பட்ட பரிசு, 16) பெருந்துறை நூலக வாசகர் வட்டத்தினரின் பரிசு ஆகியனவாகும்.

செங்குந்த சமூக மக்களே ஒரு சொல் கேளீர்! விழிப்படைவீர்! மேற்கண்ட இவ்வளவு சாதனைகளையும் எனக்கு உதவியாளர்கள் யாருமின்றி தனி ஒருவனாகச் சாதித்துள்ளேன். எனவே செங்குந்தர்களாகிய நாம் அனைவரும் சார்ந்துள்ள எந்தத் துறைகளாயிருந்தாலும் சரி, எந்த வேலைகளாயிருந்தாலும் சரி அவற்றில் நாம் முழுமனதுடன் ஈடுபட்டு ''செய்யும் தொழிலே தெய்வம்'' என்ற அடிப்படையில் நாம் ஏதாவது சாதனைகள் சாதித்து நம் இனச் சமுகத்திற்கும், நம் சங்கத்திற்கும் சிறப்புக்களையும், பெருமைகளையும், புகழையும் சேர்ப்போமாக!

வாழ்க செங்குந்தம்! வளர்க செங்குந்தர்!! பெருகுக நம் ஒற்றுமை!!!

நன்றி, வணக்கம்!





தென்னகத்திற்கு வழி காட்டும் பெரியார் மாவட்டம்

மதுரை. ப. சொக்கநாதன்
ஆசிரியர் செங்குந்தமணி

உலகெங்கும் வாழ்ந்து கொண்டிருக்கும் கோடிக்கணக்கான செங்குந்த மக்களின் நல் வாழ்விற்காக சென்னையில் 1947-ம் ஆண்டு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தை வள்ளல் திரு. T, N. சபாபதி முதலியார் அவர்கள் தோற்றுவித்தார்கள் நமது தலைமை சங்கம் வளர்ந்து வெள்ளி விழா. பொன் விழா, வைரவிழாவினை கடந்து நூற்றாண்டு விழாவினை எதிர்நோக்கி வெற்றிகரமாக சென்று கொண்டிருக்கிறது கடந்த காலங்களில் நமது தலைமை சங்கம் ஆற்றிய பணிகள் ஏராளமானவை, கணக்கற்றவை, எழுத்தால் விபரிக்க முடியாத சேவைகள். தமிழகமெங்கும் மாநில மண்டல மாநாடுகளும் நடத்தியும் மாநிலம் முழுவதும் மாவட்டம்தோறும் மாவட்ட சங்கம் அமைத்தும் அந்தந்த மாதட்டத்தை வலுப்படுத்தி வருகிறது.

அந்த வகையில் கைத்தறி நெசவாளர்களுக்கு புகழ் சேர்க்கும் ஈரோட்டை தலைமையிட மாக கொண்ட பெரியார் மாவட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக கல்வி தந்தை தொழிலதிபர் **RAN முத்துசாமி முதலியார்** அவர்களை தலைவராக கொண்டு செங்குந்த மகாஜன சங்கம் தொடங்கப்பட்டது. கடந்த ஐந்து ஆண்டுகளில் சங்கம் ஆற்றிய பணிகள் பல அதில் சில ஆண்டுதோறும் கல்வி வளர்ச்சிக்கு ஊக்க பரிசுகள் வழங்குதல் இலவசமாகச் சிறப்பு திருமணங்கள் மாவட்டத்தில் திறமையுள்ளோரை அழைத்து பாராட்டி சிறப்பித்து கௌர வித்தல் சட்டமன்ற நகர சபை ஊராட்சிகளில் போட்டியிட்ட நம்மவர்கள் வெற்றிபெற பொருளீட்டி நேரில் சென்று பிரச்சாரம் செய்து அவர்கள் வெற்றிபெற பாடுபட்டதோடு அவர் கள் வெற்றி பெற்றவுடன் அனைவரையும் நேரில் அழைத்து மாபெறும் விழா நடத்தி அனை வருக்கும் நற்சான்றிதழ்களும். நினைவு பரிசுகளும் கொடுத்து சிறப்பித்து கௌரவித்துள்ளது. அவ்வப்போது நடைபெறும் விழாக்களில் மாநிலம் முழுவதும் உள்ள நமது மாவட்ட தலைவர் களை அழைந்து அறிமுகப்படுத்தியுள்ளது. மாவட்டம் முழுவதும் உள்ள நூற்றுக்கும் மேற் பட்ட டாக்டர்களை அழைத்து மருத்துவர் குழு அமைத்து மாவட்டம் முழுவதும் இலவச சிகிச்சை முகாம் நடத்தி வருகிறது. 1988 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் சென்னையில் நடை பெற்ற மாபெறும் எழுச்சி பேரணியில் கலந்து கொள்ள 150க்கும் மேற்பட்ட வாகனங்களை அனுப்பி பேரணி சிறப்புற தனது பங்கை நிலைநாட்டியது.

கிளைச் சங்கம் அமைப்பதில் மாநிலத்தில் முதலிடம்

இத்தனை அரும்பணிகள் ஆற்றி செயலாற்றியபோதும் மாவட்டம் முழுவதும் கிளைச் சங்கங்கள் அமைக்கும் பணிகளிலும் தமிழகத்தில் முதலிடம் பெற்று விட்டது இதுவரை மாவட்டம் முழுவதும் 7 தாலூக்கா சங்கங்களையும் 150 கிளைச் சங்கங்களையும் அமைத்து தன்னிகரில்லா பணியாற்ற தொடங்கிவிட்டது இன்னும் மாவட்டத்தில் கிளைச் சங்கம் அமைக்க வேண்டிய ஊர்கள் 50-க்கும் மேல் உள்ளது. மாவட்ட தலைவர் **R A N முத்துசாமி முதலியார்** அவர்களின் மந்திர சொல்லுக்கு கட்டுப்பட்டு நிர்வாகிகள் திறம்பட செயலாற்றி வருகிறார்கள் மாவட்ட பொது செயலர் M. S. பழனியப்பன் அவர்களும் பொருளாளர்

P. K. நஞ்சப்ப முதலியார் அவர்களும் மாவட்ட நிர்வாகிகள் அனைவரும் கடும் உழைப்பினாலும் சங்கம் தழைத்தோங்கி வளர்ந்து வருகிறது முன்பு பொது செயலராக இருந்து பணியாற்றிய டாக்டர் ந. ஆறுமுகம் அவர்கள் பணி பாராட்டுக்குறியது மாவட்ட சங்கம் இதுவரை 2-ஆயிரம் மாவட்ட ஆயுள் உறுப்பினர்களை சேர்ந்துள்ளது.

நமது தலைமை சங்கத்திலிருந்து சமுதாய வளர்ச்சிக்காக அவ்வப்போது எடுக்கப்படும் நல்ல திட்டங்களுக்கு தொடர்ந்து ஆதரவு நல்கி தன்னால் ஆன உதவிகளை தொடர்ந்து செய்து வருகிறது. தென்னகத்திற்கு வழி காட்டும் வகையில் தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

சங்கம் மேலும் சிறப்பாக வளர்ந்து தனது சேவைகள் தொடர அன்னை ஸ்ரீ மீனாட்சி அருள்மிகு சுந்தரேசுவரர் பாதங்களை வேண்டுகிறோம்.





முதலியார் கல்வி நிறுவனம் நிறுவிய ஈரோடு கலைக்கல்லூரி

ஆர். வி. இராமகிருஷ்ணன், எம். எஸ்சி.:
முதல்வர்,
ஈரோடு கலைக்கல்லூரி ஈரோடு.

கேடில் விழுச்செல்வம் கல்வி. இது தங்கு தடையின்றி எல்லா தரப்பினருக்கும் வழங்கினால்தான் சமுதாயத்தில் நீதி கிடைக்கும். இந்த நீதியினைப் பெரியார் மாவட்ட மாணவர்களுக்கு மட்டுமின்றி மற்ற மாவட்ட மாணவர்களுக்கும் கிடைக்க வழிவகுத்தது முதலியார் கல்வி நிறுவனம். இதைத்தோற்றுவிக்க, பெரிதும் ஊன்றுகோலாக இருந்தவர் சென்னைப் கல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் திரு. சி. கே குமாரசாமி முதலியார் அவர்கள். இதனைப் பொறுப்புடன் செயல்படுத்தியவர் செங்குந்தர் சமுதாயம் போற்றுகின்ற வணக்கத்திற்குரிய பெரியவர் உயர்திரு. ஆர். ஏ. என். முத்துசாமி முதலியார் ஆவார். அவரே நிறுவனத்தின் தலைவர், இனிய தலைவர், ஏகத்தலைவர் என்று பலராலும் பாராட்டப்பட்டவர். அவர்தம் சீரிய தலைமையில் ஈரோடு கலைக்கல்லூரி 1972-ல் புதுமுக வகுப்பு, பி, ஏ. வகுப்புக்களுடன் முதனிலைக் கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டது.

ஈரோட்டில் கடைசியாக ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி படிப்படியாகவும், முழுமுயற்சியுடனும் முன்னேறியது. பத்தாண்டுகள் இக்கல்லூரியின் முதல்வராக இருந்து சிறப்பித்தவர் பேராசிரியர் க. இராமதாஸ் எம். ஏ., அவர்கள். தாளாளராக இருந்து அரும்பணி ஆற்றியவர் உயர்திரு பி. பி. சதாசிவம் அவர்கள். தற்பொழுது தாளாளராக கடந்த ஆறு ஆண்டுகளாக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருபவர் ‘இன்முகத் தென்றல்’ என்று பலராலும் போற்றப்படும் உயர்திரு ராணா கே. வி. இலட்சுமணன், எம். ஏ., பி. காம்., எம். பி. ஏ., ஆவர். அவர் பல்கலைக்கழகப் பட்டங்கள் பல பெற்றவர். உலக இயல்பு தெரிந்தவர். மேனாடுகள் சென்று வந்தவர். ஆகையால் கல்லூரி அவர்தம் பார்வையில் வெகுவேகமாக முன்னேறி 1987-ல் தன்னாட்சியை எட்டிப்பிடித்தது. ஈரோட்டில் கடைசியாக ஆரம்பித்த கல்லூரிக்கு முதன்மையாக தன்னாட்சி வழங்கியது பாரதியார் பல்கலைக்கழகம். பல்கலைக்கழகத்தின் குறிக்கோளை நிறைவேற்றும் கல்லூரியாகவும், சிறந்த ஒழுக்கமும், கட்டுப்பாடும் நிறைந்த கல்லூரியாகவும் திகழ்ந்ததால் பாரதியாரின் பரிசு ஈரோடு கலைக்கல்லூரிக்கு கிடைத்தது.

இன்று இக்கல்லூரி 1100 மாணவர்கள், 84 ஆசிரியர்களையும், 40 அலுவலர்களையும் கொண்ட ஒரு முதன்மைக் கல்லூரியாகத் திகழ்கின்றது இதில் பத்து இளமறிவியல் பட்ட வகுப்புகளும், நான்கு முதுநிலை பட்ட வகுப்புகளும், ஒருமுதுநிலை டிப்ளமோ வகுப்பும் இருக்கிறதென்றால் இதன் வளர்ச்சி மகத்தானது என்பதில் ஐயமில்லை. இக்கல்லூரியில் தொழில் நோக்குள்ள பி. ஏ , கார்ப்பரேட், பி. பி. எம்., பி. எஸ்சி மின்னணுவியல், பி. எஸ்சி., கணிப் பொறியியல், எம். சி. ஏ., ஆகிய வகுப்புகள் மாணவர்களுக்கு எளிதில் தொழில் வாய்ப்பு கிட்டச் செய்கின்றன.

மாணவர்களின் முன்னேற்றத்தைத் தங்களது நோக்கங்களாகக் கொண்டுள்ள தலைவர் உயர்திரு. ஆர். ஏ. என். முத்துசாமி முதலியார் அவர்கள் மாணவர்களுக்காகப் பரிசுத்திட்டங் களை அறிவித்து மாணவர்களுக்கு பெரிதும் ஊக்கமளித்து வருகிறார். மாணவர்களின்பால் பெரிதும் அன்பு கொண்டுள்ள தாளாளர் உயர்திரு கே. வி. இலட்சுமணன் எம்.ஏ.,பி.காம் எம்.பி.ஏ., அவர்கள் பல ஏழை மாணவர்களுக்குப் புத்தகங்கள் வாங்கவும், கல்லூரிக்கட்டணம் தேர்வுக்கட்டணம் முதலியவை கட்டவும், மருத்துவநிதிஉதவி ஆகியவை தாராளமாக வழங்கு வதும் அவர்தம் உயர்ந்த மனப்பாங்கை காட்டுவதாகும் அவர்தம் அன்னையார் அன்னபூரணி யம்மாள் நினைவாக அறக்கப்பட்டளை நிறுவி அதன் மூலம் ஆண்டு தோறும் தமிழில் முதல்மதிப் பெண் பெற்ற இக்கல்லூரி மாணவருக்கு ரூ .1005/ பரிசாக வழங்கிவருவது அவர் தமிழின்பால் கொண்டுள்ள தமிழ்ப்பற்றினையும் ஈகைத்தன்மையும் காட்டுகிறது இத்தகுச் சீரிய செங்குந்தர் குலப் பெருந்தகைகளின் போராற்றலால் இக்கல்லூரி குன்றின்மீது இட்டவிளக்காய் கல்வி ஒளி வீசிவருகிறது.

செங்குந்தர்களுக்குரிய குணஇயல்புகளாகக் கூறப்படுவது தெய்வ உணர்வு, தமிழ் மொழிப்பற்று, வீரம், நுண்ணியஅறிவு, கொடைத்தன்மை ஆகியவையாகும் . இதை

'சிவகயிலாய பரம்பரையென்னும் செங்குந்தரே'

'சண்முகன்தன் சேனாபதிகளும் சேனையும் ஆனவர் செங்குந்தரே'

என்னும் வரிகள் உறுதிப் படுத்துகின்றன

செங்குந்தர் மரபில் தோன்றியவர்கள் அமைச்சராகவும் சேனாபதிகளாகவும், பெரும் புலவராகவும் பண்டை நாளில் திகழ்ந்துள்ளனர். கி பி 12-ஆம் நுற்றாண்டில் வாழ்ந்த ஒட்டக் கூத்தர் பெரும்புலவர் ஆவர், அவர் செங்குந்தர் பற்றி கூறியிருப்பது

'விலைதந்தார் தமிழனுக்குச் செங்குந்தர்
தலைதந்தார் எனக்கொட்டக் கூத்தனெனும்
பெயரினையும் தந்தார் தாமே'

இப்பாடல் செங்குந்தர் தமிழ் மொழியின்பால் எவ்வளவு பற்றுள்ளனர் என்பதனைப் பறைசாற்றுகிறது. எனவே செங்குந்தர் மக்கள் தமிழ்ப்பற்றிலும், சைவநெறியிலும் ஆற்றலி லும் தொன்றுதொட்டு இன்றுவரை குலச்சிறப்பு காத்துவருகின்றனர்.

மேற்காண் சிறப்பியல்புகளுக்கு உறைவிடமாகத்திகழும் பெரியார் மாவட்டச்செங்குந்தர் குலத்தலைவர் கல்வித்தந்தை உயர்திரு ஆர் ஏ என் முத்துசாமி முதலியார் அயராப்பணியால் இக்ககல்லூரி வெள்ளிவிழா கொண்டாடும்போழ்து ஒரு பல்கலைக்கழகத்தகுதிக்கு உயர்ந்து விடும் இறையருளால் என நம்புகிறோம். நம்பினார் கெடுவதில்லை.

வாழ்க வளமுடன்.



இன்னுமா உறக்கம்

கனகசண்முகம் M.A.,B.Ed.,

செயலர் அம்மாபேட்டை ஒன்றிய செங்குந்தர் சங்கம்
குருவை

செங்குந்தப் பேரினமே! செந்தமிழ் சீரினமே!! சிந்திக்க வேண்டும் நீங்கள். பழமை பேசி இப்பாரில் காலம் கடத்துவதை விட்டு இனி விழித்தெழுந்திட வேண்டும். வீறுகொண்டு உயரவேண்டும். சிரியவன் என் உள்ள மதில் சிறுமலரென மலர்ந்த எண்ண மலர்களை நான் உதிர்க்கின்றேன். மணம் உடையது எனக்கண்டீராகில் எடுத்து தொடுத்து அணிந்திடுக. இன்றைய உலகம் வேகம் மிகுந்த; நாகரிகம் மிகுந்த; அறிவியல் கருத்துகள்மிகுந்த உலகம்அதற் கேற்ப நாமும் விவேகத்துடன் சிந்தித்து செயல்படவேண்டும். வளர்ச்சிபெறவேண்டும் வெற்றி பெறவேண்டும் நாம் எப்படி இருந்தாலும் நம் எதிர்கால சந்ததிகள் நலமுடன் வாழ வழி செய்ய வேண்டும் தன் இனம் வாழ; தன் குலம் தழைக்க சமுதாயத்தில் உள்ளவர்கள் நாளொருமேனி பொழுதொரு வண்ணமாக திட்டங்கள் பல தீட்டி சட்டங்களையே வளைக்கின்ற அளவிற்கு பணிபுரிந்து வரும் போது சும்மா இருந்துவிட்டோமானால் நம்மைவிடமுட்டாள்கள் உலகில் இல்லாமல் போவார்கள். நம்மால் முடியாவிட்டாலும் நமக்காக குரல் கொடுப்பவர்களுக்கு நாம் உதவ வேண்டுமல்லவா?

அரசு; மக்களின் நல் வாழ்வு தரும் ஒருதாய் போல அழுகின்ற குழந்தைகளுக்கே பால் கிடைப்பதுபோல். நாமும் விழித்து பெறவேண்டிய நல்லதிட்டங்களைப் பெற்றுநமது சமுதாயம் வாழ; வளர வழி செய்ய வேண்டாமா? உறங்கியது போதும் விழித்தெழு; நம்இனம் வாழ நாம் ஒன்றுபடும் காலம் வந்துவிட்டது வெண்ணை திரளுகின்ற நேரம்... வீணாக இருக்காமல் கொஞ்சம் நமது சிந்தனையை நம் இனத்தின் பக்கம் திருப்புங்கள். வாழ்நாள்முழுவதும் நமக்கு பல வேளைகள் இருந்தே இருக்கும் என்வேலைகள் முடியட்டும் என்இனத்திற்கு பாடுபடுகிறேன் என்பது என் காதில் விழகிறது அலைகள் எப்போது ஒய்வது? எப்போதும்நாம் நீராடுவது? சிந்திப்பீர்;

என் அருமை செங்குந்தப்பேரினமே! நமது எண்ணங்களை மாற்றவேண்டும். நம் இனம் காக்க பாடுபடும் பெரியவர்களை மதிக்க வேண்டும். முன்னால் நிற்பவர்களை முழுமை யாக நம்பவேண்டும். முன்னால் நிற்பவர்கள் உண்மையான உள்ளத்துடனும் உறுதியான உள்ளத்துடனும் உழைக்கவேண்டும். அனைவரும் பாடுபடவேண்டும். ''அணிலும் மணல் சுமக்க அகமகிழ்ந்தார் இராமபிரான்'' என்ற மொழிபோல் ஏழை எளியவர்களின் உண்மை யான ஒற்றுமையே நம் இனம் உயரத்தேவையாகும்.

எனவே நாம் செய்யவேண்டுவனயாவை? நம்மினத்தவர்கள் அறிவுமிக்கவர்கள் இது நான் சொல்வதல்ல வரலாறு கூறும் உண்மை அறிவில் குறைந்தவர் பலர் ஒன்று கூடி வாழ முடியும் ஆனால் அறிவில் சிறந்த நம் இனத்தவர் ஒன்று கூடி வாழ்வது முடியாது என்ற சொல்லை முறியடிக்கவேண்டும்.

அடிக்கடி ஒன்று கூடவேண்டும்
ஒன்று கூடும்போது நம் அன்பைக் காட்டிடவேண்டும்
நமக்காக உழைப்பவர்களுக்கு வழிவிடவேண்டும்
நமது குறைகளை அரசு அறிந்திடச் செய்யவேண்டும்
நம் குழந்தைகள் கல்வி: வேலை முன்னுரிமை பெறவேண்டும்
நம்மவர்களின் நூல் ஆலைகள், தொழிற்சாலைகள். நல்லவாணிக நிறுவனங்களில்
தகுதியுடைய நம்மவர்களை வேலைக்கு அமர்த்திடவேண்டும்
நம்மைப்பணிக்கு அமர்த்தியவர்களுக்கு நன்றியுடன் உழைத்திட வேண்டும்
நாமும் உயர வேண்டும் நம்மவர்களை உயர்த்திடவேண்டும்
பொறுமை வேண்டும் மற்ற இனமக்களையும் நாம் பொறுத்துக்கொள்ளவேண்டும்
எதையும் நல்லவைகளாக நடத்த; நடக்க கற்றுக்கொள்ளவேண்டும்
வெறும் வாய்ச் சொல்லை மறந்திட வேண்டும்
வீர உணர்வுடன் தியாகம் செய்யவும் வேண்டும்
எந்த ஒரு தொழிற்சாலையிலும் நம்மவர்கள் முதன்மை பெற்றுயரவேண்டும்
எந்த ஒரு கட்சியிலும் நம்மவர்களின் ஆட்சியே வேண்டும்
எந்த ஒரு நல்ல செயலும் நம்மவர்களின் பார்வையில் நடந்திட வேண்டும்
எந்த ஒரு அரசியலும் நம்மவரின் காலடியில் வேண்டும்
எந்த இடத்திலும் நம்மவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும்
எந்த நிலையிலும் நம்மவர்கள் புகழ்பெற வேண்டும், நல்ல வளம்பெறவேண்டும்
நமக்காக உழைப்பவர் ஆயுள் கூடிடவேண்டும்
நலமான நல்வாழ்வு வாழ்ந்திட வேண்டும்



மனிதருள் மாணிக்கம்

K.M. தண்டபாணி
முருகன் இல்லம்
114, பவானி சாலை,
ஈரோடு-4

சீரோடு விளங்கும் ஈரோடு தனிலே
பேரோடு விளங்கும் பெரியோரே செங்குந்தர்குல
விளக்கே! இமையினை நோக்கும் கைக் கோளன் போல
நும்மொழியினைக் கேட்கும் நம்மினம் தானே!

கடமைக்குக் கன்னல்விழி காட்டி என்றும்
கயமைக்குக் கனல்விழி காட்டி நாளும்
திறமைக்குப் பச்சைக்கொடி காட்டி என்றும்
தீமைக்குச் சிவப்புக்கொடி காட்டும் ஏந்தலே!

கல்விப்பணியில் ஆக்கம் ஊக்கம் உணர்த்தி
கடவுள் பணியில் சிந்தைதனை கருத்துடன் செலுத்தி
செம்மார்ந்த செங்குந்தர்குல வாழ்விற்கு செழுமழையாய்
நம்மார்ந்த குலம்வாழ வழிகாட்டிவரும் வள்ளலே!

அன்பும் அசைவிலா ஊக்கமும் தளர்விலா
உழைப்பும் உயரிய பேற்றினைப் பெற்றிட்ட
மனிதருள் மாணிக்கமே!முத்தான ஆர்.எ.என்,
முத்துசாமியே!
மண்ணுள்ள வரை நீரே விண்ணாய் வாழ்வீரே!



முதலுக்கு
முதல் முதலியார்

கு. மோகனசுந்தரம் B Sc.,
S/o V. R. குமாரசாமி முதலியார்
137, சின்னமுத்து மெயின்வீதி,
இடையன்காட்டு வலசு,
ஈரோடு.

சங்கத் தமிழ் வளர்த்த சண்முகரின்
சாரீர வாகனமே சேவல் —இதுவே நம்குல
சின்னமென்று சித்தரித்த செம்மல்களே
சீரும் சிறப்புமாய் செங்குந்தர் குலம் சிறக்க
சுழலும் இப்பூமியில் சுதந்திரமாய்
சூறாவளி பிரச்சினைகள் வராமல் இருக்க
செங்குருதி காணாமல் செழுமைகாண
-நம் முதலியார் சமூக
சேவைப்படை திரட்டி சாதனை படைக்க
ஒன்றுபடுவோம்!
சைகை மட்டும் செய்யாமல்-நம்
சொந்தக் கரம் தொட்டு செங்குந்தர் குல
சோகத்தின் பாரத்தை இறக்கி
சௌபாக்கியத்தை தந்திடுவோம்
சாதித்''தாய்'' என்று பெயர் பெற்ற
செங்குந்தர் குலமே-நம்
சத்தி முழுதும் சாகா வரம் பெற்ற-நம்
சமூக சந்ததிக்கே என்று பாடுபடுவோம்!
சாதித்''தாய்'' பெயர் பெற்ற நம்
செங்குந்தர் முதலியார் இன -இரு
இளம் பிள்ளைகள்தான்
மகளிர், இளைஞர் என்ற (சங்கம்) அவர்களை
பாலூட்டி சோறூட்டி பாராட்டி சீராட்டி
சாலையோர மரங்களாய் சோலைப் பூங்குயில்களாய்
வளர்த்திட வாருங்கள்!

மண்ணும் விண்ணும்

பேராசிரியர். ப. முருகன்
முன்னாள் பதிவாளர், மதுரை காமராஜர் பல்கலைக் கழகம்.

'அரிது அரிது மானிடராதல் அரிது' என்று நம் அவ்வை பிராட்டியார் கூறிவைத்தார். உண்மைதான். உலகில் இன்று பல்லாயிரக் கணக்கான உயிரினங்கள் வாழ்கின்றன. முன்பு அவை பற்றிப் புராணங்கள் கூறின. இன்று தொலைக் காட்சியில் படம் பிடித்தே நமக்குக் காட்டிவிடுகின்றனர். மனித பிறவி ஓர் அரிய பிறவி என்று சொல்லியது ஏன் என்ற கேள்வியும் எழுகின்றது மனிதன் பெற்ற அறிவின் திறத்தாலும், மனவளர்ச்சியாலும், எல்லா உயிரினங்களுக்கும் தலைமை பூண்டு, உயர்திணை என்று பேசப்படுகின்றான்.

உயிர்வாழ் பிராணிகளை, அவைகளுக்குள்ள அறிவினைக் கொண்டு. தொல்காப்பியர் காலந்தொட்டே ஆறு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர் மனிதன் ஒருவனே ஆறு அறிவும் பெற்றவன். இந்த ஆறாவது அறிவே மிகச் சிறந்தது இதனைப் பகுத்தறியும் சிறந்த அறிவு என்பர். இந்தப் பகுத்துணரும் அறிவே ஏனைய உயிரினங்களிருந்தும் மனிதனைப் பிரித்துக் காட்டுகின்றது. நல்லது கெட்டது உணரும் இந்தப் பகுத்தறிவால் தான், மனிதன் படிப்படியக வளர்ந்து, உயர்ந்து, மனித நிலையிலிருந்து தேவர் நிலைக்கு உயர்ந்துவிடுகின்றான். மண்ணுலகில் விண்ணுலகத்தினைக் காண்கின்றான்.

மனிதனைத் தவிர ஏனைய உயிரினங்களை எடுத்துக் கொள்வோம். காலையில் கதிரவன் தோன்றத் தாம் தங்கிய கூடுவிட்டுச் செல்லுகின்றன. எங்கும் சென்று திரிந்து, இரை தேடி, உண்டு, பின்னர் ஞாயிறு மறைய தாம் தங்கும் இடம் தேடி வருகின்றன. அன்றாடம் இது அவைகளின் வாழ்க்கையில் நிகழுகின்றது. காலையில் எழுவதும், பகல் எல்லாம் இரை தேடுவதும், பொழுது சாய்ந்ததும் வசிக்கும் இடம் சேர்ந்து தலை சாய்ப்பதுமாகவே காலத்தைக் கழிக்கின்றன. நாளைக்கு என்ன என்ற பேச்சுக்கு இடமில்லை. நேற்று எப்படி இருந்தோம் என்பதனையும் அவைகாளால் நினைத்துப் பார்க்க முடிவதில்லை. நிகழ்காலத்தில், தம் வயிறு கழுவிக் கொண்டே காலத்தைத் தள்ளுகின்றன இந்த நிலையில் தம் இனத்தைச் சேர்ந்த பிற உயிர்களைப்பற்றி எண்ணவும் இடமில்லை எண்ணினாலும், அவைகளை அழித்துத் தாம் வாழவே எண்ணுகின்றன. பிற உயிரினங்களை – ஏன் – தன் இனத்தைச் சேர்ந்தவர்களைக் கூடப் பகைவர்களாகவே கருதுகின்றன. வல்லவன் வகுத்ததே வாய்க்கால் என்பது அவைகளின் வாழ்க்கையில் உண்மையாகின்றது வலிமைபடைத்ததே வாழமுடிகின்றது. ஒரு மலையில் இரண்டு சிங்கஏறுகள் வாழ்வதில்லை. ஒன்றே வாழ, மற்றோன்று மடிந்து வாழ்கின்றது. இங்கே, மனிதனைத் தவிர, பிற உயிரினங்களிடையே, பிற உயிர்கள் தம்போல் வாழவேண்டுமே உதவி செய்யலாமே என்ற எண்ணமும் இல்லை. இத்துடன், நாமும் வாழ்ந்து கெண்டு, பிறரை யும் வாழவிடுவோம் என்ற மனப் பக்குவமும் இல்லை. நல்லது செய்யாது போனாலும் அல்லது செய்யாது இருக்கலாம். அதுவும் இல்லை. இதற்குக் காரணம் மனிதனைத் தவிர பிற உயிர் களிடத்து ஆறாவது அறிவு இல்லை என்பதே ஆகும்.

மனிதனை உயர் திணை எனச்சுட்டுவர். உயர்ந்த மனப் பக்குவம் உடையவன் என்று சொல்லலாம். இந்த மனப்பக்குவம் மனிதன் பெற்ற அறிவால் வருகின்றது. மனிதனுக்கு இந்த ஆறவது அறிவு, பிற உயிர் இனங்களையும் தம்மைப் போலவே நினைக்கச் செய்கின்றது. தனக்கு வயிறு பசிப்பதைப் போலத் தான் பிறர்க்கும் பசிக்கும். தன்னைக் குளிர் வாட்டுவதைப் போலத் தான் மயில் போன்ற வாயில்லாத ஜீவராசிகளையும் குளிர் வாட்டும் என்று எண்ணத் தூண்டுகின்றது. தான் முன்னேற தனக்கு ஒருபற்றுக் கோடு கிடைக்காதா என்று ஏங்குவதைப் போலத் தான் முல்லைக் கொடியும் கொழுகொம்பு கிடைக்காதா என்று வாடுவதாக நினைக்கச் செய்கின்றது. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடச் செய்கின்றது. இது தான் வளர்வதற்கு மட்டும் அல்லாமல் பிற உயிரினமும் வாழத் தூண்டும் மண உணர்வு; மனநெகிழ்ச்சி மூளை வளர்ச்சி மட்டும் அறிவு அல்ல; மன வளர்ச்சியே அறிவுடைமையாகும். இதனைத் தான் தமிழ் மறை

அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின் நோய்
தந்நோய் போல்போற்றாக் கடை (315)

என்று கூறுகின்றது.

பிற உயிர்கள் படும் துன்பத்தினைக் கற்பனையால் தாம் படுவதாக எண்ணி, இரங்கித் துயர் துடைப்பதற்கு நிலைக்களமாக அமைந்து உள்ளது இல்லறமாகும். காதலர் இருவர் கருத்தொருமித்து ஒருவரை ஒருவர் செம்புலப்பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்து, இரண்டற்று ஒரு தன்மையராக வாழ்கின்றனர். தலைவி, தன்னை மறந்து தலைவனுக்காவே வாழ்கின்றாள்; தலைவன், தன்னை மறந்து தலைவிக்காவே வாழ்கின்றான். பிறர் படும் துன்பத்தைத் தம்முடையதாகவே கருதுகின்றனர். ஒத்தது அறிந்து உயிர் வாழ்கின்றவர்களாகின்றனர். இவர்களைத் தான் உயிர் வாழ்கின்றவர் என்று திருவள்ளுவர் கூறுகின்றார் (214) அதனால் தான் மக்கள் பண்பினை வளர்ப்பதற்கு விளை நிலமாக அமைந்துள்ள இல்லற நோன்பினை 'அறம் எனப் பட்டதே இல்வாழ்க்கை' (49) என்று சிறப்பித்துக் கூறுகின்றார்.

இந்த இல்லற அறத்தான் வருவதே இன்பம் என்று கூறுவர் (39) அதனால் பெறுதற் காலை பேரின்பம் விளைதற்கு நிலக்களனாக அமைந்துள்ள இல்வாழ்க்கையைச் செம்மையாக வாழ்ந்து பயன்பட நின்று விட்டால் பேரின்ப வீட்டுலக இன்பத்தினை இந்த மண்ணின் மேல் காணலாம் என்று

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்று (50) இல்வாழ்க்கையின் பயனாகக் கூறுவர்.

திருவள்ளுவர் மிக எளிய முறையில், 'வீடு' பற்றிக் கூறிவிட்டார்! அறம், பொருள், இன்பம் என மூன்றினையும் கூறுவதன் மூலமாகவே, அறத்தான் பொருளையீட்டி, அது கொண்டு அன்புடைய காதல் வாழ்வினைப் பிறர்க்கும் பயன்பட வாழ்ந்து, தெய்வநிலையினை அடையும் மிக எளிய நெறியினைத் தமிழ் மறை கூறுவதைக் காணலாம்.

ஆல்பர்ட் சுவீட்சர் (Albert Switzer) என்ற ஜெர்மனி நாட்டுத் தத்துவஞானி, பிறர்க்குப் பயன்படும் நெறியினை அறமாகத் திருக்குறள் கூறுகின்றது என்பதற்காகவே திருவள்ளுவரைப் பெரிதும் போற்றிப் பாராட்டுகின்றார். ஆல்பர்ட் சுவீட்சர் என்பார் உலக மக்களுக்குப் பயன்பட வாழும் நெறி (World Life Affirmation) உலகத்தோடு ஒட்டாது ஒதுங்கி நிற்கும் எதிர்மறை நெறி (World Life Negation) என்று இரண்டு நெறிகளாகப் பேசுகின்றார். இதனை மனோன்மணியத்தில் சுந்தரம் பிள்ளை படைத்த கருனாகரர் நிஷ்டாபரர் கூறும் இரு நெறிகளுக்கு ஒப்பிட்டுக் கூறலாம். ஆல்பர்ட் சுவீட்சர் தாம் எழுதிய நூல்கள் அனைத்திலும் உலக உடன் பாட்டு நெறியை, பிறர்க்குப் பயன்பட வாழும் நெறியே மிகச் சிறந்த நெறியாகும் என்பர். இதனைத் தான் திருவள்ளுவர்

> பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நாவோர்
> தொகுத்தவற்றுள் எல்லாம் தலை (322)

என்று, பகுத்துண்டு பிற உயிர்களைக் காபாற்ற வேண்டும்; அதுவே சிறந்த அறநெறி; அந்த அறநெறியான் வருவதே இன்பம் என்று கூறுகின்றார்.

இந்த நெறியின் சிறப்பினை திருவள்ளுவர் நூல் முழுவதும் சுட்டிக் காட்டிக் கொண்டே போகின்றார். காமத்துப் பாலிலும் இதனைச் சுட்டிக் காட்டத் தவறவில்லை காமத்துப் பாலில் புணர்ச்சி மகிழ்தல் என்ற ஓர் அதிகாரம் உண்டு. ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் ஒருங்கிணைந்து வாழ்தலான் வரும் மகிழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிடு-கின்றார். தம்முடைய மனைவியைத் தழுவிநிற்பது, தம் வீட்டிலிருந்து கொண்டு தம் முயற்சியால் வந்த பொருளைப் பிறருடன் படுத்துண்டலைப் போன்றதாகும் என்கின்றார் இதனை

> தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
> அம்மா அரிவை முயக்கு (1107)

என்பர். அதே அதிகாரத்தில், விண்ணுலக இன்பம் இந்த மண்ணுலக இன்பத்தை விடச் சிறக்குமா என்றே கேட்கின்றார். அன்புடைக் காதலியின் தோளைத் தழுவிக் கிடத்தலைவிடத் தாமரைக் கண்ணான் உலகு விண்ணுலகு இனிக்குமோ என்று

> தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
> தாமரைக் கண்ணான் உலகு (1103)

என்று கேட்கின்றார். இதன் பெருள் என்ன? இந்த இல்லறநெறி பலர்க்கும் பயன்பட வழி வகுத்துத்தெலால் விண்ணுலக இன்பத்தை இந்த மண்ணுலகிலேயே, மனைத்தக்க மாண்புடைய மனைவியோடு வாழ்ந்து பெறலாம் என்பதே தமிழ் மறை தந்த தெய்வப் புலவரின் கருத்தாகும்



நாட்டில் உயர் செங்குந்தர்

கொ. அய்யா முத்து, B. Sc., B. T.,
நம்பியூர்.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு, முன் தோன்றி மூத்த பாரம் பரியம் உடையது தமிழினம். சங்கம் வைத்து மொழி வளர்த்து பாங்குடையவர்கள். கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெளியக் கொஞ்சித் தமிழால் பகர்ந்தவன் முருகன், சிவனைநிகர் குருமுனிவன் அகம் மகிழ, இரு செவிகுளிர இனிய தமிழ் கற்பித்தவனும் முருகனே முருகன் தமிழினத்தின் முழு முதற் கடவுள், அவனது பதினெட்டுக் கண்களும் தமிழின் மெய் எழுத்துக்கள் என்றும், அவனது பன்னிரு காங்களும் தமிழின் உயிர் எழுத்துக்கள் என்றும், அவனது ஆறு முகங்களும் - தமிழின் இன எழுத்துகள் என்றும், ஆய்த எழுத்து முருகனின் வேலைக் குறிக்கும் என்றும் ஆய்ந்து-முருகன் வேறு தமிழ் வேறு அன்று என்று சாதித்து மகிழ்கிறோம் எனவே தமிழ் பேசத் தெரிந்தால் கூட அவன் வேறு இனத்தவனாயினும் தமிழ னாகவாம்.

இவ்வாறு தமிழினின்றும் வேறல்லதா முருகனின் தத்தை சிவபெருமான் 'யாதரோ தெய்வம் கொண்டீர். அத்தெய்வமாகி மாதொரு பாகனார் தாம் அருள்வர்' என்ற கூற்று சைவிரின் ஆழமான நம்பிக்கை. எனவே அனைத்துத் தெய்வங்கட்கும் 'முதலி' என்பர் சிவனை. அதுவே அவனின்றும் தோன்றிய முருகனுக்குப் படைவீரர்களாகிய குந்தப்படை யினரைச் சிற்ப்பிக்க 'முதலியார்', என்று மாறியுள்ளதென்பர். நவவீரர்கள் முருகனது படைத் தளபதிகள். அவருள் முன்னோன் வீரபாகு. அவனது வழிந்தோன்றல்களே செங்குந்தர் என்பது ஈட்டி எழுபது கூறும் செங்குந்தர் வரலாறு ஆகும். இப்பழம் பெருமையால் என்ன பயன் என்று கூறுவோரும் உளர்.

'உண்டதே உண்டும் உடுத்ததே உடுத்தும்
உரைத்ததே அடுத்துத் தடுத்து உரைத்தும்
கண்டதே கண்டும் கேட்டதே கேட்டும்
கழிந்தன கடவுள் நாளெல்லாம்' என்று விதியினை

நொந்து தாழ்வுற்று, வறுமை மிஞ்சி ஊமையராய், செவிடர்களாய், காலத்தைக் கடத்தக் கற்றுக் கொண்டவர்களுக்கு அவனது பாரம் பரியத்தை உணர்த்துவதே நம் வெற்றியின் முதல்படி. ஆடுகளுடன் வாழ்ந்து வளர்ந்து விட்ட சிங்கக் குட்டிக்கு, அதன் பாரம்பறியத்தை உணர்த்த அதன் தோற்ற வேறுபாட்டை கண்ணாடியில் காட்டி, மற்ற சிங்கக்குட்டிகளின் செயலைச் சுட்டி அதன் 'ஆட்டுத் தனத்தை' அகற்ற முயல்வர் விலங்கு விளையாட்டுக் காட்டு பவர், பேராற்றல் மிக்க யானை அதன் ஆற்றலை மறந்து விட்டதால் சர்க்கஸ்காரனிடன் அடங்கி, ஒடுங்கி இட்ட கட்டளையினைச் செய்கிறது. எனவேதான் பாரம்பரியச் சிறப்பை, தாழ்வு மனப்பான்மையில் மூழ்கிவிட்ட கூட்டத்திற்கு, அதன் முன்னேற்றத்தில் அக்கறை உள்ளவர்கள், முதலில் நினைவூட்ட வேண்டும். இதில் வெற்றி கண்டு விட்டால், அவர் களிடமிருந்து, 'பொய், கயமை, சினம், சோம்பர் கவலை, மையல், வீண்விருப்பம், புழுக்கம்,

அச்சம் ஐயம் எனும் அவனே அறியாது பிடித்துள்ள பேய்களை எளிதில் ஓட்டி விடலாம். இவ்வாறு புடம் போடப்பட்ட செங்குந்தன் உண்மையே-தாரகமாக, அன்பே-உறுதியாக' உண்மையெ-குல தர்மமாக, தொண்டே-வழியாக கொண்டு தம் குலமுயர-நாடுயர உழைக்க முன்வருவர்,

'தங்கம் செய்யாததை-சங்கம் செய்யும்' என்பது ஆன்றோர் உரை. அவ்வழியில் அவர்களை பாரம்பரியத்தை நினைவூட்டும் ஒரு கொடியின் கீழ் ஒன்று திரட்டி-ஊக்குவித்து முன்னேற்றி, நாட்டிற்கு அர்ப்பணிப்பதே நமது இன்றைய முயற்சி, தேவைப்படும்போது இம் முயற்சியில் ஈடுபடுவோருக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், பனிரண்டாம் நூற்றாண்டிலேயே புலவர் ஏறு-ஒட்டக் கூத்தன் நம்மவர் வரலாறு படைக்கும் முதல் சொற்றொடராக 'நாட்டி லுயர் செங்குந்தர்' என்று, ஈட்டி எழுபதைத் தொடங்குவது காண்கிறோம். 'நீ என்ன நினைக்கிறாயோ-அதுவே ஆகிறாய்' என்பார் விவேகானந்தர். எனவே அன்பால் உள்ளங் களையும்—அறத்தால் உடல்களையும்—அருளால் உயிர்களையும் உலகில் தழைக்கச் செய்ய-நாட்டில் உயர் செங்குந்தக் கூட்டத்திற்கு பயிற்சி அளிப்போமாக. இப்பெரும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு-இருக்கினும், நிற்கும் போதும், இரவினில் தூங்கும்போதும், பொறுக்கென நடக்கும் போதும், பொருந்தி ஊண்துய்க்கும் போதும்-தம் சிந்தையினை இந் நினைவகலாமல் வாழும்-வளம் படைத்த நம் குலவழி காட்டிகளுக்கு தோளொடு தோள் நின்று செயல்பட நம் குல இளைஞர் கூட்டம் திரண்டு முன்வருமாக.

நல்லதோர் வீணை நாட்டிலுயர்-செங்குத்தர் அது நலம் கெட்டுப் புழுதியில் கிடக் கிறது. அதன் சுடர் மிகும் அறிவு-இம்மாநிலம் பயனுற வாழ-எல்லாம் வல்ல முருகன் நமக்கு வல்லமை அருள வேண்டுவோமாக.

நாட்டில் உயர் செங்குந்தன் முருகனிடம் வேண்டல்

முருகா உலக அமைதியைக்காக்கும்
கருவியாக என்னை ஆக்குவாயாக
எங்கே வெறுப்பு இருக்கிறதோ
அங்கே அன்பை விதைப்பேனாக!
தீமையை மன்னிப்பவனாகவும்
சந்தேகம் உள்ள இடத்தில் தெளிவை
தெளிப்பவனாகவும்-திகைப்பு உள்ள
இடத்தில் நம்பிக்கையை ஊட்டுபவனாகவும்
இருட்டு உள்ள இடத்தில் வெளிச்சத்தை
வெளியிடுபவனாகவும் துயரங்களை
மகிழ்ச்சியால் துடைப்பவனாகவும்
என்னை ஆக்குவயாக.



மூன்றாவது கண்

டாக்டர் நா. ஆறுமுகம்

எண்ணும் எழுத்தும் ஆகிய இரண்டும் வாழும் உயிர்களாகிய மனிதர்களுக்கு இரண்டு கண்களைப் போன்றவையாகும். ஆகவே எண்ணும் எழுத்துமாகிய கல்வியைக் கற்றவர்களே கண்ணுடையோர் என்றும், ஏனைய கல்லாதவருடைய முகத்தில் உள்ள இரண்டு கண்களும் புண்களுக்குச் சமமாக மதிக்கப்படும் என்றும் திருவள்ளுவர் கூறுகின்றார்.

கல்வி என்னும் சொல்லுக்குக் 'கல்லி எடுத்தல், அதாவது தோண்டி எடுத்தல், என்பது பொருள். மனதில் உள்ள அறியாமையைத் தோண்டி எடுத்து நீக்குதல் கல்வி. மனதில் உள்ள அறியாமையை நீக்க நீக்க அறிவி பெருகும்.

விளக்கை எற்றும் போது இருள் விலகுகிறது; ஒளி தோன்றுகிறது. கற்கும் கல்வியால் அறிவு எற்படுகிறது.

அவ்வாறு தோன்றும் ஒளியால் தூய்மை ஏற்படாது. கற்கும் கல்வியால் ஒழுக்கம் ஏற்படாது.

விளக்கின் ஒளியால் குப்பை கூளங்கள் கண்ணுக்குப் புலப்படும். கல்வியினால் மனத்தில் உள்ள மாசுக்கள்–குற்றங்கள்–புலப்படும்.

விளக்கொளி குப்பை கூளங்களைத் துடைத்தெறியப் பயன்படுகிறது. கற்ற கல்வினால் வரும் அறிவினால், பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய மனக்குற்றங்களை நீக்கிக் கொள்ளலாம்.

எண்ணும் எழுத்தும் மனிதனுடைய இரண்டு கண்கள் எனில், எண்ணும் எழுத்துமாகிய கல்வியினால் வரும் அறிவு மூன்றாவது கண் ஆகும் என்று உலகத்தில் பல தத்துவங்கள் கூறுகின்றன.

வடமொழியாகிய சமஸ்கிருதத்தில் மனிதன் தன் இள வயதில் கல்வி கற்கத் தொடங்குவதை 'உபநயனம்' என்றும் அழைக்கின்றனர். 'உபநயனம்' என்பதற்கு இரண்டாவது பார்வை (Second Sight) என்பது பொருள்!

கல்வி என்பதில் இரண்டு கொள்கைகள் அடங்கியுள்ளன வளர்ந்து வருகின்ற நவீன உலகத்திற்குத் தேவையான திறமைகளைப் பெறுவதற்கான பயிற்சியைக் கொடுப்பது (Eruditio) ஒன்று! மனிதனுடைய தனித்தன்மையைக் கண்டு பிடித்து வளர்ப்பது (Edubatio) பிறிதொன்று! இவ்வாறு இரண்டு கண்கள் என்றும், இரண்டாவது பார்வை என்றும் மூன்றாவது கண் என்றும் போற்றிப் பாராட்ட பெறுவது கல்வியறிவு. இப்படிப்பட்ட கல்வியறிவை பெறுகின்ற அளவைப் பொறுத்தே இன்று ஒவ்வொரு மனிதனுடைய சிறப்பும் உயர்வும் தோன்றுகின்றன; வலமும் வளமும் அமைகின்றன.

பழங்காலத்தில் கல்வியறிவு எல்லோருக்கும் இன்றியமையாத் தேவையாக இருக்க வில்லை. அரசனுக்கும், அரசனுக்கு அறிவுரை சொல்லும் அமைச்சனுக்குப், அரசனை அண்டியிருக்கும் கனியன் (சோதிடன்) பூசாரி போன்றோருக்கும் கல்வி இன்றியமையாத் தேவையாயிருந்தது.

அறிவு பழங்காலத்தில் ஒரு செல்வமாக இல்லை 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்பது பழங்காலத்தில் 'எதிர் காலத்திய கணிப்புக் கொள்கை'யாக–கருத்தாக (Prophetic Satement) இருந்ததே தவிர உண்மைக் கருத்தாக இல்லை.

ஆனால் 16 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு அறிவே செல்வம் ஆயிற்று ஏன்? அறிவியல் முன்னேற்றத்திற்கும் தொழில் நுட்பத்திற்கும் தேவையான கருவிகளை அறிவு படைத்தது. புதிய மூலப்பொருள்களைப் படைக்கத் தொடங்கியது அதனால் அறிவு செல்வமாக மதிக்கப் பெற்றது என்பர்.

நம் வளர்ச்சிக்கும் நாம் பயன்படுத்தும் கருவிகளுக்கும் தொடர்பு உண்டு.

இன்றைய செயல்களை நேற்றைய கருவிகளைக் கொண்டு செய்தால் நாளைய நம் வளர்ச்சி பாதிக்கப்படும்; வளர்ச்சி குன்றும்!

இன்றைய தொழிலை இன்றைய நவீன கருவிகளைக் கொண்டு செய்தால் மட்டுமே நாளைய உலகில் வெற்றியடைவோம்; வீறு பெறுவோம்.

மகிழ்வுந்து (பஸ்) வந்த பிறகு பயணத்திற்கு மாட்டு வண்டியைப் பயன்படுத்தும் மக்கள் அழிந்து போக மாட்டார்கள்; **தாழ்ந்து** போவார்கள்.

ஆலைகள் வந்த பிறகும் வீட்டுச் சாலைகளில் துணி நெய்வேன் என்பது துயர வாழ்வுக்குத் துணை போவதாகவே முடியும்.

விசைத்தறி (பவர்லூம்) வந்த பிறகு கைத்தறி நெசவு செய்வோர் **உயிர்** வாழலாமே தவிர, **உயர்** வாழ்வு பெற முடியாது!

டிராக்டர் வந்த பிறகும் கலப்பையில் உழும் வாழ்க்கை ஓங்கி வளராது; ஒடிந்து போகும்


வளர்ச்சிக்கும் கருவிக்கும் தொடர்பு இருப்பதைப் போலவே எண்ணத்திற்கும் ஏற்றத் திற்கும் இயைபு உண்டு. எண்ணமே வாழ்வு!

விஞ்ஞான உலகத்தில் வாழும் நாம் விஞ்ஞான மனப்பான்மையோடு வாழ வேண்டும். அறிவு வளர வளர நம் எண்ணத்திலும் மாற்றம் ஏற்பட வேண்டும்.

மனித குல வரலாற்றின் ஒரு முக்கியமான காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக் கிறோம். மனிதவாழ்கை, அறிவால் விச்சுப் பெருக்கத்தால் புதிய திருப்பத்தைக் கண்டு வரு கிறது. கணிப்பொறி (கம்ப்யூட்டர்) போன்ற விந்தை மிக்க அறிவியல் சாதனங்களை நாம் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். இன்றய அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அறிவையும் கருவி களையும் நம் தொழில் முயற்சிகளில் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டால் தான், சிறு உழைப்பைக் கொண்டே பெரும் பொருள்களை உற்பத்தி செய்யும் பெரிய சாதனைகளைச் செய்யும் உலகத்தோடு போட்டி போட இயலும் போட்டியின் வெற்றியே வாழ்கையின் வளர்ச்சி யாகும்!

ஆகவே விஞ்ஞான அறிவும் விஞ்ஞான மனப்பான்மையும் இன்றியமையாத் தேவை களாகும்.

விவசாயமும் நெசவும்



கே. ஏ. முருகேசன் பி. எஸ்சி., எம். ஏ
உதவியாளர்
ஈரோடு கலைக் கல்லூரி

விவசாயத்தில்
ஏற்றமும் ஏரும்
இன்று காட்சிப்பொருள்கள்
மோட்டாரும் டிரேக்டரும்
காணும் பொருள்கள்
வயல்வெளியில் காணும் பொருள்கள்

ஆனால்
நெசவுத் தொழிலிலே
நாம் இன்னும்
கைத்தறியின் காவலர்கள்
விசைத்தறியின் விரோதிகள்

இது ஏற்றம் இறைத்து
நீர் பாய்ச்சி விளைந்த
நெல் என
முத்திரை ஏதும்
குத்தப்படுவதில்லை
அப்படிக் குத்தப்படும் என்ற சொல்லே
வேடிக்கையாய் விநோதமாய்த் தோன்றும்
விவசாயத்தில்

நாமோ
இது கைத்தறியால்
நெய்த துணி
என முத்திரைகுத்தி
முக மலர்ச்சி கொள்ளுகிறோம்

மாடு பூட்டி
கலப்பைகொண்டு
உழுது பயிர்விதைத்து
விளைந்த கரும்பால்

ஆன சர்க்கரை
இதற்கு சர்க்கார்
கொடுக்குது 20%
தள்ளுபடி என
எங்கேனும் கேட்டதுண்டா?

கேட்கிறோம்
இது கைத்தறியால் நெய்த துணி
காந்தி பிறந்தார் 20%
அண்ணா பிறந்தார் 20%

தள்ளுபடி தள்ளுபடி
இந்தத் தள்ளுபடியை
நாம்
தள்ளுபடி செய்யாதவரை
தள்ளுவண்டிதான்
நம் நிலை


கைத்தறி ஒவ்வொன்றும் விசைத்தறி ஆகிட
வீறுகொண்டெழுவோம்
குஞ்சக்கயிறு
பிடித்த கைகள்
பிடிக்க வேண்டும் 'பிரேக்'
இந்த பிரேக் இல்லையேல்
நெசவாளியின்
வாழ்வில் விரைவில் வரும் பிரேக்.

★ ★ ★



P. சிவப்பிரகாஷ்
ஈரோடு

செழுமையான நாடு தமிழ்நாடு
எங்கும் நிறைந்த குலம்
பாங்கு அறிந்த பழமையானது
எங்கள் சொந்தம் எங்கள் பந்தம்
தலைவன் RANM தந்த ஒற்றுமை
செங்குந்தம் வாழ்க செங்குந்தம்



செங்குந்தரின் நாட்டுப் பண்

M. மாரிமுத்து
83, R. K. V. நகர், ஈரோடு - 3

அனைத்துலகும் தலைவணங்குவது
ஏர் பின்னும் எங்கள் நாடு;
காவிரிப் புனல்பாயும், இந்த
மண்ணின் மைந்தர்கள் நாம்:

தென்னாப்பிரிக்கா தன்னில் வாழ்ந்தாலும்
சிங்களத்தில் தொழில் செய்தாலும்,
மனம் ஒன்றுதான்: நம்
இனம் செங்குந்தம்தான்.
தர்மம் காக்கத் தலை கொடுப்போம்:
உறவு எனில் கைகொடுப்போம்.

தில்லையாடி வள்ளியம்மை தன்னின்
தியாகத்திற்கு தலை வணங்கிடுவோம்
திருப்பூர் குமரனின் தீரந்தன்னை
போற்றித் துதித்திடுவோம்
ஈட்டி எழுபதுபாடிய
ஒட்டக்கூத்தனுக்கு வந்தனம்
செய்வோம்.

சங்கெடுத்துப் பாலூட்டும் போது
அங்கத்தில் தழும்பு இருக்கக் கண்டு
போர்களத்தில் குந்தம் ஏந்திய
அங்கவனை நினைப்பாளாம்
எங்கள் தாய்.



பெரியார் மாவட்டச் செங்குந்தர்
முதல் மாநாடு வெற்றி பெற
நல்வாழ்த்துக்கள்.

டாக்டர் மா. அண்ணாதுரை
எம். ஏ., பி. லிப். எசி, பி. எட், பிஎச். டி.,
நூலகர், ஈரோடு கலைக்கல்லூரி



எழுதிய நூல்கள்:

1. பாவேந்தர் படைப்பும் வாழ்க்கையும்
2. பாவேந்தரில் அகமும் புறமும்
3. பாரதிதாசனின் இதழ்ப்பணிகள்-
(பிஎச். டி பட்ட ஆய்வுரை)

நூல்கள் கிடைக்குமிடம்:

பூங்கொடி வெளியீடு,
POONGODI PUBLICATION
கார்த்திக் இல்லம்
40P/12 பாரதி நகர்
மூலப்பாளையம், ஈரோடு-638 002.

பெரியார் மாவட்டச் செங்குந்தர் மகாசன சங்க மாவட்ட முதல் மாநாடு சீரும் சிறப்பும் பெற்று இனிதே நடைபெற மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.



அன்புடன்,
தலைவர், மற்றும் உறுப்பினர்கள்,
செங்குந்த மகாஜன சங்கம்,
அவிநாசி (கிளை)

இங்கே ஒரு செய்தியை எண்ணிப் பார்ப்போம்!

சில மாதங்களுக்கு முன்னால் சோவியத் நாட்டில் நடைபெற்ற விளையாட்டு விழா பற்றிய செய்தி அது. திறந்தவெளியில் நடைபெற்ற அந்த விளையாட்டு விழாவில் கலந்து கொள்ள தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலிருந்தும் அறிஞர்களும் எழுத்தாளர்களும் சென்றிருந்தனர்.

விழாவிற்கு முதல் நாளில் சோவியத்து நாட்டு வானிலை அறிக்கையில், விழா நாளன்று மழைவரலாம் என்று கூறப்பட்டிருந்தது. அதனால் விழாவில் கலந்து கொள்ளச் சென்றவர்கள் எல்லோரும் சிறிது கலக்கத்தோடு இருந்தார்களாம்.

ஆனால் குறிப்பிட்டவாறு குறிப்பிட்ட நேரத்தில் எந்தவித இடையூறும் — மழை அச்சுறுத்தலும் — இல்லாமல் விழா நடந்தது. மறுநாள் சோவியத்து நாட்டு வானொலியில் ஒரு செய்தி ஒளிபரப்பப்பட்டது. விழா நாளான நேற்று விண்ணில் மழை தரும் சூல் கொண்ட கரு மேகங்கள் கூடி மழை பெய்யும் அச்சத்தை தந்தன. ஆனால் மிகப் பெரிய ராட்சத மின் விசிறிகளைக் கொண்டு அந்த கரு மேகங்களை விரட்டியடித்து விட்டோம். அதனால் மழை பெய்யவில்லை. விழா இனிது நிறைவேறியது.

இந்தச் செய்தி தருகின்ற விஞ்ஞான அறிவின் வளர்ச்சி வேகத்தையும். அதனால் நாம் பெற வேண்டிய விஞ்ஞான மனப்பான்மையையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.
இராமாயன காப்பியத்தில் இத்திரஜித்திற்க்கு மேகத்தை அடக்கியாளும் 'மேகநாதன்' என்று பெயர் உள்ளதை நாம் அறிவோம்.

இன்று உண்மையான மேகநாதர்களாகச் சோவியத்து விஞ்ஞானிகள் உள்ளனர்.

மழை வருவதையும் குழந்தை பெறுவதையும் எவராலும் சொல்ல முடியாது என்பது பழங்கால கருத்தாகும் இரண்டையுமே துல்லியமாக கணக்கிட்டு சொல்லுமாறு விஞ்ஞானம் இன்று வளர்ந்து வந்துள்ளது!

சூரியன், சந்திரன், செவ்வாய் போன்ற நவக்கிரகங்கள் நம் வாழ்கையைப் பாதிக்கும் என்று ஒரு காலத்தில் — பழங்காலத்தில் நம்பியிருக்கலாம்.

சந்திரனில் சென்று இறங்கி, நடந்து சென்று, கொடி நாட்டி, சந்திரனில் உள்ள கல்லையும் மண்ணையும் மனிதன் கொண்டு வருவதை நேரடியாகத் தொலைகாட்சியில் பார்க்கின்றோம் இதற்குப் பிறகும் சந்திர திசை என்றும் செவ்வாய் தோஷம் என்றும் பேசிக் கொண்டு இருப்பது நல்லதா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப அறிவை முற்றும் உணர்ந்து அவைகளை எற்றுக் கொண்டு வாழ்ந்தால்தான் நாம் வெற்றி பெறுவோம். உயர்வு அடைவோம்! இல்லையெனில் நாம் அழிந்து போகமாட்டோம்; தாழ்ந்து போவோம்!

ஆகவே விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப அறிவைப் பெறுவதற்குக் காரணமான அறிவையும் அறிவியல் மனப்பான்மையையும் தருகின்ற மூன்றாவது கண்ணைப் பெற்று வாழ்வோமாக!


செங்குந்தர்கள் சமுதாய கூடம்
மேலத்தெரு- காட்டூர்.



இந்து சமயங்களின் கருத்துக்கள்

டாக்டர் ந. கோவிந்தசாமி, ஆர். ஐ. எம் பி.,
பாண்டிச்சேரி.

உலகாயதம்

வேதக் கொள்கைகளுக்குப் பகையான மதம், பிரத்யட்சப்பிரமாணமே கொள்கையாக உடையவர்கள் வேதம் சொல்லுகிறவாறு வினை, சிவன், இறைவன் என்பவை இல்லை என்பவர்கள். பிறந்தவர் பெண்ணுடன் இன்பம் அனுபவித்தலே முத்தி என்பவர்கள். இதுவே உலகாயதமதம்.

சார்வாகம்

உலகாயதமே. பிருகஸ்பதி இந்திரனுக்கு கூறியது பிரத்யட்சமே பிரமாணம் எனக் கொண்டவர்கள்.

பௌத்தம்

உலகாயதத்தை பின்பற்றுபவர்கள். இவர்களின் சௌத்ராந்திகன், வைபாக்ஷிகள், மத்யாமிகன் யோகாசரன் என்ற உள் பிரிவையுடையவர்கள் பௌத்தர்களுக்குப் புத்தனே தெய்வம். புத்தன் இயற்றிய பிடக ஆகமமே வேதம். இறைவன், ஆன்மா, ஆகாயம், காலம், திசை என்பவை வெறும் கற்பனை அறிவும் பொருளும் சேர்ந்ததால் உலகம் உற்பத்தி என்பது இவர்கள் மதம்.

சமனம்

இவர்கள் சைனர்கள். இவர்களில் ஆசிவகன், நிகண்டவாதி என்ற இருவரை உண்டு. அருகனே சைனருக்குக் கடவுள். அருகன் கூறியவை, பத்துப்பொருள்கள் அவை ஒருவரால் உண்டாக்கப்பட்டதல்ல, தாமே உண்டானவை. கரும்பில் சுவை போல் இயல்பாகவே உடலில் சிவன் உள்ளது. வினைகளை அனுபவித்தாலே முக்தி. இது சைனர் கொள்கை. க்ஷபணகரும் சைனர். சோதிடத்தில் வல்லவர். திகம்பரர் என்பாரும் உண்டு.

உலகாயதம், பௌத்தம், சைனம் ஆகியவை வைதிக மதமான வேதமரவுக்குப் பகையானவை.

மீமாஞ்சம்

மிக்க மதிப்புடன், வேதத்தில் உயர்ந்த பொருளைப்பற்றி நன்கு ஆராய்ந்து அறிவது. வேதத்தின் தர்ம மான அர்த்தத்தை விளக்குவது.

தர்மத்தைப்பற்றி விளக்குவது பூர்வமமாசை கர்ம காண்டம்-சைமினி எழுதியது. பிரம்மத்தைப்பற்றி கூறுவது உத்தர மீமாம்சை ஞான காண்டம். வியாசர் எழுதியிருப்பது. கர்ம காண்டத்தைப்பற்றி கூறிய வரில் பிராபகரர் ஒருவர். இவர் மதம் குருமதம் எனப்படும். இவர் ஞானம் அழிந்திருப்பதே முக்தி என்பர். பட்டர் என்பாரும் கர்ம மீமாசை எழுதியவர். அவர் கர்மாவே முக்தி என்பர். இவர்களையன்றி குமாரிலர் என்பார் ஒருவர் உண்டு. இவர் வேதப் பொருளால் இறைவன் உண்டு என்பவர்.

மீமாஞ்சை பூர்வமீமாசை வேதத்தின் தர்மத்தை, பொருள் நன்கு ஆராய்ந்தறிவதாயினும் இறைவன் ஒருவனைப்பற்றி அறிய வேண்டுவதில்லை என்பது; வேதம் கர்மா செய்தால் போதும். சத்கருமத்தை மட்டும் கூறுகிறது என்பது.

சமுச்சயம்

மீமாஞ்சையின் ஒரு பிரிவு. சத்கருமத்தாலும், பிரம்ம ஞானத்து உறுதியாலும் உயிர்கள் இயல்பாக முத்தி அடையும் என்பது,

சாங்கியம் :

கபில முனிவரால் சொல்லப் பெற்றது. உலகம் யாவுக்கும் காரணமாக பிகிருதி என்பது இது. புருஷன் என்பவன் இவன் என்று வேறுபிரித்தறிந்துதான் தனித்து நிற்பது முத்தி. பிரகிருதியைக் கொண்டு புருஷன் உலகைப் படைக்கிறான். அவனுக்கு மேல் இறைவன் ஒருவன்இல்லை என்பது சாங்கியம்.

தர்க்கம்

கௌதம முனிவர் இயற்றியது. மண் முதலான பரமாணுக்களால் உயிர் உலகம் தோன்றக் காரண இறைவனின் விருப்பத்தால் அணு நீங்க உலகம் மறையும். இவற்றை அறிந்து தானே தானாதல் ஞானம். ஞானம். ஞானத்தால் விசயப்பற்று அகல, கைவல்யம்; என்பது தர்க்கமதம். பதார்தித ஞானம் விளங்கக் கூறுவது.

யோகம்

பதஞ்சலி முனிவர் கூறியது. அஷ்டால் கயோகத்தால், புலனை ஒடுக்கி, பிரம்மரமந்திரத்தில் சென்று அமிர்தம் பருகி ஒளிமயமாதல் முத்தி என்பது யோகமதம்.

பாஞ்சராத்திரம்

திருமாலே இறைவன் என்பது வைணவ மதம். திருமால் ஐந்து தொழில்களைப்பற்றி ஐந்து இரவுகளில் மொழிந்தது பாஞ்சராத்திரம்.

திருமால் அருளால் உண்டான உலகம் நித்தியம். சிவன் என்பது ஒன்று அன்று. பல. பக்தியால் திருமாலிடம் பரம்பதம் அடைந்து முத்தி பெறலாம் என்பது. இதனைப்போன்றே வைகானசம் என்பதும் வைணவ மதம். விசிஷ்டாத்வைதம் என்றும் கூறப்பெறும்
விசிஷ்டம் — சிறப்பு. இது ராமானுஜ மதம்.

சைவம்

சைவ மதத்தில், பாசுபதம், வாமம், வைரவம், மகாவிரதம் காளாமுகம் ஆகிய பிரிவுகளும் உண்டு. பதி, பசு, பாசம் என்ற மூன்று பிரிவில் மத சித்தாந்தம் கூறப் பெற்றது. படைத்தல் முதலிய ஐந்தொழில் புரிவது பதி நாசமற்ற நிலையில் மலத்தில் சூழ்ந்து, சுகதுக்கங்களை அனுபவித்து சிவபெருமான் திருவருளால் பேரின்பம் அடையலாம். (பசு) பாசமானது மலம், மாயம், கன்மம் என மூன்று உலகம் அழியும்போது மாயையில் அடங்கும். அருள் நெறியில் நின்று சச்சிதானந்த சமரக திருவானபதம் பெற்று பேரின்பம் பெறலாம் என்பது சைவமதம்.

துவைதம்

மாத்வர் கூறியது. பரமாத்மா வேறு, சீவாத்மா வேறு என்ற கொள்கை. உலகம் உண்டாக்கப்படவில்லை தோன்றிய உலகம் உண்மை கர்மம் தீர்ந்த ல் மோட்சம் என்பது

கணாதரராலும் அக்ஷபாதாலும் சொல்லப்பெற்ற, வைசேடிகம், நியாயம் ஆகியவை தர்சனங்களின் பிரிவு. கனா. கனாதர் அணுக்களைக் கொண்ட சித்தாந்தமும் அக்ஷபாதர் யுக்தியைக் கொண்டு சித்தாந்தமும் கூறுவர்.


அத்வைதம்

வேத மரபு: வியாசரின் பிரம்ம சூத்திரம் பத்து உபநிடதங்கள். பகவக்கீதை ஆகிய மூன்றுன பிரஸ்தானத்திரனம் என்பவை கொண்டு சித்தாந்தம் கூறுவது. சச்சிதானந்தமான பிரம்ம ஒன்றே. இரண்டன்று. பரமாத்மாவும், சீவாத்மாவும் ஒன்றே. விஷயப்பற்றுகளால் மறைபட்டிருப்பது போல் தோற்றம் சீவாத்மாவுக்கு, ஒரு சூரியன் பல குடங்களின் நீர்களில் காட்சி தருவது போல் அனைத்து உடல்களிலும் நல்கியதாகத் தோற்றம் தருவது.

உலகம் அழியக் கூடியது. பொய். பிரம்ம ஞானத்திலேயே 'பொய் என்பது அறியப்படும்.

பிரம்மன் உலகத்தை தோற்றுவித்துத் தன்னுள் மறைந்து கொள்கிறது. சிலந்தி வாய் நீரால் வலையைப் பின்னி மீண்டும் அவற்றை தன்னுள் இழுத்துக் கொள்வதைப்போல் குடத்து நீரில் தோன்றும் சலனம் சூரியனுக்கு இல்லை. பிரதிபிம்பச் சூரியனுக்கே, அதுபோல சரீரத்துக்கு சலனம் உண்டு. பிரம்மத்துக்கு இல்லை. பற்றினால் மாயா கருமம் தோன்றும். மயக்கம் நீங்க மாயை அழியும். கருமம் நீங்கும். நிஷ்டகாமிய கருமத்தால் சித்த சுத்தியும். அதனால் ஞானமும், ஞானத்தால் மாயையின் சலனத்தில் தோன்றும் தன்னை, அசைவற்றவனாக, தானே தானாகி, நானே பிரம்மம் என்று தெளிவுறுவது மெய் ஞானம். இதனைக் குருமுகமாக அறியலாம் என்பது அத்வைதம்.

(நூல் பிபோதசந்திரோதயம்)



அம்பிகையின் அருளைத்தேடி

பால. கோபாலன்,

செய்யாறு தி. ச. மாவட்டம்

நாம் அனைவரும் விரும்புவது இன்பத்தையே. அந்த இன்பம் குறையாமல் நிறைவாக இருந்து வர வேண்டும் என்று விரும்புகிறோம். இதற்கான எல்லா முயற்சிகளிலும் நாம் "ஈடுபடுகின்றோம்; செயல்படு கின்றோம்; போராடுகின்றோம். முடிவில் நாம் பெறுவது இன்பம் கலந்த துன்பமும்; துன்பம் கலந்த இன்பமுமே, அல்லது தற்காலிகமான இன்பந்தான். நிரந்தர இன்பம் என்பது கானல் நீராகவே இருந்து வருகிறது.

காரணம் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பொறி புலன்களே பெரிதும் பயன்படுகின்றன. அவ் வாறு பொறி புலன்களால் கிடைக்கும் இன்பம் தற்காலிகமாக இருக்கும். இது இயல்பானதுமாகும் தொடர்ந்த, நிரந்தரமான இன்பத்தைப்பெற வேறு வகையில் முயற்சி செய்ய வேண்டும். அதற்கான களமும் இந்த உலகமே. அதற்கான கருவியும் நாமே.

மனிதன் வெறும் சதை, ரத்தம், எலும்பு நிணநீர், வாயு ஆகியவைகளால் மட்டும் படைக்கப்பட்ட அசேதன பொருளல்ல. அவன் சேதனப் பொருள்: அறிவுப் பொருள், அந்த அறிவைக் கொண்டு தன்னை யறிய வேண்டும்; தன்னை தன் உடலான கூட்டுக்குள் குடியிருக்கும் இன்னொரு அறிவுப் பொருளைக் காண வேண்டும். இந்த அறிவுப் பொருளுக்கும் பேரறிவாக விளங்கும் பிரம்மத்திற்கும் வேறுபாடில்லை. இவ்வாறு தன் ஆத்மாவை அறிந்து, அதன்மூலம் இறைவனை உணர்ந்து அந்த அனுபவத்தில் திளைத்திருப்பதே நிரந் தரமான இன்பம் என நம் மண்ணில் தோன்றிய மகான்கள்-அனுபூதிமான்கள் உணர்த்தியுள்ளனர்.

இவ்வாறு நம்முள் ஒளிரும் ஆத்மாவை அறிந்து கொள்வதற்கான வழிமுறைகளை மகான்கள் தங்க ளுடைய உள்ளுணர்வின்மூலம் அறிந்து வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவைகளைச் சரியை, கிரியை, யோகம், ஞானம என்றும் பக்தியோகம் கர்மயோகம், ராஜயோகம்,ஞானயோகம் என்றும் பலவாறு கூறுவர். மற்றும் இவைகள் வெவ்வேறு அளவுகளில் ஒருங்கிணைத்து அமைக்கப்பட்ட முறைகளும் உண்டு. இவ் வாறான ஒருமுறை ஸ்ரீ வித்யை எனப்படும். இதில் நம்மிடம் உள்ள சத்துவம், ரஜஸ் தமஸ் ஆகிய முக்குணங் களில் சத்துவக் குணத்தை மேன்மைப்படுத்தி இறையுணர்வைப் பெறுவதற்கு வழி முறைகள் அமைந்துள்ளன. பருவுடல், நுண்ணில் மற்றும் காரண உடல் ஆகியவை தூய்மை பெற்று, இறையுணர்விற்கு நம்மைத் தகுதி யாக்க இம்முறை உதவுகிறது.

தாய்மையின் சிறப்பு :-

பரப்பிரும்மத்தின் இருப்பு அம்சம்—சிவ அம்சம் என்றும் செயல் அம்சம்-சக்தி அம்சம் என்றும் இரு கூறு களாகக் கருதுவர். எளிதில் பயன்பெற சக்தி அம்சத்தை வழிபட வேண்டும். ஏனெனில் எளிதில் மனமிரங்கி கருணை செய்யும் குணம் தாய்மைக்கு உண்டு. குழந்தைகளைப் பெற்ற கஷ்டம், வளர்த்த கஷ்டம் இவை யெல்லாவற்றையும் அனுபவிப்பவள் தாய்.

அம்பிகையைத் தாயாக வழிபடுவது சுலபமான வழி. காரணம் அன்னை. தந்தை, குரு ஆகிய மூவரும் பிரத்யட்ச தெய்வங்களாவர்.

பெண்ணின் காம அம்சங்களை வெறுக்கும் ஞானிகளும் பெண்ணின் தாய்மையைப் போற்றியுள்ளனர், முற்றும் துறந்த பட்டினத்தடிகள்,

'' முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்து
அந்திப் பகலாய் ஆதரித்துத் தொந்தி சரிய சுமந்த தாய் ''

என்று தாய்மையை நினைந்து உருகுகிறார்.

'' பெண்ணின் ஸ்தனங்கள், தொப்புள் பகுதி ஆகியவைகளைப் பார்த்து மயங்கிவிடாதே. இவை மாமிசத்தாலும், உவர்நீர் முதலிய அசுத்த நீர் முதலான அசுத்தப் பொருட்களாலும் உண்டானவை'' என்று கூறும் ஆதி சங்கரரும் தம் தாயின் அந்திம காலத்தில் அவருக்கு மகாவிஷ்ணுவின் தரிசனம் கிடைக்கச் செய்த போது ''இந்தப் பாக்யத்தைத் தந்த உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்'' என்று கூறி கண்ணீர் வடிக்கவும், அதற்கு ஆதிசங்கரர், 'என்னை வயிற்றில் சுமந்த காலத்தில் நான் நன்றாக இருக்க கஷாயம் எண்ணெய் முதலியவற்றை உண்டீர்களே! எனக்கு நோய் நொடி வரக்கூடாதென்று உப்பு, காரம் குறைத்துக் கொண்டு வயிற்றைக்கட்டி, வாயைக்கட்டி பத்தியமிருந்தீர்களே-இதெற்கெல்லாம் நான் என்ன கைம்மாறு செய்ய இயலும்-இந்த நமஸ்காரத்தைத் தவிர

'' பிரசவ காலத்தில் வேதனை தாங்காமல் அம்மா, அப்பா, கடவுளே!-என்று கூக்குரலிட்டீர்களே அதற்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்- இந்த நமஸ்காரத்தைத் தவிர'' என்று நெஞ்சம் நெகிழ்கிறார்; விழுந்து வணங்குகிறார்.

பெற்ற பிள்ளை ஊதாரித்தனமாக வீட்டைவிட்டு வெளியில் திரிந்தாலும், அவன் தன்னை வெறுத்தாலும், அவளைப் பெற்றவள் யாருக்கும் தெரியாமல் அவன் தங்குமிடம் சென்று பசிக்கு உணவூட்டுவாள்.

இவ்வாறு யோகிகள்-ஞானிகள் முதல் சாதாரண மனிதர்வரை அனைவரும் தாய்மையில் மிளிரும் தயை, தாட்சண்யம் கருணை முதலிய உணர்வுகளினால் வளர்ந்தவர்களே

இதனடிப்படையில்தான் தாய்மையைப் படைத்த இறைவனையும் தாயாகக் கருதி வணங்கும் முறை தொன்றுதொட்டே இருந்து வருகிறது. என்று கருதத் தோன்றுகின்றது.

தமிழ் மூதாட்டி அவ்வை தான் இயற்றிய விநாயகர் அகவலில் ''இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டித் தாயாய் எனக்குத்தான் எழுந்தருளி''-என்று கூறியுள்ளதுப் மாணிக்கவாசகரின் திருவாசகத்தில்

'' தாயாய் முலையைத் தருவோனே
தாராது ஒழிந்தால் சவலையாய்
நாயேன் போக மாட்டேனா? '' என்றும்,
'' பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து
நீ பாவியேனுடைய ஊனினை உருக்கி'' - என்றும் குறிப்பிட்டுள்ளதும்

ஈண்டு கருதத்தக்கது.

ஸ்ரீ வித்யை

இவ்வாறு பரம்பொருளைத் தாயாக.அம்பிகையாக வழிபடும் முறைக்கு ஸ்ரீ வித்யை என்று பெயர் இதனையே சாக்தம் என்றும் கூறுவர்.

இந்த ஸ்ரீவித்யையில் சில படிமுறைகள் உண்டு. அம்பிகையை வாலைப் பெண்ணாகப்பாவித்து வழிபடுவது முதனிலை. திருமணமான பெண்ணாக-தருணியாக வழிபடுவது இரண்டாம் நிலை. வயதான சுமங்கலியாக வழிபடுவது அடுத்த நிலை. முதல் நிலையில் ஸ்ரீ பாலதிரிபுர சுந்தரியாகவும் இரண்டாம் நிலையில் ஸ்ரீ மகாதிரிபுரசுந்தரியாகவும், மூன்றாம் நிலையில் ஸ்ரீ மகாதிரிபுரசுந்தரி பராபட்டாரிகவும் பாவித்து வழிபட வேண்டும், இரண்டாம் நிலையிலான மந்திரம் பஞ்சதசியும், மூன்றாம் நிலையிலான மந்திரம் சோடாசியும் ஸ்ரீ வித்யை என்று அழைக்கப்படுகின்றன. உபாசகனின் தகுதியினையறிந்து அதற்கேற்ற நிலையினை குரு அருள்வார்,

ஸ்ரீ வித்யையில் மந்திர ஜபம், விக்கிரக பூசை, ஆத்ம சிந்தனை என்ற மூன்று அங்கங்கள் உண்டு. மனம் மற்றும் உடல் தூய்மைக்கு மந்திர ஜபமும், விக்கிரா பூசையும் உதவுகின்றன. தான் வழிபடும் தெய்வமும், தான் விளங்கும் ஆன்மாவும் வேறல்ல; இரண்டும் ஒன்றே என்பதை அனுபவபூர்வமாக உணர்வதற்கு சிந்தனை உதவுகின்றது. இவ்வாறு மனம் வாக்கு காயம் என்ற முக்கரணங்களினால் வழிபட வேண்டும் ன்பதையே அபிராமி பட்டர்,

" சென்னியது உன்பொன் திருவடித்
தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம்
சிந்தூர வண்ணப் பெண்ணே
முன்னிய நின் அடி யாருடன்
கூடி முறை முறையே
பன்னியது என்றும் உன் தன்பரம
ஆகம பத்ததியே "

என்று குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீ குரு

இந்த ஸ்ரீவித்யை உபாசனையில் அநேக தத்துவங்களும், மறை பொருட்களும் உள்ளன. இவைகளைக் குரு மூலமாகவே அறிய வேண்டும்.

இந்த வகையில் ஸ்ரீ வித்யையில் குரு மிகமிக முக்கியமானவர். ஏனெனில் அம்பிகையே குருவாக வந்துள்ளார், என்பது ஸ்ரீ வித்யையின் அடிப்படைக்கொள்கை. குருவே அம்பிகை, அம்பிகையே குரு.

" தெளிவு குருவின் திருமேனி காணல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவுருவ சிந்தையில் தானே " — திருமந்திரம்

சிஷ்யன் குருவினிடமிருந்து ,அறியவேண்டியவை— :

1. உலகத்தின் இயல்பு; 2) தன்னிலை ஜீவ விசாரம்; 3) ஈஸ்வர சொரூபம் என்பனவாகும் இம் மூன்றினைப்பற்றிய ஞானமே நம்மை முழுமைப்படுத்தும்.

மேரு 43 முக்கோணங்களைக்

நவாவர்ண பூஜை :-

ஸ்ரீ வித்யையில் நவாவர்ண பூசை ஓர் அங்கம். ஸ்ரீ சக்ரம் அல்லது
பிந்து ஸ்தானம். இதுதான் அம்பிகையின்
கொண்டது. ஸ்ரீ சக்கரத்தில் நடுவில்-மேருவின் உச்சியில் இருப்பது
இந்த ஸ்ரீ சக்கர வழிபாடு மிக ரகசியமான
சொரூபம். இந்த 43 கோணங்களில் பல தேவதைகள் உள்ளனர்.
ஒரு சமய மரபு ஆகும். பெருமை மிக்கது.


மேவி உறைபவளே -'
இப்பூஜைக்குரிய நாயகியை அபிராமபட்டர் ''ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும்
செய்வதற்குச் சமமாகும். ஸ்ரீவித்யா
என்று குறிப்பிடுகிறார். இந்தப் பூசையினைச் செய்வது ஒரு யாகத்தைச்
பெற்ற பின்பே
உபாசகர்கள் முறைப்படி திட்சை பெற்று குருவிடமிருந்து பூசை செய்யும் பீடாதிகாரம்

இந்தப் பூசையினைச் செய்ய வேண்டும் என்பது விதி.
''உயிரைக் கொடுத்தாலும் கொடுக்கலாம்
இந்த ஸ்ரீ வித்யை மிகவும் உயர்வானது என்பதனை
இந்தப் பிறவியில்
ஸ்ரீ சோடாகக்ஷரியைக் கொடுக்காதே! '' என்ற ஆன்றோர் வாக்கில் இருந்து அறியலாம்.
மேலும் இந்த
இந்த உபாசனையில் நாட்டம் ஏற்பட்டால் அது முன் செய்த நற்பேறுதான் காரணம்.
உபாசனைக்கு இதுவே கடைசிப் பிறப்பு என்று கூறுவர் ஆன்றோர்.


இவ்வளவு சிறப்புமிக்க பெருஞ்செல்வத்தை அடியேனுக்கும் வழங்கியவர் ஸ்ரீ பிரதிபாவந்த நாதராகிய ஸ்ரீநடராஜன் (நஜன்) அவர்கள். மேற்குறித்த அம்பாள் உபாசனையில் சாதி வேறுபாடில்லை; அனைவரும் ஈடுபடலாம் என்று நடைமுறையில் காட்டிய அந்தண உத்தமர்; அவர் ''ஞான பாஸ்கரர்! " அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றபின்-தமது 55-வது வயதுக்குப்பின் 108 ஆன்மிகப் புத்தகங்களை வெளியிட உறுதியெடுத்துக் கொண்டு 10 ஆண்டுகளில் ஏறக்குறைய 90 புத்தகங்களை எழுதி வெளியிட்டவர். அன்பே அவர் வடிவம்; கனிவே அவர் உள்ளம், அருள் அவர் மூச்சு.

'' அன்பர் பணிக்கு என்னை ஆளாக்கி விட்டால்
இன்ப நிலைதானே வந்தெய்தும் பராபரமே " .

என்ற தாயுமானவரின் வாக்கின்படி வாழ்ந்த அப்பெருமகானாரை சிந்தித்து, எல்லோருக்கும் அம்பிகையின் அருள் சுரக்க இறைஞ்சுகின்றேன்.



அருள்மிகு கொண்டத்துக்காளியம்மன் ஆலயம்
பாரியூர் – கோபி



பக்தர்கள் போற்றும்
அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோவில்
பண்ணாரி – சத்தி

பெரியார் மாவட்ட செங்குந்தர் முதல் மாநாடு வெல்க!



மு. சிவசண்முகம்

மாநில துணைப்பொதுச்செயலாளர்
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்
21-சி, அன்சாரி வீதி,
உடுமலைப்பேட்டை, கோவை மாவட்டம்.



இந்தநல் லாண்டு இனிதாய் நடந்திடும்
செங்குந்த மாநாடு சிறப்புடன் திகழ்க!

நம்குல மக்கள் நாட்டினில் உயரவும்
செங்குந் தர்தம் சிறப்பினை உணர்த்தவும்
ஈரோடு நகரில் இத்திரு நாளினில்
சீரோடு கூடிடும் சிந்தனை யாளரே;
செய்யும் தொழிலே தெய்வம் என் பது போல்
நெய்யும் தொழிலின் நேர்த்தியை அறிந்தவர்
இத்திரு நகரின் இணையிலாச் செல்வர்!
சிற்றூர் தோறும் சீர்மிகு கிளைகள்
கற்றோர் போற்றிடும் காரியம் பற்பல
கல்லூரி பள்ளிகள் பொறிஇயல் நிறுவனம்
நல் முத்துச்சாமி உருவாக்கிடக் கண்டோம்!

ஈரோடு காங்கயம் புளியம் பட்டி
தாரை, கோபி வெள்ள கோயில்
கைத்தறி பவர்லூம் கண்கவர் கோலம்
மெய்ப்புகழ் கொண்ட மேலாம் நகர்களில்!
காட்சிக் கெளியர் கனிவுடன் வாழ்ந்த
நாச்சி முத்து முதலியார் செயல்கள்!
இலவசத் திருமணம்! இனிமையாய் நடந்திட
கல்வியில் சிறந்த மாணவர் தமக்கும்
பல்வகைப் பரிசு பாங்குடன் தந்திடும்!
உலகமா நாட்டில் உயர்புக ழோடு
கலந்துகொண்ட ரவிஎனும் இளைஞர்!
வள்ளல் சபாபதி நுற்றாண்டு நல்விழா
அல்லிக் கொடுத்த வள்ளலின் நினைவு!
வள்ளலார் மாணவ இல்லநல் லறங்கள்
என,
வளர்ந்திடும் பணிகள் வான்புகழ் எய்தி
வாழ்க பல்லாண்டு! வாழ்க! வளர்க!

தேசிய விருதுபெற்ற கிராமச் செவிலியர்



தேசிய விருதுபெற்ற
கே. சிவகாமி கோபால்சுவாமி


பெரியார் மாவட்டம் கவுந்தப்பாடி நகர ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட க. புதூர் துணைசுகாதார நிலையத்தில் கிராமநலச் செவிலியராய் பணிபுரிந்துவரும் நம் இனச சகோதரி திருமதி கே.சிவகாமி அவர்களுக்கு தேசிய தடுப்பூசித் திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்தி பணியாற்றிமைக்காக **'தேசிய விருது'** குடியரசு தினநாளில் இந்திய அரசினரால் வழங்கப்பட்டுள்ளது. இவ்விருதினையும், பதக்கத்தையும் பெரியார் மாவட்ட கலெக்டர் திருமிகு. **சுப்புராஜ் I. A. S.** அவர்கள் செவிலியர் திருமதி. கே. சிவகாமி அவர்களுக்கு வழங்கினார்.



ப. இராஜாக்கண்ணு
அமைப்புச் செயலாளர்,
புதுச்சேரி மாநில செங்குந்தர் சங்கம்
5- சுப்ரமணிய சுவாமி கோயில் தெரு
பெத்துசெட்டிப் பேட்டை
புதுச்சேரி - 605008

முழுமுதலாம் பரம்பொருளின் அருளால் தோன்றி
முருகனவன் துணைவரென வீரம் காட்டி
விழுப்பமிகு கயிலைதனில் வில்வம் தன்னால்
விரைகழலைப் பூசித்து அரசாய் வந்த
கெழுதகையாம் முசுகுந்தன் துணையாய் ஞாலம்
கீர்த்திபெற வந்துதித்த வீர வாகு
செழுமரபாம் செங்குந்தர் கீர்த்தி வாழி
சிறப்பணைத்தும் பெற்றோங்கி செகத்து வாழி!

முதற்பொருளின் மரபெனவே முதலி யாராம்
முருகனவன் வேலென்ன வலிமை மிக்கா
யுதமான செங்குந்தம் கரத்தில் தாங்கும்
உரந்தன்னால் செங்குந்தர் எனவும் பெற்றார்
விதவிதமாய்ப் பழம்பெருமை பேசு கின்றோம்
வீண்காலம் போக்காமல் இந்த நாளில்
இதமாகத் துறையனைத்தும் இடம்பெற் றோங்க
ஈரோட்டு மாநாடு தி டம் காண்க.



வாழ்க செங்குந்தம்!

வளர்க சமுதாயம்!!

சிறப்பிதழ்

செ. குப்புசாமி (SKC)
தலைவர், திண்டுக்கல் மாவட்ட
செங்குந்த மகாஜன சங்கம்,
எஸ்கேசீஸ் பில்டிங்,
மெயின்ரோடு, திண்டுக்கல்.

★ ★ ★

செங்குந்த மாவட்ட சங்கமெனும் மாநாடு,
தங்கத்தலைவர்கள் சீர்கொண்ட ஈரோடு,
எங்கும்நம் செங்குந்தர் ஏறுகொள நேரோடு,
அங்கம் வகித்து நல் அணிசேர்வர் பாரோடு!

ஒற்றுமை நிலையாக உன்னத பண்போடு,
வேற்றுமை அகற்றியே வீரத்தின் உயர்வோடு,
கற்றவர் கருத்தினை கடமையின் உணர்வோடு,
சுற்றமும் சமத்துவ சுதந்திர பேரோடு!

கதிரவன் தோன்றிட காலத்தின் விடிவெள்ளி,
விதியென்று நேரத்தை வீணாக்கி போகாமல்,
உதிக்கின்ற முன்னேற்ற உறுதிகொள திட்டங்கள்,
மதிவழி சென்றிடும் மாசிலா மாநாடு!

அனைத்துமா வட்டங்கள் அணிசேரும் பொன்னாளாம்,
பிணைத்துநற் சான்றுகள் பிற்கால சந்ததியும்
இணைத்துநம் வாழ்விற்கு எழுச்சிமிகு நன்னாளாம்,
நினைத்துறுதி கொண்டதே சிந்தனையின் சிறப்பாகும்!



வருகின்ற காலத்தை வகையோடு செயலாற்றி.
பெறுகின்ற ஆதாரம் பெருமையுடன் முன்னேறி,
வறுமையெனும் வாட்டங்கள் வழிமாறிப் போகட்டும்,
திருவருளால் செங்குந்தர் சிறப்புடன் வாழ்ந்திடவே!

தூங்காமை கல்வியும் துணிவுடமை செல்வமும்,
நீங்காமை பெற்றுவளம் நீடுபுகழ் வாழ்ந்திடவே,
செங்குந்தர் குலமனைத்தும் செம்மையுடன் சீரோங்க,
எங்கும் முரசொலிக்க எழுச்சிகொள வாழ்த்திடுவோம்!



ஒற்றுமையே உயர்வு

ஏ. நடராஜ முதலியார்

மண்டல செயலாளர், நீலமலைக்கோட்டை

செங்குந்தம் சமுதாயம் ஒன்றுபட தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கத்தை பெரியவர்களரல் ஆரம்பிக்கப்பட்டது. இன்று வானாளாவி புகழ்ந்து விளங்குவதென்றால் நமது ஒற்றுமையே அதன் காரணமாக பல மாநில மாநாடும் மாவட்ட மாநாடும் நடந்து வருவதை அறிகின்றோம். அதுபோன்று மாநில சங்கத்திற்கு உறுதுணையாக மாவட்ட சங்கங்கள், கிளைச்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு வெற்றி நடைபோடுவதை அறிகின்றோம், அனைத்து மாவட்டத்தின் எடுத்துக்காட்டாகவும், முன்னோடியாக விளங்கும் ஈரோட்டில் மாவட்ட மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் பெரியவர் தலைவர் மு த் து ச் சா மி முதலியார், அவரின் தொண்டும், சேவையும் மறக்க முடியாது. பல பணிகள் செய்து வருவதையும் அறிகின்றோம். அது போன்று செங்குந்த செம்மல் கைத்தறி காவலர் சமூக தலைவர் திரு ஜே. சுத்தானந்தன் பி. எஸ். ஸி. அவர்களின் அயராது அனைத்து மாவட்ட சமுதாய பெரியவர்களையும் இளைய தலைமுறைகளையும் சந்தித்து ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து வருவதையும் அறிகின்றோம், இனி நாம் செய்வது என்ன? சிற்றூர் பேரூரில் உள்ள அனைத்து ஊர்களிலும் சங்கங்கள் அமைக்க வேண்டும். ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும். சமூகத்திற்காக பாடுபட்டு வரும் பெரியவர்களை எண்ணிப்பாருங்கள். கைத்தறியை பாதுகாக்கப்படவேண்டும், சமூகம் உயர் நிலை அடைய வேண்டுமென்று கடைசி மூச்சுவரை உழைத்த கைத்தறி காவலர் பத்மஸ்ரீ எம் பி. நாச்சிமுத்து அவர்களை மறக்கமுடியுமா? சைவத்தொண்டு புரியும்அனைத்து மதத் தலைவர்கள் போன்றும் நம இன புரவலர் சுவாமி வாரியார் அவர்களை திருப்பூர் குமரன் தில்லையாடி வள்ளியம்மையும், நம் இனத்தவர்களின் தொண்டு. எண்ணிப்பாருங்கள், எந்த வகையிலும் நம் இனத்தவர்கள் இளைத்தவர்கள் அல்ல; ஆகவே நாம் ஒற்றுமையை நிலை நிறுத்த பாடுபடுங்கள். சில கிராமங்களில் ஒற்றுமை குறைவால் நாம் வலிமையை இழந்து வருகின்றோம் ஆற்றலோடு அரும்பணிபுரிய வரும் இளம் தலைமுறைகளுக்கு உறுதுணை செய்யுங்கள். அங்காங்கே உள்ள படித்த இளைஞர்கள் புதுத் தொழிலை ஆரம்பிக்க முயற்சி செய்யுங்கள். இதற்காக நமதுமாநில இளைஞர்அணி அமைப்பாளர் தி. ஜெகதீசன் பி.எஸ்.ஸி அவர்கள் தொழில் பெறுவதற்குண்டான வழி முறைகளை செய்து வருகின்றார். ஆகவே நீங்கள் விழிப்புடன் செயல்பட, நம் இனத்தவர்களை ஒன்று சேருங்கள். மாநில சங்கம் மாவட்ட சங்கங்களுக்கு உறுதுணையாக அனைத்து ஊர்களில் உள்ள ஆண். பெண், அனைவரையும் ஒன்று சேர்த்து உறுப்பினராக ஆக்குங்கள் அதற்கு அந்தந்த மாவட்டத்தின் தலைவர், செயலாளரை அணுகுங்கள் செய்திகளையும், நம் இனத்தவர்களையும் கண்டு கொள்ள, செங்குந்தமித்திரன், செங்குந்தமணி, முரசு பத்திரிகைகளை அவசியம் வாங்கி படியுங்கள். விடுபட்டு வரும் ஒற்றுமைக்கு வழி காண சமூக முன்னேற்றத்திற்கு உறுதுணை யாக சங்கம் அமையுங்கள்.

எண்ணுங்கள், செயல்படுங்கள், ஒன்றுபடுங்கள் உயர்வடைவோம்.

வாழ்க செங்குந்தம்!

சிந்திக்க சில சிந்தனைகள்

த. தங்கவேலு

''உலகத்தினிடத்தே பெறுவதற்கு மிகவும் அருமையாகிய மனித தேகத்தைப் பெற்றவர்கள் நாம்'' என வள்ளல் பெருமான் கூறுகிறார். மனித தேகத்தை அடைந்து விட்டாலும் கூட மனித நேயத்துடன் மனிதராக இப்படித்தான் வாழவேண்டும் என்றநெறி வகுத்துக்கொள்ளவும் வேண்டுமல்லவா?

இளைய தலைமுறையினரின் வியத்தகு அறிவும், ஆற்றலும், கூர்மையும் மிகவும் போற்றத்தக்கது அதற்கென நாட்களை விட தற்போது அவர்களுக்குள்ள வசதிகளும், வாய்ப்புகளும் அவர்களின் திறமைகளை வளர்க்க பெரிதும் உதவுகின்றன. ஒவ்வொரு வரிடத்தும் ஒவ்வொரு திறமை இருக்கத்தான் செய்கிறது. பள்ளிப் படிப்பில் நூறு மதிப்பெணகள் பெறாதவர்கள் எல்லாம் வாழ்க்கையின் ஓரம் தள்ளப்பட வேண்டியவர்கள் கிடையாது, வாழ்க்கையில் மிகவும் வெற்றி கண்டவர்கள் சாதாரண திறமை கொண்டவர் களாகத்தான் ஆரம்பத்தில் இருந்திருக்கிறார்கள். எனவே அவர்களின் ஆர்வம் எந்த விதத்தில் என அறிந்து அந்தவிதமாக அவர்களை ஊக்குவிக்க வேண்டிய கடமை பெற்றோருக்குதான்.


வாணிபம், வியாபாரம், விவசாயம், ஆடல், பாடல் ஓவியம், விளையாட்டு என்று இன்னும் எண்ணற்ற துறைகளிலும் சிறந்து பிரகாசிக்க முடியும் எட்டுததிக்குகளிலும் சென்று செல்வங்கள் கொணர்ந்திடுவீர். இங்கு எந்த நாடு சென்று தொழில் நுட்பங்களைக் கற்றாலும் சொந்த நாட்டுக்கும் உங்கள் திறமை கொஞசம் பயன்தர வேண்டும்.

எந்நேரமும் பள்ளிப்பாடங்களுடனே மன்றாடும் நீங்கள், சற்றேனும் பரபரப்பு ஓங்கி மனது புத்துணர்ச்சி பெற அரிய கலைகளை ரசிக்கவும் நேரம் ஒதுக்குங்கள். தேர்வுகளுக்கென்று அல்லாமல், ஓய்வு வேளைகளில் நம்நாட்டு அயல் நாட்டுப் பெரு மக்களின் வாழ்க்கைச் சரித்திரங்களைப் படித்தாலும் நலிவுற்றோர்களுக்குச் சேவையும் நேர்மையும் நாணயமும் தவறாத பொருள் சேர்க்கை என நல்ல கொள்கைகளையே லட்சியங்களாகக் கொள்ளுங்கள்.


ஒன்றை மட்டும் இங்கு திண்ணமாகக் கூறிக்கொள்கிறேன். மேல்நாட்டு அறிஞர் ஒருவர் தனது ''சிறியது தான் அழகானது'' **Schumacher's ''Small is Beautifull''** என்ற அரிய நூலில் ஒரு நாட்டின் செல்வங்களாகப்படும் கனிவளங்களோ மற்ற வளங்களோ அந்நாட்டின் உண்மையான செல்வமாகாது உண்மையான செல்வம் மக்களின் ஒழுங்கு முறை, கல்வி அறிவு மற்றும் அவர்களின் கட்டுப்பாடான வாழ்க்கை முறையாகும் என்றார். இதற்கு கண்முன் உள்ள உதாரணம் ஜப்பான் நாடுதான்.

எல்லாவற்றிற்கும் மேலாக உள்ளத்தையும் உடலையும் மிகுந்த ஆரோக்கியத் துடன் வைத்துக்கொண்டால் உலகத்தில் எந்த சாதனையையும் நிகழ்த்த முடியும். தீயென வெறுத்து ஒதுக்கி நல்லவைகளை நாடி நல்ல ரசனைகளை வளர்த்துக்கொண்டு வையத்து வாழ்வாங்கு வாழவேண்டும்.

O——O



கோபி அருள்மிகு சுப்ரமணியர்சுவாமி
பவளமலை



கொமரப்பா செங்குந்தர் மேல்நிலைப் பள்ளி
சென்னிமலை



பச்சைமலை அருள்மிகு சுப்ரமணிய சுவாமி கோவில்
கோபிசெட்டிபாளையம்



அருள்மிகு சிவபெருமான் ஆலயம்
பாரியூர், கோபிசெட்டிபாளையம்



செங்குந்தர் சிறப்பும் சூரிய குல மரபினர் சோழ மன்னர்கள் உறவும் சம்பந்தமும்

பி. பழனியப்ப முதலியார்,
பெரியதனக்காரர்,
நடுப்பாளையம்,
சித்தோடு
பெரியார் மாவட்டம்.

(சூரபத்மனும் மகேந்திரபுரியும்)

பிறவா யாக்கைப் பெருமானே முழுமுதற் கடவுளென்று நுதல்விழிநாட்டத்து முதல்வனாம் சிவபெருமானையே சிந்தித்து, வழிபட்டுப் பெருந்தவம் புரிந்து அப்பெருமானால் அநேக வரங்களுடன் வச்சிர தேகம் எவராலும் அழிக்க முடியாத வரம், இந்திர ஞாலத்தேர் முதலிய பல சிறப்புகளுடனும், நூற்றெட்டு யுகம் ஆயுளும் பெற்று. ஆயிரத்தெட்டண்டங்களுக்கும் அதிபதியாகி அரசு புரிந்துவரும் அசுரன் சூரபத்மன். அவ்வசுரன் மகேந்திரபுரி என்ற நகரமைத்து நமது சகோதரர்கள், மற்றும் சுற்றத்தார்களுடனும் அந்நகரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்து வந்தான். சிறந்த சிவபக்தனான சூரபத்மன், சிவபெருமானைத் தியானித்து பூசனை வழிபாடுகள் நெறிமுறையாகப் பொழுதறிந்து செய்தும், அப்பூசைக்கு முன்பு நீர் கூட அருந்தா விரதம் கொண்ட அவ்வசுரன், தேவர்கள் உறையும் நகரின் பெயர் இந்திரபுரி என்று கூறப்படுவதற்கு மேல். தமது நகருக்கு மேலும் அடைமொழி சேர்த்து மகேந்திரபுரி என்ற பெயர் சூட்டி ஆட்சி செய்து வந்தான்.

தேவாசுரர்களின் பகைமை

தேவர்களும். அசுரர்களும் காசிபமுனிவரின் புதல்வர்களாகத் தோன்றியவர்கள் எனவே அம்முறையில் சகோதரர்களாவர். இருப்பினும் யாது காரணமோ இரு சாராருக்கும், என்றும் நீங்காப் பகைமை இருந்து கொண்டு வருகிறது. அவ்விதப் பகைமை தேவர்களுக்கு அதிகம் உள்ளதென்பதை பலநூல்களில் கூறப்படு கின்றன. அவை பல நிகழ்ச்சிகளில் அறிந்துள்ளோம். இவ்வுண்மை அடுத்துவரும் மூதண்ட முனிவரின் வேள்வி யிலும் காணலாம். பகைமை கொண்ட தேவர்களைவென்று, அடிமையாக் கொண்டு, அவர்களுக்குப் பழக்க மில்லாப் பணிகளைத் தமக்கும் தம் சுற்றத்தாருக்கும் வேலையாட்களாய்ப் பணி செய்யக் கட்டளையிட்டுத் துன்புறுத்தி வந்தான் சூரபத்மன். பன்னெடுங்காலமாய் அத்துயரில் அழுந்திய தேவர்களுக்கு ஒரு நிகழ்ச்சி நினைவிற்கு வந்தது. அது என்ன நிகழ்ச்சி சிவபெருமானை மதியாமலும் அழையாமலும். தக்கன் செய்த வேள்விக்குத் தாங்கள் சென்றதுதான் காரணம் என்ற விழிப்புணர்வாகும். அத்தவறுக்கு வருந்திக் கயிலை சென்று வாயிற் காவலர்களின் ஒப்புதல் கொண்டு. சிவபெருமானைக்கண்டு வணங்கித் தங்களுக்கு நேர்ந்த இத்துயரை நீக்கிக் காத்தருள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டதற்கிரங்கிய இறைவன், உங்கல் துன்பத்தைப் போக்குவோம் என்று அபயம் அளித்தார்.

முருகப் பெருமான் தோற்றம்

சூரபத்மனுக்குத் தாம் கொடுத்த வரத்தைத் தாமே மாற்றுவது முறையன்றென்று கருதிய சிவபெருமான், தேவர்களுக்குக் கொடுத்த வாக்கினை நிறைவேற்றத் தமது கூறாக ஒரு புதல்வனைத் தோற்று வித்து அச்செயலை முடிக்கத் தமது ஐந்து முகங்களுடன் அதோ முகமென்ற கீழ்நோக்கும் முகமும் சேர்ந்து ஆறு திருமுகங்களின் நெற்றிக் கண்களிலிருந்தும் ஆறு தீப்பொறிகளைச் சிந்தினார். அவை களினின்றும் தோன்றியவர்தான் கந்தக் கடவுளென்றும், செந்தமிழுக்குச் சொந்தக் கடவுளென்றும், மக்களால் போற்றப்படும் தெய்வம் முருகப் பெருமான். அவ்விறைவனுக்கு மூதன் முதல் அம்பாளால் சூட்டிய பெயர் கந்தன் என்பதாகும் பின் மக்களால் பற்பல பெயர்களில் வணங்கப் பெறுகிறார்.

நவசக்திகள் தோற்றம்

சிவபெருமான் நெற்றிக் கண்களிலிருந்து சிந்திய தீப்பொறிகளின் கடும் வெப்பம் தாங்காது அண்ட பகிரண்டங்களும் நடுங்கின், அயன் அரி முதலான தேவர்களும் அணுக ஆற்றலற்றனர். அச்சமயம் சிவபெருமான் பக்கத்தில் அமர்ந்துள்ள உமாதேவியும் அச்சுடுமைக்கு அஞ்சி வியர்த்துத் திருவுளம் கலங்கி எழுந்து விரைந்து தமது ஆலயத்துக்கும் செல்லும்போது, அம்மையின் திருவடிகளில் அணிந்துள்ள இரத்தினச் சிலம்புகள், ஒன்றொடொன்று மோதியதில் சிதறிய நவ இரத்தினங்கள்; ஒன்பது மாதர்களாக அந்தந்த இரத்தினங்களின் நிறம் கொண்டு தோன்றி. சிவையின் தோற்றம்போற் காட்சியளித்தனர். இவர்கள் நவ சக்திகளாவர்.

நவ வீரர்கள் தோற்றம்

இவ்வாறு தோன்றி நவசக்திகள், சிவபெருமானை வணங்கி அன்பும் ஆவலும் கொண்டு நின்றனர். இறைவன் திருக்கண் பார்வையில் அப்போதே கருவுற்றார்கள். அம்மாதர்கள் அதனைக் கண்ணுற்ற உமாதேவியார் சினங்கொண்டு இவர்கள் தமக்கு மாறுபட்டவர்களென்பதால் அவர்களை நோக்கிக் குழந்தை பெறாமல் இக் கருவுடனேயே இருக்கவென்று கூறினார். அச்சொல்லால் பலகாலம் கருச்சுமையால் வருந்தினர். அம மாதாகள், அத்துடன் கருவிற்றோன்றியவர்கள், சிவபெருமான் திருவருளாற் தோன்றியதால் இறைவன் திருவடியை எண்ணித் தியானத்திலிருந்தாலும் மேலும் சுமை தாங்காது அம்மாதர்கள். இறைவனையும் இறைவியையும் வணங்கி இத்துயரிலிருந்து விடுபட அருளுமாறு வேண்டி நிற்க, அவ்வேண்டுதலுக்கு இரங்கிய இறைவன் உமையை நோக்க. அக்குறிப்பறிந்த அம்பாள் தாமும் பெண்ணாக இருந்தும் இத்தவறு செய்து விட்டோமே என வருந்தி நவ சக்திகளைப் பார்த்து இனி நீங்கள் குழந்தை பெறுவீர்களாக எனக் கூறினார். அவ்வருட் செயலை நவ மாதர்களின் வயிற்றினுள் யோக நிலையில் இருக்கும், வீரர்கள் உணர்ந்து. மகிழ்ந்து இறைவன் திருவடியைத் தியானித்தபடியே கருவிலிருந்த கால வளர்ச்சியுடன். தங்கள் தங்கள் அன்னையர் களின் நிறம் கொண்டு பிரம தேவரைப்போல் நாபிக் கமலத்தின் வழியே வெளித் தோன்றினார்கள் இவர்கள் நவ வீரர்களாவர்.

நவ வீரர்கள் குந்தமும் வாளும் பெறுதல்

இவ்வாறு தோன்றிய சிறுவர்களை உமாதேவியார் அதிசயத்துடன் பார்க்கவும், இறைவன் அம்மையை நோக்கி. இவர்கள் வேறு யாரும் அல்லர், புதியவர்களும் அல்லர், நந்தி கணத்தவர்களே. இவர்கள் நம் குழந்தைகள் இவர்களை வாழ்த்துமாறு கூறினார். அம்மையும் சந்தேகம் தெளிந்து, மகிழ்ந்து ஒன்பது வீரர்களுக்கும் தனித்தனி ஒவ்வொரு குந்தமும் வழங்கி வாழ்த்தினார். இறைவனும் தமது பரிசாக ஒவ்வொருவருக்கும் வீரமும், வெற்றியும், மங்காத சக்தியும் கொண்ட ஒவ்வொரு வாளும் அளித்து ஆசியருளி யும் நீங்கள் ஒன்பதின்மரும் உங்கள் தமையனான முருகப் பெருமானிடம் என்றென்றும் நீங்காத் துணைவர் களாக, அவர்தம் திருவருள் பெற்று அவருக்கு உதவியாயிருக்கவென்று பணித்தார்.

கல்வி, வீரம். வெற்றி, நற்புகழ்யாவும் நவ வீரர்கள் பெற்றனர்

சிவபெருமானின் ஆசி பெற்ற நவ வீரர்கள் கல்வியிலும், வீரத்திலும், நீதியிலும் மேன்மையுள்ளவர் களாய் நன் நெறி வழாத நல்லோருக்கு இடுக்கண் நேருங்கால் அவைகளைப் போக்கியும் நேர்மை நெறி தவறாது வாழ்ந்தார்கள். இவர்களின் நற்செயலுக்கு ஒன்றை உதாரணத்துக் கூறலாம் அது வருமாறு.

தவ முனிவர்தம் வேள்விக்குத் தேவர்களால் தடை

மூதண்ட முனிவரென்ற ஒரு தவ முனிவர். தாம் பரகதி அடைய விரும்பி அவ்வகை யாகம் செய்ய முயன்றார். அதுவறிந்த தேவர்கள் ஆரம்பத்திலேயே பொறாமையும் கவலையும் கொண்டனர். தடையும் செய்தனர். ஏன் பொறாமை ஏன் கவலை, எதற்காகத் தடை, எல்லாம காரணமாகத்தான் எங்கே தமது பதவி பறிபோய் விடுமோ என்ற அச்சம் இந்திரனுக்கு, எவராவது தங்கள் நற்பயன் கருதி வேள்வி செய் தாலும் இந்திரனுக்கு நடுக்கம் வருவது உண்டு, காரணம் பதவி ஆசையால். மூதண்ட முனிவர் தாம் பரகதி யடைய விரும்பி யாகம் செய்ய முயன்றாரேயன்றி பதவி ஆசையாலன்று. ஒரு தவ முனிவர். பதவியை விரும்பி வேள்வி செய்வாரா என்பதைப் புரிந்து கொள்ள முடியாத தேவர்கள். வேள்விக்குத் தடை செய் தார்கள். ஆயினும் முனிவர்கள் சபித்தாலும் சபிப்பார்களேயன்றி எதிர்த்துப் போராட மாட்டார்கள் என்பது பலரும் அறிந்ததே. ஆகவே மூதண்ட முனிவர் முருகப் பெருமானை அணுகித் தாம் செய்யும் வேள்விக்குத் தேவர்கள் தடை செய்கிறீர்கள். அதுவகற்றி எவ்வித இடையூறுமின்றி வேள்வி நடைபெற உதவியருளும்படி வேண்டினார். அக்கோரிக்கைக்கு இரங்கி. முனிவர் செய்யும் வேள்விக்குத் தடையை நீக்கி வாருங்கள் என்று நவ வீரர்களுக்குக் கட்டளையருளினார் முருகப் பெருமான்.

நவவீரர்கள் முனிவரின் வேள்வி காத்தனர்

அவ்வாறு முருகப் பெருமான் கட்டளையை ஏற்றுச் சென்ற நவ வீரர்களைக் கண்டும் இவர்கள் முருகப் பெருமானின் தம்பிகள் என்றும் தமையனாரால் அனுப்பப்பட்டு வந்துள்ளார்கள் என்று தெரிந்தும் கூட விலகிச் செல்ல மனமில்லாத் தேவர்கள், நவ வீரர்களுடன் போர் செய்யவும் துணிந்தார்கள், எனவே போரும் மூண்டது, முடிவில் தேவர்கள் ஓடினார்கள், வென்றவர்கள் தோற்றவர்களின் உடைமைகளை கவர்வதென்ற நியதிப்படி, அவர்களிடமிருந்த பொருட்களைப்பறித்து அவற்றில் வேள்விக்குதவும் பொருட்களை முனிவர்க்கீந்தும், மகுடம் வாள், ஆபரணம் முதலியவற்றை தங்கட்காக்கிக் கொண்டும் வேள்வியும் குறைவற நடைபெற உதவித் திரும்பிவந்து தமையனாரிடம் நடந்தவற்றைக் கூறி அங்கு உறைந்தனர். இது இவ்வாறிருக்க.

முடு முகன் தோற்றம்பற்றிப் பார்ப்போம்

விதுமன் என்னும் தந்துருவ மன்னன் ஒருவன் சுகுமாரி என்னும் குனிபத்தினியைக் காதல் கொண்டழைக்க அம்மாது சீருரங்கே போவென சினந்துகூற அப்போதே குரங்கானான் அம்மன்னன், அக் குரங்கானது காடுவனங்களிலும் திரியும் போது, கந்தருவர்கள் நல்ல தேசுடையவர்களாதலால், குரங்கும் நல்ல வனப்புடன் தோன்றியது, மற்றக் குரங்குகள் இப்புதுக் குரங்கை தங்கள் தலைவனாக கொண்டு வாழ்ந்துவரும் நாளில், ஒரு நாள் புதுக்குரங்கு தங்கள் இனத்துக்கே உண்டான குரங்குச் சேட்டையால் ஒரு வில்வ மரத்தின் மீதேறி உட்கார்ந்து கொண்டு அழுத்தி பூர்வமாகத் தழைகளைப் பறித்துக் கீழே போட்டுக் கொண்டிருக்க அம்மரத்தின் கீழ் லிங்க வடிவில் இருக்கும் சிவபெருமான் மீது அத்தழைகள் விழவும், இவ்வதிசயம் யாதென இறைவன் மேலே நோக்க, அப்பார்வையால் குரங்குருவம் மாறி, பழைய கந்தருவத் தோற்றத்துடன் கீழே வந்து இறைவனை வணங்கித் தனக்கு ஏற்பட்ட சாபத்தின் விரதமும் கூறி, இவ்வுருவம் நீங்கிப் பழைய உருவமும் பதவியும் பெறக் கிருபை செய்ய வேண்டுமெனப் பணிந்தான், நீ சோழ மண்டலத்தின் அரசன் வண்டிக்காற், சோழன் வழியிற் வேரூன்றி சில காலம் அரசனாய் வாழ்ந்து பின் உன் பழைய பதவி பெறுவாய் என்றார் அவன் மேலும் வணங்கித் தாம் மனிதனாய்ப் பிறந்தாலும் முகம் குரங்கு (முசு) முகமாக வேண்டிக் கொண்டான், கைகட்டி வாய்பொத்தி மிகவும் பணிவுடன் நிற்கும் அக்கந்தருவனை நோக்கி அவ்வாறே ஆகுக எனக்கூறி மறைந்தார். அவனும் அவ்விதமாகச் சோழ மரபிற்றோன்றி மனித உடலும் குரங்கு முகமாயும் இருக்க. இவனுக்கு முசு முகன் என்று பெயர் சூட்டப்பெற்றுச் சோழ மண்டல அரசனாய் திருக்கருவூரைத் தலை நகராக்கொண்டு அரசு செய்து வந்தான். (முற்பெயர் முசு முகன் என்பதை நினைவிற் கொவ்ளவேண்டும்.)

நவ வீரர்கள் வெற்றியும் திருமணமும்

சோழ மண்டல அரசனால் முசு முகச் சோழன் தங்கள் முன்னோர்கள் போன்று பல சிற்றரசர்களை வென்று, கப்பம் பெற்றுப் பேரரசனாக வேண்டுமென்றே விருப்பம் கொண்டு குல குருவிடம் ஆலோசித்து அக்குருவின் கருத்தும் ஆசியும் பெற்று, முருகப் பெருமானை வேண்டிப் பல நாள் தவமிருந்தும் கந்தர் சஷ்டி விரதம் மிகவும் கடுமையால் அனுசரித்தும் வந்தான். அத்தவத்தின் முடிவில் முருகப் பெருமான் காட்சிப் பெற்றுத் தமது விருப்பத்தைக்கூறி, அவரருளால் நவ வீரர்களைப் படைத்துணைவராகப் பெற்று, அவ்வீரர் களால் பற்பல வெற்றிகளும் கொண்டு சக்கரவர்த்தியாகத் திகழும் மகிழ்ச்சியில் அவ்வீரர்களுக்குத் திருமணம் செய்வித்து செங்குந்தர்களின் சம்பந்த உறவு பெற்று அவ்வுறவிற் செங்குந்தர்கள் உறவுக் கலப்பால் தமது பெயரையும் (முசு முகன் என்றிருப்பதை மாற்றி) முசுகுந்தன் என்று வைத்துக் கொண்டான் என வரலாறு. ஆகவே செங்குந்தர்கள் என்றழைக்கப் பெறுபவர்கள் நவ வீரர் வழியினரும், சோழ மன்னர்கள் வழியினரும் சேர்ந்தே என நன்கு விளங்குகிறது. பெண் கொடுக்க எடுக்கச் செங்குந்தருள் மாமன் மைத்துனன் முறைமை ஏற்பட்டதும் இக்காரணமே என்பது உறுதிப்பாடு.

முருகப் பெருமான் திருவிழாக் கொடித் தத்துவம்

முருகப் பெருமான் திருவிழா ஆரம்பத்தில் சேவற்கொடி ஏற்றுபவர்கள் செங்குந்தராவர். அவர்கள் தங்கள் தொழிலில் கையாளும் நூல் இழைகளைக் கொண்டு 6 தத்துவங்களை உள்ளடக்கியும் சதுரகராதியில் 96 தத்துவங்கள் கூறப்பட்டிருப்பதால் அவையும் கருத்திற் கொண்டு 36 இழைகள் கொண்ட ஒரு பிரியும் 30, 30 ஆக இரண்டு பிரிகளும் திரித்து அம்மூன்று பிரிகளும் சேர்ந்து ஒன்றாக முறுக்கி, மனம் வாக்கு, காயம் என மூன்றும் திரிபின்றி ஒரே நிலையில் நிற்கும் எண்ணத்தோடு அக்கயிற்றைக் கொண்டு கொடி ஏற்றுதல் மரபு. முற்காலத்தில் கொடித்துணியின் அகலம் நீளம் கயிற்றின் நீளம் ஆகியவைவும் கணக்கிட்டுக் கொடி ஏற்றியும் உள்ளனர். இன்று அவை துள்ளியமாய்த் தெரியாததால் கயிற்றின் தத்துவங்களை மட்டும் கடைப் பிடிக்கும் பாங்கில் சில வீரர்களில் கொடி ஏற்றியும் வருகிறார்கள்.

முருகப் பெருமான் ஆலயம் சூர சங்கார நிகழ்ச்சிகள்

முருகப் பெருமான் ஆலயங்களில் ஐப்பசி சுக்கிலபட்ச சஷ்டியன்று சூர சங்காரம் நிகழும் காலத்தில் அந்நிகழ்ச்சியில், நவ வீரர் வேடமிட்டு போர் முரசு முழங்க குந்தம், வாள், கேடயம் கைக் கொண்டு மற்றும் படைக் கலங்களுடன் முருகப் பெருமானுடன் சென்று, வீர முழக்கத்தோடு அவ்விழாவிற் கலந்து, வெற்றியுடன் திரும்புபவர்கள் செங்குந்தர்களே. இவ்விதம் பல ஆலயங்களிலும் நடைபெறும் விழாவிற் கலந்து கொண்டு புகழ் பெறுவதும் செங்குந்தர்கள் என்பதும் தனிச் சிறப்பே.

செங்குந்தர் போற்றும் கொடியின் விளக்கம்

சோழ அரசர் குடும்பத்தின் சம்பந்தன் கொண்டமையால், அவர்களும் செங்குந்தருள் கலந்து செங்குந்தரானதால் அவர்கள் கொண்டுள்ள கொடிச் சின்னமான புலியும், நவ வீரர்கள் வழியினர் குலச் சின்னமான குந்தமும், செங்குந்தர்களுக்கு என்றென்றும் நீங்காத் துணையாகத் திருவருள் பாலித்துக் காத்து வரும், முருகப் பெருமான் வெற்றிக் கொடியாகிய சேவலும், சேர்த்து மூன்று சின்னமுமமைந்த கொடியைச் செங்குந்தர்கள் தங்கள் குலக் கொடியாகக் கொண்டதும் அச்சிறப்பிலேயாம்.

செங்குந்தர்கள் பல ஆலயங்களின் அறங்காவலராகவும் புதுக் கோயில்கள் எடுப்பித்தும் உள்ளனர்

பண்டைநாள் முதலே சிவ வழிபாடு, ஒழுக்கம், சீலம், நேர்மை, தமிழ்ப்பற்றுடன் சிறந்த புலமையும் பெற்றுச் சிறப்புடன் விளங்கும் செங்குந்தர்கள், பல ஆலயங்களின் ஆட்சியாளராகவும், எத்தனையோ புதுக் கோயில்களும் எடுப்பித்தும் உள்ளனர் முன்னாளில் இவர்களையும்,, மற்றும், இம்மரபைச் சார்ந்தவர்களையும் ஊன் புசியா உத்தமர்களென்று பலராலும் போற்றப்படுதலும் உண்டு

முசுகுந்தன் நிறுவிய சிவாலயம்

திரு ஈங்கோலை மலையில் மேற்கில் உள்ள உயரமான பகுதியில், கயிலாயத்திலிருந்துவந்த முசுகுந்தச் சக்கிரவர்த்தி சிவன் சோயில் ஒன்றை ஸ்ரீ லலிதாம்பிகை சக்தி பிடத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும்படியாக நிர்மானம் செய்துள்ளார் என்ற வரலாறு உண்டு.

குல தெய்வ வழிபாடு

முசுகுந்தன் வழியினரும் நவ வீரர் வழியினரும் கலந்த மாமன் மைத்துனர்களாகிய செங்குந்தர்கள் ஒவ்வொரு குடும்பத்தினரும் வழிவழியாகத் தாங்கள் வழிபடு தெய்வமாக அவரவர்கள் இஷ்ட தெய்வங்களை குல தெய்வமாக வழிபட்டு வந்து பின்பு கோயில்கள் அமைத்தும் போற்றி வருகிறார்கள். இருப்பினும் அவை வழிபடு தெய்வமாகக் கொள்ளலாம். அத்துடன் தங்கள் குல உற்பவ காரணர்களாகிய நவ வீரர்களையும் முசுகுந்தரையும் குல தெய்வமாக வழிபடுவது செங்குந்தர்களின் முக்கிய கடமையாகும்.

குல குரு

செங்குந்த மரபினர், திருமணம் மற்றும் குடும்பத்தில் நடைபெறும் எல்லாச் சடங்குகளும், தங்கள் குலத்திலேயே தமிழ்மறை பயின்ற சிறந்த ஆசிரியரைக் கொண்டே நடத்தி வத்தனர் முன்னோர்கள், அம்முறை இன்று பல பகுதிளில் மறைந்தாலும் கூட, சில பகுதிகளில் பழைய முறையை கைவிடாமல் தமிழ் மறை ஒதியே திருமணம் போன்றவைகள் நடத்துவது வழக்கத்தில் உள்ளன. இம்முறை நீடிப்பதை நாமும் கண்டுள்ளோம். மறைந்துவிட்ட மற்றைப் பகுதிகளிலும், அப்பண்டைய முறையை மீண்டும் கொணர முயல்வதும் அந்நன் முயற்சிக்கு செங்குந்த மக்கள் அனைவரும் ஆதரவு தந்து வெற்றிபெற ஒத்துழைக்குமாறும் வேண்டப் பெறுகிறார்கள், அறநெறி வழாச் செங்குந்தர்கள், கல்வியும், நீதி நெறியும் நேர்மையும் புகழு மிக்க சான்றோர்களாய் நீடுழி வாழ அருள் வழங்குமாறு எல்லாம்வல்ல எம் இறைவன் திருவடியை உன்னி வணங்கிப் போற்றி வேண்டிக் கொண்டு இவ்வுரைக் கோவையை நிறைக்கின்றேன்.

வாழ்க செங்குந்தம்

வளர்க செந்தமிழ்

செங்குந்த கோத்திரமக்கள் தெய்வ வழிபாடு

நவ சக்திகள் வணக்கம்

மரகதம் பவளம் நீலம் மாணிக்கம் வைரம் முத்து
தரமிகு புட்ப ராகம் தண்ணொளிர் வைடூரிய மாய்
விரவுகோ மேதக மென்னும் விரிகதிர் மணியிற் றோன்றும்
அருள்நவ சக்தி கள்தம் அடிகளைப் போற்றி வாழ்வாம

நவ வீரர்கள் வணக்கம்

(மாணிக்கவல்லி மகன்) வீரவாகு

சீர்பெற்ற கந்தவேளின் செழுமையாம் தம்பியாகி
சூரனுக் கறிவுரையாம் சொல்லிலே நீதி கூறி
பாரினில் வலிமை யாலே பகைவரை வெற்றி கொண்ட
வீரப்போர் வீரவாகு விரைகழல் வணக்கம் செய்வாம்

(முத்துவல்லி மகன்) வீரகேசரி

இவரைச் செங்குந்தர்கள் முத்துக்குமாரன் என்ற பெயரிட்டு வணங்குவார்

என்னையாள் முத்துக்குமரன் யானைவாக னமும் கொண்டு
நன்னெறிக் குந்தமோடு நலிவில் கேடயமுங் தாங்கி
முன்னவன் முருகனோடு மொயம்பறா வாழ்வதாகி
தன்னடி போற்றும்குந்தர் தமக் காதித் தலைவன் ஆவான்

(புட்பராகவல்லி மகன்) வீரமகேந்திரர்

போற்று வோர்க் குரியவன் வீரம கேந்திரன்
ஏற்றுவார் தமக்கவன் இனியநற் றுணைவனாம்
கூற்றுவன் அவன் பெயர கூறவும் கூசுவன்
தூற்றியே அசுரரைத் தொலைத்த தாள் காப்பதாம்

(கோமேதகவல்லி மகன்) வீரமகேசர்

ஆரணத்தின் முறையுரைத்து அண்ணலை வணங்குவோர்
காரணத்தின் வெற்றி கொண்டு களிப்படைந்து வாழவே
வாரணத்தி லேறியுத்த வலிமைமிக்க போரிலே
சூரனைத் தடிந்த வீரமகேசரை வணங்குவாம்

(வைடூரியவல்லி மகன்) வீர புரந்தரர்

தய வோகுயர் தனிப்பேரருள் தனையே தருமுருகன்
நய மேபெற அடிபோற்றியும் நாளும் பணிந் தேத்தி
நய மேறிய சென்றேபகை தனைவாட்டி வீரச்
செய வோன் புரந்தர தேவரின் திருத்தாள்களைப் பணிவாம்

(வைரவல்லிமகன்) வீர ராக்கதர்

கந்தவேள் துணையு மாகிக் கருணையே வடிவ மாகி
எந்தையாம் முத்துக் குமரர்க் கிசைந்தநற் றம்பி யாகி
பந்தமாம் செங்குந்தர்க்குப் பலமருள் தெய்வமாகி
வந்தெமைக் காக்கும் வீர ராக்கதர் பாதம் போற்றி

(மரகதவல்லி மகன்) வீரமார்த்தாண்டர்

சுந்தர முருகவேள் துணைவ ராகியே
சந்ததம் அவர்பணி ஏற்று வாழ்ந்துநற்
பந்தமாய் மக்களைப் பரிந்து காத்திடும்
குந்தரில் வீரமார்த் தாண்டரைப் போற்றுவாம்

(பவளவல்லி மகன்) வீர புராந்தகர்

மயிலைவா கனமாக் கொண்ட மாண்புடை வேலன் நட்பால்
அயிலெயிற் றரவு தன்னை அம்மையில் பாதம் காக்கும்
செயலது புரியுமாப் போல் சேத்தனாம் கந்தன் சொந்தத்
தயவது பெற்ற வீர புராந்தகர் நம்மை காப்பார்

(நீலவல்லி மகன்) வீரதீரர்

வீரதீரப்பெயர் கூறியே புவியில் வெற்றிவேலன் துணையாகியே
போரதேபுரியும் பேரதேயுடைய பெருத்த வெற்றியுறும் வீரனும்
காரதாகி மழை நீரதாகியுல கோர் தமக்குதவும் நியதி போல்
நேரதாகி நிலை மாறிடாத வீரதீர ரெமைக் காக்கவே

நவ வீரர்களைப் பணிவோர் பெறும் பயன்

நவவீர ராகத் தோன்றி நலமுடைக் குந்தப் படையை
சிவை யெனும் ,உமைபாற் பெற்றுச்செகத்தினில் வெற்றியுற்று
பவமதிற் பலரும் போற்றும் பாங்குடை வீரர் தம்மை
தவமொடு பணிந்து வாழ்வார் சகலநற் பேறும் பெறுவார்

முசுகுந்தர் வணக்கம்

கந்தருவர் தம்மில் விதுமனென் மன்னன்
காவலன் சோழமன் மரபில்
விந்தையாய் முசுவின் முகத்தொடு தோன்றி
வேலவன் திருவருள் பெறு செங்
குந்தர்தம் துணையும் கொண்டவர் உறவின்
முறையுமாய் முசுகுந்த னெனவே
பந்தமாய் ஒருபேர் பெற்றவன் பாதம்
பணிவோடு போற்றி வாழ் குதுமே

செங்குந்தர் சிறப்பு

சிவன ருளாற் றோன்றுநவ வீரர் தங்கள்
திருமரபின் வழியினர்செங் குந்தர் தாமும்
நவமுறத்தம் உறவின்முறைச் சோழரோடும்
நாள்தோறும் சிவபூசை நெறியிற் செய்தும்
பவமதிலே ஊன்புசியாப் புனித ரென்றும்
பண்பொடுபற் பதிகளிலும் சிறப்பின் மிக்க
தவக்கோயில் நிருவாகத் திறமும் பெற்றுச்
சான் றோரென் புகழினையும் தாம் பெற்றாரே

தெய்வப் புலவர் திருவள்ளுவர் புகழ்ப் பாமாலை

மண்ணுலகில் மானிடனாய்த் தோன்றி வாழ்ந்து
மறை மொழியென் மாற்றதியாத் தமிழின் சுவையால்
எண்ணரிய அறநெறிஇவ் வுலகோர்க் காக
இயற்றியொரு நூற்றுமுப் பத்து மூன்றென
எண்ணுடைய அதிகாரத் தொகையிற் கோத்து
இணைப்பாக முப்பாலாம் வகையுட் சேர்த்து
திண்ணமொ டாயிரத்து முன்னூற்று முப்பதெனும்
திருக்குறளை வள்ளுவனார் சிறப்பிற் றந்தார்

எழுச்சியுடன் புறப்படுவோம்!

புலவர் செ. தட்சிணாமூர்த்தி,
எம். ஏ., பி. எட்.,
1/223, பூம்புகார்ச் சாலை,
செம்பொன்னார் கோவில் (அஞ்சல்)
தஞ்சை மாவட்டம் — 609 309.

ஈரோட்டில் மாநாடு. -அதுநம்
இதயத்திலே தேனாறு.
பாரோட்டில் செங்குந்தர்- புகழைப்
பரிமளிக்கச் செய்திடுமே! 1

★

பெரியாரின் தொண்டாலும் -அவரைப்
பெற்றெடுத்த புகழாலும்
உருவான மாவட்டம், அதில் நம்
ஒப்பரிய மாநாடு! 2

★

சென்னையில் நடைபெற்ற -நம்
செங்குந்தர் பேரணி பின்
மன்னுபுகழ்த் தரணியிலே -நாம்
67 புகழைப் பெற்றுவிட்டோம். 3

★

தறிக்குழியில் வீழ்ந்ததனால் —நாம்
தரித்திரராய்ப் போனோம் என
வெறித்தனமாய்ப் போராடி —கெட்ட
வீம்புகளைச் செய்தோமிலை! 4

★

முறையாக அரசினர்க்கே -நம்
முறையீட்டைத் தெரிவித்தோம்.
இறைபோல ஆய்ந்ததுவும் -நம்மேல்
இரக்கத்தைக் காட்டவில்லை. 5

★

நம்மிளைஞர் நலம்வேண்டி ஒன்றாய்
நாமெடுத்த முடிவினையே
தெம்பாக குரல் கொடுத்தோம் அலைகள்
திரண்டனவோ என நடந்தோம். 6

★

ஒரு சாரார் தந்நலத்தால் மிக்க
ஊக்கமுடன் போராடி
பெரும்பேறாய்த் தம்கோளை இன்று
பெற்றதனால் ஏறிவிட்டார். 7





பிற்பட்டோர் சலுகையினல் நாம்
பெற்றுவந்த உயர்வுகளை
முற்பட்டுக் குறைத்ததனால் இன்று
முன்னேற்றம் சரிந்ததுவே. 8

★

இந்த நிலை நீடித்தால் இனி
எந்நாளும் நம்மிளைஞர்
முந்துநிலை பெறுவாரோ? வாழ்வில்
முழுமைநிலை உறுவாரோ! 9

★

சிங்கமென வாழ்ந்தவர்நாம் - இன்று
சீர்கெட்டுப் போகலாமா?
செங்குந்தம் பெற்றெடுத்த - இளஞ்
சிங்கங்காள் எழுந்திடுவீர்! 10

★

சங்கெடுத்து முழக்கிடுவோம்; - பிற்படு
சமுகத்தின் உயர்வுக்கென
இங்கினிமேல் நாற்பதும் - வேண்டி
எழுச்சியுடன் புறப்படுவோம்! 11

★

மண்டல்குழு அறிக்கையினை — இன்று
மத்தியநல் அரசும்மனம்
கொண்டுவுடன் வெளியிட்டு - நம்
குறைதீர்க்க வேண்டாவோ? 12

★

நம்தலைவர் ஆனந்தர் - அவர்
நமைகூட்டிச் சொல்லட்டும்!
செம்மாந்துப் புறப்படுவோம்; - வெற்றித்
திருக்கனியைப் பறித்திடுவோம்! 13

அக்குறளின் பெருமைசிறி தறிந்த யானும்
அன்பர்களுக்கின்றேன் அவற்றுள் சிலதை
மிக்குறவே அகரமதை முதலாக் கொண்டே
மற்றபிற எழுத்தெல்லாம் மன்னிற் றென்பார்
எக்குறையும் இல்லாமல் இசைவிற் காக்கும்
இறையாதி பகவா னென் றியப்பு வாரே
பக்குவம்செய் வான்மழையோ டறம் ஒழுக்கம்
பயனுடைச்சொல் அன்பறிவு கல்வி கேள்வி

வாய்மையுறல் வெகுளாமை கொல்லா நெறியும்
வாழ்க்கைநலத் துணையுடனே விருந்தும் ஓம்பல்
தூய்மையுடைப் பெரியோரைத் துணையாக் கோடல்
சொற் பொருளின் உண்மை யெது வெனத் தெரிதல்
சேய் பெறுதல் அவையறிதல் ஊழின் வலிமைச்
செயல் முதலாம் செய்கையெலாம் சொல்லி மேலும்
ஆய்ந்தறியும ஆற்றலையும் அன்பிற் கூறி
அடக்கமொடு அருளுடைமை அறிவித் தாரே

ஊக்க மொடு ஒப்பறிதல் காலம் தேர்தல்
உயர்வுடைநட் பாராய்தல் மானம் காத்தல்
ஆக்கங்கொள் செய்நன்றி அகத்திற் றேக்கி
அறிவேன்நான் முழுதென்ற அகந்தை நீக்கி
ஏக்க மொடு பிறன்பொருளை நயவா நெஞ்சம்
ஏற்றுலகில் வாழ்பவனே மனிதன் என்னும்
நோக்கமதை நினைவினிலே நிலைக்கச் செய்து
நீண்டநாள் வாழ் முறையும் நெடிதுரைத் தார்

நேச மோடவ் வள்ளுவர்க்கு விழா வெடுத்தும்
நினைவுகள் அவ்வண்ணதல் தனையும் துணைவி
வாசுகியென் கற்புநிறை அன்னை தனையும்
வாழ்நாளும் எம்மனத்தே வைத்தன் னாரின்
பூசனையாய்ப் புகழ்ப் பாடல் பலவும் பாடி
போற்றுமென்றன் தமிழ்ச் சொற்குன் மகிழ்வா ரென்ற
ஆசையொடு பணிந்தேஇவ் விசைப் பாமாலை
அன்பொடவர் உருமனக் கொண் டணிவிக்கின்றேன்

முதலியார் என்ற பெயரின் வரலாற்றுச் செய்தி

இந்திரன் அயன்மால் தேவர் யாவர்க்கும் முதன்மையாக
வந்தபான் மையினால் சூல மழுப்படை அத்தனார்க்கு
முந்திய நாமம் தானும் முதலியார் ஆகையால் செங்
குந்தர் சந்ததிக்கு மப்பேர் முதலியா ரென்ப தாகும்

இப்பாடல் ஒட்டக்கூத்தர்



எண்ணிப் பாருங்க!......

கவிஞர் ஆர். வி. தங்கமணி, M. Com., M. Ed.,
மேலப்பழஞ்சநல்லூர் அஞ்சல்.
Pin: 608 301

1. சிந்தையில் வந்தவினா சந்தமெட்டு பாட்டுமாச்சு!
சொந்தங்களே ஒருநிமிடம் வாருங்க! - கவி
சிந்தனையை நீங்க எண்ணிப் பாருங்க!!

அத்தானே!.........

2. நாடாபோடும் பெரியபொண்ணு தாருசுத்தும் சின்னபுள்ள
ஓடாதேஞ்சியும் முன்னேறல அத்தானே! - நாம
உருப்படத்தான் வழியசொல்லு அத்தானே!!

3. சொந்தமாக நெய்ததுணி பொலிவுடனே நாட்டிலுள்ள
சந்தையிலே விற்பதென்ன அத்தானெ! - குடும்பம்
கந்தையிலெ நிற்பதென்ன அத்தானே!!

4. நூத்துக்கு நூறுவாங்கி நூலாலே வேட்டியாக்கி
சோத்துக்கும் வழியுமில்லே அத்தானே! - நாம
சுகப்படத்தான் நேரமுண்டோ அத்தானே!!

5. கெட்டிசாயம் தோய்த்தெடுத்து கட்டுத்தறியில்நெய்தபோதும்
வாழ்க்கைசாயம் வெளுத்துப்போச்சு அத்தானே ! -வாழும்
வழியைமட்டும் கண்டு சொல்லு அத்தானே!!

6. தொடக்கமுதல் முடிவுவரை தொடர்ச்சியாக பாவுஓடி
தொழில்விருத்தி ஆகலையே அத்தானே! - செங்குந்தர்
தொல்லைதீரும் காலமெப்போ அத்தானே!!

கண்ணே!.........

7. காலமெல்லாம் மாறிப்போச்சு கட்டுத்தறியும் கெட்டுப்போச்சு
கணிப்பொறியே பேசும் காலம் வந்தாச்சு! - கண்ணே
கற்கால முறைமையெல்லாம் மண்ணாச்சு!!

8. கச்சத்திலே பற்றுவைச்சு கடன் கணக்கே வாழ்க்கையாச்சு
சொச்சத்திலே சொர்க்கமிங்கே எங்கிருக்கு? - துன்ப
எச்சத்திலே எதிர்காலம் சிக்கியிருக்கு!

9. தறியமட்டும் நம்பிடாமே தலைமுறைய எண்ணிநாமும்
திட்டமிட்டு முன்னேறிடத்தான் வேணும்! - கண்ணே
திறமையான தொழிலை நாடவேணும்!!

10. ''பாவுமில்ல நூலுமில்ல'' பல்லவிக்கு சரணம்பாடி
பாங்குறவே நூலுவங்கி வைச்சிடுவோம்! - கண்ணே
பஞ்சமின்றி தைத்தறியை செஞ்சிடுவோம்!

11. சொந்தமாக முதலுவைச்சி வங்கிக்கடன் வாங்கிவைச்சி
சுறுசுறுப்பா உழைத்திடத்தான் வேணும்! - கண்ணே
சுமைகடனைத் தொலைத்திடத்தான் வேணும்!!

12. நாமமட்டும் திருந்திடாமல் நம்மஇனம் முழுமையாக
நல்லபடி வாழஒன்றாய் சேரணும்! - கண்ணே
நாளும்புகழ் ஓங்கிடவே வாழணும்!!

13. ஒற்றுமைதான் உயரவழி உண்மையினைப் புரிஞ்சுகிட்டு
ஒருமுகமாய் பாடுபட்டு உயருவோம்! கண்ணே
அறுமுகனின் அருளினாலே மகிழுவோம்!!



அருளோடு நிற்பவன் நானே என்ற ஞானத்தைக் காட்டவே தம் குழந்தைகளுடன் மலைவிளையாட்டினை விளையாடினான. இனி திருவாவினன் குடி என்னும் பெயர்க் காரணத்தை சிறிது நோக்குவோம் பழங்காலத்தில் பழநி நெல்லிவனமாக விளங்கியது: இந்த நெல்லிவனத்தில்தான் திருமாலால் புறக்கணிக்கப்பட்ட திருமகளும் விசுவாமித்திரரின் படையை வென்ற செருக்கினால் தனது வலிமையை இழந்த காமதேனுவும் தன்னால்தான் இவ்வுலகில் உயிர்கள் அனைத்தும் வாழ்கின்றன என கர்வம் கொண்ட காரணததால் சிவ பிரானது கோபத்திற்கு ஆளாகிய ஆதவரும், தட்சனது யாகத்தில் கலந்து கொண்டநான் வீரபத்திர மூர்ததியால் தண்டிக்கப்பட்டு ஒலி இழந்து அக்கினித் தேவனும் தவம செய்து கொண்டு இருந்தனர் இவர்கள் அனைவரும் தங்களின் கஷ்டம் தீர சாபம் நீங்க சண்முகனைத் தொழுது உய்ந்த இடம் இப்பழநியே ஆகும். இந்த ஸ்தலம் அவர்கள் வழிபட்டது எனக்குறிப்பிடும் வகையில் அவர்களின் பெயர்களாலேயே திரு. (திருமகள்) ஆ (காமதேனு) இனன் (ஆதவன்) கு (பூமகள்) டி (அக்கினி)என அழைக்கப்படுகிறது திருவாவினன் குடி எனவாயிற்று தவமிருந்தோரின் சாபம் நீங்கும் முகத்தான் சண்முகன் சரவணப் பொய்கையைத் தோற்றவித்தான் இப் பொய்கையின்கரையில் இன்னும் திருமகள் பூமகள், காமதேனு. அக்கினி. சூரியன் போன்றவாகளின் கோயில்கள் இலங்கி இந்த உண்மையை விளங்கி நிறகின்றன, இனி இத்திருவானினன் குடியில் வந்து அமா்நத முருகன் பழநிமலையில் கோயில் கொண்ட வரலாறுபற்றிநோக்குவோம்

பொதிகை மலையில் வந்து தங்கிய அகஸ்திய முனிவா தனது சீடனான இடும்பாசுரனை அழைதது கையிலையில் முருகனுக்குரிய கந்த மலையில்காணப்படும் சிவசக்தி! சொருபமான சிவகிரி எனும் இரு கோயில்களையும் தனது வழிபாட்டுக்கு கொணரும்படி பணித்தார் அகஸ்தியரின் கட்டளைப்படி இடும்பன் கயிலை சென்று சிவகிரி, சக்திகிரி ஆகிய இரு குன்றுகளையும் காவடிஈாகக்கட்டித் தோள் மீது சுமந்து திரும்பினான், வரும்வழியில்திருவாவினன் குடியை நெருங்குமபோது பழநி எம்பெருமான் இவ்விருகிரிகளையும்அங்கேயே நிலைப் பெறசசெய்ய விழைந்து இடும பனுக்கு நீர்வேட்கையை உண்டாக்கினார் நீர்வேட்கையை தனிக்கும் பொருட்டு இடும்பன்தான் கொண்டு வந்த மலைக்காவடியை நிலையில் இட்டு நீர் அருந்தச்சென்றான் தாகம் தீாந்து மலைக்காவடியினைக் தூக்க முயற்சித்தான் முடியவில்லை அவன் காரணத்தை ஆராயும் போது சிவகிரி குன்றின் மீது ஒருசிறுவன் கோவணாண்டியாக கையில் தண்டேந்தி நிறபதைக் கண்டு அவனாலதான இத்தகைய இக்கட்டு ஏற்பட்டு இருக்கிறதென எண்ணி அச்சிறுவனை மலையை விட்டு அகலுமபடி கூற அச்சிறுவன் முருகனாகத்தோன்றி யாம் இம் மலையில் புதிய உறுதி பூண்டுவோம் எனப்பகர அம்மலையேபழநிமலையாயிற்று அன்றுமுதல் இடும்பன் முருகப் பெருமானின் காவல் தெய்வமாக விளங்கினான் இடும்பனைப்போல் சந்தனம், வில்வம் பூ, பால்,தேன் இவற்றை காவடியாக எடுத்து வரும் தன் பக்தாகளுக்கு அருள்பாளிப்பதாக முருகன் பகர்ந்தார் எனவேதான் இன்றும் கூடகுன்று தோராடும் குமரன் இருக்கும் இடமெல்லாம் பக்தர்கள் பூ காவடி, பால்காவடி, தேன்காவடி எடுத்து வழிபடுவதைக் காணலாம்.

இனி ஞானக்ககடலாகிய குமரன் குன்றுதோராடக்காரணம் என்ன?

ஞான வடிவாய் உள்ள முருகனின் திருஉருவத்தைப் பார்க்கும் போது 'ஓம்'' என்னும் வடிவினாய் உள்ளான் என்பது சொல்லாவிளங்கும் ஆக இறைவன் பழநியில் இந்து மதத்தில் முழு உருவமாக ஓங்காரமாக இயங்குகின்றான் இத்தகைய இறைவனில் திருவருளினால் உலகமாகிய மாய இருளைப் போக்க ஞான ஒளியைப் பெற்று. அறிவின் துணைகொண்டு ஞானமலையின் மேலே தத்துவங்களாகிய படிகளை ஒவ்வொன்றாக கடந்து சென்றுவிட்டால், ஞானத்தில் உச்சியை அடைந்துவிட்டால் அங்கே அறிவு நழுவிப்போய் அன்பு முதிாந்துநிற்கும் அவ்வேளையில் ஆனந்தத்தேன் சுரக்கும் அவ்வானந்தத்தேனைப் பருகப்பருக பிரணவ சொருபியாக உள்ள பரம் பொருளைக்காணலாம் என்ற கருத்தினை அழகனின் அருள்தேனைப்ருக்கிய அருணகிரியாா

" ஒளியில் விளைந்த உயர்ஞானம் பூத்து உச்சியில் மேல்
அருளில் விளைந்த ஓர் ஆனந்தத் தேனை
தெளியவிளம்பியவாமுகம் ஆறுடைத்தேசிகனே'',

எனவும்

'ஓங்காரத்து உள் ஒளிக்கும் உள்ளே முருகன் உருவம் கண்டு துஞ்சார்'' எனப்பாடுகின்றார், பழனி எம்பெருமான் ஞானக்கோலை கையில் பற்றி மோனநிலையில் ஞான மழை பொழிகின்றார் அந்த ஞான மழையில் விளையும் பயிர்களை இவன் நோக்குவோம்

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை,

திருப்பழநியில் திருமுருகன்

பேராசிரியர் ச. இரா. நடராஜன்.
எம். ஏ., எம் பில்., டி. எச். எ.
மேல்விசாரம்

வழி கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடியாகிய நம் தமிழ்க்குடியில், வழி ஆறு வழியாக வழிபாட்டுத் தெய்வமாக இயங்கிவரும் தமிழ்க்கடவுள் முருகப்பெருமான் தமிழகத்தில் ஆறு குடி கொண்டி படை வீடுகளில் வீற்றிருந்து அருள்பாலித்து வருகிறான் அவற்றுள் பழனியம்பதியில் குடி கொண்டி அப்பழனியம்பதி ருக்கும். அழகன் தன்னை நாடிவருவோர்க்கெல்லாம் ஞானமழை பொழிகின்றான், அப்பழனியம்பதி திருமுரு வாழ் பாலகுமாரனின் வரலாற்றினை இக்கட்டுரையில் நோக்குவோம். திருப்பழனி என்பதற்கு திருமுரு சித்தன் காற்றுப்படையில் வழங்கும் பெயர்திருஆவினன்குடி என்பதாகும்; இதனைப்பொதினி என்றும், சித்தன் வரலாற் வாழ்வு என்ற பெயராலும் வழங்குவர். இப்பெயர்க் காரணங்கள் வழிநின்று திருப்பழனியின் வரலாற் என்றால் றைக் காணலாம், திருப்பழனி என்பதைப் பிரித்து பொருள் நோக்கும்போது-திரு+பழனி திரு என்றால் அழகிய - அருளுடைய பழம் என்று பொருள் கொள்ளலாம். இப்பதியில் முருகன், அழகன் ஞானப் பழமாகவே விளங்குகிறார்கள். ஞானப்பழமாக நிற்கும் இறை நிலைக்கும் ஒரு கதை வழங்குகிறது.

அன்னை பார்வதியும், அத்தன் சிவனும் கயிலைமலையில் அமர்ந்து இருக்கும்போது, கலகப் பிரியரான நாரதர் ஒரு மாங்கனியைக் கொண்டுவந்து ஐயனிடம் கொடுத்து அவரிடம் ஆசிபெறு கிறார். நாரதர் கனியைச் சிவபிரான் அன்னையிடம் அளிக்க அன்னை அக்கனியை மக்கள் இருவ ருக்கும் பகிர்ந்து அளிக்க விரும்பினார். ஆனால் அத்தனோ ஒரு பரீடசை வைத்து பழத்தை பரிசளிக்க விழைந்தார். விளைவு உங்களில் யார் முதலில் இந்த உலகினைச்சுற்றி வருகின்றார்களோ அவர்க்கே இக்கனி என்றார், இதைக் கேட்ட மாத்திரத்திலேயே இளமுருகன் தனக்கே உரிய வேகத்துடன் தனது மயில்மீது அமர்த்து இவ்வுலகைச் சுற்றிவர ஆரம்பித்துவிட்டான். இதற்கிடையில் 'அன்னையும் பிதாவும் முன்னறித் தெய்வம் என்றுணர்ந்த கணபதி அம்மையப்பனாகிய ஆண்டவன் அண்டங்களுக்கு அப்பாலும் இருப்பதாலும் புவனங்கள் யாவும் அவனுள் அடங்கி இருக்கின்றன. என்பதை அறிந்து இறைவனையும், இறைவியையும் வலம் வந்து பழத்தைப் பரிசாகப் பெறுகிறார். அகிலத்தை வலம்வந்த அழகனோ வெதும்பி துறவரம் மேற்கொண்டான்: இக்கதையை மேலோட்டமாகப் பார்க்கும்போது மிகவும் பாமரத்தனமா கஇருக்கும். ஆனால் இதனுள்ளே உள்ளார்ந்த பலகருத்துக்கள் விளங்காநிற்கிறது

ஞானம் என்பது அறிவின் பழுத்த நிலையாகும். அறிவு பழுக்க வேண்டியதாயின் அனுபவம் வேண்டும், அல்லது ஆய்ந்தறிதல் வேண்டும். விநாயகப் பெருமான் அழகனுக்கும் மூத்தவர். ஆகை யால் தாம்பெற்ற அநுபவ ஞானத்தால் சிவ சக்தியேஇவ்வுலகம் அச்சக்தியே இவ்வுலகம் யாவிலும் நீக்கமர நிறைந்து இலங்குகின்றது என்பதை அறிந்து அனுபவ ஞானத்தால் சிவ சக்தியை வலம் வந்து தொழுது உலகினை வலம் வந்ததாகக் கொண்டார் ஆனால் வயதில் இளைய இனிய முருகனோ அனுபவ ஞானத்தால் பெற முடியாத ஞானத்தை அறிந்து ஆயவிரும்பிஅதனைச் செவ்வனே செய்து தனது தமயன் காலத்தால் பெற்ற ஞானத்தை அறிந்து ஞானமாக எளிதில் பெற்றார் அதுவே ஞானம் காலத்தால் வருவது அறிவு ஞானமோ ஆய்ந்து தெளிந்த அறிவால் வருவதாகும். அம்மை யும் அப்பனும் தங்களின் குழந்தைகளுக்கு பரிசிலாக வழங்கவிழைந்த பழம் ஞானப்பழம் அப்பழத் தைப் பெற்றவரோ விநாயகர்.ஆனால் அந்த பழமாக, ஞானப்பழம்பாக, ஞானவேள்வியாக, ஞானக் இகொழுந்தாக ஞான ஒளியாக மிளிரும் பெருமை எம் பெருமான் முருகனுக்கே கிட்டியது இனி இக்கதையில் உள்ளடங்கிய கருத்தினை நோக்குவோம்.

இவ்வுலகில் யார் எதைச் செய்தாலும் ஒரு பலன்கருதியே செய்வர் ஒருவியாபாரி வணிகத்தை அதன் லாபம் கருதியே செய்கின்றார் ஒரு தொழிலாளி ஊதியம் கருதியே பணி செய்கின்றார் ஒரு விவசாயி நிலத்தில் விளைவினைக்கருதியே விளைவிக்கின்றார் அதே போன்று காரண காரியங்களுக்கு அப்பால்பட்ட கருத்தாவாகிய இறைவன் இவ்வுலகில் வாழும் நம் அனைவருக்கும் வானாகி மண் ணாகி, வளியாகி, ஒளியாகி, அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்தபூர்த்தியாகி

நமது இப

பற்றுக பற்று விடற்கு என்றான் வள்ளுவன் இதன் பொருள் நாம் அனைவரும் வேண்டும் இவ்
பிறவி பெரும்பிணி அறபற்றற்ற பெருமாளின் திருவடியை நமது மனதில் பற்ற எனும் மும்
வகைப்பற்று நமது ஆன்மாவில் பற்றவிடுமேயானால் நமது ஆணவம், கன்மம் மாயை பெறநாம்
மலங்களும் எரிந்துவிடும்.பேரின்ப நிலைத்தானே வந்து எய்தும் அப்பற்றானதை நமது மனதில் சார்பாக,
செய்ய வேண்டுவதென்ன? இதனை அருணகிரியார் முருகனைப் பார்த்து நமது அதற்குண்டான பதிலையும்

எல்லாம் அற என்னை இழந்த நலம் செய்வாய்' முருகா எனவேண்டி

ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய் என இறைவனை வேண்டுகின்றார்

வேலும், சேவலும் மயிலும் அணியாகக் கொண்ட முருகனின் புகழ் பாடுவதால் நமக்குஎன்ன
பயன்? இதற்கு அருணகிரியார்

மைவரும் கண்டத்தார் மைந்த கந்தா

என்று வாழ்த்தும் இந்தக் கவரும் தொண்டன்றி மற்றறியேன் என்று கூறி கற்றகல்வியும் போய்,
பைவரும் மகறும் பதியும் கதறப்பழகி நிற்கும் ஐவரும கைவிட்டு மெய்விடும்போதுன் அடைக்கலமே -
என்ற வரியில் - நாம் கற்ற கல்வியால் நமக்கு யாதொரு பயனும் விளையாது. பொய்யாகிய இந்த
மெய்யைவிட்டு உயிர் பிரியும்போது நமக்கு பக்கபலமாக இருப்பது இறைவன் திருவடியே என்று நாம்
பிறந்தது முதல் இறக்கும் வரை நம்மோடுப் பழகிப் பயன்தந்த (ஐம்பொறிக்கும்)மெய், வாய், கண், மூக்கு,
செவி எனும் ஐம்பொறிகளும் நம்மைவிடும்போது நமக்கு காவலாக இருப்பது திருமுருகனின் திருவடியே
யாம் எனவேதான் அருணகிரியார்

ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்பாடும்பணியே
பணியாய் அருள்வாய் என இறைவனை வேண்டினார்.

தேவர்களையும் வாழவைத்த முருகன் இந்தப்பதியில் மட்டும் ஆண்டிக் கோலமாக நிற்பது ஏன்.
இதற்கு முருகனின் பரம்பரையைச் சிறிது ஆய்வோம். முருகனின் தாயாகிய பார்வதி தேவியோ
கருவறைகள் பல கொண்ட இமவானின் ஒரே புதல்வி. தந்தையோ நிதிகளுக்கெல்லாம் அதிபதியான
குபேரனைத் தோழனாகக் கொண்டவர், தாய்மாமனோ திருமகளை (இலக்குமியை) தனது மார்பகத்தே
கொண்ட திருஉருவினன் முருகப்பெருமான் பெண்கொண்ட இடமோ மூவுலகங்களுக்கெல்லாம்
அதிபதியான இந்திரலோகம். இவ்வாறு செல்வச் செழிப்பால் வாழவேண்டிய எம்பெருமான் ஆண்டியாக
ஏழையாகக் காணப்படுவதேன் இதற்கு ஏற்றபதில் தனக்கென எதையும் வைத்துக் கொள்ளாமல் தன்னை
நாடிவரும் பக்தர்களுக்கே எல்லாம் சுக போகங்களையும் அள்ளி அளித்தவரே முருகன்
இக்கோலம் கொண்டான். எல்லாச் செல்வமும் இருந்தும் அவற்றில் எல்லாம் பற்று அற்று பரம்பொருள்
ஆண்டியாக இயங்குகின்றான். அதே போன்று நாமும் எல்லாச் செல்வத்தையும் பெற்றும் அவற்றில்
பற்றுப் பெறாத நிலை வைக்க வேண்டும். அவ்வாறின்றி நாம் இவ்வுலகத்தின் மீது பற்று (DEBIT) கடன்
வைத்தோமானால் அது நமது பிறவிக்கடனோடு பெருங்கடனாக மாறி உழல வேண்டி வரும். எனவே
தான் நாம் பெற்ற செல்வத்தில் பற்றற்று பழனி எம்பெருமானின் திருவடியில் பற்று வைத்து பிறவிப்
பெரும் பிணி அறுத்து பேரின்ப பெருவாழ்வு பெறவேண்டும். இப்பேரின்ப பெருவாழ்வு பெற
அருணகிரியார் செப்பும்வழி

காட்டில் குறத்திபிரால் பரத்தே கருத்தைப் புகட்டின்
வீட்டில் புகுதல் மிக எளிதே என்று கூறினார். இதனையே,
'அற்றது பற்றெனில் உற்றதுவிடு'' என்றும் வழங்குவர்.

செங்குந்தரும் செய்தொழிலும்

சி. ச. துரைசாமி செங்குந்தர்
தலைவர்
செங்கை அண்ணா மாவட்டம்
தென்னிந்திய செங்குந்தர்
மகாஜன சங்கம்,

உலகமென்பது நிலப்பரப்பைக் குறிப்பிடும் ஒரு தனிச் சொல்லாகும். இலக்கணப் புலவர்கள், நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலையென ஐந்தாகப் பகுத்துள்ளனர். நிலங்களின் தன்மைக்கேற்ப மக்களின் பழக்க வழக்கங்களையும் விளக்கியுள்ளனர். அனைத்து நிலங்களில் நிலவிய பொருள்களையெல்லாம் இருதிணையில் அடக்கிக் காட்டினர். மக்களை உயர்திணை; மற்றவைகளை அஃறிணை; "மக்கள் தேவ நரகர்' உயர்திணை
மற்று உயிருள்ளவும் இல்லவும் அஃறிணை'' என்று நூற்பா யாத்துள்ளார். திணை-ஒழுக்கம் அல்-திணை-ஒழுக்கமல்லாதவை.

மக்கள் நீங்கலாகப் பிறவுயிர்களெல்லாம் ஆதி முதல் இன்றுவரை இயற்கையோடிணைந்தே வாழ்கின்றன. சில உயிரினங்கள் மட்டும் இயற்கைக் முரணாக வாழ்கின்றன. காரணம் விறல்மிகு தனி மனிதனின் முயற்சியும், அறிவுடைமையேயாகும்.

மாக்கடல் சூழ் மண்ணுலகில் பிறந்த மக்களனைவர்க்கும் பொதுவுடைமையாக நிற்பவை உணவு, உடை உறையுள் என்ற மூன்றேயாகும். இவற்றில் உணவில்லாமல் சில பொழுது வாழலாம். உடையின்றி வெற்றிடங்களிலுப், மரத்தடியிலும் தங்கி சில காலம் வாழலாம். ஆனால் மானத்தையும், மரியாதையையும் பாதுகாக்கும் உடையில்லாமல் ஒரு நொடிப்பொழுதும் வாழ்தல் எவராலும் இயலாத ஒன்றாகும். "ஆடையில்லாதவன் அரை மனிதன்'' என்ற ஆன்றோரின் மூதுரையை முன்னுதல் வேண்டும், ''அரையதனில் பஞ்சனும் பட்டேனும் வேண்டும்'' என்பது ஔவையின் அமுத வாக்காகும். ''கந்தையானாலும் கசக்கிக் கட்டு'' என்ற பழமொழியும் ஆடையின் பெருமையைத்தான் விளக்குகிறது. உணவைத் தருபவன் உழவாளி. பாசறையமைப்பவன் பாட்டாளி, உடையை நெய்பவன் நெசவாளி. நெசவாளிக்குக் கைக்கோளன்-செங்குந்தன் என்ற சிறப்புப் பெயர்களுமுண்டு. உடம்பை வளர்ப்பது உணவு. "உண்டி முதற்றே உணவின் பிண்டம்'' என்பது பழமொழி. மானத்தைக் காப்பதோடு அழகும் தருவது உடையாகும். "ஆள்பாதி ஆடைபாதி'' என்பது பழமொழி.

உறைக்கல்லால் பொன்னின் தன்மையை மதிப்பிடுதல் போல ஒருவர் உடுத்துள்ள உடையைக் கொண்டே அவரது உள்ளப் பாங்கினைப் பெரிதும் மதிப்பிடலாம். ஒருவர் உடுத்திருக்கும் உடையின் முறைமையைப் பார்த்தமாத்திரத்தானே அவர் மேற்கொண்ட மதம், குடியிருப்பு முதலியவற்றை எளிதில் அறிந்து கொள்ளலாம். இன்றைய சூழ்நிலையில் அணிந்துள்ள ஆடையின் கரைகளே அவரவர் சார்ந்துள்ள கட்சிகளை வெள்ளிடைமலையென விளக்குகிறது. மக்கள் கூட்டத்திற்கிடையில் அழகிய ஆடையை உடுத்துள்ள ஒருவனையே பலர் இமை கொட்டாது பார்க்கின்றனர். சிலர் அவனையே கைக் கூப்பி வணங்கி வரவேற்கின்றனர்.

ஆடை, உடை, கோடி, கலிங்கம், வேட்டி, துணி. அறுவை. சீலை. கூரை, அம்பரம், துகில், உடுக்கை ஆகிய இவை எல்லாம் உடையைக் குறிக்கும். ஒரு பொருள் பல சொற்களாகும். ஆண்கள் உடுப்பது ஆடை. பெண்கள் உடுப்பது சீலை. இவ்வாடை பஞ்சாடை, பட்டாடை என இருவகைப்படும். முன்னது ஏழைகளும், பின்னது செல்வர்களும் உடுப்பார்கள். ''பஞ்சாடையன்றி பிற ஆடை அணிவதில்லை'' என்ற நெறியை மேற்கொண்டு வாழும் மேலோரும் சிலர் உள்ளனர். காந்தியடிகளின் கருந்துக்குகந்தது கைத்தறி ஆடை ஒன்றே என்பது உலகம் நன்குணர்ந்ததே.

செங்குந்தர்கள் பெரும்பாலும் வாழும் மாவட்டம் செங்கை அண்ணா மாவட்டம் என்றால் அது ப
யாகாது. இம்மாவட்டத்தில்தான் பட்டாடை நெய்வதில் கைதேர்ந்த செங்குந்தர் வதியும் காஞ்சிமா
அமைந்து உள்ளது. எங்கள் பள்ளிப்பட்டு வட்டத்தில் பஞ்சாடை நெய்யும் செங்குந்தர் வாழும் ஊர்கள்
உள்ளன. இவர்களில் பெரும்பாலோர் ஏழை என்பதை ஏக்கத்தோடு சுட்டிக் காட்டுகிறேன். இவ்
இவர்கள் கைத்தறி ஒன்றையே நம்பி வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் முன்னேற்றத்திற்கு இறை
தான் துணைபுரிய வேண்டும் போலும்! தமிழகம் போற்றிய. ஏன் தமிழரசர் பாராட்டிய ஒட்டக்கூ
பிறந்த இனத்திற்கா இன்று இன்னல் வந்துள்ளது என்பதை நினைக்க என் நெஞ்சு கலங்குகிறது.

"செய்யும் தொழிலுக்கெல்லாம் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை" என்பது மூதுரையன்றோ?
தொழிலில் தீமை என்பது சிறிதும் இல்லை. அமைதிக்கே உறைவிடமானது இத்தொழில் ஒன்றேய
இத்தொழில் புரியும் செங்குந்தர்கள் ஆரவாரமின்றி அமைதியோடு வாழ்பவர்களே ஆகும். இதை உ
நன்குணரும்.

செங்குந்தர் நெய்துவந்த நெசவுத் தொழிலின் சிறப்பியல்புகளைச் சங்க நூல்களில் சான்றுகள்
வற்றின் வாயிலாக விரிவாகக் காணலாம். உலகம் போற்றும் வள்ளுவரும் தாமியற்றிய திருக்கு
உடையை உயர்த்தி கூறியுள்ளார். சான்றுகள் பல காட்ட முயன்றால் கட்டுரை நீளும் என்ற காரணத்
அவைகளை விடுத்து, துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பாடல் ஒன்றை மட்டும் கூறிஇக்கட்டுரை
முடிக்கின்றேன்.

"விதிமுன் பாத்தோய மூத்தமகன் உண்டுநல
    விரரும் பாவோடுவர்,
மேவு நூ லெல்லாம் சிக்கெடுத் தே திரிய
    வேலனென் றொருவ னுண்டே,
சாதியின் நாகர்குல நாட்டுப்பெண் ணிருவரும்
    தாருக்கு நான் நீயெனச்
சத்த சாகரமெல்லாம் நமதாகலால் நெய்
    தறிக்குழிக் கிடமாகுமே,
நீதிநெறி அண்டபசி, ரண்டகக்கடா கங்களும்
    நெசவினுக் கேற்றிவீடாம்,
நிதியமே மிகவுடைய உத்திரத்தன கேசன்
    நேயமிக அறுவை கொள்வன்
காதலோடு கைக்கோள வேலையில் கூலிபல
    கண்டுண்ணலாம் நஞ்சுணக்
கடைப்படோம் என்னவுமை நன்றுநன் றென்றுமகிழ்
    கண்ணுதல் உமைகாக்கவே"

குறிப்பு: மூத்த மகன்-விநாயகன், வீரர்-பூதகணத்தர், வேலன்-முருகன், உத்திரதளகேசன்-குபேரன்



ஏற்றம் பெறுவோம்

அவிநாசி **பழனிச்சாமி,**
கோபி ஆசிரியர்,
88, கபிலர் வீதி,
கோபிச்செட்டிபாளையம்.

1 செங்குந்தன்செம்மையானவன்
கொங்குச் சீமையின் சிறப்பினிலே
செங்குந்தன் சேவையிற் சிறந்தவனே
எங்கும் எங்கள் சேவையே எழுச்சி பெற்றது

2 இன்றுமட்டுமல்ல இவ்வுலகம் என்று
தோன்றியதெனவே யாரறிவார்
அன்றுமுதலே ஆதிசங்கரனாரழைத்தது
இன்றும்மென்றும் முதலிஎனும் சிறப்பே
என்றும் வாழ்க என்றார் வாழ்த்தி

3 அன்றே அருளினார் ஆசிகூறி எம்பெருமான்
அன்றுதொட்டு அடிவணங்கி எங்கள் குலமே
என்றும் ஏற்றத்துடனே வாழ்வது நாமே

4 இடையிலே எவர்கண் பட்டதோ இளைத்தது
மடமையே அறிவை மாற்றியதே மடக்கி
மகுடமென வாழ்ந்த செங்குந்தன் மதிமறந்து
அடமாக செயல்பட மறுத்தே ஆர்ப்பரித்தானே

5 அதன்பலனை அனுபவித்தறிவோம்
எதனையெல்லாம் ஏற்றோமோ விட்டோமோ
அதனையெலாம் அலட்சியம் செய்தோம்
எனவே எப்பாடு பட்டேனும் எதிர்காலம் காண
ஆவனவே செய்து அனைவரும் ஒன்றுபட்டு
எதிர்காலச் சந்ததி பொன்னெனப் பொழிய
எல்லோரும் ஒன்றுபட்டு ஏற்போம் சபதம்



காலத்தின் தேவை

புலவர் கோ. இளையபெருமாள், ஆரணி.

[எண்சீர் விருத்தம்]

சீலத்தின் மிக்குயர்ந்த சிறப்பின் மிக்க
செங்குந்த மரபினர்கள் சீர்கு லைந்து
ஞாலத்தில் வாழ்த்திடுதல் நன்றோ சொல்வீர்?
நாடுமொழி இனவுணர்வில் நாட்டங் கொண்டு
காலத்தின் தேவையினைக் கருதி வாழ்வில்
கண்போல சமுதாயக் கடமை யாற்றிக்
கோலத்தின் மிக்ககுலக் கொடியைக் காத்துக்
குமரனைப்போல் நெஞ்சுறுதி கொள்வோம் நாமே.

அறிவியலின் வளர்ச்சியிலே ஆர்வங் கொண்ட
ஆக்கமுறப் பணியாற்றும் ஆற்றல் மிக்கோர்
பொறியியலின் துணைகொண்டு புதுமை காணும்
புரட்சியினைப் பார்த்திருந்தும் பொழுது போக்கித்
தறியினையே நம்புவது தகுதி யாமோ?
தாழ்வின்றி நம்வாழ்க்கைத் தரத்திற் கேற்பத்
துறையறிந்து பலமாற்றுத் தொழிலை யேற்றுத்
துணையாகத் துணிவுடனே தொடங்க லாமே.



அரசியலில் குரல்கொடுக்கும் ஆட்கள் இன்றி
அவதியுறும் செங்குந்தர் ஆற்றல் மிக்கு
முரசறைந்து கோரிக்கை முழக்கஞ் செய்து
முன்னேற்றப் பாதையினில் முனைந்து செல்வோம்
அரிசனமும் பழங்குடியும் அடையும் நன்மை
அத்தனையும் நெசவாளர்க் களிக்க வேண்டிப்
பரிசாக முதல்வரிடம் பணிந்து கேட்டுப்
பயன்கொள்ளல் நமக்குரிய பண்பா கும்மே.

மன்னியசீர் பெரியார்மா வட்டக் சார்பில்
மானமிகு செங்குந்தர் மரபைக் காக்கத்
தென்னகத்துப் பேரவையோர் திரண்டு கூடும்
சிறப்புடைய மாநாட்டில் தேவை யான
பன்னரிய திட்டங்கள் பலவும் தீட்டிப்
பரிந்தளித்துப் பயன்கொள்வோம் பாரை ஆள்வோர்
பின்னடைந்த வகுப்பினரைப் பேணிக் காத்துப்
பெரியாரின் வழிநிற்றல் பெருமை யன்றோ !



நமது பெரியார்

கு. கி. கந்தசாமி,
அடிகளார் இல்லம்,
குருவரெட்டியூர் - 638 504.

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து- தமிழ்மறை

பகுத்தறிவுப் பகலவன், வெண்தாடி வேந்தன், தமிழ் இனத்தை அடிமைத் தளையிலிருந்து விடுபட தன்வாழ் நாள் பூராவும் உழைத்த தந்தை பெரியார் தோன்றிய ஈரோட்டிலே செங்குந்த மகாசனங்களின் துயர் துடைக்க இடைவிடாது தொண்டு ஆற்றி வரும் இன்னொரு பெரியார் "நமதுபெரியார்" சைவத்திரு R.A.N. முத்துச்சாமி முதலியார் அவர்களைப்பற்றிய சிறிய கட்டுரை இது.

தமிழ் நாட்டில் 60 இலட்சத்துக்கு மேற்பட்ட செங்குந்த மகாசன மக்கள் இருப்பதாகப் புள்ளிவிபரம் பேசுகிறது.

ஒட்டக்கூத்தார், திருவள்ளுவர் திருமுருககிருபானந்த வாரியார் சுவாமிகள் ஈடாக மிகப் பெரிய பேரறிஞர்கள் நம் இனத்திலே தோன்றியுள்ளார்கள் என்பது வரலாறு.

ஆற்காடு இராமசாமி முதலியார், இலட்சுமணசாமி முதலியார் போன்ற மேதைகள் நமது இனத்திலே தோன்றி பலசாதனைகளை செய்துள்ளனர்

தமிழ்த் தென்றல் திரு. வி கல்யாண சுந்தர முதலியார் நம் இனத்தவரே

தென்னாப்பிரிக்கச் சுதந்திரப் போராட்டத்தில் முதல் பெண்மணியாக ஈடுபட்டு தேசப்பிதா மகாத்மா காந்தியின் அன்புக்குப் பாத்திரமாக விளங்கி உயிர்விட்டதில்லையாடி வள்ளியம்மை செங்குந்த குலத்தில் தோன்றியவர்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் உயிர்போகும்வரை அடிபட்டும் கொடியைப் பிடித்த கையோடு வந்தேமாதரம் கூறிஉயிர் விட்ட தியாகி திருப்பூர் குமரன் செங்குந்த குலத்தில் தோன்றியவர்.

தந்தை பெரியாரோடு இணைந்து தமிழகத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி தமிழனைத் தலைநிமிரச் செய்த பேரறிஞர் அண்ணா நம் இனத்திலே மலர்ந்தவர்

முற்கால அரசர்களிடம் கைகோளப்படை முதற் படையாக விளங்கியது என்பது சரித்திரம்.

இன்னும் எழுதினால் விரிவடையும் என்பதால் இத்துடன் முடிக்கிறேன்.

இவ்வளவு மாமேதைகளும், பேரறிஞர்களும், செல்வந்தர்களும், வீராதிவீரர்களும் தியாகிகளும், பெருவணிகர்களும் தோன்றிய செங்குந்தர் குலம் இன்று எந்த நிலையில் உள்ளது? என்பதை நினைத்துப் பார்க்கும்போது நெஞ்சம் நடுங்குகிறது. சமுதாயத்தின் அடித்தளத்தில் கேட்பாரற்ற, நாதியற்ற ஒரு இனமாக இருக்கிறது.

நம்மிடம் ஒற்றுமை இல்லை- நம் வழிகாட்டிகளை நாம் பின்பற்றவில்லை. மறைந்த கைத்தறிக்காவலர் பத்மஸ்ரீ திரு M.P. நாச்சிமுத்து முதலியாரைப் போன்ற தன்னலம் இல்லாத பெரியவர்களை நாம் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இந்த நிலை மாறவேண்டும்;

இந்த இனம் இப்படியே நசிந்து போய்க்கொண்டிருக்கிறதே, இதை எப்படி ஒன்று சேர்த்துவது என்று ஒவ்வொரு நாளும். ஒவ்வொரு நிமிடமும் சிந்தித்துக் கண்ணீர்விட்டு எப்படியும் ஒன்று சேர்த்தாக வேண்டும். இந்த சமுதாயத்தில் செங்குந்தர் இனமும் மிகச் சிறந்த இனம்தான் என்பதைத் தெளிவுபடுத்தியாக வேண்டும். இவ்வினம் தலைநிமிர்ந்து நடந்தாகவேண்டும் என்ற எண்ணத்தில் பெரியார் மாவட்டத்தில் ஒரு எழுஞாயிறு தோன்றிற்று.

நாமார்க்கும் குடியல்லோம் என்ற அப்பரடிகள் வழிநடக்கும் உத்தமர். காந்தியடிகளின் வழித்தோன்றல்.

கதர் உடையுடன் கனிவான உள்ளத்துடன், வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலாரைப் போல கைக்கோளரின் முகம் வாடிநிற்பதைப் பார்த்து வாடி அதற்குப் பரிகாரம் கண்டே ஆகவேண்டும் என்ற விடாமுயற்சியுடன் உழைத்து வருபவர்- அருள்நெறித் தொண்டர். ஈரோடு கலைக்கல்லூரி, தொழிற் கல்லூரியின் தலைவர், பெரியார் மாவட்ட தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கத்தின் தலைவர்.

அவர்தான் எங்கள் பெரியார், எங்கள் தலைவர், நமது தெய்வம் சைவத்திரு. R.A.N. முத்துசாமி முதலியார்.

அவர்களுடைய வயதினையும், உழைப்பினையும் பார்த்தால் மூக்கில் விரல் வைக்க வேண்டும். இரவு பகல் பாராது உழைக்கின்றார். அவருக்கோ, அவர் குடும்பத்திற்காகவோ அல்ல. பாழ்பட்டுப் புரையோடிக் கிடக்கும் செங்குந்தர் குலத்திற்காக.

அவர் பெரியார் மாவட்டத் தலைவரானதிலிருந்து இடைவிடாது உழைத்து அனைத்து ஊர்களிலும் செங்குந்தர் மகாசன சங்கத்தின் கிளைகளை ஏற்படுத்தி ஒன்று சேர்த்து உயர்வடையச் செய்து வருகிறார். செங்குந்தர்களுக்கு ஒரு சங்கம் இருக்கிறது நமக்கு தெளிவுபடுத்தியவர் நம் அன்பு தலைவர்தான். அவர்களுடைய செயல்திறன்

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவண்கண் விடல் என்ற தமிழ் மறைக்கு

இலக்கணம் வகுத்தவராகிறார்.

தேனீயைவிட சுறுசுறுப்பாக இயங்குபவர். ஒரு நாளைக்கு 25 கூட்டங்கள் போட்டாலும் உரிய நேரத்தில் வருகை தந்து சலியாது உழைப்பவர்.

மேடைகளில் பேசும்பொழுது அவை அடக்கத்துடன் பேசுவார். அடிக்கடி நான் அதிகம் படிக்காதவன், எனக்குப் பேசத் தெரியாது என்று ஆரம்பிப்பார். ஆனால்

சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது

என்ற திருவள்ளுவரின் கூற்று வெளிப்படும்.

அவருக்கு இருக்கும் வசதிக்கும் வாய்ப்பிற்கும் இப்படி வந்து அலையவேண்டிய அவசியமே இல்லை. மாமன்னர் வாழ்க்கை வாழமுடியும். ஆனால் தான் பிறந்த இன மக்கள் நன்றாக வாழவேண்டும், ஒற்றுமையாக இருக்கவேண்டும். அதை என் காலத்தில் பார்த்தால்தான் நிம்மதி அடைவேன் என்ற நோக்கில் நடைபோட்டுக்கொண்டிருக்கிறார்.

"ஒழுங்கினைக் காப்போம்
உதவிகள் செய்வோம்
உறவினை வளர்ப்போம்"

என்ற தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் சமூகத்தின் திருவாக்கை வேத வாக்காக நினைத்து வாழ்பவர் நம் தலைவர்.

வாய்ச் சொல்லில் வீரரடி என்ற பாரதியின் வாக்குப்படி வாய்ச் சொல்லில் பந்தல் போடுவது எனக்குப் பிடிக்காது. செயல் சொல் என்று முழக்கமிட்டு செயல்பட்டுவரும் அன்னாரின் தலைமை நமக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

ஒவ்வொரு கைக்கோள இளைஞனும் கல்வி கற்க வேண்டும், அவன் வாழ்வு மலர வேண்டும் என்ற குறிக்கோளின் கல்வி ஸ்தாபனங்கள் வைத்து. பொருளுதவியையும் கொடுத்து கல்விக்கண்களைக் கொடுத்து வரும் வள்ளல் பெருந்தகை.

சோகமான ஏழ்மையான கைக்கோள முகங்களைக் கண்டாலே கண்ணீர் விட்டு அழும் கருணை உள்ளத்தை உடையவர்.

மதுவினால் இந்தசாதி அழிந்து போகிறது மதுவை அருந்தி உடம்பையும் பொருளையும் வீணாக்குகிறீர்களே. மதுவிற்கு அடிமையாகிவிட்டீர்களே, அன்பு கூர்ந்து அதிலிருந்து விடு படுங்கள் என்று பேசும் பொழுது மிக மிக வேதனைப்படுவார், தேம்பித் தேம்பி குழந்தைபோல் அழுவார்

அவர்களுடைய இல்ல நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் கடைநிலையில் உள்ள கைக்கோளருக்கும் அழைப்பிதழ் அனுப்பிவைப்பார்; அதுமட்டுமல்லாது அவர்களை நேரில் காணும் போது அவசியம் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவேண்டும் நீங்களெல்லாம் கலந்துகொண்டால் தான் எனக்கு நிம்மதியாக இருக்கும் என்பார்

விருந்தோம்பலில் அவருக்கு நிகர் அவரே ஒவ்வொரு இலையையும் பார்த்து பரிமாரச் சொல்லுவார் மற்றவர்களை உணவருந்துவதைப் பார்த்து மகிழ்வார் சாப்பிட்டாகிவிட்டதா என ஒவ்வொருவரையும் பலமுறையும் கேட்பார் அதுமட்டும்மன்றி அடுத்த விருந்திற்கும் இருந்து உணவருந்தி விட்டுத்தான் செல்லவேண்டுமென உரிமை கலந்த அன்புடன் கூறுவார். திருவள்ளுவர் கூறும்

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு என்ற குறள்

நம் தலைவருக்கே உடைத்தாகும்.

இவ்வளவுபெரிய உயர்ந்த ஒழுக்கம், அன்பு, அடக்கம், கருணை நிறைந்த, அருள்உள்ளம் உள்ள தலைவர் நமது செங்குந்தகுலத்திற்குக் கிடைத்திருப்பது நாம் செய்த தவப்பயனாகும்.

இப் பெருந்தலைவர் காலத்தில் வாழுகின்றோம் என்பதே நமக்குப் பெருமை நமது தலைவரின் வழியே நின்று அவர் வழி நடப்போமாயின் பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த நம் இனமக்கள் எல்லா வழியிலும் முன் நின்று உயர்ந்த வாழ்க்கையை அவர்காலத்திலேயே வாழ முடியும் இது உறுதி.

செங்குந்தர் குலப் பெருமக்களே, நம் தலைவர் வழி நின்று தலை நிமிர்ந்து நடப்போம் என இந்நன்னாளில் உறுதி எடுத்துக் கொள்வோம். ஒன்று படுவோம் உயர்வடைவோம்.

நம் இனம் முன்னேற, ஒன்றுபட, ஒழுங்கான வாழ்க்கை அமைத்துக் கொள்ள உழைத்திட நம் தலைவரும் அவரைச் சேர்ந்தவர்களும் வாழ்வில் பெறவேண்டிய அனைத்து வளங்களையும் பெற்று, பல்லாண்டு பல்லாண்டு வாழ அருள் புரியுமாறு எல்லாம் வல்ல நம் குலப் பெருமானை சேவற் கொடியோன், வள்ளி தெய்வானை உடன் அமர் அருள் திரு முருகப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

நமது பெருந்தலைவர் சைவத்திரு R.A.N. முத்துசாமி முதலியார் வாழ்க!

செங்குந்தம் வெல்க.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுரையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

தமிழ்மறை

நமக்கு நம் இனம்!



புதுக்கரைப்புதூர்
23—1—90

பு. ஆ. சிவக்கொழுந்து
(பு. ஆ. ராஜு)

வணக்கம்,


நம்முடைய ''பெரியார் மாவட்ட செங்குந்தர் மாநாடு'' சீரும் சிறப்புமாக நடைபெற எல்லாம் வல்ல அருள்மிகு சேவற் கொடியோனை வேண்டி வாழ்த்தும் இந்நேரத்தில் என்னுடைய சிறு கருத்தினையும் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

நம் சமூகத்தில் உள்ள உட்பிரிவுகள் அனைவரும் பாகுபாடு பாராது ஒற்றுமையாகவும் விழிப்புணர்ச்சியுடன் செயல்பட்டு சமூக சீர்திருத்தங்களுக்கு பாடு படுவோமாக நாம் அரசாங்க சலுகைகளை பெறுவது மாத்திரம் நோக்கமல்லாது, நம் சமூதாய வாழ்க்கையில் வரதச்சனை, பிற மத வேறுபாடு இன வெறுப்புணர்ச்சிகள் போன்ற கொடுமைகள் புகாமல் நம்மை நாம் காத்துக் கொள்வோமாக. எந்தக் கட்சி சார்பு இல்லாமலும் நம்முடைய சங்கம் இயக்கங்களும் வேறு இன இயக்கங்களும் ஆதரவு அளிக்கும் வகையில் நம்பேச்சும், நடவடிக்கைகளும் இருப்பது மிகமிக அவசியம் ஆகும். நமக்கு தம் இன உணர்ச்சி மிக அவசியம். ஆனால்—இன வெறி கூடாது.

''நமக்கு நம் இனம்
பிறருக்கு நாம் இனம்''

என்ற மனப்பான்மையுடன் வளர்வோமாக வாழ்க செங்குந்தம்!

ஓங்குக ஒற்றுமை!!



பெரியார் மாவட்டச் செங்குந்தர் குலப்பிரிவு

டாக்டர் மே.அ.பாலமுருகன் எம். ஏ., பிஎச். டி.,

உணவு தேடுதலையே வாழ்க்கையாகக் கொண்ட மனிதன் ஆற்றங்கரைகளில் நிலையாகத்தங்கிய காலத்து உழவுத் தொழிலையும் அதைச்சார்ந்த தொழில்களையும் வளர்த் தான். தொழில்முறை வழிவழியாக வந்ததால் அத்தொழிலைச் சேர்ந்த சாதிப்பாகுபாடு தோன்றியது. தொழில் வருவாயில் உள்ள ஏற்றத்தாழ்வு சாதி உயர்வு தாழ்வை ஏற்படுத்தி யிருக்கலாம். குலத்தொழில் என்று செய்து வந்தவர்கள் காலச்சூழ்நிலையால் வேறு வேறு தொழில்களுக்கு மாறினர். முடிமன்னர் காலத்துப் படைப்பிரிவுகளில் பணியாற்றியவர்கள் காலத்தின் கட்டாயத்தால் பிழைப்புக் கருதி பிறதொழில் நாடிக் கிராமம் கிராமமாக அலைந் தனர் இதுபடை வீரர்களுக்கு மட்டும் ஏற்பட்ட நிலையல்ல வாய்ப்பு வசதியிழந்த பிறரும் தொழில் தேடிநாடோடிகளாய் அலைந்தனர்.

தொழில் உயர்வு தாழ்வு கண்ட மனிதன் வாழ்க்கையின் நோக்கமாக உயர்ந்த தொழி லாகத் தான் கருதியதைச் செய்ய முனைந்தான். இந்த வகையில் உழவும் நெசவும் வணிக மும் இன்று பல இனத்தாராலும் செய்யப்படுகின்றது. நாகரிக உலகில் செய்கின்ற தொழிலை வைத்துக் குலத்தை நிர்ணயிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுச் சாதிப் பிரிவுகள் மெல்ல மறைய இருப்பவன் இல்லாதவன் என்ற வர்க்க வேறுபாடு தலைதூக்கியது. உண்மை நிலை இவ்வாறிருக்க அண்மைக்கால அரசியல் பாதிப்பால் சாதிகளின் பெயர்களில் சங்கங் கள் தோன்றி, மாநாடுகளை நடத்திக் கோரிக்கைகளை முன்வைத்துப் போராடுகின்ற சூழ்நிலை இக்காலத்து ஏற்பட்டது.

நம்மவர்கள் எதையும் இறைவனோடு தொடர்பு படுத்திக்கண்டு மகிழ்பவர்கள் எங்கள் மொழி இறைவன் படைத்த மொழி என்று கூறிப் பெருமைப்பட்டுக்கொள்வது போன்று எங்கள் சாதியும் நேரடியாக இறைவனோடு தொடர்பு கொண்டது இறைக் குடும்பத்திலிருந்து வந்தது என்று கூறிக் கொள்கின்றனர்.

இத்தகைய சாதிகள் அனைத்தும் நான் முகனிடத்திலிருந்து தோன்றியதாக சொல் வர். பிரமன் முகத்திலிருந்து ஒரு சாதியும், தோளிலிருந்து ஒரு சாதியும். தொடையிலிருந்து ஒரு சாதியும். பாதத்திலிருந்து ஒரு சாதியும் தோன்றியது என்ற கொள்கையும் உண்டு என்று கா.நமச்சிவாய முதலியார் கூறுவார்.

இத்தகைய சாதிப்பற்று முற்றுந்துறந்த முனிவர்களையும் கற்றுவல்ல பெரியார்களை யும் விட்டதாக தெரியவில்லை. பல வாறாகப் பரந்துள்ள சாதிகளைப் பற்றிப் புலவர் 'சாதி நூல்கள்' பலவற்றை இயற்றியுள்ளனர் அவை உயர்வு நவிற்சிமிக்க போலிக்கதைகள் என் றாலும் அங்கும் சில உண்மைகளைக் காணலாம். (வைக்கோற் போரில் ஊசியைத் தேடுகின்ற முயற்சி) இம்முறையிலேயே செங்குந்தர் பற்றி எழுந்த வரலாறும் இறைவனுடன் தொடர்பு படுத்திப் பேசப்படுகிறது.

செங்குந்தர் குலத் தோற்றம்

செங்குந்த மரபினர் வீரவாகு தேவர் முதலிய ஒன்பதின் மர் வழித் தோன்றல்கள் என்று ஈட்டி எழுபது, கந்த புராணம் ஆகிய நூல்களால் அறியலாம். திருமுருகன் அவதரித்த காலத்தில் நவசக்திகளின் வழி ஒன்பதின் மர் தோன்றினர் எனப் புராணம் கூறும்

தேவர்களின் துயர் நீக்கச் சிவன் அறுமுகனைத் தோற்றுவித்து அருளிய அக்கினிப் பொறிகளின் வன்மையும் வெம்மையும் கண்டு உமாதேவியார் அஞ்சியோட அவருடைய திருவடிச்சிலம்பினின்றும் சிதறிய மணிகளால் சிவபெருமான் ஆணையினாலே உமாதேவி யாரின் திருவுருவம் தோன்றியது என்று கந்தபுராணம் கூறும். [2]

அவ்வொன்பது சக்திகளிடமிருந்து நவவீரர்கள் தோன்றினர் என்றும் அவர்கள் முறையே வீரவாகு, வீரகேசர், வீரமகேந்திரர், வீரமகேச்சுரர், வீரபுரந்திரர், வீரராக்கதர், வீரமார்த்தாண்டர், வீராந்தகர், வீரதீரர் எனப்பட்டனர். சிவபெருமான் உமாதேவியை நோக்கி 'மிகுந்த அறிவும் பராக்கிரமும் அழகும் மானமும் கையெனப் பெற்ற இவர்கள் நம் முடைய மைந்தர்கள் யாரோ புதியர் அல்லர் நந்திகணத் தலைவர்கள்' என்றார். உமாதேவி யார் மகிழ்ந்து அவ்வொருவருக்கும் குந்தம் என்னும் வேலாயுதத்தைக் கொடுத்து, நீவீர் உங் கள் தலைவர்களாக இலட்சம் வீரர்களுடன் சேர்ந்து கந்தவேலுக்குப் பணிபுரிந்து வாழ்வீர்' என்று அருளினார் என்பதைக் கந்தபுராணத்தால் அறியலாம் [3]

சூரனை வென்ற முருகன் நவவீரர்களோடு 'கந்த மாதனத்தில்' வீற்றிருந்த காலத்தில் சோழநாட்டில் திருக்கருவூரில் முசுமுகச் சோழன் சஷ்டி விரதம் இருந்தான் முசுமுகச் சோழனி டம் நேரில் தோன்றிய முருகன் 'யாது கருதி இந்த அரிய தவத்தைச் செய்தாய்' என்று கேட்க, முசுமுகச் சோழன், 'இந்தப் பெரிய பூமியை யானே ஏகச்சக்ரவர்த்தியாய் ஆளும் பொருட்டுத் தேவரீர் பக்கத்தில் வீற்றிருக்கும் தம்பிமார்களை எனக்குத் தரவேண்டும்' என்று கேட்டார் உடனே முருகனும் அருளினான் எனக் கந்த புராணப் பாடல் விளக்கும் [4]

இவ்வாறு நவ வீரர்கள் முருகனின் ஆணையின்படி இவ்வுலகத்தில் சோழ அரசனுக்கு உதவி செய்ய வந்து செங்குந்த குலத்தைத் தோற்றுவித்தனர் கந்தபுராணமும் ஈட்டி எழுப தும் செங்குந்தர் குலம் இறைவனோடு தொடர்புடைய குலம் எனக் கூறும்.

குலப்பெயர்கள்

செங்குந்தர் குலமக்களுக்கும் பல்வேறு பெயர்கள் வழங்கி வருகின்றன. செங்குந்தர் குலம் கைக்கோளகுலாமகவும் வழங்கப்படுகின்றது. ''முதன்மையான இறைவன் சந்ததி கள் என்பதால் 'முதலியார்' என்றும், குமரனுக்கு இளையவர்கள் ஆகையால் குமாரானு ஜரென்றும், உமையம்மையால் அளிக்கப் பெற்ற செவ்விய குந்தம் ஏற்றதினால் செங்குந்த ரென்றும், போர்க்களத்தில் ஜெயம் பெற்றமையால் வீரரென்றும், சேனைகளுக்குத் தலைவ ரானதால் சேனைத் தலைவரென்றும், செங்கோல் பிடித்து அரசுரிமை நடத்தியதால் கைக் கோலரென்றும், நாடுகளை வகுத்து நியாயாதிபதித்துவங்களை நடத்தியதால் நாட்டார் களென்றும், சாமபேத தான தண்ட மென்னும் சதுர்வித உபாயத்தினால் மந்திரிஸ்தானம் வகுத்தமையினால் அமைச்சரென்றும், ஒட்டக்கூத்தர் இயற்றியருளிய ஈட்டியெழுபதென் னும் தெய்வீகப் பிரபந்தத்திற்கு ஆயிரத்தெட்டுத் தலையறுத்துச் சிம்மாசனமியற்றியதால் சிரச்சிம்மாசனாதிபதிகளென்றும், 'நாட்டாண்மை' 'காரியம்' என்ற பட்டம் பரிவட்டம் பெற்ற மையால் பட்டவர்த்தனர்களென்றும், நெய்யுந் தொழில் ஏற்றதினால் காருகரென்றும்''[5] பதினொரு பெயர்கள் செங்குந்தர்களுக்குக் கிடைத்திருக்கின்றன.

கைக்கோளர் என்பதற்கு உரிய பொருளாக 'வீரவாகு' என்ற பெயரில் 'வாகு'

என்பது 'கை' எனவும், 'வீர' என்பது 'கோள்' எனவும் பொருள் கொண்டு ஆர் என்றும் உயர்திணைப் பலர்பால் விகுதிசேரக் 'கைக்கோளர்' என்னும் பெயர் அமைந்தது எனச் செங்குந்தர் ஜாதி நூல்கோவை கூறும் [6]

கைக்கோளரைக் குறிக்கும் ஐந்து பெயர்களாக 'செங்குந்தப்படையர் சேனைத்தலைவர் தந்துவாயர் காருகர் கைக்கோளர் என்று அம்பல்சேந்தனாற் பாடப்பெற்ற திவாகர நிகண்டில் உள்ள நூற்பா குறிக்கும் [7]

இந்திரன், பிரமன், விஷ்ணு முதலிய தேவர்கள் யாவருக்கும் முதன்மையாக அநாதியில் எழுந்தருளி வந்த தன்மையால் சிவபெருமானுக்கு முதலியார் என்ற பட்டம் வந்தது. சிவ பெருமான் மரபில் வந்த செங்குந்தர் சந்ததிக்கும் முதலியார் என்றே உலகோர் வழங்கினர் என்பதை ஈட்டி எழுபது பாடல் மூலம் அறியலாம். [8]

பண்டைக்கல்வெட்டுகள் பலவற்றில் 'தெரிஞ்ச கைக்கோளர்' என்னும் தொடர் பயின்று வரும். அயலவர் படையெடுப்பு முதலிய நெருக்கடியான காலங்களில் பொறுப்பேற்றுக் கொண்டு செயல்புரிபவர்கள் கைக்கோளர் எனப் பொருள் கொள்ளுதல், பொருந்தும் என் கிறார் ந.ரா.முருகவேள் தியாகம்,[9] சீலம், செம்மை, மேன்மை முதலிய ஒழுக்கங்களைக் கைக் கொண்டதனாலும், முடியுடைய மூவேந்தர்களால் நம்பிக்கைக்குரிய படைத்தலைவர் களாய் கைக் கொள்ளப்பட்டதினாலும், போரில் பகைவரை வெற்றி கொண்டு சிறை செய்து கைக் கொண்டே மீள்பவர் என்பதினாலும் இவர்கள் கைக்கோளர் எனப்பட்டனர். [10]

செங்குந்தர்கள் பெரும்பாலும் சைவ சமயத்தைப் பின்பற்றுபவர்கள். செங்கல்பட்டு, வடஆர்க்காடு, தஞ்சாவூர் மாவட்டங்களில் மட்டும் வைணவத்திற்கு மாறியோர் சிற்சிலர் உள்ளனர். திருநெல்வேலி மாவட்டத்தில் கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய செங்குந்தர் சிலர் உள்ளனர். [11] என நாம்.சண்முகசுந்தரமுதலியார் கூறுவார். பெரியார் மாவட்டத்தில் கொளப்பலூர் பகுதிகளிலும் கிறிஸ்துவ செங்குந்தர்கள் வாழ்கின்றனர்.

அரசர்களின் போர்ப்படையில் கைக்கோளரின் படைக்கு மிகுந்த செல்வாக்கு இருந்ததை கல்வெட்டுகளால் அறிய முடிகிறது. கைக்கோளப் பெரும்படையிலிருந்து தேர்ந்தெடுத்த வீரர்களைக் கொண்ட சிறப்புப் படைக்குத் தெரிஞ்ச கைக்கோளப்படை என்றும் கொங்கு நாட்டிலும் அப்படை இருந்தது என்பதையும் வெள்ளலூர் ஆன அன்னதான சிவபுரி, அன்னூர்க் கல்வெட்டுக்களில் இடம் பெற்ற ''ஆமட்டம் தெரிஞ்ச கைக்கோள சேனாபதி கள்'' என்ற தொடர்களால் அறியலாம் [12]

கரிகாற் சோழன் சென்னியங்கிரியை (சென்னிமலை) வலம் வருகின்ற பொழுது, அவ் வனத்தில் இருக்கும் மாகாளி வனத்தை அழிக்கின்ற போதும் நரபலி கேட்டது. சென்னிமலை செங்குந்தர் சார்பாக சமய முதலியார் நரபலிக்கு ஒப்புக் கொண்டனர். அச்செயலைச் செப் பேடு விளக்குகிறது. [13]

போர்ப்படைகளில் முன்னிலை வகித்தவர்கள் காலத்தின் சூழ்நிலையால் அவர்கள் வாழ்ந்த பகுதிகளில் உள்ள தொழில்களை கைக் கொண்டு வாழத் தலைப்பட்டனர். நெசவு உழவு, வணிகம், கைத் தொழில் போன்ற துறைகளில் ஈடுபட்டனர்.

கொங்கு நாட்டுக் கைக்கோளர் குலப் பெருமக்கள் கிராமப் புடவைகளைச் சந்தைக்குக் கொண்டு சென்றும், அங்கிருந்து பல்வேறு பண்டங்களை மக்களுக்குக் கொண்டு வந்து கொடுத்தும் அளப்பரிய பணிபுரிந்ததை இவ்வூர்க் கைக் கோளர் பட்டணத்துக்குக் கொண்டு போகும் புடவைக்கும் இவர்கள் பட்டணத்திலிருந்து கொண்டு வரும் பல சரக்குக்கும் '' [14] என்ற கோயில் சாசனத்தால் அறியலாம்.

வீரச் சிறப்பும், கொடைச் சிறப்பும், சமயப் பற்றும் மிகுந்தவர்களாக அன்று முதல் இன்று வரை விளங்கி வருகின்றனர். கல்விப்பணி, கோயிற்பணி, சமுதாயப் பணிகளால் தம்மை ஈடுபடுத்தியுள்ளனர்

பெரியார் மாவட்ட செங்குந்தர் குலப்பிரிவு

பெரியார் மாவட்டம் ஈரோடு, பவானி, பெருந்துறை, காங்கயம், தாராபுரம், சத்திய மங்கலம், கோபிசெட்டிபாளையம் ஆகிய ஏழு வட்டங்களைக் கொண்டது இம்மாவட்டத்தில் வாழும் செங்குந்தர்கள் பல குல உட்பிரிவுகளைச் சார்ந்தவர்களாக இருக்கின்றார்கள் பவானி வட்டம் குட்டிபாளையத்தில் செங்குந்த மடாதிபதியாக விளங்கும் இம்முடி பரஞ்சோதி சுவாமிகள் செங்குந்தர் பிரிவுகள் அனைத்தையும் திரட்டி வைத்துள்ளார்

1) ரெட்டுக்கார முதலியார், 2) மதுரை முதலியார் 3) தட்டை நாட்டு முதலியார், 4) கொங்கு முதலியார், 5) சௌராமங்களத்தார் (மாதுளான் கிளையான், பேரில்லான் கிளையான், சதுப்பிலான் கிளையான்) 6) மோளகார முதலியார், 7) சைவ-வைணவ முதலியார், 8) திருச்செங்கோடு வகையறா (கைக்கோல செங்குந்தம்) 9) திருமழபாடி-திருவையாறு வகையறா எனப் பெரும் பிரிவுகளை வகுத்துக் கூறுகிறார்

1) **ரெட்டுக்கார முதலியார்,** நாககன்னி (நாக முதலி), உண்டியக்காரன், கொத்துக்காட்டான், ரத்தினகிரியான், கன்னிமார், தடிவீரன், சொக்கநாதன் (சொக்க நாத முதலி) ஆண்டி, வேம்பகுமாரன், எள்ளம்மாள், ஓயாமாரி, தவுத்திரன், கோட்டை மாரி. தீத்தி முதலி, வெறியன் சந்தியப்பன், அலங்காரன், தம்பி அண்ணன், கோட்டை அண்ணன், தாண்டாமுதலி (தாண்ட முதலி), பட்டக்காரன், நம்பி அம்பன், பச்சனாமுதலி, பூமுதலி, குடும்பன் (இல்லறத்தான்), முருகன், நல்லமுத்தான், அப்பாய் அறவாய், வயிரப் பெருமாள், வினையத்தான், (வினை அறுத்தான்), சோலை முதலி (பூஞ்சோலை முதலி) (சடதேவர் முதலி)

2 **மதுரை முதலியார்;** குருக்கள் (தட்டை நாட்டு முதலியார்), சித்தநாதன், குழந்தை செட்டி முதலி, சின்னான் செட்டி முதலி, வாழ்த்துமுதலி, (வாத்து முதலி), அவனாசி முதலி) நாதமுதலி, மதவேந்திரன் (தேவ முதலி), சமய முதலி, தாடி கம்பன் கரிச்சி-பாளையத்தான் (தாடிக் கொம்பன்), கொக்கோனி பழனி, நாகர் ஆண்டான் (நாக முதலி), செலம்பண்ணன் (செலம்ப முதலி) பட்டுக்கிழவன், நல்லான் செட்டி, வீரசெங்குந்தம், கம்பி கொடியான், நந்தி கொடியான், தம்பிரான்.

3. **தட்டை நாட்டு முதலியார்;** குருக்கள், கருவீரன், கரியாம்பட்டி, தடிமாறன் பொய்சொல்லான் (பொய் உரையான்), சேத்துக்கட்டை (சேர்த்துக்கட்டி), தாடிக்கம்டன், மல்லூரான், குப்பச்சிமுதலி, உலகப்பன், அலங்கார வேலன், மொளசியார். தடிமுத்தன், விருமாண்டை (விருமாண்டன்).

4. **கொங்குமுதலியார்:** மாமன் மச்சினன் (கன்னிமார்), சின்ன அண்ணன் பெரிய அண்ணன், கருப்பண்ணார், (கருப்பராயன்) செங்காத்தான் ,பண்ணை (பண்ணையார்) கெலிங்கர்கோன் (நாட்டாமங்களத்தார்) ஆகியன.

சௌராமங்களத்தார், மோளகார முதலியார், சைவ முதலியூார், வைணவ முதலியார், திருச்செங்கோடு வகையறா (கைகோள செங்குந்தம்) திருமழபாடி- திருவையாறு வகையறா ஆகிய வகைகளில் கூட்டப்பிரிவுகள் கிடையாது. இதில் சிலருக்கு கோத்திரம் என்ற பிரிவு உண்டு.

இவை தவிர மொண்டியாடு கூட்டம், செலம்பரத்தான், அந்தியூரான், பச்சாக்கூட்டம்-மலிங்கா மொழியான் கூட்டம் பூவிரிஞ்சலிங்க கூட்டம் போன்றவைகளும் உள்ளன.

திருக்குறளில் நாம்



செயற்பால தோரும் அறனே ஒருவருக்கு
உயர்பால தோரும் பழி.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்.

அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லா தவர்.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.


காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும்.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித்துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்.

செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து.



வாழ்த்தி வணங்குகிறேன்

ஆ. ராஜவேலு

துணைப்பொதுச்செயலாளர்,

தென்னிந்தியசெங்குந்மகாஜனசங்கம்,

சென்னை

உறவின் பெருந்தகையீர் வணக்கம்!

10-3-90 சனிக்கிழமை ஈரோட்டில் பெரியார் மாவட்டசெங்குந்தர் முதல் மகாநாடு நடைபெறும் செய்தியறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன் செங்குந்தர் சமுதாயப் பெருமக்களையும், இளைஞர்களையும் தட்டி எழுப்பி மிகப்பெரும் சாதனை படைத்துள்ளார் பெரியார் மாவட்ட சங்கத்தலைவர் உயர்திரு ஆர். எ. என். முத்துசாமி முதலியார் அவர்கள் மாவட்ட சங்கம் துவக்கிய குறுகிய காலத்திலேயே மாநிலத்திலேயே அதிக கிளை சங்கங்கள் அமைத்து சாதனை படைத்துள்ளார் சென்னையில் நடந்த மாநில மகாநாட்டில் மிக அதிக பேருந்துகளை கொண்டுவந்து முதலிடம் வைக்க செய்தார் இன்று மிகப்பெரும் செங்குந்தர் மகாநாட்டையும் மகாநாட்டு மலரையும் நடத்திக்காட்டி சாதனை படைத்துள்ளார் மாநாடு சிறக்கவும், மலர் மணக்கவும் வாழ்த்துகிறேன் இம்–மாநாடும்,மலரும் சிறப்பாக அமைய அவர்க்கு உறுதுணையாய் உள்ள செங்குந்தப் பெருமக்களுக்கும் எனது பாராட்டுதலையும், வாழ்த்துதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



தேவை நமக்கு ஒற்றுமையே!

அ. சம்பந்தன், பொதுச் செயலாளர், செங்கை
அண்ணா மாவட்ட செங்குந்த மகாஜனசங்கம்

உலகம் தோன்றி, உயிர்தோன்றி, மனித வாழ்வு தொடங்கியபோது இருந்த வாழ்க்கை முறைக்கும், இன்றைய வாழ்க்கை முறைக்கும் உள்ள வேறுபாடுகள் எண்ணற்றவை. குடும்பம் குடும்பமாகவும் கூட்டம் கூட்டமாகவும் இருந்து தங்கள் உடமைகளையும் ஆடுமாடு போன்ற கால்நடைகளையும் காத்துக்கொண்டு இடம் விட்டு இடம் பெயர்ந்து சென்று வாழ்ந்த நாடோடி வாழ்க்கை அன்றைய மக்கள் வாழ்க்கை. ஆனால் வாழ்கின்ற இடம்தேடி எல்லாப் பொருள்களும் எல்லா விதத் தேவைகளும் வந்து சேருகின்ற நிலமையில் உள்ளது இன்றைய வாழ்க்கை. அன்று வாழ்ந்தது கடின உடல் உழைப்புடன் கூடியவாழ்க்கை, இன்று வாழ்வது அறிவின் துணையுடன் கூடிய சுலபமான ஆடம்பரவாழ்க்கை.

மனித வாழ்க்கை பழைய கற்காலம், புதிய கற்காலம் உலோக காலம் என்றெல்லாம் பல காலக்கணக்குகளையும் மாறுபாடுகளையும் கண்டு கடந்து வந்துள்ளது. அன்றைய நிலையில் மனிதனுக்குத் தேவைகள் அதிகமாக இல்லை. தேவைப்பட்டவற்றையும் சிரமமின்றியும் அருகிலிருந்தும் தேடிக்கொள்ள முடிந்தது. ஆனால் இன்று மக்கள் தொகைப் பெருக்கம் அறிவியல் வளர்ச்சி இயந்திரங்களின் பெருக்கம் போன்றவைகளினால் தேவைகள் அதிகமாகவும் தேவைகளை நெடுந்தொலைவில் இருந்தும் பெறவேண்டிய நிலையும் உள்ளது. இதுபோன்ற காரணங்களால் ஒருவரை ஒருவர் சார்ந்துவாழ்வது நம்பி வாழ்வது என்பது இன்றைய நிலையில் மிகமிக அவசியமானதாக ஆகி உள்ளது.

நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டிருந்த மனிதன் நாளடைவில் நிலையான வாழ்க்கையைத் தொடங்கியபோது, இடத்திற்கேற்பச் செய்யும் தொழிலால் வேறுபட்டான் அந்த நிலையில் பிறப்பினால் எல்லோரும் மனிதரே, அவருள் வேறுபாடு எதுவும் இல்லை ஆனால் செய்யும் தொழிலால் அவர் பிரிந்து வேறுபட்டனர் என்பது தொடக்க நிலை இதனையே நம்குலத்து சான்றோராகவும் உலகப்பொதுமறை என உலகிற்கே வழிகாட்டும் நூலாம் திருக்குறளை வழங்கிய அறிஞராகவும் உள்ள திருவள்ளுவப்பெருந்தகையார்,

> ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமையான்''

என்று கூறினார். முற்காலத்தில் தொழில் இருந்த பிரிவு, பிறகு பிறப்பால் உண்டாகி, பலஜாதிப் பிரிவுகளாக இன்றைய நடைமுறையில் காண்கின்றோம். இன்று, தொழில் அனைவர்க்கும் பொதுவாகி ஜாதி அவரவர்க் குரியதாக விளங்கிவருவது கண்கூடு.

நமது. குலமுறை மரபு பற்றிக்கூறும்போது சிவபரஞ்சுடரின் நெற்றிக்கண்ணில் உதித்த திருமுருகன் வழித்தோன்றல்கள் என்றும் நவவீரர்களின் வழித்தோன்றல்கள் என்றும் கூறுவது வழக்கம் நமது முன்னோர்கள்அரச காரியங்களில் ஈடுபட்டு அரசர்களுக்கும், ஆட்சிக்கும் பெருந்துணையாக இருந்தனர் என்பது வரலாற்று நூல்களும், கல்வெட்டுச் செய்திகளும் கூறும் உண்மையாகும். குந்தம் என்பது வேற்படை, அந்த வேற்படையைக் கைக்கொண்டிருந்தமையால் செங்குந்தர் என்றும் ஒழுக்கத்லதப் பிறழாது மேற்கொண்டு வாழ்ந்தமையால் கைக்கோளர் (கை-ஒழுக்கம், கோளர்-கொள்பவர்) என்றும் பெயர் பெற்று விளங்கிய மரபு நம் மரபு, மற்றவர்கள் மதிக்கும் வகையில் வாழ்ந்து சிறப்புற்றவர்கள் நமது முன்னோர்.

இந்த நூற்றாண்டில் வாழ்ந்து, நாட்டு விடுதலையே உயிர்மூச்சு எனக்கொண்டு நாட்டுக் கொடிகாத்து உயிர்த்தியாகம் செய்தவர் நமது குலத்திலகமான சென்னிமலைக் குமரன். இதே காலத்தில் வாழ்ந்த தேசிய கவி பாரதியார், அடிமைப்பட்டுக் கிடந்த இந்திய திருநாட்டு விடுதலை போரில்

''வாழ்ந்தால் முப்பது கோடியும் வாழ்வோம்,
வீழ்ந்தால் முப்பது கோடியும் வீழ்வோம்''

என்று கூறி, நமநாட்டு மக்களின் ஒற்றுமை உணர்வும் செயல்பாடும் எவ்வளவு இன்றியமை யாதது என்பதை வலியுறுத்துவார். இன்று இந்திய நாட்டுமக்கள் மதம், மொழி, உணர்வு உணவு, உடை கலாச்சாரம் போன்ற பலவகைகளில் மாறுபாடு உள்ளவர்களாக இருந்தும் 'இந்தியர்' என்ற உணர்வால் ஒன்றுபடக் காண்கிறோம். இந்த ஒற்றுமை பல நூற்றாண்டு கட்கு முன்பே நம் இனத்தவரிடையே இருந்தமை வரலாறு காட்டும் உண்மையாகும். சோழன் விஜயாலயன் காலம்தொடங்கி ஆண்ட சோழ மன்னர்களுக்கு நமது குலத்தவர் கள் மெய் காப்பாளர்களாக விளங்கி வந்துள்ளனர். அவ்வாறு காக்கும் பணியில் சேரும் போது அரசனுக்குத் தீங்கு நேராமல் தடுப்பதாகவும், தீங்கு நேருமானால் அனைவரும் உயிர்த்தியாகம் செய்வதாகவும் சபதம் ஏற்றுச் செயல்பட்டுள்ளனர். இவ்வாறு கூட்டு முயற்சியும் ஒற்றுமை உணர்வும் கொண்டிருந்த நம்குல மக்கள் பிற்காலத்தில் இவற் றிலிருந்து சிறிது சிறிதாக குறைந்தும் விலகியும் வாழ்ந்த தன்மை பிற்கால நிகழ்சிகள் அறிவிக்கும் செய்திகளாகும்.

நம்மவர் உயர்நிலையிலும் செல்வாக்கிலும் விளங்கியிருந்தமையும் நம்குலத்து முன்னோரான கவிச் சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தர் பெருமான் சோழர்குல மனனர்களான விக்கிரமன், குலோதுங்கன், இராசராசன் என்னும் மூன்று பெருமன்னர்களுக்கு அரசவைப் புலவராகவும் ஆசானாகவும் விளங்கி வந்தமையும் வரலாற்று உண்மைகள், ஆனால் நம்மவர் இன்று சிறுபான்மையினராகவும், பொருளாதார நிலையில் பின்தங்கியவர்களாகவும் மானம் காக்கும் ஆடையினை நெய்தளிக்கும் தொழிலில் ஈடுபட்டு,

''செய்யுந் தொழிலனைத்தும் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை''

என்று புகழப்பட்ட தொழிலில் போதிய வருவாயற்ற நிலையிலும் உள்ள தன்மை அனை வரும் அறிந்த ஒன்றாகும்.

இந்த நிலையில் நமது இன முன்னேற்றம் ஒற்றுமையாக வாழ்வது நம் இனத்தவர் முன்னேற்றத்துக்கு நாம் உதவியாக இருப்பது நமக்குள் இருக்கும் சிறுசிறு வேறுபாடுகளை மறந்து விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்வது போன்றவைகள் நம் முடைய இன்றைய தேவைகள் ஆகும். மற்றவர்களுக்குத் தொல்லை தராமலேயே நம் உயர்வுக்கு வழி தேடிக்கொள்ள நம்மால் இயலும். என்ற உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஒற்றுமையே உயர்வு ஒற்றுமையே பலம் என்று சொல்வதால் பயன் இல்லை, செயல்பட்டு உயரவேண்டும்.


இன்று நம்மினத்தவரிடையே உள்ள சிறு பிணக்குகள் பிறர் முன்னேற்றம் கண்டு புழுங்குவது நாம் உதவி செய்வதால் நம்மதிப்பு குறைந்துவிடும் என எண்ணும் மனப் போக்கு போன்ற குறுகிய உணர்வுகள் நிலவுவது பல இடங்களில் காணப்படுவதாகும். இந்த எண்ணங்கள் நம் வளர்ச்சிப்பாதையில் உள்ள தடைகற்கள் என்பதை அறிந்து அவை களை நீக்கவேண்டும், முன்னோர் சொன்னதைப் படித்தறிவதுடன் நின்றுவிடாமல் அவற்றுள் இதுவரை நாம் கடைப்பிடித்து வாழ்ந்து எவ்வளவு இன்னும் மேற்கொள்ள வேண்டியது எவ்வளவு என்று எண்ணி அந்த நெறியில் செல்லவேண்டும். ஒன்றுபட்ட முன்னேற்றம் காண்பதே நமது குறிக்கோளாக இருக்கவேண்டும்.

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு- நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு
நன்றிதைத் தேர்ந்திடல் வேண்டும் -இந்த
ஞானம் வந்தால் பின் நமக்கெது வேண்டும்''?


என்று பாரதியார் கூறிய பாடல் நமக்காகவே என்று எண்ணிச் செயல்படுவோம், ஒற்றுமைக்கு இலக்கணமாக வாழ்வோம்.

ஒன்றுபடுவோம் - நம் கொடியின் கீழே
வென்றுவருவோம் செயல்களினாலே

—O—



பவானி - காவேரி கூடுமிடம்
அருள்மிகு சங்கமேஸ்வரர் கோவில்



கலைமகள் கல்விநிலையம், ஈரோடு.
அமரர். திரு. மீனாட்சிசுந்தரமுதலியார் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.



திக்கெட்டும் ஒளிபரவட்டும்

அ.பெ. கணபதி
செயலாளர்
நகர செங்குந்தர் மகாஜன சங்கம்
ஈரோடு

குன்றுதோராடிவரும் குமர வடிவேலனின் வழித்தோன்றல்களான செங்குந்த இன-மக்கள் பல்லாண்டுகாலமல்ல பல்லூழிக்காலம் முதல் இக்கலியுகம்வரையிலும் வறையறைக்கு அப்பாற்ப்பட்டு வாழ்ந்து கொண்டுவரும் இனமாகும்.

வான்புகழ்வள்ளுவரும் அவரின் அருமைத் துணைவிவாசுகி அம்மையும் நம் மூதாதையர்கள் தான், நம் இனத்தோன்றல்களே. இப்பெருமை பொருந்திய செங்குந்த இனம் சில பல ஆண்டுகளாக "நம் இன வழிச்சாரலில் துணைவழிப்போகாமல் தனிவழிக்காண முயற்சி மேற்கொண்டு சிதறுண்டு போனது ஏன்?

இந்த செங்குந்த சமூகத்தில் என்ன குறை, என்ன குற்றம் என்ன இல்லை இந்த சமூகத்தில், பாழ்பட்டு நிற்க காரணம் என்ன இச்செங்குந்த சமூகத்தில் படித்த மக்கள் இல்லையா, பண்பான சான்றோர் இல்லையா, சிறந்த சிந்தனையாளருக்கு பஞ்சமா, மூதறிஞர்களுக்குகுறைவா ஆற்றல் மறவர் கூட்டம் அருகிவிட்டதா நம் இனமக்களுக்கு வழி காட்டும் ஒளி விளக்காக திகழ முடியாமல் போனது என்.

நமது சமூகத்துக்கே பெருமை சேர்க்கும் முதுபெரும் அறிஞர் திரு. வி. கலியாண சுந்தரமுதலியார், அவர்கள் போன்ற சான்றோர் திரு பெரும்வள்ளல் காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியார் போன்றவர்கள் கூட நம் இனமக்களுக்கு என வழிக்காட்டாமல் தம்மையுடன் தனித்து வாழ்ந்து விட்டார்களே ஏன்.

அரசியலிலே ஒழுக்கத்தையும் இந்தியாவிலேயே முதன் முதலாக தொழிலாள வர்க்கத்துக்கென அந்த உழைக்கும் வர்க்கத்துக்கு என சங்கம் கண்ட அப்பெரியார் திரு. வி. க. இச்சமூகத்துக்கு என ஒரு வழி வகை செய்யாது விட்டது ஏனோ.

இதுபோன்ற சான்றோர்களைப்போல நம்மை இருநூறு காலம் சூரியன் அஸ்தமிக்காத உலகை ஆண்ட வெள்ளையன் கூட பாராட்டும் வகையில் அவன் மொழியான ஆங்கிலத்தை அழகு பெற பேசிய இரட்டையர்களான ஆற்காடு ராமசாமிமுதலியார் இலட்சுமணசாமி முதலியார் போன்ற அறிஞர் பெருமக்கள் கூட ஏன் நமக்கு சிலவழிமுறைகளைக் கூறாமல் இனத்துமக்களுடன் கலந்துறவாடிட முடியாமல் ஒதுங்கி வாழக்காரணம் என்ன?

அப்பெரும் சான்றோர்களை நான் குறையாகக் கூறவில்லை. பெரியோர்களே; எம்மன ஆற்றுமையை உங்களுடன் நம் இனமக்களுடன் பங்கிட்டுக் கொள்கிறேன்.
பாயும் புலியின் பிடரியைப் பிடித்தடக்கிய மறவர் கூட்டம் எங்கே.
சீறிவரும் சிங்கத்தை சிதறடித்த கூட்டத்தை காணோமே
வேங்கையுடன் போராடி வெற்றி பெற்ற மறவர் கூட்டத்தை காணோமே
புலியெனப்புறப்பட்ட மறவர் கூட்டம் புவியஞ்சப் பதுங்கியது ஏன்

அறுபட்டதலைகள் மீது அமைதிப்பட அமர்ந்து சர்வசக்தி அன்னையின் அருளால் உலாப்பாடி விடுபட்ட தலைகள் அதன்தன் உடலில் ஒன்றுபட்டு உயிர் பெற்ற பெருமை இந்த உலகம் உள்ளளவும் மறந்திட முடியாத அதிசயிக்கத்தக்க நிகழ்ச்சியை உருவாக்கிய நம்இனச் சான்றோர் மாபெரும் புலவர் ஒட்டக்கூத்தின் வழி வந்த செங்குந்தமறவர் கூட்டம் சிதறுண்டு போனது ஏன்.

இந்த இழிநிலை ஏற்படக்காரணம் என்ன எல்லாவற்றுக்கும் காரணம் இதோ.

ஒற்றுமையில் வேற்றுமையை உருவாக்கிவிட்டோம்
ஆம், சிங்காரச் சென்னை வாழ் செங்குந்தம் வேறு
காஞ்சிபுரத்து கன்னித்தமிழ் செங்குந்தம் வேறு.
ஆற்காடு அரசர் போன்ற செங்குந்தம் அதனிலும் தனி
தென்னாற்காடு சைவசெங்குந்தம் வேறு
வடாற்காடு வணிக செங்குந்தம் தனிவழியாகும்
தஞ்சைத்தரணியில் செந்நெல் மலையில் பதிந்திட்ட
சோழநாட்டு கழனிவாழ் செங்குந்தம் தனி
கொங்குத் தமிழ் செங்குந்தம் மாறுபட்டதும் ஏனோ
சேரநாட்டு செங்குந்தம் சேராமல் விட்டது
பாண்டியநாட்டு செங்குந்தம் பந்தமில்லாது மருவியது ஏன்
தூய தமிழால் இறைபணி மேற்கொண்ட வீரசைவ
திருநெல்வேலி செங்குந்தமே உயர்ந்தது என தனித்து நின்றுள்ளது
குமரிவாழ் செங்குந்தம் இத்தனையிலும் வேறாகிவிட்டது.

செங்குந்த மக்கள் தம்முள் வேறு வேறு என பாகுபடுத்தி பாகுபடுத்தி தொடர்பறுத்து இழிநிலைஎய்திட வழி வகுத்ததன் விளைவு- அதன் விபரீதம் - அதன் கொடூரம். ஆம் அந்தத் தண்டனையைத்தான் அனுபவிக்கிறோம்.

இப்படிப்பட்ட அந்த விபத்தில் இருந்து மீட்டிடத்தான் வழிகாண முயற்சிக்கிறோம். ஒன்றுபடவே துடிக்கிறோம் ஆம் இனிவரும் செங்குந்த இனமக்களாவது ஒன்றுபட்டு வாழ வழி காண துடிக்கிறோம். ஜன ஒற்றுமையைக்காட்டிலும் இன ஒற்றுமை மேலானது. இன ஒற்றுமையே நாட்டின் நல்வழி காண திறவுகோல் ஒவ்வோர் இனமும் ஒற்றுமையுடன் ஒன்றோடொன்று ஒன்றுபட்டு திரண்டாலல்லாது, நாட்டு முன்னேற்றமும் நல்வழியும் காணமுடியாத — இயலாத— யுகமாகும். இது முதலில் இன ஒற்றுமை காணவேண்டும். இந்த ஒற்றுமை மிக மிக குறைவு. செங்குந்த இனத்தில் பட்டவர்த்தனமான உண்மையாகும்.

சென்னை வாழ் செங்குந்தம் குமரியிலும் குமரிவாழ் செங்குந்தம் மதுரையிலும் கொங்குத்தமிழ் செங்குந்தம் ஆற்காட்டு செங்குந்தத்திலும் காஞ்சிபுரத்து செங்குந்தம் காவிரிகரை செங்குந்-தத்திலும் கலந்துறவாடவேண்டும். இந்த வகையில் சென்னை முதல் குமரிவரையிலும் செங்குந்த மக்கள் இனம் ஒன்று பட்டாகவேண்டும்.

இணைந்து வாழ வழிவகை காணவேண்டிய நேரமிது. நம்மில் வேற்றுமை மறைய வேண்டும். ஒற்றுமை ஓங்கிவளர வழிகாணவேண்டிய தருணமிது. அத்தகு முயற்சியில் ஈடுபட்டுள்ள சான்றோர்கள் வாழும் காலமிது. விரிந்த மனத்துடன் பரந்த உள்ளத்துடன் நயமிக்கபார்வை நெடு நோக்கு சீரியலட்சியம் சிறந்தபண்பாடு ஒற்றுமையே கண்டு ஒன்றாக, வாழவேண்டும் என்ற சிந்தனை விண்முட்ட வளர்ந்தோங்கிவரும் நேரமிது. நல்ல சமயம் இது நழுவவிடலாமா? வீரசெங்குந்த மக்களே சிந்தித்து செயல்படுக, இந்த ஒற்றுமை உணர்வு ஓங்கவும், அந்த உணர்வை — உணர்ச்சிகளை ஒன்று திரட்டி தடையில்லா வெள்ளம் போல செங்குந்த மக்களின் அனைத்து உள்ளங்களிலும் பாய்ந்தோடிட வழிகாண வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். இத்தகு சூழ் நிலையை உருவாக்கிடவே பெரியார்மாவட்ட செங்குந்தர் மாநாடு முயற்சிக்கிறது. வழிகாண துடிக்கிறது.

சில திங்களுக்கு முன்பு நமது செங்குந்த மக்களின் ஒற்றுமை உணர்வுகளை ஒன்று திரட்டி தமிழகத்தலைநகரில் தன்மான செங்குந்தமறவர் கூட்டம் சான்றோர்கள் வழித் தோன்றல் வழி வந்த ஈரோடு செங்குந்தசெம்மல் வணிகத்துறை செம்மலாய் விளங்கிய மொட்டையப்பமுதலியார் பேரனும் ஈரோட்டில் கைத்தறிநெசவாளர் சங்கம் தோன்றிடக் காரணமாக இருந்த ஜெகனாதமுதலியார் மகனுமான தமிழ்நாடு செங்குந்த மகா ஜன சங்கத்தின் தலைவருமான இளமைத்துடிப்புள்ள ஜெ. சுத்தானத்தின் தலைமையில் சீரும் சிறப்போடும் மிகப்பெரிய செங்குந்தப்பேரணியை இதுவரையிலும் காணாத அளவிற்கு நடத்திக் காட்டினோம்.

இதுவரையிலும் நமது சமூக மாநாடு செங்குந்தமாநாடு மாநில அளவிலேயே இருந்து வந்தது. இனிமாநிலமாநாடு மட்டுமின்றி மாவட்டமாநாடும் ஒவ்வொரு மாவட்ட அளவிலும் நமது சமூகமாநாடு நடை பெற்றாக வேண்டும் என்ற சீரிய நாக்குடன் பெரியார்மாவட்ட செங்குந்த மகாஜனசங்கம் முன் கை எடுத்து முன்நின்று சிறப்பாக நடத்திக்காட்ட இருக்கிறது.

அரசியலாகட்டும், ஆன்மீகத்திலாகட்டும், தமிழ் பண்பாடுகளிலாகட்டும் சிறந்த சான்-றோர்களுக்கு பாராட்டுரை வழங்கி வாழ்த்துவதிலும் எப்போதும் முன்நிற்கும் ஈரோடு நகரம் நம் செங்குந்த மக்களின் ஒற்றுமை காணவேண்டி முதன்முதலாக தமிழகத்து செங்குந்த மக்களுக்கு மட்டுமல்ல கடல் கடந்த செங்குந்த மக்களுக்கும் சேர்ந்து வழிகாட்டிட மேற்கொண்டுள்ள மாநாடாகும் இது.

தமிழகத்திலேயே பெரியார் மாவட்ட செங்குந்த மகாசன சங்கம் தமிழக செங்குந்த மக்களுக்கு பலவழிகளில் முன்னோடியாக இருந்து வருவது கண்கூடு.

பெரியார் மாவட்ட செங்குந்தர் மகாசன சங்கத்துக்கு தலைவர் அதிசயிக்கத்தக்க ஒரு இளைஞர் ஆம் 72 அகவையைத்தாண்டிய முதுபெரும் இளைஞர் ஒருவர் கிடைத்துள்ளார்.

அவர் உடலுக்கே ஆண்டுபலவாயின ஆயினும் உள்ளத்தை இளமைத் துடிப்பிலிருந்து தெய்வத்தாலும் பிரித்திட இயலாத வலிமை பெற்றுள்ள திரு. R.A.N. முத்துசாமி அவர்கள் தலைமையில் பெரியார் மாவட்ட செங்குந்த மகாசன சங்கம் இயங்கிடத் துவங்கிய நாளில் இருந்து தமிழகத்திலேயே பெரியார் மாவட்டத்தில்தான் அனைத்து தாலுக்கா, நகரம் கிராமக்கமிட்டிகள் முறையாக அமைத்து செயல்பட்டு வருகிறது என்பது மிகவும் பாராட்டுக் குரியது.

சீரிய சிந்தனையால், சிறந்த உள்ளத்தால், பரந்தமனத்தால் செங்குந்த மக்களின் ஒற்றுமையின் உயர்வே தனது லட்சியமாக கொண்டு தனது கடும் உழைப்பால் உயர்ந்த அவர் சமூக உயர்வுக்கும் அதன் முன்னேற்றத்துக்கும் உழைத்திடவேண்டும் என்ற லட்சியமாக கொண்டுள்ள அவர்களின் தலைமையில் அருள்நெறித்திருப்பணி மன்றத்தின்சார்பாக பள்ளியும், செங்குந்தர் கல்லூரியும் பொறுப்பேற்று நடத்திவரும் அவர்களே பெரியார் மாவட்ட செங்குந்த மகாஜனசங்க மாநாட்டை நடத்திக் காட்டிட பொறுப்பேற்று இரவு பகலாக உழைத்து வருகிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக தமிழ்மாநில செங்குந்த மகாசனசங்கத்தலைவர் திரு சுத்தானந்தமும் அவர் உடன் மற்ற மாநிலத்தலைவர்களும் ஈரோடு மாவட்ட செங்குந்தமகாஜனசங்க உடன்பிறப்புகளும் மற்றும் நகர தாலுகா கிராம அனைத்துமக்களின் உறுதுணையுடன் திரு R A முத்துசாமிமுதலியார் அவர்களுடன் இணைந்து நின்று 10-3-90அன்று நடைபெற இருக்கும் பெரியார்மாவட்ட செங்குந்தர் மகாநாடு வெற்றிபெற உழைத்துவருகின்றனர்.

இந்த மாநாடு மூலம் நம் இனமக்களிடையே வேற்றுமை என்ற அந்த அழுகிய வேரை வேரடிமண்ணோடும் களைந்தெறிய வேண்டும். புத்துணர்வு ஓங்கவேண்டும்; ஒற்றுமை ஓங்கிடவழிவகை காணவேண்டும். ஒன்றுபட்ட செங்குந்த இனமே இனியமக்களே நீங்கள் இந்த வையகத்தில் எந்த மூலையில் இருந்தாலும் அங்கும் இந்த செங்குந்தஇன ஒற்றுமை என்ற நிழல் பரவிப்படரவேண்டும்:- பரப்பிடவேண்டும். ஓரினமயாக ஒன்று பட்ட இனமக்களாக வீரசெங்குந்தமக்களின் அனைத்து உள்ளத்திலும் ஒற்றுமை உணர்வு ஒளி வீசிப்பரவட்டும் ஈரோட்டில் நடைபெறும் பெரியார்மாவட்ட செங்குந்தமகாஜன மகா நாடு மூலமாக திக்கெட்டும் ஒலிக்கட்டும்.

வணக்கம்

★



இணைப்பு-இயைபு-இயக்கம்

டாக்டர் தி.ரா.செல்வராசன்
மாநில பொதுச்செயலாளர்

பிறந்த நாடு — பேசும் மொழி - தோன்றியகுடி ஆகிய இவற்றின் கூட்டுத்தொகை தான்மனிதன்.

பல்லாயிர ஆண்டு காலப்பழைமை வித்தின் வெளிப்பாடுட உள்ளம்! உணர்வு! உறவு! உலகம்!

நேற்று நாளை என்னும் இரு சிறகுகளில் பறக்கின்ற நிகழ்காலமே நீயும் நானும்!

தொன்னூறுகளின் தொடக்கத்தில் நாம் நிற்கின்றோம்.

மக்களாட்சி-மாற்றங்கள்-தேவைகள்—ஆசைகள்-அச்சங்கள்-வன்முறைகள் இவற்றுக்கிடையே நாம் நாளும் நாளும் சிக்குண்டு தவிக்கின்றோம்.

நாம் யார்?

முதலில் மனிதன்! இரண்டாவது இந்தியன்! மூன்றாவது தமிழன்! இந்த நிலையில் என்றும் மாற்றம் இல்லை. விடுதலைக்குப் பின்னர் கடந்த 42 ஆண்டுகளாக இக்கொள்கையை இதயப் பண்பாடாகக் கொண்டு நடந்தோம். ஆனால் நம் நிலை என்ன?

தமிழகம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றோம் எந்த இடத்திலும் பலம்கொண்ட பெரும் பான்மை மக்களாக இல்லை. எந்த ஒரு தொகுதியும் நமது கோட்டை என்று சொல்லமுடியாது. ஆனால் பல இடங்களில் வெற்றிவாய்ப்பை உறுதி செய்யும் எண்ணிக்கையில் இருக்கின்றோம். தேவைப்படும்போது சிலர் நம்மை சிலர் நாடி வருகிறார்கள் கறிவேப்பிலையாகிய நாம் இருக்கின் றோம். இது அரசியல் அரங்கத்தில் நமது அவலநிலை.

நெசவு தொழிலும் வறுமையும் என்றும் பிரியாத இரட்டை குழந்தைகள். வயிற்றில் பசியைப் போக்கவும் முடியாத தற்கொலைத் தொழிலுக்கு மறுபெயர்தான் கைத்தறி குடும்பத்தார் எல்லோரும் பாடுபட்டாலும் ஒருவேளை உணவுக்கும் வழி இல்லை. இப்படியே எத்தனை நாளைக்குதான் வாட்டும் வறுமையுடன் கூட்டுக் குடும்பம் நடத்திச் சாவது? இது நமது பொருளியல் நிலை.

சிலர் தமது கூறிய அறிவால் கல்வியில் தேர்ச்சி பெற்றாலும் அவர்கட்கு வேலை வாய்ப்புகள் எட்டாக்கனியாகவே இருக்கின்றன. உயர்கல்வி பயில ஏழையர்க்கு உதவும் கரங்கள் நம்மிடம் இல்லை. படித்த இளைஞர்களுக்கு எதிர்காலம் புலப்படாத வினாக்குறியாகவே உள்ளது.

துயரமிக்க இந்நிலையைப் போக்க நாம் ஒன்றுபட்ட சிந்தையராய்க் காலத்திற்கேற்ற வகையில் கூடி முயற்சி செய்வதன் சின்னமே சமுதாய இயக்கம்,

சமுதாய மேம்பாட்டிற்குத் தனி மனித உழைப்பும் வேண்டும் கூட்டு இயக்கமும் தேவை. இது காலத்தின் கட்டாயம் - கட்டளை.

கல்வியா? வீரமா? செல்வமா? எது உயர்ந்தது என்பது பழைய கேள்வி. இக்காலத்தின் பிரச்னைக்கு திறவுகோல் NETWORK.

இணைப்பு-இயைபு-இயக்கம் என்பவற்றின் சுருக்கெழுத்துதான் NETWORK.

காசியில் தேள் கொட்டினால் கன்னியாகுமரியில் இருப்பவர்களுக்கு விஷம் ஏறுவதுதான் NETWORK.


இந்திய கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் குழுவில் திறமைமிக்க தமிழர் ஒருவர் இடம் பெறாதது நமக்கு மெத்த வருத்தத்தைத் தந்தது. அவர் பிறந்த சாதியினர் நடத்தும் ஆங்கில தினசரியும் வார இதழும் இதனைக கண்டித்துக் கண்டனப் போரை நடத்தின. அவர் ஒரு மனிதர் உருவத்தால். ஆனால் அவர்க்குப் பின்புலமாக சமுதாய மக்கள் நிற்கிறார்கள் என்பதால் அவர் 'எடை' கூடுகிறது. எண்ணிற்கு இடமதிப்பு இருப்பதுபோல் மனிதர்க்குச் சமுதாய மதிப்பு அமைந்து விடுகிறது.

இவரைத்தொட்டால் பரிந்துகொண்டு பல்லாயிரம் பேர் எழுச்சிக்கொண்டு வருவார்கள் என்ற பயம் மேலிடங்களுக்கு ஏற்படுவது இக்காலத்தின் கோலமாகிவிட்டது இதற்கு பெயர்தான் சமுதாயபலம்.

தேர்தலில் வேட்பாளரை தெரிந்தெடுக்கும் போதும் பொதுவாழ்வில் உயர்பதவிக்கு நியமனம் செய்யும்போதும் கணக்கில் கொள்ளப்படுவது இந்த மூலம் பலம்தான்

சமுதாய இயக்கம் தொடர்ந்து செயல்படுவதன் மூலமே இதனை ஈட்டமுடியும்.

மக்களுக்குத் துன்பங்கள் செய்யாமல் வன்முறைகளில் ஈடுபடாமல் ஏழையார்க்கும் எளிய வர்க்கும் உதவுவதே சமுதாயத்தின் தலையாய கடமை என்பதனை நெஞ்சில்கொண்டு தொடர்பினை பார்த்து தோழமையைப்பெருக்கித் தொண்டுகள் செய்வதே உண்மையான சமுதாய இயக்கம்: செங்குந்தர்தம் என்பதில் நீயும் நானும் பங்குகொள்கிறோம். வெறுப்பில் பகையில் கொள்ளும் எதிர்மறைக்கும் பதிலாக அன்பில் அருளில் தோற்றும் செங்குந்தம் பயன்மிகு வெற்றிக்கனிகளைத் தரும்.



செங்குந்த நெசவாளர்களின் நிலை

சரவணபழநிவேலு
துணைப் பொதுச்செயலாளர்
தென்னிந்திய செங்குந்தர் மகாசன சங்கம்

தமிழகத்தில் கைத்தறி நெசவுத்தொழிலைப்பரம்பரைத் தொழிலாகக் கொண்டுள்ள வர்கள் செங்குந்தர்கள், பத்மசாலியர்கள், சேனியர்கள், தேவாங்கர்கள், சௌராஷ்டிரர்கள். ஐம்பது ஆண்டுகளுக்குமுன்னர் செங்குந்தர்களில் 100க்கு 95 பேர் அல்லது 90க்கு குறையாத வர்கள் நெசவுத் தொழிலில் பல ஆண்டுகளாக ஈடுபட்டுள்ளனர். இன்று நிலைமை மாறியிருக் கின்றது செங்குந்தர்களில் பெரும்பாலோர் வணிகர்களாகவும் அரசு அலுவர்களாகவும் பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டிருக்கின்றனர். பரம்பரை நெசவுத்தொழிலில் ஈடுபட்டுள்ள செங்குந்தர்களின் எண்ணிக்கை சதவீதம் குறைந்திருக்கின்றது. காலப்போக்கில் கைத்தறி நெசவுத் தொழில் பல பாதிப்புகளுக்கு உள்ளானதே இதற்குக் காரணம்.

செங்குந்தர் மரபே பிற்படுத்தப்பட்ட சமூகங்களின் பட்டியலில் சேர்க்கப்பட காரண-மாக இருந்தவர்களே செங்குந்த நெசவாளர்கள் தான். சமூக, கல்வி ரீதியில் செங்குந்த நெசவாளர்கள் பிற்பட்டவர்களாக இருந்த காரணத்தினால் செங்குந்த மரபே பிற்படுத்தப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டது. எனவே செங்குந்த மரபினுக்கே முதுகெலும்பாக இருந்தார்கள் என்பதுதான் வரலாற்று உண்மை. பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டதின் பிரணமாக சலுகைகளைப் பெற்றதின் மூலம் செங்குந்தர்களில் ஒருபகுதியினர் முன்னேறினர். ஆனால் சமூகம், கல்வி பொருளாதாரம் இவற்றில் பின்தங்கியிருந்த செங்குந்த நெசவாளர்கள் கண்தங்கியே இருந்தனர், இருக்கின்றனர். முதுகெலும்பு முன்னேறவில்லை! இந்த முரண்-பாடான நிலையை மறுக்கவோ, மறைக்கவோ இயலாது.

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருப்பதின் காரணமாக சலுகைகளைப் பெற்றுக்-
கொண்டுமுன்னேறியசெங்குந்தர் பகுதிகள் முன்னேறிக்கொண்டிருக்கிறதே தவிர அடித்தளமாக
இருக்கும் செங்குந்த நெசவாளர்கள் முன்னேற்றம் பெறவில்லை. நெசவாளர்கள் சமூக,
கல்வி துறைகளில் பின்தங்கி இருப்பதோடல்லாமல் பொருளாதாரத்துறையிலும் பின்தங்கி
இருப்பதால்தான் இந்த அவலநிலை. மற்றவர்கள் ஏற்றம்பெற காரணமாக இருந்தவர்கள்
தாம் ஏற்றம் பெறவில்லை! இங்குதான் செங்குந்த சங்கங்களும் செங்குந்தமரபின் முன்னேற்றத்
திற்கு பாடுபடும் மற்ற செங்குந்த அமைப்புகளும் செயல்படவேண்டிய முக்கியத்துவம் ஏற்படு
கின்றது. செங்குந்த சங்கங்களும் மற்ற அமைப்புகளும் கல்வி வேலை வாய்ப்புகளில் செங்குந்த
மரபினுக்கு அளிக்கப்படும் இட ஒதுக்கீட்டினை பாதுகாத்துக் கொள்ள மட்டும்தான் பயன்படு
கின்றன. இட ஒதுக்கீட்டினால் நெசவாளர்கள் அடைந்த பயன் என்ன என்பதினைச் சிந்திப்
பதாகக் காணோம். அடித்தளத்தில் இருக்கும் நெசவாளர்கள் இட ஒதுக்கீட்டின் பயனை

முழுவதும் பெறவழிவகைகளைச் செய்வதற்கும் முயற்சிப்பதில்லை. இதன் விளைவு முன்னேறியவர்கள் முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். பின்தங்கிய அடித்தளத்து நெசவாளர்கள் பின்தங்கிய நிலையிலேயே வெம்பி வெதும்பிக் கொண்டிருக்கின்றார்கள். செங்குந்த சங்கங்களும் மற்ற அமைப்புகளும் செங்குந்த நெசவாளர்கள் குறிப்பாக முன்னேறுவதற்கு ஆக்க பூர்வமான செயல்பாடுகள் மேற்கொள்ளவில்லை என்பதனை வருத்தத்தோடு சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. அணுகுமுறையில் மாற்றம் தேவைப்படுகிறது. அடித்தளத்து நெசவாளப்பெருமக்களை முன்னேறச் செய்தாலொழிய செங்குந்த சமூகம் முன்னேற முடியாது, முன்னேறியதாகச் சொல்ல முடியாது. இதனை உணர்ந்து செங்குந்த சங்கங்களும் மற்ற அமைப்புகளும் தங்கள் செயல்பாட்டினை மாற்றி அமைத்துக்கொள்ளவேண்டும்.

ஒரே ஒரு எடுத்துக்காட்டு சாலும். நம்மாபினால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களில் நெசவாளர்களுக்கு முன்னுரிமை அளித்து தகுதிவாய்ந்த ஏழை நெசவாளர்களின் பிள்ளைகளுக்கு நன்கொடை பெறாமல் இடமளிக்க வாய்ப்பளித்தால் அடித்தளத்து நெசவாளர்கள் முன்னேறுவதற்கு வழிவகை செய்ததாக அமையும். அதற்கு மாறாக அவர்களிடமும் நன்கொடை பெற்றுத்தான் ஆகவேண்டுமென்றால் சமூக முன்னேற்றம் அல்ல, சமூக சீரழிவு-தான். சமூகமுன்னேற்றம் என்ற போர்வையிலே பணம் பண்ணுவதாகும். எனவே செங்குந்த சங்கங்களும் மற்றஅமைப்புகளும் அடித்தளத்து நெசவாளர்மக்களை உண்மையாக முன்னேறச் செய்ய பாதை வகுத்து செயல்படவேண்டும். முன்னேறியவனை முன்னேற்றுவது முன்னேற்றமல்ல. பின்தங்கியவனை முன்னேற்றுவதுதான் முன்னேற்றம்.

செங்குந்த அடித்தளத்து மக்கள் முன்னேற்றம் பெற பெரியார் மாவட்டத் தலைவரும் மாவட்ட சங்கமும், ஈரோட்டிலுள்ள வணிகப்பெரு மக்களும் அனைத்து மாவட்டத்திலுள்ள முன்னேறிய செங்குந்தர்களும், வணிகப் பெருமக்களும் ஆவன செய்ய வேண்டுகிறேன்.





இல்லறத்தில் நல்லறம்

அ. மூத்திருளப்பன் ஆசிரியர்
ஸ்ரீ ரேணுகா இந்து தொடக்கப்பள்ளி
வ. புதுப்பட்டி-62116
காமராஜர் மாவட்டம்

முன்காலத்தில் திருவள்ளுவர் சென்னையிலுள்ள மயிலாப்பூரில் வாழ்ந்து வந்ததாக வரலாறு கூறுகின்றது. வள்ளுவர் நெசவுத் தொழில் செய்து வந்தாரென்பதும் வரலாறு. வள்ளுவர் மனைவியின் பெயர் வாசுகி. கணவன் குறிப்பறிந்து நடக்கும் பெண்மணி.

ஒரு சமயம் தேவலோகத்தில் விசுவாமித்திர முனிவருக்கும், கௌதமரிஷிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அதாவது பூலோகத்திலே இல்லறத்தில் நல்லறம் காண்பவர் உண்டா என்பது பற்றியது. பூலோகத்தில் வள்ளுவன் என்பான் இல்லறத்தில் நல்லறம் காண்கிறான் எனக் கௌதமர் பதிலுரைத்தார். அப்படியாயின் அவரைப் போய் பார்த்துவர முனிவர் சார்பாக ஆள் அனுப்பப்பட்டது. இதையெல்லாம் வள்ளுவர் இக்காலத் தொலைக் காட்சிப் பெட்டியில் பார்ப்பது போல அவரது ஞானத்தால் பார்த்து ரசித்தார்.

முனிவர் அனுப்பிய ஆள் வள்ளுவர் இல்லம் வருகிறார். அப்போது வாசுகி வீட்டின் பின்புறமுள்ள கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந்தார். வள்ளுவப்பெருந்தகையவர்-கள் தறிநெய்து கொண்டிருந்தார்கள். அது சமயம் முனிவர் அனுப்பிய ஆள் வள்ளுவர் வீட்டிற்கு வந்தார்கள். உடனே சென்னாப்புலவர் அவர்கள் இதைக் குறிப்பாலும் ஞானத்தாலும் உணர்ந்து தமது இல்லத்தரசியை அழைத்தார். அந்த அம்மையார் சுவாமி இதோ வந்துவிட்டேன் யாது வேண்டும் தாங்களுக்கு என்று கேட்டார்.

பெண்ணே ! கைவிளக்கை எடுத்து ஒளியேற்றிக் கொண்டு வா. கடைத்தாக்குழி-யில் குளல் விழுந்து விட்டது. அதைப்பார்த்து எடுக்க வேண்டும் எனப் பதிலுரைத்தார். அவர் விளக்கு கொண்டுவரச் சொன்ன நேரம் பகல் நேரமாகும். வாசுகி, வள்ளுவர் சொன்னபடி விளக்கைக் கொண்டுவந்து கொடுத்தார்.

பகல் நேரம் கடைத்தாக்குழியில் விழுந்த குளலைப் பார்க்க விளக்கு தேவையில்லை. இருந்தாலும் எதிர் உரையாமல் சொன்னதைச் செய்தார் அம்மையார். வந்தவர்கள் இதைக் கண்ணுற்று மிகவும் மகிழ்ந்து போனார்கள்.

இக் காலப் பெண்களேயானால் பட்டப்பகலில் விளக்கு எதற்கு, உங்களுக்கு குளல் விழுந்த இடம் தெரியவில்லையா? எனப்பலவாறு கேள்விக்கணை தொடுத்த பின்னர் வேண்டா வெறுப்பாக விளக்கைக் கொண்டு வந்து கொடுப்பார்கள். மேலும் வந்தவர்கள் வீட்டின் பின்புறம் சென்று கிணற்றைப் பார்த்தார்கள். என்னே ஆச்சரியம்! தண்ணீர் இறைத்த வாளியானது பாதிக் கிணற்றில் அப்படியே நின்று கொண்டிருந்தது. இதையும் பார்த்த முனிவரின் ஆட்கள் வியந்து போனார்கள். இந்த விபரங்களை முனிவருக்குத் தெரியப்-படுத்தினார்கள்.

பிறிதொரு சமயம் கொங்கணச்சித்தர் என்பவரும் இவர்களது இல்லற வாழ்வைப் பார்க்க வந்தார். இவர் முன்கோபம் உள்ளவர். இவருடைய தலையின் உச்சியில் பிளவை என்று சொல்லக்கூடிய ஒரு புண் இருந்தது. இவர் நடந்து வந்த களைப்பால் சிறிது நேரம் ஓய்வெடுக்க எண்ணம் கொண்டு ஒரு மரநிழலில் அமர்ந்தார். அப்போது அம்மரத்-தின் மீது ஒரு கொக்கு உட்கார்ந்திருந்தது.

அந்தப் பறவையானது எச்சமிட்டது. அது சித்தரின் பிளவையின் மீது விழுந்தது. அதுபட்டதும் சித்தருக்குச் சுறீர் எனக் காந்தியது. சித்தர் கோபக் குறியோடு பறவையை நோக்கினார். அந்தப் பறவையானது இவரின் கோபப் பார்வைபட்டு படபட என கீழே விழுந்து எரிந்து சாம்பலானது. பின்பு சற்று நேரம் கழித்து கொங்கணச் சித்தர் அவ்விடம் விட்டு வள்ளுவர் மனைக்கு வந்தார் கதவு சாத்தி வைக்கப்பட்டிருந்தது. சித்தர் கதவைத் தட்டி அம்மா தாயே! என்றார். பதில் இல்லை. வெகு நேரம் கழித்து வாசுகி வெளிப் பட்டு, என்ன என்னவினவினார். சித்தர் கோபப்பார்வையோடு அம்மையாரை நோக்கினார். அவ்வமையம் அம்மையார் ஆசுவாசமாக, ''கொக்கென்று நினைத்தீரோ'' கொங்கணரே என்று வினவினார். வந்த சித்தருக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. நாம் காட்டிலே எரித்த கொக்கையும், மேலும் பெயரையும அல்லவா இந்தப்பெண் சரியாகக் கூறிவிட்டாள் என்று வியப்புக் கொண்டார்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

என்ற குறளுக்கு இணங்க கற்பின் வலிமையால்தான் காட்டில் நடந்த அந்த சம்பவங்களையும், சித்தரின் பெயரையும் சரியாகச் சொல்லமுடிந்தது.

வள்ளுவப் பெருந்தகை உணவு உண்ண அமரும் போது, ஒரு கிண்ணம் அதில் நீர் ஒரு ஊசி போட்டு வாசுகி அம்மையாரை எடுத்து வைக்கச் சொல்வார். அப்படியே அம்மையாரும் செய்து வந்தார். இது எதற்கென்று ஒருநாளும் வாசுகி கேட்கவில்லை அமமையாருக்கு அந்திமக்காலம் நெருங்கியது. அப்போது கற்பின் தலைவியின் ஆத்மா பிரியமாட்டாமல் இருந்தது. வள்ளுவர் பெண்ணே; நமது குடும்ப வாழ்வானது மிகவும் இனிய முறையில் நடந்தது அப்படியிருந்தும் உனது ஆத்மா பிரியாமல் வதைக்கிறதே ஏதாவது உனது மனதில் எண்ணிக் கொண்டிருககிறாயா எனக் கேட்டார். அதற்கு வாசுகி சுவாமி தாங்கள் ஒவ்வொரு நாளும் சாப்பிட உட்காரும் போது கிண்ணத்தில் தண்ணீரும் ஊசியும் போட்டுக் கொண்டு வரச் சொல்வீர்கள் அல்லவா? அது ஏன்? எனக்கேட்டார்.

பெண்ணே அதற்கு நீ வேலை வைக்கவில்லை. எனவேதான் அது எதற்கு என்று உனக்கும் தெரியவில்லை என்றார். சுவாமி சற்று விளங்கக் கூறுங்கள் என்றார். பெண்ணே நீ இலையில் சோறு போடும்போது, கீழே விழக்கூடிய பருக்கையை ஊசியால்குத்தி எடுத்து கிண்ணத்திலுள்ள நீரில் கழுவியபின் இலையில் போட்டுச்சாப்பிடவே அவ்வாறுஏற்பாடு செய்தேன் ஆனால் நீ அதற்கு வேலை வைக்காமல் ஒருபருக்கைகூட கீழே விழாமல் சோறு பறிமாறினாய்

இவ்வாறு வாசுகி வள்ளுவருக்கு ஏற்றத் துணைவியாக வாழ்ந்து அவரது குறிப்-பறிந்து நடந்து, இனிய வாழ்கை வாழ்ந்து ''இல்லறத்தில் நல்லறம்' கண்டார்கள்.

இதைப் பின்பற்றி நம் இனமக்கள் வாழ்ந்து சிறப்பு மிக்க இல்லறத்தில் நல்லறம் காண எல்லாம் வல்ல வேலவனை வேண்டுகிறேன்.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

செங்குந்தர்கட்கு ஓர் வேண்டுகோள்

மு. சிவப்பிரகாசம் B. A. Hono. சென்னை.

முருகவேள் திருவவதாரம் பற்றி கந்தபுராணம் விரிவாகக் கூறும் : சிவபெருமானிடம் வரங்கள் பல பெற்ற சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஆட்சி புரிந்து வந்தான் வானவர்களையும் பால்சுயனையும் பலவிதமான இன்னல்களுக்குள்ளாக்கினான். இந்திரன் மகன் ஜயந்தன் உள்ளிட்ட தேவர்கள் சிறையிற் கிடந்து வெம்பினர்.

இக்கொடுமையைப் பொறுக்க முடியாத இந்திரன் இமயமடைந்து பெருந்தவம் மேற்கொண்டான். ''தட்சனது யாகத்தில் கலந்து கொண்டவர்கள் கழுவாயாக இதனை யனுபவித்தீர்கள். ஆயினும் நம்பால் தோன்றும் குமரனால் உங்கள் துன்பம் தொலையும்'' என்று ஆறுதல் கூறினார் இறையனார். பங்குனி உத்தரத்தன்று இமயத்திற்கெழுந்தருளி பார்வதியைத் திருமணம் புரிகிறார்.

திருமணம் நிகழ்ந்த பின்னரும் குமரன் தோன்றவில்லையே எனத் தொழுது நின்ற தேவர்கள் காண தம் ஐந்து முகத்துடன் அதோ முகமும் தோன்ற அவர்கட்கு ஆறு தலையுடன் காட்சி கொடுத்தருளினன் கண்ணுதற்கடவுள். அந்த ஆறு நெற்றிக்கண்களிலிருந்தும் ஆறு தீப் பொறிகள் தோன்றின. அப்பொறிகளின் அளப்பரும் வெம்மையைத்தாங்கமுடியாத தேவர்கள் மீண்டும் இறைவனிடம் சரண் புகுந்தனர். இறைவனும் ஒரு திருமுகத்துடன் எழுந்தருளி அவைகளை வாயுவிடம் கொடுக்க அவனும் தாங்கவொண்ணாமல் அக்கினியிடம் கொடுக்க சுமக்கமாட்டாத அக்கினியும் அப்பொறிகளை கங்கையிடம் சேர்க்க கங்கையும் அவற்றைச் சரவணப் பொய்கையில் சேர்த்தாள். பிரமன் ஆகிய தேவர்கள் சரவணப் பொய்கையைச் சூழ்ந்தனர். பிரமன் கட்டளையையேற்று கார்த்திகை மாதர் அறுவரும் எடுக்க அறுவருக்கும் ஒவ்வொரு குழந்தையாகத் தோன்றினார் ஆறுமுகக் கடவுள்.

சரவணப் பொய்கையை இறைவனும் இறைவியும் அடைந்து ஆறு குழவிகளையும் அம்மை ஒரு சேர எடுத்தணைத்ததும் ஆறுத்திருமேனிகளும் ஒன்றாயின. ஒன்றான கந்தனை உமையம்மை உச்சி மோந்து ஞானப்பாலை ஊட்டினார். குந்தர்குல முழுமுதற் கடவுளாம் முருகன் இவ்வாறு திருவவதாரம் செய்தருளினார்.

நவவீரர் தோற்றம் : இறைவனிடமிருந்து தோன்றிய தீப்பொறிகளின் வெம்மை-யைக் கண்டு ஓடிய பார்வதியம்மையின் பாதச்சிலம்பிலிருந்த நவமணிகள் தனித்தனியாகச் சிதறி விழுந்தன. அம்மணிகளில் உமையம்மையின் திருவுருவமே தோன்றியது. இறைவன் தன் கருணையால் நோக்க நவசக்திகளும் இறைவனை விரும்பி நோக்க அவர்கள் அக்கணமே கருவுற்றனர். தான் கருவுறாத நிலையில் நவசக்திகள் மட்டும் கருவுற்ற நிலை கண்டு எம்பெருமாட்டி சீற்றம் கொண்டு ''நீங்கள் குழந்தைகளைப் பெறாமல் இருக்கக்கடவது'' என்று கூற அவர்களும் அக்குழந்தைகளைத் தம் கருவிலேயே நீண்ட காலம் தாங்கி நின்றனர்.

அம்மை சீற்றம் கொண்டபோதிலும் அறுமுகன் தோற்றத்திற்குப்பின் அவனுக்குத் தம்பியாக, துணைவர்களாக இந்த நவ வீரர்களும் இருத்தல் வேண்டும் என்ற கருணை உள்ளம் காரணமாகவே சினம் கொண்டாற்போல் அம்மை சபித்தனள் என்று கொள்ளல் வேண்டும்.

முருகன் திருவவதாரம் செய்தபின் நவசக்திகளை விளித்து நீங்கள் புதல்வரைப் பெறுவீர்களாக என்று அம்மை ஆசீர்வதிக்க அவர்களும் அத்துணைக்காலம் கர்ப்பத்திலேயே தவமும் யோகமும் புரிந்து வந்த ஒன்பது வீரர்களாகிய ஆண் குழந்தைகளை ஈன்றனர். இறைவன் அவர்கள் ஒன்பதின்மருக்கும் வாளாயுதம் வழங்கினார். உமையம்மையும் குந்தம் என்னும் வேலாயுதத்தை அருளினார். ஒன்பதின் மருள் மாணிக்க வல்லியின் வயிற்றில் உதித்தவர்தாம் வீரவாகுதேவர். ஏனைய எண்மருக்கும் மூத்தவர். தலைவர். முன்னரே இறைவனருளால் தோன்றிய லட்சம் படை வீரர்களுடன் சண்முகன் சந்நிதியை யடைந்தனர். முருகனும் வீரர்களுடன் சேர்ந்து வீர விளையாட்டுகள் பல நிகழ்த்தினன். அதனைக் கண்ட அசுரர்கள் அச்சமெய்தினர்.

நாரதர் செய்த யாகம் ஒன்றிலிருந்து தோன்றிய ஆட்டுக் கடாய் ஒன்று அனைவரையும் துன்புறுத்திய செய்தி கேட்ட முருகன் வீரவாகுவை ஏவ அவரும் அக்கடாவினைத் தேடி அதன் கொம்புகளைப்பற்றி இழுத்துவந்து முருகன் சந்நிதியில் நிறுத்த முருகன் அதனையும் தம் வாகனமாக ஏற்றருளினான்.

முருகன் அவதாரத்தின் முக்கிய நோக்கம் சூரபன்மன் உள்ளிட்ட அவுணர்களைத் தம் மறக் கருணையினால் அருள்செய்தலும் தேவர் சிறை மீட்டலும் மாகும். அம்பிகையிடம் ஞானசக்தியாகிய வேலினைப் பெற்று இறைவனிடம் படைக்கலங்கள் பெற்று சூரனைப் பொர முருகன் புறப்படுகிறான். சூரனின் இளவல் தாரகாசுரன் அரசு செலுத்திய மாயாபுரியை நோக்கி படைபுறப்பட்டது. தன் இளவலாகிய வீரவாகுவை விளித்து தாரகனை அழித்து வர பணிக்கிறான். தாரகன் மாயத்தினால் வீரவாகுவை மயங்கி விழச்செய்கிறான். செய்தியறிந்த முருகன் விரைவில் சென்று வீரவாகுவை மூர்ச்சை தெளிவித்து யானை முகம் படைத்தோனாகிய தாரகனையும் கொன்றார்.

தாரகனை அழித்த தம் படையுடன் முருகன் திருசெந்தூர் சென்று பாடி விடமைத்துக் கொண்டு வீரவாகுவை சூரனிடம் தூதனுப்பினான். உடனிருந்த வீரர்களும் வீரவாகுவே தூது செல்லத் தகுதியானவர் என ஏகமனதாக மொழிந்தனர். ஆணையை மேற்கொண்ட வீரவாகுவும் சூரபன்மனின் தலை நகராகிய வீரமகேந்திரத்தையடைந்தார். சூரன் அவையில் புகுந்தார். முருகன் அருளிய இரத்தின சிம்மாசனம் ஒன்று வந்தது. அமர்ந்தார். அருகில்நின்ற அவுணர்களும் வீரவாகுவின் தோற்றத்தைக் கண்டு அதிசயித்தனர். அஞ்சினர்.

"இந்திரன் மகன் சயந்தனையும் ஏனைய தேவர்களையும் உடனே சிறையினின்றும் விடுவிக்க வேண்டும். இல்லையேல் நீ முருகப்பெருமானால் அழிக்கப்படுவது உறுதி" என்று கூறினார். சினந்த சூரன் சொல் கேட்டு அருகிலிருந்த அவுணர்கள் வீரவாகு தேவரை சிறைப்படுத்த முயற்சித்தனர். காயங்கள் உடலெங்கும் பட்ட நிலையிலும் தம் வீரபராக்கிரமத்தால் அவுணர்களை வென்று வீழ்த்தினர். தம்மைத்துரத்திவந்த சத்முகன், வச்சிரவாகு யாளிமுகன் போன்ற சூரனின் உறவினர்களையும் தம்வீரத்திற்கு விறகாக்கினர். திருச்செந்தூரை அடைந்து முருகனை வணங்கி நடந்தவை கூறினார்.

கருணையங் கடலாய் முருகனும் தம் மறக்கருணையில் போருக்குப் புறப்பட்டார். சூரனை வென்றார். அருள் செய்தார். ஆம். சேவலும் மயிலுமாக அன்றும் இன்றும் என்றும் முருகனுடன் இணைந்திருக்கும் அருள் பெற்றவனல்லவா. சூரனின் புலிக்கொடியைப்பறித்து வீரவாகு தேவாகளித்தார்.

முழுமுதற்கடவுளாய் இறைவனின் வேறொரு அம்சமாகத் தோன்றிய முருகனுக்கு இளவலாகவும் அமைச்சனாகவும் தூதுவனாகவும் தானைத்தலைவனாகவும் பயர் சேர்த்த வீரவாகு தேவர்தாம் பின்னர் நடைபெற்ற தேவாசுர யுத்தத்தில் முசுகுந்த சக்ரவர்த்திக்கும் தானைத்தலைவனாகப் போர் நிகழ்த்தி வெற்றி சேர்த்தவர். இறைவி மகிழ்ந்தளித்த குந்தத்தையும் முருகன் அளித்த புலிக் கொடியையும் தம் வீரத்திற்கு அடையாளமாகக் கொண்ட நவ வீரர்களை நம் முன்னோராகக் கொண்டவர்கள் நாம். ஆகவே மிகவும் பழமையும் பெருமையும் நிறைந்த பாரம்பரியத்தில் வந்தவர்கள் என்பதை நினைவில் கொண்டு நம் எண்ணம், சொல், செயல் அனைத்தும் மிகவும் உயர்ந்தவைகளாக உருப்பெற உறுதி மேற்கொள்ள வேண்டும்.

காலமாற்றத்தினால் வாழ்க்கைப்போரில் நம்மில் சிலர், பலர் இன்று ஆடை தயாரிக்கும் எளிய வாழ்க்கையே மேற்கொண்டிருப்பினும் [illegible]
வீரபராக்கிரமச் செயல்களையும் இடையில் [illegible]
நம் வழித்தோன்றல்களும் உயர்ந்த மக்களில் உயர்ந்த மக்களாகத் திகழ்வோம் என்பது நிச்சயம்.





களிப்பூட்டும் காளமேகம்

இரா. திலகவதி சண்முகசுந்தரம்
54, சுந்தரேசஐயர் லேஅவுட்,
திருச்சி பாதை, கோவை-18.

மனிதனுக்கு இயற்கை வழங்கிய நன்கொடை சிரிப்பு. வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும். சிரிக்கத் தெரியாதவருக்கு இவ்வுலகமானது பகற்பொழுதும்கூட இருண்டு கிடப்பதே ஆகும்.

''நகல் வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும் பாற்பட்டன்று இருள்''

என்பார் வள்ளுவர். துன்பத்தை மறக்கச் செய்யும் வித்தை சிரிப்புக்கு உண்டு.

நகைச் சுவையைத் தம் பேச்சிலும், எச்சிலும், சொல் வீச்சிலும் பாய்ச்சியவர் காளமேகப்புலவர். எதையும் தூக்கியெறிந்து பேசியவர்; நுண்ணிய கருத்துகளையும் மிக அலட்சியமாக எடுத்து வீசியவர். நையாண்டிகளை, வேடிக்கைகளை அழகுறக் கையாண்டவர், எண்சுவையும் விரவிக் கிடக்கும் ஒண்கவிகளை ஆயிரக் கணக்கில் பாடியவர்; சொற்சிலம்பம் ஆடியவர். நகையோடு கலந்து வகையாக வசைபாடுவதிலே வல்லவர்.

நகைச் சுவைப்பாடல்களின் மன்னராகத் திகழ்ந்த இவர், i5-ஆம் நூற்றாண்டில், கும்பகோணத்தில், வரதன் என்ற பெயரில் வாழ்ந்தவர். மழை, தாமாகப் பெய்வது போல, காளமேகமும் தாமாகத்தான் பாடுவார். யாரும் கேட்டால் பாட மாட்டார்.

திருவானைக்கா உலா, பரப்பிரம்ம விளக்கம் என்ற நூல்களை எழுதியவர். கடவுளைப் பற்றி நிந்தாஸ்துதி பாடினார் என்றாலும் கடவுள் மீது மிகுந்த அன்பு கொண்டவர். கடவுள் மரியாதைக்கு உரியவர் அல்லர்; அன்புக்குரியவர். மரியாதை கைகட்டி, வணங்கி நிற்கும். ஆனால் அன்போ, கெஞ்சும்; கொஞ்சும்; கோபிக்கும். இவரும் உரிமையோடு கேலி செய்து பாடியவர்.

ஒருமுறை புலவர், ஒரு சத்திரத்திலே தங்க வேண்டி நேர்ந்தபோது, தம் கையோடு கொண்டு சென்ற சோற்று முட்டையையும் அருகே வைத்து, சிறிது நேரம் கண்ணயர்ந்தார். விழித்துப் பார்த்தபோது சோற்று முட்டையைக் காணவில்லை. சுற்றுமுற்றும் தேடிப் பார்த்தார். யாரையும் காணவில்லை. சிந்தனையோடு வந்தமர்ந்தவர் தலை நிமிர்ந்து எதிரே நோக்க, அங்கே தொந்தி வயிறோடு, விநாயகப் பெருமான் விநயமாகக் காட்சி தருகிறார். கண்டவுடனே மனதில் கண்டு கொண்டார். கண்டபடி ஏசிப் பாடுகிறார்.

பிள்ளையாரே! உன் தம்பி முருகனோ வள்ளியைத திருடியவன்; உன் மாமன் கண்ணனோ வம்பன்; ஊரிலுள்ள வீடுகள் தோறும் புகுந்து பானைகளை உருட்டி நெய்யைத் திருடியவன்; உமது குலமே திருட்டுக் கூட்டம். நீ மட்டும் எப்படி இருப்பாய்? குலப்புத்திதானே உனக்கும் வரும்? என் சோற்று முட்டையின் முடிச்சை அவிழ்த்தாயே! என்று ஏசுகிறார். எப்படிப்பட்ட வசைமொழி இது.........

தம்பியோ பெண்திருடி, தாயாருடன் பிறந்த
வம்பனோ நெய்திருடி, மாமாயன்-அம்புவியில்
மூத்த பிள்ளையாரே முடிச்சவிழ்த்தீரே போமோ
கோத்திரத்துக்குள்ள குணம்? —என்று பாடினார்

விநாயகனை பாட்டால் வீழ்த்திவிட்டு, தெருவிலே இறங்கி நடக்கிறார். வழியில் கூட்டம்; கூச்சல்; குழப்பம் மோர் விற்கும் தயிர்க்காரிக்கும், அவளிடம் மோர் வாங்கும் பெண்களுக்கும் சண்டை. காரணம்............. தயிரில் தண்ணீர் கலந்தாளா? அல்லது தண்ணீரில் தயிரைக் கலந்தாளா? என்பதே. இக்காட்சி அவரது மனதிலே அழுந்த, அற்புதப் பாடலாக அவர் வாயிலிருந்து விழுந்து வருகிறது. ஓ தண்ணீரே! நீ

கார் என்று பேர்படைத்தாய் ககனத்து உறும்போது
நீர் என்று பேர்படைத்தாய் நீள்நிலத்தில் வந்ததற்பின்
வார் என்னும் மென்முலை ஆய்ச்சியர் கை வந்ததன் பின்
மோர் என்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே.

விண்ணிலிருந்த போது மேகம் என்றும், மண்ணில் இறங்கியபோது நீர் என்றும் ஆய்ச்சியர் கையில் வந்த போது மோர் என்றும் மூன்று பெயர்களைப் பெற்றாயே என்று கூறுவதால் நீரே மோரான நிலையை நயமாகக் கூறுகிறார்.

தயிர்க்காரியைக் கேலி செய்தவர் தன் வழியே போகிறார். எதிரே விகடராமன் தன் குதிரையிலே வளி வரும் காட்சியைக் காண்கிறார். அக்குதிரையின் முன்னே மூன்று பேர் நின்று, தேரை வடம் பிடித்து இழுப்பது போல, அதன் கடிவாளத்தைப் பிடித்திழுக்க, பின்னே இருந்து இரண்டு பேர், புறப்படாத பேருந்தைத் தள்ளுவதுபோல தள்ள ஊர்ந்து வருகின்றது. இக்குதிரை இப்படியே போனால், ஒரு மாதமெல்லாம் கூடி ஒரு காதமே போகும். எப்போதும் விகடம் பேசிக்கொண்டே இருக்கும் இந்த விகடராமன் குதிரையும் அவனைப் போலவே பயனற்றதாக உள்ளது. வாய் படைத்த நாய் வேட்டைக்கு உதவாதென்பர். அதிகம் பேசுவோர் எள்ளுவளவு காரியத்தையும் செய்யமாட்டார் என்பதை மறைமுகமாகக் கூறுகிறார்.

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர்தள்ள - எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடராமன் குதிரை
மாதம்போம் காத வழி (1 காதம்-10மைல்)

திருக்குடந்தையில் புலவர் ஒருமுறை விருந்த நந்தச் சென்றார். அப்போது அருகில் அமர்ந்துண்ட ஒருவர் மிக வேகமாக சோற்றை அள்ளி அள்ளி விழுங்கிக் கொண்டிருந்தார். அந்த வேகத்தில் அவர் குடுமி அவிழ, அவரது இலையில் அது விழ......... வந்ததே கோபம் அவருக்கு............... உணவு உண்டவரின் அந்த வேகத்திலேயே பாடுகிறார்.

சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா! சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா புலையா - திருக்குடந்தைக்
கோட்டானே நாயே குரங்கே உனை ஒருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்.

அப்பப்பா! என்ன கோபம்......... அந்தக் கோபத்தையும் நகைச்சுவையோடு தரும் வேகம்.

மனிதரைச் சொல்லும்போது, குழந்தை பெற்ற தாயை பெற்றாள், ஈன்றாள் என்போம். ஆனால் விலங்குகளைச் சொல்லும்போது குட்டி போட்டது என்போம். நீ ஒரு விலங்கு எனக் கடுமையாகச் சாடுகிறார். மனித பண்பு அற்றவர்களை நாகரீகம் அற்றவர்களை விலங்கென்று அஞ்சாது வசைபாடும் இப்பாடல் நம்மைச் சிரிக்க வைப்பதோடு, சிந்திக்கவும் வைக்கிறது.

நையாண்டியும் கேலியும் செய்தே யாரையும் அலட்சியம் செய்கின்ற இவரை அதிமதுர கவிராயர் மடக்க நினைத்திருந்தார். நேரமும் வாய்த்தது. அதிமதுர கவிராயரும், மற்ற புலவரும் கூடியிருந்த இடத்திற்கு காளமேகம் வருகிறார். அவர்களைப் பார்த்து, நீங்களெல்லாம் யாரென்று கேட்க, அவர்கள் நாங்கள் கவிராயர்கள் என்றனர். கவி என்றால் குரங்கென்ற பொருளும் உண்டு. எனவே குறும்பு தழைக்கப் பாடுகிறார்.

''சாலப்,......
புவிராயர் போற்றும் புலவீர்காள் நீவிர்
கவிராயர் என்றிருந்தக்கால்......
வாலெங்கே? நீண்ட வயிறெங்கே? முன்னிரண்டு
காலெங்கே? உட்குழிந்த கண்ணெங்கே''

எனக்கேட்டார். அதிமதுர கவிக்கு அதிகமான கோபம். ஓய் காளமேகமே! எங்களை என்னவென்று நினைத்து இப்படி ஏசுகிறாய்! மூச்சுவிடும் முன்னே 300ம், 400ம், ஆச்சென்று தும்மும் நேரத்தில் 500ம் ஆக கவிபாடும் வல்லமை உடையவர்கள் நாங்கள். உம்மைப்போல் பொருள் இல்லாத வெள்ளைக்கவியா நாங்கள் பாடுகிறோம்? அதுமட்டுமா? மற்றொருவர் கவிதையை எடுத்து தன்கவிதை எனப்பாடுபவர் நீர். இந்த வேலையெல்லாம் எம்மிடம் வேண்டாம். உம்மோடு எமக்கென்ன பேச்சு?

''வெள்ளைக்கவிக் காளமேகமே உன்னுடைய
கள்ளக் கவிக் கடையைக் கட்டு'' என்றார்.

இயல்பாகவே வசைபாடும் காளமேகத்துக்கு, அவல் கிடைத்தாற்போல் ஆனது. ஓய் அதிமதுரமே! என்னைப்பேசு, என் கவிதையை ஏசாதே! நீயோ,மூச்சை இழுத்துவிடும் நேரத்திலும் ஆச்சென்று நீ...ட்டித்தும்மும் நேரத்திலும் 300, 400, 500 என்று பாடுவாய். ஆனால் நானோ ......

''இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம் பாட்டும் பாடுவேன்

வெள்ளைக்கவி, கள்ளக்கவி என்று ஏச உமக்கு என்ன தைரியம்? சிறுபிள்ளைத்தனமாய் நீர் பேசியதால் மன்னித்தோம். பிழைத்துப்போ இங்கே பாரும்... நான்

சும்மா இருந்தால் இருப்பேன். எழுந்தேனேயாமாயின் 'பெருங்காளமேகம்தான் பிள்ளாய்! நினைவிலே வைத்துக் கொள்...என்றார் பிள்ளையென்று எசுகிறார்.

சளைத்தவரா அதிமதுரர்? நீர் உண்மையிலேயே பெரும் காளமேகம் என்றால் எமகண்டம் பாடி எம்மை வெல்க! என வாதுக்கு அழைத்தார்.

எமகண்டம் என்பது, இரண்டு பெரிய தூண்களை இரு பக்கங்களில் நிறுத்தி, அவ்விரண்டையும் ஒரு சட்டத்தால் இணைத்து, அதன் நடுவே கயிறுகளால் பிணைக்கப்பட்ட ஊஞ்சலை அமைத்து அந்த ஊஞ்சலை கீழிருந்தே இயக்கும் வண்ணம் கயிறுகள் பொருத்தப்பட்டு, இருக்கும். அந்த ஊஞ்சலின் நேர்கீழே ஆழமான பெரிய குழியில் எரிமூட்டப்பட்டு அதன்மேலே பெரிய கொப்பரையில் எண்ணெய் ஊற்றிக் கொதிக்க வைப்பர். வாதில் வெல்ல விழைவோர் அந்த ஊஞ்சலில் அமர, சுற்றியும் பல புலவர்கள் நின்று வினாக்கள் பல கேட்பர். அவற்றுக்கு, உடனுக்குடனே விடையிறுக்க வேண்டும். இல்லையெனில், கீழிருந்து அந்த ஊஞ்சலை இயக்க அது அறுந்து கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில் விழ ......நிலைமையை நினைத்துப்பார்க்க மனம் அஞ்சுகிறது.

அத்தகு வாதுக்கு, அதிமதுரம் அழைக்க, முக மலர்ந்து ஒப்புக்கொண்டு, பாடிய பாடல்கள் பல எனினும் சிலவற்றைமட்டும் பார்க்கலாம். சுற்றி நின்ற புலவர் பலருள் ஒருவர், 'செருப்புக்கு எனத் தொடங்கி விளக்குமாறே என முடிக்க' என்கிறார். உடனே அவர்

'செருப்புக்கு வீரரைச் சென்று உழக்கும் வேலன்
பொருப்புக்கு நாயகனைப் புல்ல — மருப்புக்கு
தண்தேன் பொலிந்த திருத் தாமரைமேல்
வீற்றிருக்கும்
வண்டே விளக்கு மாறே' — என்றுபாடினார்.

செருப்புக்கு என்பதனை செரு புக்கு — போர்க்களம் புகுந்து எனவும், விளக்குமாறே என்பதனை விளக்கும் வழி (ஆறு—வழி) எனவும் பொருள் கொள்ள வேண்டும். என்னே இவரது திறம்?

மற்றொருவர் 'கரி எனத் தொடங்கி உமி என முடிக்க' என்றார்.

''கரியதனையே உரித்த கையா, வளை ஏத்த
அரி அயற்கும் எட்டாத ஐயா — பரிவாக
அண்ட ரெல்லாம் கூடி அமுதம் கடைந்தபோ
உண்ட நஞ்சை இங்கே உமி''—என்று தயங்கா
பாடினா

அடுத்த ஒருவர் எழுந்து உதடு முட்டாமல் பா
என்றார்.

''காக்கைக் காகாகூகை, கூகைக் காகா காக்
கோக்கு கூ காக்கைக்கு கைக்கைக்
காக்கைக்கு கைக் கைக் காகா" என்று பாடினா

இப்பாடலைக் கேட்டவர்க்கு ஏளனச் சிரிப்பு. ஆனா பொருள் தெரிந்தபோதோ ஒரேவியப்பு. காக்கையா இரவில் கூகையை வெல்ல முடியாது; கூகையா பகலில் காக்கையை வெல்ல முடியாது. அரச பொருட்டு பூமியைக்காக்க, கொக்கைப்போல, சமய பார்த்து செல்ல வேண்டும். என்பதே இதன் பொரு

மேகம் விரைந்து மழை பொழிவதுபோல, இவ கவிமழைபொழியும் ஆற்றல் பெற்றதாலேயே கா மேகம் என்று பெயர் பெற்றவர்.

இவ்வாறு எமகண்டம் பாடி வென்றவர் கம்ப யும் விட்டுவைக்கவில்லை. கம்பராமாயணத்தில் கம் ஓரிடத்தில் நாராயணனை நாராயணன் என் சொல்லால் குறிக்கிறார். இசைப்பண்பும், கவிமர கருதி புலவர்களுக்குச் சில உரிமைகள் உண்டு. அ கருதி அவர் கையாண்டது. இவருக்குப் பொறு வில்லை. அதென்ன அவர்மட்டும் அப்படிப்பாடுவ நானும்தான் பாடுவேன்

''நாராயணனை நாராயணன் என்றே கம்
ஓராமற் சொன்ன உறுதியால் — தே
வாரென்றால் வர்ரென்பென், வாளென்
வள்ளென்
நாரென்றால் நர்என்பேன் நன்'' என்று உரி

குரல் எழுப்புகிறார். இந்த 'நன்' என்ற சொல் நகைச்சுவையின் அழுத்தங்காண்பது இப்படியெல் சொல்வேன் நான் என்று சொல்ல வந்தவர், ' என்று தான்சொல்லும் பாட்டின் இறுதியிலே வை பாடி உரிமையை நிலைநாட்டிக் காட்டிவிட்டார்.

இப்படியே இவர் வாழ்வு சென்றதா? க இவர் வாழ்வில் காணாத ஒன்றா? எனில்........

தான் இல்லை. கண்டும் இருக்கிறார். கலந்தும் இருக்கிறார். காதல் துறையில் இவரது போக்கே தனி.

'த' என்ற வர்க்கத்தில் ஒன்பதே எழுத்துக்களைக் கொண்டு ஒரு பாடலை அமைத்து, தூது செல்லும் நாடகக் காட்சியை நம் கண்முன்னே அமைத்துக் காட்டுகிறார்.

காதல் வயப்பட்ட தலைவி, தலைவனுக்கு தூதனுப்பஎண்ணுகிறார். அடியாரைத் தூதுவிடலாம் எனின், அவர் ஆமைபோல் நகர்வர்; அவர் தூது பயன்படாது கிளியைத் தூதனுப்ப எண்ணின் அது தெளிவாகத் தன் நிலைபற்றிப் பேசாது. தோழியோ என்றால் நாளைக்குப் போகிறேன், நாளைக்குப் போகிறேன் என்று நாளைப் போக்குகிறாள். தெய்வத்தை வேண்டி, அவன் அருள்பெற தொடர்ந்து செல்வதும் வீண்முயற்சி. தெய்வம் தொழாது. கணவனைத் தொழுதெழும் பெண்மையின் இலக்கணப் பெற்றியை மறவாதவரல்லவா கவிஞர்?......... எனவே நெஞ்சிடம் கூறுகிறார் நெஞ்சே! நீதான் எனக்காகத் தூது செல்லவேண்டும். பூந்தாது போன்ற நிறமுள்ள தேமல் என்மீது படர்ந்து அதிகமாகிவிடமால், எனது தலைவனின் இனிமையான பெயர் சொல்லி என்னைக் காப்பாற்று......... என்ற காதல் பொருளமைந்த பாடல் இதோ.........

''தாதி தூது தீது, தத்தை தூதோதாது
தூதி தூதொத்த தூததே—தாதொத்த
துத்தி தத்தாதே துத்தித்துதேத் தொத்தீது
தித்தித்த தோதித் திதி''.

தாதி தூது தீது - அடியார் தூது தீதாக முடியும்; தத்தை தூது ஓதாது-கிளி தூதை ஒழுங்காகச் சொல்லாது; தூதி தூது ஒத்தித்த தூததே-தோழியின் தூது ஒத்திப் போடப்பட்ட தூது; தாது ஒத்த துத்தி-பூந்தாது போன்ற நிறமுள்ள தேமல்; தத்தாதே-என்மீது படராமல்;துத்தித் துத்தே-(தே துதித்து என மாற்றுக)-கடவுளை வணங்கி, தொத்தீது-பின் தொடர்வது வீண்முயற்சி; தித்தித்தது-தலைவனின் இனிமையான பெயரை, ஓதி-சொல்லி: திதி-காப்பாற்று.

இப்போது பாடலை மீண்டும் படித்தால் பாடலின் அருமையும், பொருளின் எளிமையும், கவியின் வல்லமையும் தெள்ளிதின் விளங்கும். 'ஆண்கவியை வெல்ல வந்த பெண்கவியே வருக' என்ற திரைப்படப்பாடல் முளைக்க இதுவே விதையாக அமைந்தது.

கண்ட இடத்தில் இருந்து, உண்ட இடத்தில் உறங்கி, கொண்ட கவிச்சுவையை விண்டு பொழியும் வாழ்வில் ஓர்நாள், நாகைப்பட்டினச் சத்திரத்தில் தங்கநேர்கிறது. உரிய நேரத்தில் அன்னம் கிடைக்கவில்லை பசியின் வருத்தம், கோபம் கலந்த நக்கலோடு ஒரு பாடலாக வெளிப்படுகிறது.

கத்து கடல் சூழ் நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசி வரும் — குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்

'ஒருவாய்ச் சோறு தின்பதற்குள் வெடிந்துவிடும்' என வெடித்துப் பாடுகிறார். கேட்ட காத்தான் ஓடோடி வந்து உணவு பரிமாறி, மன்னிக்க வேண்டுகிறான். தன் பெயர் கெடாதிருக்க பாடலை மாற்றி வேறு பாடலைப் பாடச்சொல்கிறான்.

வேறெதற்கு? இதுவே உன் மேன்மையைச் சொல்லும் பாடல்தான். உலகெங்கும் வறுமையிருந்தாலும், உன்சத்திரத்தில் மட்டும் அரிசி இருக்கும்; இங்கே அரிசி குத்தி உலையிலிட்டுச் சமைக்க, ஊராரின் பசி அடங்கும். இலையிலிட்ட அன்னத்தின் வெண்மை கண்டு நாணி, வெள்ளியும் எழுந்து விடுவான் எனச் சாதுரியமாக, பொருத்தப் படுத்திப் புகழ்ந்து கூறி அவனை மகிழ்ந்து போகச் செய்கிறார்.

தமிழகத்தின் தொன்மையான கணிதமுறைகளில் பின்ன முறையும் அமையும். கால், அரை, முக்கால், அரைக்கால், மா, காணி, மாகாணி என்பன அவை. இந்த பின்னங்களை வைத்தே நம் வாழ்வைப் பின்னியாருக்கும் வண்ணத்தை வருணிக்காமலிருக்க இயலாது

முக்காலுக்கேகா முன் முன்னரையில் வீழாமுன்
அக்காலரைக்கால் கண்டஞ்சாமுன் — விக்கி
இருமா முன் மாகாணிக் கேகாமுன் — கச்சி
ஒருமாவின் கீழரை இன்று ஓது.

முக்கால், அரை, கால், இருமா, அரைக்கால், ஒரு மாவின் கீழ் அரை.........என்று ஓடுகிறது பாடல்.

இரண்டு கால்கள் பெற்ற நமக்கு, மூன்றாவதாக ஒன்றும் கோல் வரும். முதுமைப் பருவம் அடையுமுன், அதற்கு அடையாளமாக முன்னே வருகின்ற நரை விழுமுன், அப்போது வரும் எம தூதர்களின் கால்களைக் கண்டு அஞ்சாமுன, விக்கலும், இருமலும் நம்மை

பற்றுமுன், பெரிய மயானத்தை அடையுமுன் காஞ்சியில் ஒரு மாமரத்தின்கீழ் இருக்கும் ஏகம்ப-நாதரை இன்றே, இப்போதே வழிபடு என்கிறார்.

•

மிக அரிய செய்தியையும் மிக எளிதாக, அதையும் சுவையோடு சொல்கின்றார்.

இந்தக் கணிதப் பெயர்களை வைத்து வாழ்வின் கணக்கை கணித்து, இறப்புக்குமுன் இறையருளை நாடும் வழியை நமக்கு நயத்தோடு விளக்குகிறார்.

உணர்வுக்கும் அறிவுக்கும் ஒன்றி நின்றுபேசும் ஒண் கவிகளோடு இத்தகு எண்கவிகளும் பாடியவர். ஆனால் இந்தச் சிலம்ப விளையாட்டோடு இப்பாடல் நில்லாது, விளையாட்டைப்போல சச்சிதானந்தத்தையே தொட்டு நிற்கிறது. இந்த சச்சிதானந்தத்தை அடைவதே நமக்கு வாழ்வில் ஆறுதல். இறைவனடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல்லாத நிலையை உளத்திலே நினைத்த மாத்திரத்தில் சொற்சிலம்ப விளையாட்டு என்று அங்கே உருவாகிறது.

எதையுமே நையாண்டியாகப் பாடிப் பழக்கப் பட்ட அவருக்கு இறையருளின் ஆறுதலும் விளையாட் டாகத் தோன்றியது வியப்பில்லை.


"சங்கரர்க்கு மாறுதலை சண்முகத்திற்கு மாறுதலை
ஐங்கரர்க்கு மாறுதலை ஆனதே - சங்கைப்
பிடித்தார்க்கு மாறுதலை பித்தா! நின்பாதம்
பிடித்தார்க்கு மாறுதலைப் பார்".

சிவபெருமானுக்குத் தலையிலே கங்கையாறு, முருகக் கடவுளுக்கு ஆறுதலைகள், ஐங்கரராகிய விநாயகருக்கு மாறுபட்ட யானைத்தலை, சங்கைப் பிடித்த திருமாலுக்கு ஆறு பள்ளிகொள்ளும் இடமானது. பித்தனாகிய சிவபிரானின் பாதங்களைப்பிடித்தவர்க்கும் ஆறுதல் கிடைப்பதைப்பார் என்று காட்சி பிடிமாணமாகக் காட்டுகிறார். ஆறுதலை என்ற அழகியசொல்லெடுத்து அழகுறவிளையாடி அலட்சியமாக வெற்றி கொள்கிறார்.


இனியொரு பிறவி எடுக்க நேர்ந்தால்
கவுகாளமேகம் ஆவேன் நான்

என்பார் கண்ணதாசன். எவ்வித பொறுப்பும் இன்றி ஊருக்கு ஊர் ஓட்டம். சத்திரத்துச் சாப்பாடு. பாடல் பரிசு என்று எப்பற்றிலும் அகப்படாமல் ஆனந்தப் பறவையாய் சிட்டுக்குருவியாய் பறந்து திரிந்தவர். அரசன் முதல் ஆண்டி வரை அனைவரையும் கேலி செய்தவர். துறவுக்கு வேந்தனும் துரும்பல்லவா 'இருந்தால் நவாப், இல்லையெனில் பக்கிரி' எனக் கவலையின்றி வாழ்ந்தவர். அதனால்தான் எதையுமே அலட்சியமாகச் சிந்திக்க முடிந்ததோ? இளங்கோவுக்கு ஒரு சிலம்பு, கம்பனுக்கு ஒரு இராமாயணம் போல காளமேகத்துக்கு அவரது தனிப்பாடல்கள். ஆம்........ மிக்க சிறப்போடும் சுவையோடும் காலத்தால் நிலைத்து நின்று வசைபாடும் அவரது இசை பாடவல்லவை........ அவரது தனிப்பாடல்களே.






அருள்மிகு சுப்ரமணியசுவாமி கோவில்
சென்னிமலை



அருள்மிகு சுப்ரமணியசுவாமி கோவில்
சிவன்மலை - காங்கயம்



ஈரோடு கலைக்கல்லூரி (தன்னாட்சி)
ஈரோடு - 9



ஈரோடு நெசவாளர் குடியிருப்பு
ஜெகநாதபுரம்



சாட்சி

சு. தங்கவேலு M. A., M. Phil., M. Ed.,
திருவண்ணாமலை

கடவுளின் அருள் தனக்கு இன்னின்ன வகையில் கிடைத்தது என்று சொந்த அனுபவங்களைக் கூறும் முறைக்குச் 'சாட்சியளித்தல்' என்று சில மதங்களில் கூறுவதை நாம் அறிவோம். இந்தக் கட்டுரையில் 'இனப் பற்று' என்னுடைய வாழ்க்கையை எப்படி உயர்த்தியது என்பதையே எழுதுகிறேன்.

ஊருக்கெல்லாம் பொதுவான காவல் வருகின்ற வரையில் ஒவ்வொரு வீட்டுக்கும் பூட்டும் தாழ்ப்பாளும் தேவை. இதன் அடிப்படையில் ஒவ்வொரு இனத்திற்கும் இனப்பற்று ஒன்று தேவையே.

நான் சேலம் மாவட்டத்தில் மல்லூர் கொமார பாளையத்தில் பிறந்தவன் எம். ஏ., வரையில் என்படிப்பை முடித்தபிறகு ஈரோடு கலைக்கல்லூரியில் வேலை தேடி வந்தேன். கல்லூரியில் வேலை கிடைக்கவில்லை; இருப்பினும் அமரர் **T. R. அர்த்தநாரி** முதலியார் (இராசலட்சுமி டெக்ஸ்டைல்ஸ்) அவரிடம் ஜவுளிக் கடையிலாவது வேலைகொடுங்கள் என்று கேட்டேன். எம். ஏ., படித்தவருக்கு ஜவுளிக்கடையில் எப்படி வேலை கொடுக்க முடியும்? என்று கேட்டார்.

'எம். ஏ. படித்தாலும் ஒவ்வொரு வேளையும் பசிக்கிறதே என்று கூறினேன் நான் கூறிய வார்த்தைகளைக் கேட்டவுடன் என்னைப்பற்றி விசாரிக்கத் தொடங்கினார். நான் ஒரு செங்குந்தன் என்பதைக்கேட்டவுடன் அந்தக் கணத்திலேயே தன்னுடைய கடையில் என்னைச் சேர்த்துக் கொண்டார் ஏழை செங்குந்தனை முன்னேற்ற வேண்டும் என்ற இனப் பற்று அமரர் T R அர்த்தநாரி முதலியார் அவர்களிடமிருந்தது அவருடைய அன்பு உள்ளத்தால் வேலைகிடைத்தது இனப்பற்று காரணமாக என்வாழ்வில் கிடைத்த முதல் வெற்றி இதுவே.

அவருடைய கடையில் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில் சிவத்திரு V.M. பாலுசாமி அவர்களும் சிவத்திரு **A. P.** வெங்கடாஜலம் அவர்களும் எனக்கு அறிமுகமானார்கள் நம்முடைய இனத்தில் எம். ஏ. படித்த ஒரு பையன் ஜவுளிக்கடையில் வேலை பார்க்கும்நிலை இருக்கிறதே என்று அவ்வப்போது அவர்கள் ஏங்கினர் என்னை முன்னேற்ற அவர்கள் முயற்சி செய்தனர் அந்த நேரத்தில் கல்லூரிப்பணிக்கு எம். பில், இன்றியமையாத பட்டப்படிப்பு என்ற நிலைவந்தது உடனே என்னை எம். பில், படிக்கும்படித் தூண்டினர் ஆனால் ஏழையாகிய நான் சென்னை சென்று எம்' பில்., படிக்க இயலாத நிலை என்னுடைய ஏழ்மையை உணர்ந்து

அமரர் T. R. அர்த்தநாரி முதலியார் அவர்கள்
சிவத்திரு V. M. பாலுசாமி முதலியார் அவர்கள்
சிவத்திரு **A P** வெங்கடாஜலம் அவர்கள்

ஆகிய மூவரும் எனக்குப் பண உதவி செய்து எம். பில்., படிக்க வைத்தனர். இனப்பற்றி னால் எனக்குக் கிடைத்த இரண்டாவது வெற்றி இதுவே

எம். பில்., ஆராய்ச்சிப் படிப்பில் திருத்தொண்டர்களைப்பற்றி ஆராய்ச்சிசெய்து வெற்றி பெற்றேன். எம். பில்., படித்த பிறகும் வேலையின்றி இருந்தேன் அந்தநிலையில் சிவத்திரு. A.P. வெங்கடாசலம் அவர்கள் ஈரோடு திருத்தொண்டீசுவரர் திருக்கோயில் திருபணியில் என்னைப்புகுத்தினர். சிலவாரங்கள் திருப்பணியில் இருந்தேன்; அந்த நேரத்தில் செங்குந்த இனத்தினர் நடத்தும் ஈரோடு கலைக்கல்லூரி விடுதியில் விடுதிக்காப்பாளர் பணியைப் பெற்றேன்.

சிவத்திரு. A. முனுசாமி முதலியார் அவர்கள்

சிவத்திரு. C.K. இராமநாதன் அவர்கள்

அமரர். T.R. அர்த்தநாரி முதலியார் அவர்கள் ஆகிய மூவரும் முயற்சி செய்து ஈரோடு கலைக்கல்லூரியில் என்னைப் புகுத்தினர் இனப்பற்று காரணமாக எனக்குக் கிடைத்த மூன்றாவது வெற்றி இதுவே.

கலைக்கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் கல்லூரியில் தலைவர் திரு. R.A.N. முத்துச்சாமி முதலியார் அவர்கள் என்மீது அன்புகாட்டத் தொடங்கினார். ஒருநாள் அவர் என்னைஅழைத்து. தன்னுடைய மைத்துனரின் மகளைத் திருமணம் செய்துகொள்ள முடியுமா? என்று கேட்டார். நான் என்னுடைய ஏழ்மையான குடும்பத்தைப்பற்றி எடுத்துரைத்தேன். இருப்பினும் ஒரு ஏழை செங்குந்தனுக்குப் பெண் கொடுத்து அவனையும் உயர்த்துவதுதான் உண்மையான இனப்பற்று என்பதில் திரு **R. A. N. M.** அவர்கள் உறுதியாக இருந்தார் என் மாமனாரும் அதே கருத்துடன் இருந்தார். திருமணத்திற்கான அனைத்துச் செலவுக ளையும் அவர்கள் ஏற்றுக் கொண்டு திருமணத்தைநடத்தி வைத்தனர். இனப்பற்று காரண மாக எனக்குக் கிடைத்த நான்காவது வெற்றி இதுவே. அனாதையாக ஈரோட்டில் நுழைந்த நான் எம். பில்., பட்டமும் பெற்று, நல்ல இடத்தில் பெண்எடுக்கும் வாய்ப்பும் பெற்றேன் என் றால் அதற்குக் காரணமும் இனப்பற்றே.

ஈர நெஞ்சினர் வாழும் ஈரோட்டில் செங்குந்தர் இனம் செம்மாந்து விளங்குகிறது. உழைப்பும் உண்மையும் மூலதனமாகக் கொண்டு விளங்குபவர்களை முன்னேற்ற சான்றோர் பலர் காத் திருக்கின்றனர் அத்தகைய திருநகரில் செங்குந்தர் இனப்பற்று மேலும் வளர வேண்டும் நம்மை நாமே உயர்த்திக்கொள்வதில் முயற்சி செய்ய வேண்டும் பணம் படைத்த செங்குந்தர் கள் வசதியிற் குறைந்த இடத்தில் திருமணத் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும்

'என்னால் இயன்ற அளவு ஒரு செங்குந்தனையாவது முன்னேற்றுவேன்' என்ற உறுதி மொழியை எடுத்துக் கொள்ள வேண்டும் ஈரோட்டுத் திருநகரில் மேலும் பல கல்வி நிலை யங்கள் எழவேண்டும்; தொழிற்சாலைகள் அமையவேண்டும்; அத்தொழிற்சாலைகளில் செங் குந்தர் இனம் பணிவாய்ப்பினைப் பெறவேண்டும் நம்முடைய இனத்தில் இனப்பற்று இன்னும் வளரவேண்டும் சுருங்கக் கூறினால், ஈரோடு பெருமக்களால் நான்பெற்ற வளர்ச்சியைப் போல இன்னும் படித்த இளைஞர்கள் பலரும் முன்னேறவேண்டும். அதற்கு செங்குந்த மகாஜன சங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இனமுன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு விளங்கும் பெருமக்களை வருடத்திற்கு ஒருமுறையாவது ஓரிடத்தில் கூடும்படி செய்து புதிய திட்டங்களைத் தீட்டுதல் வேண்டும்.

உழைப்போம்! வெற்றி பெறுவோம்!

வாழ்க செங்குந்தர்! வளர்க செங்குந்தர் பண்பு!

ஆய்வுபற்றிய குறிப்பு

'தமிழ்ச் சமுதாயத்தின் மீது கிருத்துவ மதத்தின் தாக்குதல்'



K. A. ஆறுமுகம்
M. A., Ph. D., Dip in UNO
பேராசிரியர், வரலாற்றுத்துறை,
வாசவி கல்லூரி, ஈரோடு.

மேலை நாட்டு நாகரீகத்தின் முன்னோடிகளான கிரேக்கர்களும் உரோமானியர்களும் வாணிபத் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடிய உயரிய நிலையில் ஆயிரக்கணக்காண ஆண்டு களுக்கு முன்பே தமிழ்ச்சமுதாயம் இருந்தது. ஆனால் காலப்போக்கில் தமிழர் நாகரீகத்தின் மீது வெவ்வேறு மதங்கள் தாக்குதலை மேற்கொண்டன. அவற்றில் இந்து மதமும் தமிழர் நாகரிகம் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து பிரிக்கமுடியாமல் வளர்ந்தன. இந்நிலை யில் தமிழர்-இந்து மதம் பிறமதங்களின் குறிப்பாக புத்தமதம், ஜைனமதம், இசுலாம் மத தாக்குதல்களுக்கு உள்ளாகியது. இதன் காரணமாக தமிழர் நாகரீகத்தில் விரும்பத்தகாத பல சமூக-மதசடங்குகள் தோன்றி மக்களைப் பின்னுக்குத் தள்ளியது.

கிருத்துவ மதம் தமிழகத்தில் வெகுவேகமாக 19 ஆம் நூற்றாண்டில் பரவியது.

கிருத்துவ மதத்தைப் பாப்பவந்த பாதிரிமார்கள் தமிழ் மொழி, தமிழர் நாகரிகம் தமிழர் சமுதாய அமைப்பு ஆகியவற்றை கற்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மதமாற்றம் செய்ய அவர்கள் மேற்கொண்ட செயல்கள் அனைத்தும் இந்துமத மக்களிடையே விழிப்புணர் வை ஏற்படுத்தின இந்துக்களிடையே ஒற்றுமை ஏற்பட தூண்டுகோலகியது. சைவ மதம் புத்துயிர் பெறுவதற்கு இவர்கள் ஒரு காரணமாக அமைந்துவிட்டார்கள்.

இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழில் புரட்சியின் காரணமாக ஆண்டாண்டுகாலமாக உலக முழுவதிலும் சீரோடும் சிறப்போடும் விளங்கிய தமிழக கைத்தறித்துணிகள் விற்கப்படாமல் தேங்கி நிற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. கிருத்துவ பாதிரியார்கள் தொழிலுக்கு ஊக்கம் கொடுக்க வெளிநாட்டின் தொழில் நுணுக்கங்களை தமிழகத்தில் பரப்பினார்கள். புதிய ரக துணிகள், புதிய ஜரிகை வகைகள், நவீன வண்ணங்கள், விதவிதமான நவீன வடிவமைப்புகள் (டிசைன்ஸ்) ஆகியவற்றைப் புகுத்தினார்கள்,

தமிழ்மொழியில் ஏராளமான புத்தகங்கள் எழுதினார்கள். இதன் மூலம் தமிழ்மொழிக்குப் புத்துயிர் தந்தார்கள். தமிழ்வெவ்வேறு நாட்டுப் பல்கலைக் கழகங்களில் கற்றுத்தரக் கூடிய வற்றில் ஒன்றாக ஆவதற்கும் அவர்கள் அருந்தொண்டாற்றினார்கள்.

★ ★ ★



தில்லையாடி வள்ளியம்மை

அனுமன்பள்ளி A.P S. தங்கவேல்
பொருளாளர் மொடக்குறிச்சி ஒன்றிய செங்குந்த மகாசனசங்கம்

நமது செங்குந்த இனத்துக்கு வெற்றித் திலகமாக இலங்குபவர் தில்லையாடி வள்ளியம்மையார் தமிழக அரசு அவரது தியாகத்தையும் உரிமை வேட்கையையும் போற்றிக் கொண்டாடுகிறது. இருப்பினும் அது போதாது; தமிழகமெங்கணும் அவருடைய புகழைப் பரப்பி ஒவ்வொரு தமிழனும் அவரது தியாகத்தை மதித்து உணரும்படிச் செய்யவேண்டும்.

1898-ம் ஆண்டு முனுசாமி முதலியார் மங்களம் அம்மையார் தம்பதியருக்கு மகளாகப் பிறந்தார் வள்ளி அம்மை. தென் ஆப்பிரிக்காவில் வணிகஞ் செய்துவந்த முனுசாமி முதலியார் காந்தியடிகளின் சத்தியாக்கிரக அறப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டு கைதாகி நெடுநாள் சிறையில் வாடினார், போராட்டத்தில் ஈடுபட ஆண்களுக்கு மட்டுமே காந்தியடிகள் அனுமதியளித்திருந்தார். தென்னாப்பிரிக்க நிறவெறி அரசு தீர்வு எதையும் காணாமல் காலத்தை நீட்டிக் கொண்டே சென்றபோது சத்யாக்கிரக இயக்கப் போராட்டம் தீவிரமடைந்தது.


அண்ணல் காந்திஜி அவர்கள் பெண்களுக்கும் போராட்டத்தில் சம உரிமையளித்து ஆசி வழங்கினார். கஸ்தூரிபாய் காந்தி போராட்டத்தில் கலந்து கொண்டு 3 மாத சிறை தண்டனை அடைந்தார், பல பெண்கள் கைக்குழந்தைகளுடன் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். உடல் நலக் குறைவால் முனுசாமி முதலியாருக்குப் பதிலாக 16 வயதான வள்ளியம்மையும் அவரது தாயாரும் போராட்டத்தில் குதித்தனர் வள்ளியம்மை டிரான்ஸ்வால் எல்லையைக் கடக்கும் போது கைது செய்யப்பட்டு 3 மாத கடுங்காவல் தண்டனை பெற்றார் அப்போது அவருக்கு கடுர் நோய் காணப்பட்டது. உடல்நிலை மிகவும் பாதிக்கப் பட்டு மோசமடைந்தது கண்டு அதிகாரிகள் அவரை விடுவிக்க முன் வந்தனர். நிறவெறி அரசின் இரக்கமும் தயவும் தமக்குத் தேவையில்லை எனக் கூறி விடுதலையாக மறுத்து விட்டார் வள்ளியம்மை.

இதனிடையே காந்திஜி-ஸ்மட்ஸ் ஒப்பந்தத்தின் விளைவாக வள்ளியம்மை 1914-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 11-ந்தேதி விடுதலை செய்யப்பட்டார். விடுதலைக்குப் பின்னரும் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படாமல் மேலும் மோசமடைந்தபோது காந்தியடிகள் வள்ளியம்மையை அவரது வீட்டிற்கே சென்று பார்த்தார் எலும்பும் தோலுமாய் வாடியிருந்த வள்ளியம்மையை பார்த்த காந்திஜி வேதனையுற்று 'சிறைக்குப் போனதற்காக வருந்துகிறீர்களா?' எனக்கேட்டார் வள்ளியம்மை உடனே வருத்தமா? எனக்கா! இந்த நிலையிலும் நான் சிறைசெல்லத் தயாராக இருக்கிறேன். எனப் பதிலுரைத் தார். 'நீங்கள் சிறையில் மரணம் அடைந்துவிட்டால்...' எனக்கேட்ட காந்திஜியிடம் 'அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை; தாய்நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்யவே விரும்புகிறேன்.' என்று சற்றும் கலங்காமல் வீரமுழக்கம் செய்தார் வள்ளியம்மை.


காந்திஜி உறையாடிவிட்டுச்சென்ற சில நாட்களிலேயே வள்ளியம்மையின் உயிர்பிரிந்தது. தமது பெயரை நம் உள்ளங்களில் பதித்துவிட்டு அமரராகி புறநானூற்று தமிழ் வீரநங்கையின் வாரிசு என நிரூபித்துச் சென்றுவிட்டார் வள்ளியம்மை. அண்ணல் காந்தியடிகள் தமது 'தென்னாப்பிரிக்க சத்யாகிரகம்' என்ற நூலில் நம் செங்குந்த மக்களின் தியாகத்தை விரவணக்கஞ் செய்து எழுதியுள்ளார்.

16 வயதிலேயே அஞ்சாநெஞ்சங்கொண்டு வீரமுழக்கம் செய்த தமிழ்மங்கையின் தியாகம் ஆண்டுதோறும் பிப்ரவரி 22ம் தேதி நினைவு கூர்ந்து வணங்கவேண்டிய ஒன்றாகும் தில்லையாடி வள்ளியம்மையின் தியாகபாதையில் தான் தென்னாப்பிரிக்காவில் இன்று உரிமைப்போராட்டம் நடைப் பெற்றுவருகிறது. அது வெற்றிபெறும்நாள் வெகுதொலைவில் இல்லை. அதன் அறிகுறிதான் நெல்சன் மண்டேலாவின் விடுதலை! ஆம்! தில்லையாடி வள்ளியம்மை விடுதலையானதும் பிப்ரவரி 11ம் தேதி தான். மண்டேலா இப்போது விடுதலையானதும் பிப்ரவரி 11ம் தேதிதான்!

நிறவெறிக்கெதிராகப் போராடிய வள்ளியம்மையின் பரம்பரையினராகிய நம்செங்குந்த பெண்டி ரும் இன்று சமூகக் கொடுமைகளுக்கு எதிராக போர்க்கொடி ஏந்தத் தயாராக உள்ளனர். அது தில்லையாடி வள்ளியம்மையின் அறவழிபோராட்டமாகவே இருக்கும் என்பது திண்ணம்! நம் குலக் கொழுந்துகளுக்கு வள்ளியம்மையின் தியாகக்கதையை சொல்லி வளர்ப்போமாக!



இந்துக் கல்வி நிலையம்.
மாமரத்துப்பாளையம்-ஈரோடு 4.



ஆரம்பப்பள்ளி
அருள்நெறித் திருப்பணி மன்றம். ஈரோடு-3



ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு!

ஏ. எஸ். யோகநாத்
திண்டுக்கல் மாவட்ட செங்குந்த வளர்ச்சி குழு உறுப்பினர்
ஸ்ரீ சென்னிப்ப சில்க்ஸ்,
மெயின் ரோடு,
திண்டுக்கல்.

முதலியார் என்ற உயிரைப்படைத்தவர் நம் ''கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்'' தான். அவருடையபுகழ் என்றும் பொன் எழுத்தில் பொறிக்கப்பட வேண்டியவை. இவரைப்போல் நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்த நம் குளத்து திருமகள் ''தில்லையாடி வள்ளியம்மையும்'' தியாகத்தின் திருவுருவமாய் விளங்கிய ''கொடிகாத்த மாவீரன் திருப்பூர் குமரனும், தத்துவ மாமேதையான டாக்டர். ராமசாமி முதலியாரும், டாக்டர். லட்சுமணசாமி முதலியாரும், நமது குலக்கவிக்குயில் பாவேந்தர் பாரதிதாசனும்,'' நம் குலத்தை மேலும் பெருமைபடைத்த மகான் ஆவார்கள், செங்குந்த மகாஜன சங்கத்தை ஆரம்பத்தில் சென்னையில் நிறுவிய பெருமை வள்ளல் 'டி. எம். சபாபதி முதலியாரை'சாரும். இவரைப்போன்ற பல தலைவர்களது முயற்சியால் இப்போதும் சீரும் சிறப்புமாக விளங்கிவருகின்றது.

நம்சமூகம் இன்னும் மேன்மைஅடையாத காரணம், நம்மிடத்தில் ஒற்றுமைஇன்மையே,
ஒன்று பட்டால் உண்டு வாழ்வு-நம்மில்
ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு''.

என்பதனை போல நாம் அனைவரும் ஒற்றுமையுடன் இருந்தால், நம் சமூகம் மேலும், மேலும் வளர்ச்சி பெற்று, பல அரிய சாதனைகளை படைக்க உதவும். நம் குலத்திற்கே உருவான கைத்தொழில், நெசவுத்தொழிலே. அதற்காக பாடுபட்டு பல உதவிகளை செய்து கைத்தறியை நம் நாட்டிற்கு ஒருபெரிய பொக்கிஷமாக விளக்கி,பெருமைபடுத்தியவர் நம்குலச் செம்மல் கைத்தறிக் காவலர் உயர்திரு. பத்ம ஸ்ரீ எம். பி. நாச்சிமுத்து முதலியார் அவர்கள் ஆவார். இவரை நம் சமூகம் பெற்றது நமக்கு பெருமை, நம் நாட்டிற்கும் பெருமை. இவரைப் போல் நம் குலத்தில், எம்மதத்தினரும் வியக்கும் வண்ணம் அருட்போராற்றி வரும், அருள் மொழியரசு, திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் அருளும், பெருமையும் நம் குலத்திற்கு உண்டு.

இன்னறய இளைய தலைமுறையாய் விளங்கும் நம் ஒரே தலைவர் 'உத்யோக் ரத்னா' ஜெ. சுந்தானந்த முதலியார் அவர்களின் முயற்சியால் பல மாவட்ட சங்கங்களும், கிளை சங்கங்களும் ஏற்படுத்தி இச்சங்கத்தின் மூலம் நம் மக்களுக்கு பயனுள்ள வகையில் பல உதவி-களை செய்து வருகின்றனர். படிக்க வசதியற்ற, படிக்கும் மாணவர்களுக்கு உதவிதொகை மூலமாகவும், ஆற்றல்பெற்ற அறிஞர்களை பெற்று பல தொழில் நிறுவனங்கள் அமைக்கவும், கைத்தறி நெசவாளர்களுக்கு பலவித சலுகைகளும் பெற்று, நல்வாழ்வு பெற்று வாழ விழி முறைகளை செய்து வருகின்றார். நம் குலம் மேலும் பல சாதனைகள் படைத்து, சமுதாயத்தில் ஒரு அங்கம் வகிக்க, அனைவரும் ஒற்றுமையுடன் ஒன்றுபட்டு வாழ இம்மாநாட்டின் மூலம் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.



வீரர் குலம்

செல்வி **M. G. விஜயா. B. Com.,**

முதலி (ஈசன்) குலமகன்
முருகன் புகழ்ந்த
முதல் குலம்
மூத்த குலம் – முதலி குலம்

★

சேவல் கொடி - தாங்கி
செழித்த குலம்
செல்வக் குலம்
செங்குந்தர் குலம்

★

வீரபாகுவின்
விஜயம்
கண்ட
வீரர் குலம்

★

கூத்தனின்
ஈட்டி எழுபது
குலப் பெருமை
பகர்கிறது

★

பாடியவர்கள் சொன்னார்கள்
எழுதியவர்கள் சொன்னார்கள் – என
இறுமாந்து நிற்கவில்லை
எம் குலத்தவர்

★

கருவறை துவங்கி
கல்லறை வரையிலும்
கைத்தறி பார்த்து
காவியம் புனைந்தவர்கள்

★

அதிகார அந்தஸ்து
வேலி தாண்டி
அறிவால் ஆள
அன்பில் பிணைந்தவர்கள்

★

மகரந்தந்தை மலர்
காப்பது போல்
வரதட்சணை வாங்காமல்
வந்தவளை வாழ்த்துகின்றவர்கள்

★

ஜனனமும் மரணமும்
ஜகத்தில் உள்ளது
வெற்றி என்பது
மனதில் நின்றால்
வெல்லலாம் என
சடுதியில் உணர்ந்தவர்கள்

★

வேல் ஏந்திய
வேலவனிடம் வேண்டிடுவோம்
காத்திடும் காமாக்ஷியிடம்
கேட்டிடுவோம்

★

எம் குலப்
பாட்டாளிகளின்
புகழ்!
வளர்க!
செழிக்க!
ஓங்கு

வாழ்க செங்குந்தம்!



இன்றைய தேவை

ஐ. தனசீலன்
தலைவர்
இராமநாதபுரம் மாவட்ட செங்குந்த சங்கம்
பரமக்குடி

அன்புடையீர்,

இந்தியாவில் மட்டுமில்லாது, மற்ற நாடுகளிலும் பல அமைப்புக்கள் தங்கள் உரிமைக்காக குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்றன. அதில் வன்முறைகளும் சேர்ந்து கொள்கிறது.பெரிய அமைப்புக்களுக்கும்,வன்முறைகளுக்கும் அரசாங்கமும் அரசியல் கட்சிகளும் பயந்து அவர்களைத் தங்கள் பக்கம் இழுத்துக்கொள்ள பல உதவிகளைத் தனிப்பட்ட முறையில் மக்களுக்கு அளிக்க முன்வருகிறது. அந்தந்த அமைப்புக்களில் உள்ளவர்களுக்கு அமைச்சர் பதவிகள், சட்டமன்றம் நாடாளு மன்றத்தில் உறுப்பினர், சபாநாயகர் பதவிகள் கொடுக்கப்பட்டு அமைப்புகளைத் திருப்திபடுத்தப்படுகின்றன. காவல்துறையின் உயர் பதவிகளான டைரக்டர் ஜெனரல், இன்ஸ்பெக்டர் ஜெனரல் போன்ற பதவிகள் தகுதியின் அடிப்படையில் கொடுக்காமல், அவர்கள் சார்ந்திருந்த வகுப்பினரை திருப்தி படுத்துகின்ற நோக்கத்தில் கொடுக்கப்படுகின்றன. உயர்ந்த பதவியில் உள்ள ஐ.ஏ.எஸ். மற்றும் காவல்துறை, சர்வீஸ் கமிஷன் உறுப்பினர்கள் தங்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை வெளியே தெரியாமல் பல உதவிகளைச்செய்து அவர்கள் சார்ந்த சமுதாயத்தின் உயர்வுக்கும் துணையாகயிருக்கிறார்கள்.

இந்த சூழ்நிலையில் பல லட்ச ஜனத்தொகைகொண்ட நமது சமுதாயம் நமது இனம் உயர்வடைய வழிமுறைகளை ஆராய வேண்டாமா? அதை அமுல் படுத்தினால் தான் தானே, நமது பின் சந்ததி உயர்வடைய முடியும். உதாரணமாக நமது சமூகத்தினர் பலர் சட்டசபையில் உறுப்பினர்களாகயிருக்கும் அடிப்படை காரணம் உங்களுக்குத் தெரியுமா? சட்டசபைத் தேர்தலுக்கு முன்பு சென்னையில் வரலாறு காணாத அளவுக்கு தலைமைச் சங்கம் பேரணி ஒன்று நடத்தியது, மவுன்ட் ரோட்டில் நமது ஊர்வலம் ஒரு இடத்தை கடக்க சுமார் 5 மணி நேரம் எடுத்தது. இதைக்கண்ணுற்ற அரசியல் தலைவர்கள் செங்குந்தர்களுக்கு தேர்தலில் நிற்க டிக்கட் கொடுத்தார்கள். வெற்றிமாலை சூடினோம்.

இந்திய அரசுப் பணி மற்றும் பல துறைகளில் செங்குந்தர்கள் சிலர் உயர்ந்த இடங்களில் பணிபுரிகின்றனர். அவர்கள் தங்களால் முடிந்த அளவுக்கு செங்குந்தர் களுக்கு உதவிகரமாகயிருக்க வேண்டும். அரசியல்வாதிகளும், பெரும்பான்மை அதிகாரிகளும் தங்களது சமூகத்தினருக்கு வேண்டியவைகளைத் தயங்காமல் செய்து கொடுக்கும்போது, நாமும் அதைப் பின்பற்றுவதில் தவறு ஏதும் இல்லையே!

செங்குந்தப் பெரியவர்கள் நம் இனத்தின் ஒற்றுமையை வளர்த்துள்ளார்கள் இத்துடன் அவர்கள் கடமை முடிந்துவிடவில்லை. நமக்கு பின் வரும் செங்குந்த சமுதாயத்தை ஒரு பலமுள்ள அணியாக உருவாக்க திட்டங்கள் தீட்டி, நடைமுறை படுத்தப்பட வேண்டும். மாணவர்களுக்கு போதிய கல்விப் பயிற்சிக்குப் பின் அவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு அளித்தல் அவசியம். தற்சமயம் பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் துன்பப்படுகின்றனர். வசதி படைத்த, செல்வாக்குள்ள பெரியவர்கள் தங்களது ஸ்தாபனத்தில் குறைந்தது இரண்டு இளைஞர்களுக்காவது வேலைவாய்ப்பு அளிக்க முன் வரவேண்டும். அல்லது சிபாரிசு செய்து வேறு ஸ்தாபனங்களில் அல்லது அரசு பணிகளில் வேலை வாங்கிக் கொடுக்க முன்வரவேண்டும். நான் ஒரு தனியார் வங்கியின் போர்டில் இயக்குநராக இருந்தபோது நமது செங்குந்த இளைஞர்கள் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க சிபாரிசு செய்துள்ளேன். மேலும் செங்குந்த பெருமக்களுக்கு சுமார் ஒரு கோடி அளவுக்குக் கடன் அளிக்க ஏற்பாடு செய்துள்ளேன். அதனால் ஏற்படுகிற மகிழ்ச்சியான ஆத்ம திருப்தியை இன்னும் நான் உணருகிறேன். ஓய்வுபெற்ற இந்தி அரசு அதிகாரி திரு டி. ஏ. எஸ். பிரகாசம் அவர்கள் தொண்டு மன்றம் ஆரம்பித்து வளரும் செங்குந்த இளைஞர்களுக்கு கல்வி வசதி, தொழில் கல்வி நிறுவனங்களில் சேர்க்க திறமைகளை வளர்த்தல் மற்றும் வேலைவாய்ப்பு வசதிகளை ஓசை இல்லாமல் செய்து கொண்டிருக்கிறார். செங்குந்த சமுதாயமே அவருக்கு நன்றிக்கடன்பட்டுள்ளது. அவரால் நமது சமுதாயத்தைச்சேர்ந்த திறமைசாலிகள் பலர் இந்திய மாநில அரசு உயர் பணி அதிகாரிகளாக வரப் போவது நிச்சயம். இம்மாதிரியான தொண்டு மன்றங்கள் பல இடங்களில் உருவாகி ஒரு பலமுள்ள ஆற்றல்மிக்க எதிர்கால சந்ததியினரை உருவாக்க முயலுவது நமது கடைமையாகும்

நமது சமுதாயத்தின் ஒற்றுமை வளருவதற்கு திருமண சம்மந்தங்கள் முக்கிய இடத்தை பிடித்துள்ளது பெற்றோர்கள் திருமணத்திற்கு பெண் கொடுக்க பெண் எடுக்க வெளி மாவட்டங்களுக்குச் சென்று உறவை பலபடுத்துதல் அவசியம் எனது தந்தை அமரர் இருளாண்டி முதலியார் 1939ம் ஆண்டு பரமக்குடியில் மாநில மாநாடு நடத்தும்போது இக்கருத்தை வலியுறுத்தி, அதைச்செயலிலும் காண் பித்தார். அதனால் எனக்கு சென்னை, குடியாத்தம், பாண்டிசேரி உளுந்துார் பேட்டை, மதுரை, நாகபட்டிணம், கோவை, ஈரோடு, திருப்பத்துார் மட்டும் இல்லாமல் சிங்கப்பூரிலும் உறவினர்கள் உள்ளனர் திரு, முத்துச்சாமி செங்குந்தரை தலைவராகக் கொண்ட பெரியார்மாவட்ட செங்குந்த சங்கம் மற்றசங்கங்களுக்கு ஒரு முன் உதாரணமாக திகழ்கிறது ஒரு மாநில சங்கத்தையே நடத்தக்கூடிய அளவுக்கு திறமையும், பொருள் வசதியும் கொண்டுள்ளது. தொண்டு புரியும் எண்ணங்கொண்ட பல ஆயிரக்கணக்கான செங்குந்தர்கள் பெரியார்மாவட்டத்தில் இருப்பது ஒரு தனிச் சிறப்பு.

மாநாடு வெற்றிபெற வாழ்த்துக்கள்



சென்னியப்பா டெக்ஸ்டைல்ஸ்

ஜவுளி உற்பத்தியாளர்
மெயின்ரோடு, துடுப்பதி - 638 057
(வழி) ஈரோடு - RMS.

V. R. A. பாலகிருஷ்ண முதலியார்.
V. R. A. ஆனந்தகிருஷ்ண முதலியார்.

With best compliments from



☎ 61193

K. K. Arumugam Mudaliar Company

Mill Cloth Merchants,
10, West Hanumantharayan Kovil street,
ERODE - 638001.

K. K. ஆறுமுகம் முதலியார் கம்பெனி,

ஜவுளி வியாபாரம், ஈரோடு - 1

கல்வெட்டுகளில் கைக்கோளப்பெரும்படை

முனைவர். சோ. ந. கந்தசாமி
தலைவர், மொழிப்புலம்
பேராசிரியர் & தலைவர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

தமிழினம் வீரத்தின் விளைநிலம். போர்முகத்தில் புறக்கிடாது வெற்றித்திருவைப் பெற்றுத்தந்து செங்கோலாட்சி சிறந்திட நாட்டிற்கு உழைக்கும் மூத்த தமிழ் குடிமக்களில் செங்குந்தர்களும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். சங்க இலக்கியங்களில் சுட்டப்பெறும் கோசர்கள் என்னும் வீரக்குடிமக்கள் செங்குந்தர்களே என்று ஆராய்ச்சிப் பேரறிஞர் ரா. ராகவையங்கார் பற்பல சான்றுகளினால் நிறுவியுள்ளார். கோசர்கள் வாய்மைக்கும் வீரத்திற்கும் நன்றிக்கும் பேர்பெற்றவர்கள். இவர்கள் மிகுதியாக வாழும் கொங்குமண்டலப்பகுதியாகிய கோயம்புத்தூர் என்பது கோசர்+புத்தூர் என்ற பெயரின் மருவிய வடிவம் என்பர். எட்டுத்தொகையில் ஒன்றாகிய பரிபாடலில்,

''குந்தம் ஏந்துவோர்'' (11:50)

என்று நல்லந்துவனார் இந்த இனத்தைக் குறித்தல் காணலாம். குந்தம் என்ற சொல்லிற்கு ஈட்டி என்று பொருள். ஈட்டி, வேல் முதலியவற்றை ஏந்திப் போர் புரிவதாலும் பகைவரின் குருதி படிவதால் செந்நிறம் பெறுவதாலும் செங்குந்தம் என்று அடைகொடுத்து அப்போர்க் கருவி போற்றப்பெற்றது. தமிழகம் எங்கும் பரவி வாழும் செங்குந்தர்கள் வேந்தர்க்கு உற்றுழி உதவும். படை மறவர்களாகப் பணியாற்றி உள்ளனர். இவர்கள் காலாட்படை வீரர்களாக விளங்கிக் கையின் ஆற்றலால் போர் புரிந்தமையின் கைக்கோளர் என்ற பெயரும் பெற்றனர். கைக்கோள் என்ற சொல்லிற்கு ஒழுக்கம் என்பது பொருள். வீர ஒழுக்கத்தில் வீறுபெற்று விளங்கியதாலும் கைக்கோளர் என்பது காரண இடுகுறியாக இந்த மக்களைக் குறித்தது எனலாம். போர் ஒழிந்த ஓய்வு காலங்களில் ஆடை நெய்யும் தொழிலையும் இவர்கள் மேற்கொண்டனர் இவர்கள் நெய்யும் நேர்த்திமிக்க ஆடைகளின் வனப்பினைச் சங்கப் பனுவல்கள், காப்பியங்கள் முதலிய பழந்தமிழ் இலக்கியங்கள் பெரிதும் போற்றக் காணலாம். திவாகர நிகண்டில் (கி. பி. 8 நூ.),

''செங்குந்தப் படையர் சேனைத் தலைவர்
தந்து வாயர் காருகர் கைக்கோளர்''

என்று செங்குந்த மக்களுக்குரிய சிறப்புப் பெயர்கள் குறிக்கப் பெற்றன. இவர்கள் படையில் முதல் நிலையில் திகழ்ந்ததால் முதலியர்என்ற பெயரும்பெற்றனர். இதுவே நாளடைவில் முதலியார் என்று வழங்குவதாயிற்று

பிற்காலச் சோழர் வரலாற்றில் (கி. பி. 846-கி. பி 1279) இவர்கள் பெரு வீரர்களாகச் சுட்டப். பெற்றுள்ளனர். முதலாம் ஆதித்த சோழன் (கி. பி. 871 - 907) காலம் முதல் கிடைக்கும் சோழர் கல்வெட்டுக்களில் ''கைக்கோளப் பெரும்படை'' என்ற படைப்பிரிவு குறிக்கப்பெறுதல் காணலாம். இப்படையினைப் பற்றி வரலாற்றுப் பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாத்திரியார்,

''The Kaikkolapperumbadai 'the great troops of Kaikkolas' included all the regiments known as Kaikkolar —— In the Cola inscriptions, it indicates '(a class of) men distinguised by the strength of their arms', or 'the strong men of the wings (of the army)', that is soldiers of infantry division in the army'' (vide. The Colas, p. 454)

என்று ஆராய்ந்து எழுதுதல் இங்கு எண்ணத்தக்கது. இங்குச் சுட்டப் பெற்றவர்களின் வழித்தோன்றல்கள் இன்று நெசவாளிகளாக இருப்பதையும் இவர் அதே நூலில் குறித்துள்ளார். கைக்கோளத்தறி என்ற தொடர் கல்வெட்டில் காணப்படுகிறது. (Epigraphical report 310/1917) இவர்கள் நாட்டிற்குச் செலுத்திய வரி தறியிறை என்று சுட்டப்பெற்றது. இச்செய்தி சுந்தர சோழனின் அன்பிற் செப்பேடுகளிலும் முதலாம் இராசராசனின் ஆனைமங்கலச் செப்பேடுகளிலும் முதலாம் இராசேந்திரனின் திருவாலங்காட்டுச் செப்பேடுகளிலும் பொறிக்கப் பெற்றுள்ளது.

மேலும் சோழப்பெரும்படை வில்லிகள் (Bowmen) வாள்வீரர்கள் (வாள்பெற்ற கைக்கோளர்), வேளைக்காரர் என்ற பிரிவுகளாகவும் விளங்கிய உண்மையினையும் பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் தெளிவுறுத்தியுள்ளார், (அதே நூல் பக். 454).

இங்குச் சுட்டப்பெற்ற மூவகைப்பிரிவினரும் ஒரு குறிப்பிட்ட போர்ச்செயலில் வல்லவர்கள் என்பது தெளிவு. வில்லேந்தி அம்பு தொடுப்பதில் வல்லவர்கள் வில்லிகள், வாளேந்திப் போர்புரிவதில் வல்லவர்கள் மூத்த வாள் பெற்ற கைக்கோளர்கள். குறிப்பிட்ட வேளைகளில் வேந்தனுக்கு மெய்காப்பாளராக விளங்கிய வர்கள் வேளைக்காரர்கள்.

தஞ்சைப் பெரியகோயிலை எழுப்பிய மாமன்னன் முதலாம் இராசராசனின் பெரும்படையில் மூன்று பிரிவினர் கைக்கோளப்படையாக விளங்கிய உண்மையும், சோமூர் என்னும் ஊரிலுள்ள கோயிற் சபையினர் சூரிய கிரகணத்தன்று அம்மன் ஊர்வல விழாவினை நடத்தாததால் அவர்கள் பெயரில் அபராதம் விதிக்க வும் தண்டவும் வருமான வரி அலுவலர்க்கு அப்படை மறவர்கள் உதவிய உண்மையும் வரலாற்றுப் பேராசிரியரால் பின்வரும் பகுதியில் சுட்டிக் காட்டப்பெற்றுள்ளது:

We find three regimants of the Kaikkolappadi of Rajaraja-I Co-operating with a revenue official (naduvagai) at Somur in imposing and realsing a fine levied on the authorities of the local temple for their default in not organising a procession of the image of the goddess on the occassion of a solar eclipse'

(vide, The Colas, pp. 456-7)

சோமூர் என்பது கரூர் வட்டத்தைச்சேர்ந்த பகுதியாகும்.

மேலும், பேராசிரியர் சாத்திரியார் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் (கி. பி. 1106) கைக்கோளப் படையினர் ஆற்றிய பணியினையும் ஆராய்ந்து கூறியுள்ளார். குடுமியாமலைச் சோழர் கல்வெட்டுக்கள் மூன்றுபடைப் பொற்கோயில் கைக்கோளரும் நாட்டுப்படை பழியிலி ஐஞ்நூற்றுவரும் சேர்ந்து ஊள்ளூர்க் கோயில் அறக்கட்டளைகளைக் கண்காணிக்கும் பொறுப்பில் நாட்டுச் சபையாருடன் ஒத்துழைப்பு வழங்கு தற்கு மேற்கொண்ட முயற்சியை குறிப்பிடுகிறது. (vide, Thə Cloas, p 457). இந்திய அர்த்த சாத்திரங்களில் சுட்டப்பெறும் மூலபலப்படை, பிருதகப்படை, சிரேணிப்படை, ஆடவிப்படை என்ற நான்குவகைகளில் மேலே சுட்டப் பெற்றார் இருபெரும் பிரிவுகளும் அடங்கும் என்று தோன்றுகிறது என்றும் பேராசிரியர் கருதுகிறார் (அதே நூல் ப, 457). அரசிற்குரிய களஞ்சியதிலிருந்து ஒழுங்காக ஊதியம் பெறுதற்குரிய அரசுப்படையாகக் கைக்கோளப் படை திகழ்ந்தாக வேண்டும் என்றும் கருத்துரைக்கின்றார்.

சங்ககால வேந்தர்கள் சிறந்தவீரனுக்கு இறையிலியாக வழங்கும் நிலத்தைத் தண்ணடை என்று கூறுதல் மரபு. கங்கை கொண்ட சோழபுரத்து அரண்மனையில் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டிருந்த கைக்கோளர் களின் துய்ப்பிற்காக மருத வயல்கள் நிரம்பிய குலோத்துங்க சோழநல்லூர் என்னும் பேர் கொண்ட நிலப் பகுதி வீரபோகமாக வழங்கப்பெற்ற நல்கைச் செய்தியைக் கி. பி 1117 கி. பி. 1121 இல் செதுக்கப்பெற்ற திருவாடுதுறை கல்வெட்டுக்கள் இரண்டு குறிப்பிடுகின்றன (அதே நூல் ப. 574).

முதலாம் இராசராசன் காலத்திற்குரிய திருவாடுதுறைக் கல்வெட்டிலும் கைக்கோளரின் செல்வநிலை பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அவ்வூர் சபையார் அவ்வூர்க்கைக்கோளர் ஒருவரிடம் கையெழுத்தோலை எனப்படும் பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்துப் பணம் கடன் வாங்கினர் என்று அக்கல்வெட்டு கூறுகிறது. (அதேநூல் ப. 599).

பாண்டிய நாட்டிலும் செங்குந்தப் பெருமக்கள் படைத்தலைவர்களாகப் போற்றப் பெற்று வீரம் விளைத்தனர், இவர்கள் திருநெல்வேலியில் சண்டீசர் கோயிலுக்கு நிவந்தம் வழங்கிய செய்தியை,

'இப்படிச் சம்மதித்து விலைப்பிரமாணம் பண்ணிக்கொடுத்தோம்
ஆதி சண்டேஸ்வர தேவர்க்கு திருநெல்வேலி கைக்கோள்
சேனாபதிகளோம்'

எனவரும் கல்வெட்டுப்பகுதி புலப்படுத்துகிறது, (S.I.I Vo.1V.No. 418)

மேற்சுட்டப்பெற்ற வரலாற்றுக் குறிப்புகளைத்தவிர ஜி. வி. சீனிவாசராவ் பதிப்பித்து வெளியிட்டுள்ள தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் 13 ஆம் தொகுதியிலும் 19 ஆம் தொகுதியிலும் கைக்கோளரைப்பற்றிய வீரக்குறிப்புகளும் கொடைச் செய்திகளும் நிரம்பக் காணப்படுகின்றன. தென்னகத்தில் செங்கோல் செலுத்திய பிற்காலச் சோழர்களின் கல்வெட்டுக்கள் 355 மேற்சுட்டிய 13 ஆம் தொகுதியில் அடங்கியுள்ளன. இவை யாவும் இராசகேசரி என்ற சிறப்புப்பட்டம் பெற்ற சோழவேந்தர்கள் பற்றிய கல்வெட்டுக்கள் ஆகும். இக்கல்வெட்டு வரிசையில் 19 ஆம் தொகுதியில் பரகேசரி என்ற பட்டம் பெற்ற சோழப்பெருவேந்தர்களின் கல்வெட்டுக்கள் 471 அடங்கியுள்ளன. இவற்றிலும் இவ்வீர மரபினர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் மிகுதியாகப் பொறிக்கப்பெற்றுள்ளன.

செங்குந்த வீரர்களில், அறிவு, ஆற்றல், போர்த்திறம் முதலிய தகுதி மிகுதி படைத்தோரைத் தனியே இனம் கண்டு பொறுக்கி எடுத்து 'தெரிஞ்ச கைக்கோளப்படை' என்று சோழவேந்தர்கள் பேர்வழங்கினர். தெரிந்த என்றசொல் தெரிஞ்ச என்று பேச்சுத் தமிழில் வழங்கியது. இவர்கள் அவ்வக் காலத்து ஆட்சிபுரிந்த மன்னர் பெயருடன் இணைத்தே சுட்டப்பெற்றனர். அரசியல் அதிகாரிகள், சேனைத்தலைவர்கள் கூட குறிப்பிட்ட வேந்தரின் பெயருடன் சார்த்தி அழைக்கப்மெற்ற மரபினைக் கல்வெட்டுகளில் காணலாம் இக்குறிப்புகளினால் வேந்தர்க்கும் இவர்களுக்கும் இருந்த நெருங்கிய பிணைப்பு புலனாகும்.

1. ஆதித்ய பன்மத் தெரிஞ்ச கைக்கோளப்படை (கி. பி. 871 - 907)

முதலாம் ஆதித்தசோழன் காலத்தில் அவனால் தெரிந்தெடுக்கப்பெற்ற கைக்கோளப்படையினர் ஆதித்ய பன்மத் தெரிஞ்ச கைக்கோளப்படை என்ற பெயரினால் அழைக்கப் பெற்றனர். மயிலாடுதுறை வட்டத்தில் திருவாடுதுறை கோமுத்தீசுவரர் கோயிலில் கருவறைக்குத் தென்புறச் சுவரில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டு இப்படையைச்சேர்ந்த சங்கயனொற்றி என்னும் வீரன் இவ்வூர் மகாலிங்கர் கோயிலுக்கு நந்தவனம் வளர்க்கவும் தெங்கு ஆயிரம் வளர்க்கவும் நாலு மா நிலத்தினைச் சாத்தனூர் சபைக்கு இறையிலியாக விற்பனை செய்த விவரத்தைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் ஆதித்யபன்மன் முதலாம் ஆதித்தசோழனைக் குறிப்பதாகக் கொள்ளலாம். ஆயினும் இக்கல்வெட்டினை வெளியிட்டவர்கள் முதற்பராந்தகன், காலத்தைச் சேர்ந்தது எனக்குறித்துள்ளனர். எனவே ஆதித்த சோழன் காலத்திலும் அவனுக்குப்பின் அரியணை ஏறிய முதற்பராந்தகன் காலத்திலும் இப்படை விளங்கியது என்று கருதலாம், (S. I. I. Vo1. XIX No.25).

மேற்சுட்டிய கல்வெட்டினைத் தொடர்ந்துவரும் கல்வெட்டும் அதேபடையைச்சேர்ந்த மற்றொரு வீரனால் வழங்கப்பெற்ற கொடையினைக் குறிப்பிடுகிறது. இவ்வீரன் கீழ்க்குமாரமங்கலம் என்ற ஊரில் மூன்று மா நிலத்தைச் சாத்தனூர்சபைக்கு வழங்கி அதன் வருவாயிலிருந்து நந்தவனமும் தென்னந்தோப்பும் வளர்த்து அக்கோயிலில் நுந்தா விளக்கும் எரிவதற்கு வகைசெய்த உண்மை பொறிக்கப்பெற்றுள்ளது.

முதல் ஆதித்த சோழனுக்குக் கோதண்டராமன் என்ற பெயர் உண்டு என்பதைக் கன்னியாகுமரிக் கல்வெட்டினால் அறிகிறோம். (Travancore Archaeological series, Vol. III, No. 34. Verse 55)

உடையார்குடி அனந்தேசுவரர் கோயில்கல்வெட்டில் கோதண்டராம தெரிஞ்ச கைக்கோளப் பெரும்படை பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இப்படையைச் சேர்ந்த சிந்தவாய்நாட்டு வானருங்கலமுடையான் தேச வல்லவன் சூரியன் என்றும் பெருவீரன் தானமாகக்கொடுத்த $12\frac{1}{2}$ கழஞ்சு பொன்னிற்கும் 97 ஆடும் தகர் ஒன்றும் கொண்டு நாள்தோறும் உழக்கு நெய் அக்கோயிலுக்கு வழங்குவதாக அவ்வூர் மன்றத்தார் பொறுப்பேற்ற செய்தியை அக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இக்கல்வெட்டு அருஞ்சய சோழன் அல்லது இரண்டாம் ஆதித்த சோழன் காலத்தில் பொறிக்கப்பெற்றிருக்கலாம் என்று கருதுவர் சிலர்.

திருவெண்காட்டு சுவேதாரண்யேஸ்வரர் கோயில் மேலைக்கோபுரக் கல்வெட்டு ஒன்று அக்கோயிலிலுள்ள ஆடி அருள்கின்ற தேவராகிய நடராச பெருமானுக்குக் கைக்கோள மரபினைச் சேர்ந்த ஒருவர் பொன்னாபரணங்கள் வழங்கிய செய்தியை குறிப்பிடுகிறது. இவனும் ஒரு வீரனாக விளங்கியவன் என்று எண்ணுதற்குரியவன். இக்கல்வெட்டினைத் திருவெண்காட்டிற்கு அருகிலுள்ள நாங்கூரைச் சேர்ந்த காரணத்தான் கடற்காடன் என்பவன் பொறித்துள்ளான்,
(S. I. I. Vo1. XIX No. 102)

2. பராந்தகத் தெரிஞ்ச கைக்கோளப்படை (கி. பி. 907–953)

பிற்காலச்சோழர் வரலாற்றில் முதல் பராந்தகச் சோழனுக்குச் சிறப்பிடம் உண்டு. இவன் முதல் ஆதித்தசோழனின் புதல்வன். இவன் தமிழகத்தை வென்றதுடன் சிங்களத்தையும் வென்றான். எனவே இவனுக்கு சிங்களாந்தகன் என்ற பெயரும் உண்டு. தில்லை நடராசர் கோயிலைப் பொன்வேய்ந்து போற்றி

யவன். இவன் காலத்திலும் கைக்கோளர் மரபிலிருந்து ஆற்றலும் அறிவுத் திறமும் போர்த்திறமும் மிக்க வீரர்கள் பொறுக்கி எடுக்கப்பெற்று நம்பிக்கைக்குரிய படையாகப் பணிகொள்ளப் பெற்றனர். இப்படையைச் சேர்ந்தவர்கள். ஆற்றிய தெய்வப்பணிகள் கல்வெட்டுகளில் பொறிக்கப்பெற்றுள்ளன.

முதற்பராந்தகனுக்கு வீரசோழன் சமரகேசரி, விக்கிரமசிங்கன், சிங்களாந்தகன் தானதுங்கன் முதலிய பட்டப்பெயர்கள் வழங்கப்பெற்றன. இவற்றுள் தானதுங்கன் என்ற பெயர் தானதொங்கன் என்று கல்வெட்டுக்களில் வழங்கப்படுகிறது. எனவே அவனால் தெரிந்தெடுக்கப்பெற்ற கைக்கோளப்படை மறவர்களும் அப்பட்டப்பெயர்களாலேயே சுட்டப்பெற்றனர்.

முதற்பராந்தகன் காலத்திற்குப்பின் எழுந்த கண்டராதித்த சோழனின் காலத்தைச் சேர்ந்தவை என்று கருதப்பெறும் மூன்று கல்வெட்டுக்கள் வீரசோழர் தெரிஞ்ச கைக்கோளர், சமரகேசரி தெரிஞ்ச கைக்கோளர் விக்கிரமசிங்க தெரிஞ்ச கைக்கோளர் என்ற வீரப்படையினரைக் குறிப்பிடுகின்றன. (S. I. I. Vo1. XIX No 45, 47, & 48) இவர்கள் கண்டராதித்த சோழர் காலம் முதலாகச் சோழப்படையில் பெரும்பணி ஆற்றியவர்கள். காட்டுமன்னார் கோயில் என்னும் ஊரினை அடுத்து விளங்கும் உடையார் குடியில் விளங்கும் அனந்தேசுவரர் கோயில் கல்வெட்டு பராந்தகத் தெரிஞ்ச கைக்கோளப்படையினரைப்பற்றிக் குறிப்பிடுகிறது. இப்படையைச் சேர்ந்த ஆச்சன் பலதேவன் என்னும் வீரனுக்காக இப்படையினர் அனைவருமாகச் சேர்ந்து இக்கோயிலில் நந்தா விளக்கு எரிப்பதற்கு $12\frac{1}{2}$ கழஞ்சு பொன்வழங்கிய செய்தியை இக்கல்வெட்டு சுட்டுகிறது. (S. I. I. Vo1. XIX. No. 17). ஒருவேளை இந்த வீரன் போர்க்களத்தில் வீரமரணம் அடைந்திருக்கலாம். அவன் நினைவாக அப்படையினர் நொந்தாவிளக்கு எரிப்பதற்குப் பொன் தானம் செய்துள்ளனர் என்று கொள்ளலாம்.

கும்பகோணம் நாகேசுவரர் கோயில் தென்புறச் சுவரிலுள்ள கல்வெட்டு வீரிசோழத்தெரிஞ்ச கைக்கோளப்படையில் ஒருவனாகிய சுடிகாவன்கள்ளான் என்னும் வீரன் அக்கோயிலுக்கு நொந்தாவிளக்கு எரிக்கும் பொருட்டு 90 ஆடுகள் கொாத்த செய்தியைச்குறிக்கிறது. (S. I. I. Vo1. XIX, No 8).

உடையார்குடி அனந்தேசுவரர் ஆலயத்தில் தென்புறச்சுவரில் காணப்பெறும் கல்வெட்டில் தான தொங்கத்தெரிஞ்ச கைகோளப்படையைச் சேர்ந்தஅரையன் கேயவிடங்கன். என்னும் வீரன் பத்துப்பொற் காசுகள் வழங்கிய செய்தி குறிப்பிடப் பெற்றுள்ளது. இந்த நிதியைக் கொண்டு இக்கற்கோயிலின் தென்பக்கத்து ஆடி அருளுகின்ற் கூத்தபெருமானுக்குப் பரிவட்டம் சாத்தி அருளும்படி செய்திருந்தான். மேலும் இவன் கூத்தர்க்கும் கணபதியாருக்கும் பிச்சாடனமூர்த்திக்கும் அதேகோயிலில் தனித்தனிச் சன்னிதிகள் அமைத்துத்தன் சிவபக்தியைப் புலப்படுத்தினான் என்ற செய்தியையும் இக்கல்வெட்டில் சுட்டப்படுகின்றது.

கருவூர் வட்டத்தைச்சேர்ந்த சேமூர் என்னும்இடத்தில் கட்டப்பெற்ற சோமேசுர உடையார் கோயில் கல்வெட்டும் தானதொங்கத்தெரிஞ்ச கைக்கோளரைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இப்படையைச்சேர்ந்த பராந்தக புருஷோத்தமன் என்னும் வீரன் திருநோம்பலூர் மகாதேவர் கோயிலுக்கு மூன்று சந்தி வழிபாட்டிற்கும் விளக்கெரிப்பதற்காக $2\frac{1}{2}$ கழஞ்சு பொன்தானம் வழங்கிய செய்தி இக்கல்வெட்டில் சுட்டப்படுகின்றது. (S. I. I. Vo1. XIX, No. 166).

உடையார்குடி கோயிற்கல்வெட்டொன்றில் சிங்களாந்தக தெரிஞ்ச கைக்கோளப்படையைச் சேர்ந்த பலதேவன் பனையன் என்னும் பெருவீரன் நாள்தோறும் ஒரு நொந்தா விளக்கு எரிப்பதற்காகக் கொடுத்த பொன் $12\frac{1}{2}$ கழஞ்சுக்கும் 90 ஆடுகள் வாங்கி அவ்வூரினர் நாள்தோறும் அக்கோயிலுக்கு உழக்கு நெய் வழங்கியமை குறிக்கப்பெற்றுள்ளது. (S. I. I. Vo1 XIX, No. 21).

சிங்கள மக்களுக்கு அநதகனைப் (எமனைப்) போன்றவன் என்ற பொருளில் வழங்கும் சிங்களாந்தகன் என்ற சிறப்புப்பெயர் முதலாம் இராசராசனுக்கும் உரியது.(காண்க: பிற்காலச் சோழர்சரித்திரம், பக். 122) எனவே, இங்குச் சுட்டப்பெறும் கைக்கோளப்படை இம்மன்னனுக்குப் பேருதவி புரிந்தது என்று கருதலாம்.

2. மூத்த வாள் பெற்ற கைக்கோளப்படை

உடையார்குடி அனந்தேசுவரர்| கோயில் கல்வெட்டு ஒன்று மூத்த வாள் பெற்ற கைக்கோளப்படை குறிக்கப்பெற்றுள்ளது. இப்படையும் முதற் பராந்தகன் காலத்தில் வீரப்பணி புரிந்த திறத்தைக் கல்வெட்டு கூறுகிறது. 'மூத்தவாள்பெற்ற' என்ற தொடர் 'Special honour or rank of the regiment by the king' என்று கல்வெட்டறிஞர்களால் விளக்கப்பெறுகிறது. ஒருசால் அறிஞர்கள் வாள்பயிற்சியில் அவர்களுக்கு இருந்த அனுபவத்தை இத்தொடர் சுட்டுவதாகக் கருதுகின்றனர். இப்படையைச் சேர்ந்த அரையன் வேங்கடவன் என்வ வீரன் அனந்தேசுவரருக்கு நாள்தோறும் நொந்தா விளக்கெரிப்பதற்கு $12\frac{1}{2}$ கழஞ்சு பொன் வழங்கிய செய்தியும் இப்பொன்னால் 96 ஆடும் தகர் ஒன்றும் கொண்டு நாள்தோறும் ஓர் உழக்கு நெய் அளப்பதற்கு இவ்வூர் மன்றத்தினர் பொறுப்பேற்ற செய்தியையும் அறிகிறோம் (S.I I.Vo1. XIX No.18) வாள் என்ற சொல் கல்வெட்டுக்களில் வாழ் என்று வெட்டப் பெற்றுள்ளது. இப்பிழை செதுக்கியவர் உச்சரிப்புப் பிழையால் நேர்ந்திருத்தல் வேண்டும்.

மேற்சுட்டிய கல்வெட்டினைச் சார்ந்துவரும் கல்வெட்டும் அதே படையைச் சேர்ந்த வித்யாபரன் என்னும் வீரன் சந்திரசேகரர்க்கு நொந்தாவிளக்கு எரிப்பதற்கு 12½ கழஞ்சு பொன் வழங்கிய செய்தியைச் சுட்டுகிறது S.I.I. Vo1 XIX, No. 19)

3. கண்டராதித்தத் தெரிஞ்ச கைக்கோளப்படை (கி. பி. 950-957)

கண்டராதித்தன் முதல் பராந்தகனின் புதல்வன். பெரும் வீரம் படைத்த சிறந்த சிவநேசச்செல்வன் தில்லைக்கோயிலைப் பற்றி இவன் பாடிய திருவிசைப்பா ஒன்பதாம் திருமுறையில் தொகுக்கப்பெற்றுள்ளது. இவனைச் சிவஞானக்கண்டராதித்தர் என்று போற்றுவர். இவன் காலத்தில் பணியாற்றிய கைக்கோளப் பெரும்படையினர் இவன் பெயரினால் சுட்டப்பெற்றனர். இவன் காலத்தில் கும்பகோணம் நாகேசுவரர் கோயிலில மேற்குச் சுவரிலும் தெற்குச் சுவரிலும் கி. பி, 22-4-975 இல் வெட்டப்பெற்ற கல்வெட்டில் இப் படையைச் சேர்ந்த தஞ்சாவூர்க் கற்றளிப் பிராட்டி அறிவாளன் அமித்திர வல்லி என்பவன் தன் புதல்வன் காரிகோழம் ,ன் சார்பாகத் திருக்குடமூக்கில் திருக்கீழ்கோட்டத்துப் பரமசுவாமி கோயிலுக்கு நிலம் வழங்கிய செய்தி பொறிக்கப்பெற்றுள்ளது. அரசனுடைய முடிசூட்டு விழாக்காலத்தில் அபிஷேக தட்சணையாக அவ்வூர்ச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று அறிகிறோம். (S I. I. Vo1. XIX, No.95)

4. கரிகால சோழத் தெரிஞ்சகைக்கோளப்படை (கி. பி. 966-969)

பிற்காலச் சோழர் வரலாற்றில் கரிகாலன் என்ற பெயர் இரண்டாம் பராந்தகனின் முதல் மைந்தனும் முதலாம் இராசராசனின் தமையனுமாகிய ஆதித்த கரிகாலனுக்கும் உரியதாகக் கல்வெட்டுக்களில் வழங்குகிறது. மயிலாடுதுறை வட்டத்தைச்சேர்ந்த திருவிளக்குடி என்ற ஊரில் திகழும் மணவாளேஸ்வரர் கோயிலில் தெற்குப்புறச் சுவரிலுள்ள கல்வெட்டு உத்தம சோழனின் காலத்தில் (கி. பி. 12-4-969) செதுக்கப்பெற்றுள்ளது. இக்கலவெட்டில் சுட்டப்பெறும், கரிகாலசோழத் தெரிஞ்சகைக்கோளப்படையைச் சேர்ந்த அரையன் என்ற வீரன் 50 ஈழக்காசு செலுத்தி வேள்விக்குடி இறைவனுக்கு நிலம் வாங்கி இறையிலியாக வழங்கிய செய்தி குறிக்கப்பெற்றுள்ளது. கரிகாலச் சோழன் என்ற பெயர் ஆதித்த கரிகாலனுக்கு உரியதாக அறியப்பெறுவதால் இப்படை மறவர்கள் அச்சோழன் காலத்தில் பணியாற்றியவர்கள் ஆவர், (S I I. Vo1 XIX, No27).

காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள சொக்கீஸ்வரர் கோயில் தென்புறச்சுவரில் வெட்டப்பட்ட கல்வெட்டு மூத்த வாள் பெற்ற கைக்கோளப்படையைச் சுடடுகிறது. இப்படையைச் சேர்ந்த ஆச்சான் சேனாச்சான் என்னும் படைத்தளபதியிடம் காஞ்சிபுர நகரத்தினர் 300 குழி நிலத்தை விற்ற செய்தியு ம அப்படைத்தலைவன் அந்நிலத்தினைத் தெற்கிருந்த நக்கர் கோயிலில் கரிகால சோழப்பிள்ளையார்க்கு நிவேதனங்கள் வழங்குவதற்காக நிவந்தம் அளித்த செய்தியும் இக்கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளன. மேலும் மூலவர் கோயிலில் விளக்கெரிப்பதற்கு மூன்று பழங்காசுகள் கொடுத்த செய்தியும் சுட்டப் பெற்றுள்ளது. இக்கல்வெட்டு உத்தமசோழன் காலத்தை சேர்ந்ததாகலாம் என்று பதிப்பாசிரியர் கருதுகிறார் எனினும் இக்கல்வெட்டில் கரிகாலச் சோழப்பிள்ளையார் சுட்டப்பெறுவதால், இப்படைமறவர்கள் ஆதித்த கரிகாலன் காலத்திலும் பணிபுரிந்தவர்கள் என்று கருதஇடம் உண்டு.

5. மதுராந்தகத் தெரிஞ்ச கைக்கோளப்படை (கி. பி. 970-985)

மதுராந்தகன் கண்டராதித்தனின் மகன் ஆவான். இவனுக்கு உத்தமசோழன் என்ற பெயரும் உண்டு இவன் தாய் சிறந்த சிவநேசச்செல்வியாகிய செம்பியன் மாதேவி. பாண்டியநாட்டவர்களுக்கு அந்தகன்போல் இருந்ததால் இவனை மதுராந்தகன் என்று வழங்கியிருத்தல் வேண்டும்.

பண்டாரவாடைக்கு அருகில் திகழும் தேவராயன்போட்டை மச்சபுரீஸ்வரர் கோயில் கல்வெட்டொன்றில் மதுராந்தகத்தெரிஞ்ச கைக்கோளப்படையைச்சேர்ந்த கோயில் நிலாவஞ்சி என்னும் வீரன் திருச்சேஓர் மகாதேவர் கோயிலில் நொந்தாவிளக்கு எரிப்பதற்கு நிவந்தம் வழங்கிய செய்தி குறிக்கப் பெற்றுள்ளது. (S.I.I.Vo1. XIX, No.284) இக்கல்வெட்டினை உத்தமசோழன் காலத்தது என்று தெளிவாகப் பதிப்பாசிரியர் குறித்துள்ளார்.

6. அருமொழித்தேவத் தெரிஞ்ச கைக்கோளப்படை (கி. பி. 985-1014)

சோழர் வரலாற்றில் மாபெரும் மன்னனாகக் கோலோச்சிய மாமன்னன் முதலாம் இராசராசனுக்கு அருமொழித்தேவன் என்பது இயற்பெயராகும். அவனால் தேர்ந்தெடுக்கப்பெற்ற கைக்கோளவீரர்கள் அருமொழித்தேவர் தெரிஞ்ச கைக்கோளர் என்று போற்றப்பெற்றனர். இப்படையைச் சேர்ந்த உடையார் அருமொழித்தேவர் தெரிஞ்ச கைக்கோளர் ... கற்றளி பட்டாலகன் என்னும் வீரன் திருப்பழனம் உடையார் கோயிலில் நாள்தோறும் அந்தணர் நால்வருக்கு அமுது செய்விக்க நிலங்கள் வழங்கியசெய்தி இக்கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது.
(S.I.I. Vo.1 XIX, No. 29)

இக்கல்வெட்டினை முதலாம் இராசேந்திரன் காலத்தில் வெட்டியிருக்கலாம் என்று கருதுவர்.

பார்த்திப சேகரத்தெரிஞ்ச கைக்கோளன் பற்றிய மற்றொரு கல்வெட்டில் காணப்படுகிறது. பார்த்திப சேகரன் என்ற பெயர் மாமன்னனாகிய இராசராசனுக்குரிய பட்டப்பெயர்களில் ஒன்றாகக் கருதப்பெறு வதால், இக்கல்வெட்டு அவன் காலத்தைச் சேர்ந்ததாகலாம் என்பர். சிவபாதசேகரன் என்பதுபோலப் பார்த்திப சேகரன் என்பது இராசராசனுக்குரிய சிறப்புப்பெயராக வழங்கியிருத்தல் வேண்டும். அவன் பெயர் பெற்ற கைக்கோளப்படையைச் சேர்ந்த அய்யன் வேம்படிகள் என்னும் வீரன் திருவெண்காட்டில் கோயில் கொண்டுள்ள ஈசனுக்கு நித்தியவழிபாட்டிற்கும் அன்னதானத்திற்கும் 60 கழஞ்சு பொன்வழங்கிய செய்தி யினை ஒருகல்வெட்டு கூறுகிறது. இப்பொற்காசுகளை நாங்கூர்ச் சபையினர் பெற்றுக்கொண்டு ஒருவேலி நிலத்தைக் கோயிலுக்கு வரியிலியாக வழங்கி அவ்வீரனின் விருப்பத்திற்கிணங்க வழிபாடு முதலிய அறப்பணி களை ஆற்றிவந்தனர், (S.I I Vo1 XIII, No 16).

7. இராஜேந்திர சோழத்தெரிஞ்ச கைக்கோளப்பெரும்படை (கி. பி. 1012-1044).

முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் திருவிடைமருதூர் மகாலிங்கர் கோயிலின் தென்புறச் சுவரில் வெட்டப்பெற்றுள்ள கல்வெட்டொன்று கைக்கோளப் பெரும்படையினைப்பற்றிக் குறிப்பிடுகின்றது. இப்படையினர் அக்கோயிலின் பெரியமண்டபத்தின் முன்பில் திருப்பலகணியும் திருக்கதவும் நிலையும் படியும் சமைப்பித்து அவர்களுக்கு ஆசிரியர்களாக விளங்கிய திசை ஐந்நூற்றுவர் கண்காணிப்பில் அவ்வறக்கட்டளை நடந்துவரச் செய்தனர் (S.I.I.Vo1. XIX No. 4)

மேற்சுட்டிய பல்வேறு கல்வெட்டுச்சான்றுகளினால் பிற்காலச்சோழர்கள் ஆட்சியில் கைக்கோளப் பெரும்படையினர் தம் வீரத்தாலும் ஆற்றலாலும் சிறப்புற விளங்கிய உண்மை புலனாகும் படைமறவர் களாகப் பணியாற்றிய போதிலும் இறைவனிடத்தில் நிறைந்த நேசம் கொண்டவர்கள் என்பதைப் பல்வேறு கோயில்களுக்கு அவர்கள் வழக்கியுள்ள நிவந்தங்கள் பற்றிய கல்வெட்டுக் குறிப்புக்கள் புலப்படுத்துகின் றன. விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய மூவேந்தர் காலத் திலும் விறுபெற்று விளங்கிய கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் இம்மரபினர் என்பதும் இங்கு சுட்டுதற் குரியது. கைக்கோளப்பெரும்படையினர் சோழவேந்தர்களுக்கு அணுக்கராக அமைந்து அருட்பணி ஆற்றிய வாய்மை கருதி, அம்மரபில் வந்த இருமொழிப் பெரும்புலவராகிய ஒட்டக்கூத்தரை மேற்சுட்டிய சோழ வேந்தர் மூவரும் அவைக்களப் புலவராகவும் அமைச்சாராகவும் ஏற்றுச் செங்கோல் செலுத்தினர். கவிச் சக்கரவர்த்தி கூத்தர் பாடிய மூவர் உலா குலோத்துங்கச் சோழன் பிள்ளைத்தமிழ், குலோத்துங்கன் கோவை முதலிய செந்தமிழ் இலக்கியங்கள் சோழர் வரலாற்றினை அறிந்துகொள்வதற்குச் சரித்திர ஆசிரியர்களுக்கு வரலாற்றுக் கருவூலமாக விளங்குவன. விக்கிரமசோழன் தென் கலிங்க வேந்தனாகிய தெலுங்கவீமனைப் பொருது வாகை சூடிப் புனைந்த வீரச்செயலைப் பொருளாக அமைத்து இவர் பாடிய கலிங்கத்துப்பரணி இப்போது கிடைக்கவில்லை. இதைப்பற்றிய குறிப்பு மூவர் உலாவிலும் தக்கயாகப்பரணியிலும் காணப்படு கிறது, இவர் பாடிய ஈட்டி எழுபது இவர் தோன்றிய குலப்பெருமையினைக் கூறுவது

தீய ஆற்றலாகிய அசுரர்களை அழிக்கும் பொருட்டு முருகனுக்கு உறுதுணையாக விளங்கிய வீரவாகுதேவர் உள்ளிட்ட ஒன்பது தளபதிகளையும் கைக்கோளராகிய செங்குந்தர்கள் தங்கள் வீரமரபின் முதல்வர்களாக எண்ணிப்போற்றுவர். இம்மரபினர்க்குக் குலக்கடவுள் முருகனே இவர்கள் சிவநெறியரே. அருணகிரிநாதன்,

''கருமால் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக்கோலனை வானமுய்யப்
பொருமாவினைச் செற்ற போர்வேனைக் கன்னிப்பூகமுடன்
தருமா மருவு செங்கோடனை வாழ்த்துகை சாலநன்றே''

என்று முருகக்கடவுளையும் இக் குலத்திற்கு முதல்வனாகப்போற்றியிருத்தல் இங்கு எண்ணத்தகுவதாகும்.

தமிழருள் ஏனைய வீர மரபினர்க்கு ஒப்பாக விளங்கியவர்கள் செங்குந்தர்கள் என்பதை உணர்த்து வதற்காகவே இந்த ஆய்வுக்கட்டுரை பிற்காலச் சோழர்காலக் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்றது ஏனைய கல்வெட்டுத்தொகுதிகளிலும் இவர்களைப் பற்றிய செய்திகள் இடம் பெற்று உள்ளன பழம்பெருமையை உணர்ந்து உண்மையும் உழைப்பும் மேற்கொண்டுதுறை தோறும் சீரும் சிறப்பும் விளைவித்து மாந்தநேயம்பரப்பி மாநிலம் தழைத்தோங்க நற்பணி புரிதல் நம் அனைவரின் கடமையாகும்.



செங்குந்தர் பெருமக்களின் சிந்தனைக்கு

ஆ. ராஜகோபாலன்
நாகர்கோவில்

'' செங்குந்தர் சமுதாயம் என்பது கைதொழிலில் சிறப்புற்ற நெசவு தொழிலில் நூல் இழையை இணைப்பு செய்யும் சமுதாயமாக முன்பு வழங்கப்பட்டு வந்ததாக முதியவர்கள் கூறுவார்கள் இணைக்கப்பட்ட நூல்கள் தான் உடையாக மாறுகிறது அது போன்று சமுகத்தார் இணைப்புடன் வாழவேண்டும். என்பதையே சமுதாயப் பெயராகக் கொண்டனர். என்பது எமது எண்ணம்; இன்றும் நீதி தவரு செங்கோல் போன்று வாழ்வை நடத்துபவர் '' என்ற கருத்தில் பொருத்தமாக பெயர் வைத்தனர். ஆகவே பலவகைகளிலும் மிக உயர்ந்த சமுதாயம் '' செங்குந்தர் '' வகையினர்.

ஆனல் காலத்தின் சக்கர சுழற்சியின் காரணமாக சமுதாய மக்கள் பலஇடங்களில் வாழ, நெருக்கடியும், ஏழ்மை நிலையும் காரணமாக உள்ளன! ஆனல் தெய்வீக உணர்வுடைய செங்குந்தர் ' சமுதாயம், வறுமை, ஏழ்மை, ஆதரிப்பின்மை காரணமாக சிதறுண்டு போனலும் ''கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே'' என்று சொற்படி சிறப்புற்று வாழ்ந்து வருகின்றனர். சேலம், கோவை, ஈரோடு, நெல்லை, கன்யாகுமரி மாவட்டங்களில் பெரும்-பான்மை மக்கள் சிறந்த நிலையுள்ளனர்.

'' செங்குந்தர் சமுதாயம் திருமுருகனையும் விநாயகரையும் '' குடும்பத் தெய்வமாக மதிப்பவர் என்பதற்கு ஆதாரமாக சேலம் ''அம்மாபேட்டை செங்குந்தர் சமுதாய முருகன் ஆலயம் '' குமரி மாவட்டத்தில் கோட்டாறு ''சென்ற திசை வென்ற விநாயகர் '' கோவிலும் போதுமே!

இவ்வளவு சிறப்புடன் வணங்கும் சமுதாயத்தில் இன்னும் முன்னேற ஒற்றுமை தேவை நமது இனத்தவர்கள் பெரும்பகுதி வியாபாரத் துறையின் முன்னேற்றம் காரணமாக அதிலேயே மூழ்கியுள்ளனர். நல்லபடித்த பெருமக்கள் இருந்தும் நமது சமுதாய குழந்தைகட்கு பள்ளிகள், கல்லூரிகள் நிறுவியுள்ளோமா? என்பதை உங்கள் சிந்தனைக்கு வைக்கிறேன்! ஏன் தமிழ் நாட்டின் முக்கிய இடங்களில் செங்குந்தர் சமுதாயப் பள்ளிகூடம், கல்லூரிகள் அமைக்கலாமே '' ''திருமண மண்டபங்கள் திறக்கலாமே '' ''அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'' என்று கூறிய பாரதியை நினைவூட்டு கிறேன். நமது சமுதாயத்தின் அடித்தளத்தில் ஏழ்மையாக பலர் உள்ளனர். அதை நம்மிடம் காட்ட அச்சம் கொள்கின்றனர். அது பெரும்தவறு! நமது சமுதாய தலைவரின் காரியதரிசி களிடம் உண்மையை கூறி உதவி பெறலாமே'' அவ்வாறு செய்தால் உண்மை வெளிப்படும், அவர்கட்க்கும் நல்வாழ்வு கிடைக்கும்.

மேன்மட்டத்திலுள்ளவர் பணவசதிவைத்து அடிமட்டத்தினர் ஒதுங்கியே வாழ்கின்றனர். அவற்றை தவிர்த்து இனத்தால் நாம் அனைவரும் சமம்! என்ற உணர்வுக்கு ஆட்பட வேண்டும். ஒருவருக்கொருவர் மனம்விட்டு அளவளாவி புரிந்துகொண்டு வேண்டியதை செய்தால் ''ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு'' என்றநிலை சமுதாயத்திற்கு வரும்!

ஆன்மீக நெறியில் பல ஆலயங்களை கட்டிய செங்குந்தர் சமுதாயம் கல்விசாலைகளை திறந்திட வேண்டுகிறேன்! அறிவு கண்களை திறக்க! எளிமையும் தாழ்மையும் அகன்று வளமும் வாழ்வும் சிறக்க! இளம் சிரார்கள் எழுந்து இணைக! இன்புறுக!

திருச்செந்தில் முருகன் திருவருள்தருக!

வாழ்க செங்குந்தம். வளர்க செங்குந்தம்.





அதோ தெரியுது கற்பகக் களஞ்சியம்

M. தங்கராஜ்,
கணித இணை விரிவுரையாளர்,
ஈரோடு இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி
கவுந்தப்பாடி,
பெரியார் மாவட்டம்

வான் பொய்ப்பினும் தான் பொய்யா காவிரியின் கரை அமைந்த ஈரோடு நகரிலும் பெரியார் மாவட்டம் பேரூர், சிற்றூர்களில் அங்கிங்கெனாதபடி நீக்கமற நிறைந்துள்ளனர் செங்குந்த சமுதாய உறவின் முறையினர் இவர்களின் ஆக்கப்பூர்வமான இறைத்தொண்டு, கல்விப்பணி சமுதாயப்பணி கண்டு மாற்றாரும் போற்றுவர் சமுதாயப் பெருமக்களின் முயற்சியால் பல கல்வி நிலையங்கள், முத்தாய்ப்பாய் ஈரோடு கலைக்கல்லூரி, ஈரோடு தொழில் நுட்பக் கல்லூரி, எம் பி என் எம் ஜெ பல்தொழில் பயில் கல்லூரி இக்கல்லூரிகளினால் சமுதாய இளைஞர்கள் கல்வி பயின்று வாழ்வில் மேன்மை பெற்றுள்ளனர்.

பிறந்தோம், வளர்ந்தோம் என இல்லாமல் இனம் எமக்கென்ன செய்தது என்று எண்ணாமல் நம்மால் இனத்துக்காக என்னென்ன செய்ய முடியும் என எண்ணியது செயல் கண்டு இனத்துக்கு வழிகாட்டியாய் இருக்கின்றனர் இம்மாவட்ட செங்குந்தர்கள் கல்வித் தந்தை திரு ஆர் ஏ என் முத்துசாமி முதலியார், செங்குந்த இளவல் திரு ராணா லட்சுமணன் கைத்தறிக் காவலர் பத்மஸ்ரீ திரு நாச்சிமுத்து முதலியார் ஈங்கு குறிப்பிடத்தக்கவர்கள் இவர்களை போன்ற பல சமுதாயப் பெரியோர்களின் சீரிய முயற்சியால் என்றும் ஈரோடு அகில இந்திய ஏன் உலக அளவிய, கைத்தறித்துணி வணிக கேந்திரமாக இருப்பதைக் காண்கிறோம்

இனம் வரலாறு காணா கைத்தறியின் நசிவு கண்டு துடிக்கிறது அதனாற்றான் கோபக் கனலாய் கொதிக்கிறது அகில இந்திய அளவில் இரண்டாம் இடம் வகிக்கும் கைத்தறியின் வாழ்வு அதை நம்பி வாழும் லட்சோப லட்சம் இனத்தாரின் அவல நிலை கண்டு சீறுகிறோம் பொறுமுகிறோம்

''ஒவ்வொரு கைத்தறியும் விசைத்தறியாக
வேண்டும்'' அரசு அதை மான்யமாக வழங்க
வேண்டும் மின்சாரமும் வேண்டும்
தடையில்லா நூல் வேண்டும்'' என

கோரிக்கைகள் எழுப்பினோம் எழுப்பி வருகிறோம்,

இவைகளை வலியுறுத்தக் கூட்டங்கள் மாவட்ட மாநில மாநாடுகள் தொடர்கிறோம் ''கைக்கோளன் தறிக்குழியில் கால் விடாமல் இருபத்தோராம் ''நூற்றாண்டின் நவீன இயந்திரங்களைக் கையாண்டால்தான் இவன் உருப்படுவான்'' என தீர்மானித்து நூறாண்டு காணும் இன-புரட்சி கவி- பாரதிதாசனின் கவிதைகளால் வீறுகொண்டு உறுமுகிறான் வீர இளைய செங்குந்தன்

அரசால் ஆவது ஒருபுறம் இருந்தாலும் இனத்தை வலுவுள்ளதாக்க, விழிப்பு மிக்க தாக்க ஒவ்வொரு செங்குந்தனும் முயல வேண்டும். ஏழை எளிய இன மக்களை கண்டு, அவர்தம் கல்வி வேலை வாய்ப்புகளுக்கு உதவ, தனியனாக அல்லது கூட்டான வழிகளில் முயல்வோம். கல்வியால்தான் ஒரு சமுதாயம் முன்னேறுகிறது என்பது வெளிப்படை.

கூட்டு முயற்சி என்பது எக்காலத்துக்கும் வெற்றி தரும் கோட்பாடு எனலாம். ''எம்மிடம் உள்ளதும், சேர்ந்த ஒரு பெரிய தொகை, நவீனமான தொழிலுக்கு போதிய தாகிறது. இருவரின் முன்னேற வேண்டும் என்ற அடிப்படை எண்ணம், குறைந்த சம்பளத் தில், இருவரின் மாசு மறுவற்ற உழைப்பால், சில, சில ஆண்டில் இரு மடங்காகிறது. சம பங்கிட்டு இரு வேறு விலாசம் கொண்ட தொழிலாக்கி மேலும் இனத்தார்க்கு வேலை பெருக்க வேண்டி நல்ல நண்பர்களாக நன் உறவின் முறையினராக பிரிக்கிறோம். வளர் கிறோம்'' மேற்சொன்ன முறையில், கைத்தறி தொழில் ஆண்டாண்டாய் ஈடுபட்டு முன்னே றாமல், பொறுத்தது போதும் என கூட்டு முயற்சியால் விசைத்தறிக்கு மாறி வளமாய் வாழ்கின்றனர் நம் பெருமக்கள் எடுத்துக்காட்டாய் பெரியார் மாவட்டம், அந்தியூர், ஆலாம்பாளையம் செங்குந்தர்கள் விளங்கி வருகின்றனர்.


சமுதாயப் பெரியோர்களின் ஆணையை சிரமேற்கொண்டு செவ்வனே முடிக்கும் இளைய செங்குந்தர்கள், மாநில அரசிடமும் மண்டல் கமிசன் அறிக்கையை செயல்படுத்தத் துடிக்கும் நடுவன் அரசிடமும், நம் இனத்திற்கான அரசின் வேலை வாய்பிற்கான இட ஒதுக்கீட்டை பெற்றுத் தாருங்கள் என பணிவன்பான வணக்கத்துடன், செங்குந்தர் குலச் செம்மல்களை வேண்டுகின்றனர்.

நம் திட்டமிட்ட செயல்களால் இனத்தை வளமாக்குவோம். செங்குந்தர் என்றொரு இனம் உண்டு, அது செம்மையாய் வாழ்குது பாரீர் என மாற்றாரும் சொல்ல வைப்போம் பழையன பேசியது போதும், புதியன படைப்போம் வாருங்கள். வாருங்கள்... அதோ தெரியுது கற்பகக் களஞ்சியம்.

வெல்க செங்குந்தம்!



பாவேந்தர் பாரதிதாசனின்
'மயிலம் ஸ்ரீ சுப்பிரமணியர் துதியமுது-ஓர் அறிமுகம்'



டாக்டர் மா. அண்ணாதுரை
எம்.ஏ.பி.லிப்.எசி,. பி.எட்.,பிஎச். டி.,
நூலகர், ஈரோடு கலைக்கல்லூரி (தன்னாட்சி)
ஈரோடு-638 009.

முன்னுரை :

பாவேந்தர் பாரதிதாசன் ஆரம்ப நாளில் பழுத்த ஓர் ஆத்திகர்; இவர்தம் தந்தையர் ஒரு வாணிகர்; அண்ணன் ஒரு கோள்நூல் வல்லுநர்; பாவேந்தர் தன் இல்லத்தாரைக் காட்டிலும் இறைவழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்கியவர். வேத ஆகமங்களில் நாட்டங் கொண்டு இருந்தவர். மயிலத்தந்தாதி இயற்றிய பெரும்புலவர் சாரம் பெரியசாமி பிள்ளையிடம் முறையாகத் தமிழ் பயின்றவர்

மயிலம் ஸ்ரீ சுப்பிரமணியர் துதியமுது

இந்நூல் 1926 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. 'இது புதுவை பாடசாலை உபாத்தியாயர் கனக சுப்புரத்தின முதலியாரால் இயற்றப்பட்டது' என்ற குறிப்போடு வெளியிடப் பெற்றது பாவேந்தர் முதன் முதலில் நூல் வடிவில் இயற்றியது மயிலம் ஸ்ரீ சுப்பிரமணியர் துதியமுது. இந்நூலின் அருமை பெருமைகளைப் பற்றித்தமிழ்நாட்டில் அதிகம் அறிந்தாரில்லை இந்நூல் பாவேந்தரின் முன்னாள் தெய்வ பக்தி நெறியை நன்கு வெளிப்படுத்துவது; இசை ஞானத்தை உலகுக்கு உணர்த்திக் காட்டுவது

மயிலம், புதுவையிலிருந்து 38 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஊர்; மலைப்பகுதியில் அமைந்தது. இம்மலை மயில் போன்றஅமைப்புடைதால் இதன்பெயரும் மயிலம் எனலாயிற்று. அழகிய ஊர், இயற்கை எழில் கொஞ்சும், இவ்வுலக உயிர்கள் உய்யும் பொருட்டு உலக முதல்வன் பல அவதாரங்களில் தோன்றினன் என்பர். அவைகளில் ஒன்று இறைவன் திருமுருகன். இறைவன் சுப்பிரமணிய சுவாமியாக இம்மாமலையில் எழுந்தருளியுள்ளான்.

மணக்கோலத்துடன் விளங்கும் இம்மயிலத்து முருகன், அருணகிரிநாதர், ஸ்ரீ பாலசித்தர் போன்ற அருளாளர்க்குத் திருவருள் புரிந்த இடம்.

கனகசுப்புரத்தினம் எனும் இயற்பெயர் உடைய பாவேந்தர், மயிலம் முருகனின் மீது நிறைந்த பக்தி உடையவர்; மயிலம் முருகனின் திருவிழாக் கோலம் கண்டு பெருமகிழ்வு கொண்டவர். ஆண்டுதோறும் மாசிமக நாள் அன்று கடலாட முருகக்கடவுள் புதுச்சேரிக்குச் செல்வது உண்டு.

இதனைப் பாவேந்தர்(கனகசுப்புரத்தினம்)அவர்கள் தம்பாடலில் குறித்திருப்பதிலிருந்து அறியபெறலாம்

'மாசி மகோத்ஸவ மாமிந்த நாள் எங்கள்
மயிலாசன னேவந்தனன்
பாசாதி பந்தம் கடந்தோம் கலிந்தோமவ்
வீசன் தரிசனம் பெற்ற தினால்'[3]
'ஆதியிலேசெட்டி வீதியிலே சொன்ன
சேதியெல்லாம் உள்ளம் மறந்ததோ-உன்
சாதியில் இக்குணம் பிறந்ததோ-என்று
பாசி மயில்மிசை மாசிமகத்தன்று
நேசியருடன் நீ வந்தனை'[4]

நூலின் அமைப்பு

'மயிலம் ஸ்ரீ சுப்பிரமணியர் துதியமுது' எனும் இந்நூல் விநாயகர் காப்பு, விநாயகர் துதி, சிவபெருமான் துதி, உமைதுதி, திருமால் துதி, சரஸ்வதி துதி, அவையடக்கம், நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு, மயில மலைச்சிறப்பு, தலைவி தூது போக்கல், மனத்துக்கு இனிதுரைத்-தல்,தலைவி பாங்கியிடம் கூறல்,பாரத நாட்டின் விடுதலை வேண்டல், நெஞ்சுக்குறுதி கூறல், நெஞ்சுக்கு நீதி கூறல், தலைவி வண்டினைத் தூது போக்கல், நெஞ்சுக்குத் தெளிவு கூறல், வேல், மயில் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியுள்ளன. நூலின் தொடக்கத்திலுள்ள 'விநாயகர் காப்பு வெண்பா' என்பதனை எடுத்துக் காட்டாக இங்குக் கூறலாம்.

''சீர்மணக்குந் தென்மயில வெற்பிற் றிருமுருகன்
பேர்மணக்கும் பாட்டிற் பிழையகல-ஒர்மணக்கு
ளத்த னப்பன்நற்க ளிற்றிணைப்ப தத்தினைத்து திப்பன்
எத்த னப்படிக்கு வெற்றி யெற்கு''[5]

இசையமைப்பு

பாவேந்தர் இசையை நன்கு கற்றவர்; பல இசை நிகழ்ச்சிகளையும், பல கூத்து நாடகங்களையும் நடத்தியவர். இசையில் மிகுந்த நாட்டங்கொண்டிருந்த தன்மையால், இவர்தம் கவிதைகளில் இசையியல்புகள் நன்கு அமைந்திருப்பதைக் காணலாம். மயிலம் சுப்பிரமணியர் துதியமுது என்னும் இந்நூலில் நாட்டை, தேசிகம், சகானா,இந்துஸ்தான்காப்பி, தேசிகதோடி ஆனந்தபைரவி, சங்கரா பரணம், இந்துஸ்தான் பியாக், அடாணா, செஞ்சுருட்டி, உசேனி, அசாவேரி போன்ற இராகங்களும் ரூபகம், ஆதி, ஏகம், அடசாப்பு, சாப்பு போன்ற தாளங்களும் இடம் பெற்றிருக்கின்றன மேலும் பக்ஷிமிருக்க வேணும் மன்னனே. பாலசந்திர சேகரா தேவகி, மைந்தனான கண்ணனைத் தேடுவோம், மருவே செறித்த, தினந்துதிப்பாய் நெஞ்சே காவடிச்சிந்து, பாளை வாய்க்க முகில், ஐயா கணபதி யுன்றன் அடிமலர் துதி செய்தேனே, பாலாபிஷேகம், பழனி மலையப்பன், நன்னபியா ராமா, குமாரா குருபரா சிவனே ஆகிய மெட்டுகள் நூலின் சிறப்பிற்குக் காரணமாக அமைகின்றன. மெட்டுக்கும் தாளத்துக்கும் சிறப்பளித்தும், இயற்றுவதற்கு மிகக்கடினமானதுமான வண்ணம், சிந்து போன்ற இசைவடிவில் அமைத்திருப்பது பாவேந்தரின் தனிச்சிறப்பை எடுத்துக் காட்டுவதாகும்:

விநாயகர்துதி

வண்ணம்

இராகம்-நாட்டை தாளம்-ரூபகம்

உல குதி னமு னெழில் மல ரடி
உள மதி னினை குவ தெனி லவர்
உறு வினை எவை களு மிலை யென இனிதாமால்
உமையவள் தரு முதன் மக னுனை
உள மொழி மெய்க ளினி லடி யவன்
உவ கையொ டுதொ ழுகு வதை யினி மறவேனே

புரை தவிர் தெரு வரி சையொ டமர்
புனி தமொ ழிய சிவை யர்க ளுறை
புது வைவி லமர் கய முக முறு பெருமாளே ‘

நாட்டுச்சிறப்பு:-

நாட்டுச் சிறப்பு எனும் இப்பகுதியில் சீர்கொண்ட தென் மயிலாசல நாட்டின் மழைவளம், நதிவளம், வேளாண்மையின் வளம் போன்ற சிறப்புகளைப் பாவேந்தர் எடுத்துக் கூறுகின்றார்:

பதனிட்ட நிலமுற்றும் விதை நட்ட தயல் நட்டுக்
களை வெட்ட வருமாதர் மதியொத்த முகம்நாண
மறை மொட்டு விரிவெய்தலும்—அவர்
விழியொத்த கருநெய்தலும் - நத்தை
தருமுத்து நகை செய்தலும் - கண்டு
காலால் மிதித்தன் மேலே பகைத்தவர் போலே
எடுத்தரி வாளால் அறுத்தெறி

கரைசேர்ந்த களைகுலத்தில் வண்டு பண்பாட
எருவைத்து வரநித்தம் பிறையொத்து வளரப்பின்
கதிர்விட்டு முதிரத்தன் தலைநட்டு வளையக்கண்
டகமுற்ற மிகுமாசையால் - நிலம்
விளைவுற்ற தொகை பேசுவார் - அறு
வடைசெய்ய விடைசெய்குவார் — பின்னர்க்
குப்பல்செய் ததுமோதி நெற்பதர் கெடத்தூவிச்
சுப்பு ரத்தினம் ஓதும் நற்கவிப்
பொருள் போலும்
மலைபோல் நெல் வீடுவர இனிது நுகர் நாடே [7]

நகரச்சிறப்பு:-

கொட்டுமது சீதளக்கடப்பமலர் தோளுறத் தரித்த முருகோன் அமர்ந்த பிரசித்தி பெற்றது மயிலாசல நகர். விண்முகட்டினைத் தொடும் கட்டுமதிலும், அதனைச் சுற்றி ஆழமான அகழியும் பெற்று விளங்குவது மயிலாசல நகர்; மின்னுமணிக் கோபுரங்கள், அதிலுள்ள பொன்னுடைய நிகேதனங்கள்; விண்ணகரின் மாதர் தமை ஆடி அழைக்கும் இயல்புடையன வெள்ளிமலைபோல் உயரமுள்ள மாளிகையிற் புள்ளுலவு நேரமதில் அள்ளி மணியால் எறியும்; பிள்ளைகள் உலவும் அந்த வீதிகள் உடையது மயிலாசல நகர். [8]

மயிலமலைச்சிறப்பு:-

அறுபொரியின் வடிவாகி. அங்கையிலே பரை தந்த சக்தி வாங்கி அமரர் படுந்துயர் நீங்க வெற்றி ஓங்க, அசுரர் குலம் மூலம் தன்னை அடிகொண்டு களைந்த இளமைந்தன் ஆகிய முருகன் அமர்கின்ற மயிலமலை, அங்கண் ஞாலத்து வானவர் அங்கேயே நின்று கண்டு துதித்திட, திங்கள் சூடும் சிகரமும் நாற்றிசைச் சேருஞ் சாரலும் சீதளத் தூற்றலும் உடையது மயிலமலை;

திரிகின்ற புயல் வேழம் அரிகண்டு உடன் ஓடும்; சரிகின்ற மலையொன்று தரிகண்டு அங்கு அகம் வாடும்;

‘மல்லிகைப்புதர் வெண்ணகை யாடவும்
மாதுளங்கனி ஆனிலைபோர்த்தவும்
நல்லதென் றலணைந்திடக் கன்னிமாநாணி
மேனிச் சிலிர்த்துக் குலைந்திடும்
தளிருற்ற குரவஞ்சந் தனமற்றத் தருவுந் தம்
நறைகொட்ட நிறையுஞ்செங் கமலப் பொற்றடமுற்றும்’ ’

அரவுதரு மாணிக்கம், வரையின்ற வச்சிரம், ஒளிமிகு ரத்ந மணிமாலை, தொங்கும் வெள்ளருவி மாலைகள், எங்கும் புள்ளினத்து இன்னொலி, வேடர்செய் ஆட்டங்கள் பாட்டுகள் போன்றன நிறைந்தவை மயிலமலை

'சுப்புரத்தினம் கொற்றமிழ்ப்பா வாக்கில்
சூழ்த்தென் மயிலாசனமே நோக்கிச்
சுராதிபனை வாழ்த்தி நலம் துய்ப்பாதி சோபிதமே'[10]

என்று மயிலமலையில் வீற்றிருக்கும் முருகக் கடவுளையும் மயிலமலைச் சிறப்பினையும் இயற்கையெழில் தோன்ற பாடியுள்ளார் பாவேந்தர்.

தலைவி தூது போக்கல்:

மயிலமலையில் குடிகொண்டு விளங்கும் முருகப்பெருமானைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் பாவித்து—நாயகன்-நாயகியாகப் பாவித்துப் பாவேந்தர் மயிலமலை முருகனுக்குத் தூது அனுப்புவதாக இப்பாடலை அமைத்துள்ளார். தலைவியாகிய பாவேந்தர் முருகப்பெருமான் மீது உள்ள தன் ஆராக்காதலை வெளிப்படுத்துவதாக கீழ்வரும் பாடல் விளங்குகின்றது.

பல்லவி

வானவர் போற்றும் வேலவனிடம்
மாது நீ ஓதடி (வா)

அனுபல்லவி

மாமயில நன்மலையிற் சென்று வஞ்சி
என்னிலை தனை இன்று (வா)

சரணம்

நானவனுக்கும் அவனெனக்குங் கட
னாவதென உண்டு-சாசனம்-அதற்
கேனில்லை இன்னும் விமோசனம்-என (வா)

தாளமுடிவதில்லை முருகன் மேல்
தையலெனக்குள்ள காதலை-என
வேளின் கணைபட்டுச் சாதலை-அந்த'[11] (வா)

தலைவி தன் மனதுக்கு இனிதுரைத்தல் ;

தலைவி தன் தலைவனாகிய மயிலமலை முருகப்பெருமானின் பெருமைகளைத் தன் மனத்தில் எண்ணி எண்ணி, நினைந்து நினைந்து இன்புறுவதாக பாவேந்தர் தலைவியின் அன்புள்ளத்தை எடுத்துக்காட்டுகின்றார்

''மணியும் துகில் சுரியும் பரியும் சுவையும் புவியிங்
கெவையும் நினையுன் கூட வராவாம்
வளமிக் குளநற் களியும் இளமைப் பருவப் பயனும்
வளர்சுட் டுடல்மட் சுலமும் வீடுதராவாம்
போதன் தனை ஓதுஞ்சிறை போகும்படி ஏவுங்குரு
நாதன் வடி வேலன்புகழ் பாடுநெஞ்சே!
பொய்ப் பகட்டை விட்டுச்சுப்பு ரத்தினந்த
னற்றமிழ்ப்பண் செப்பியப்பன் மெய்ப்பதத்தைத் தேடுநெஞ்சே!''[12]

தலைவி பாங்கியிடம் கூறல்:

தலைவி தன் தலைவனாகிய முருகப்பெருமான் வாராமை கண்டும், வந்து நல்லின்பம் தாராமை கண்டும் மனம் வெதும்பி, தன் பாங்கியிடம் கூறுகின்றாள்:

நோய்கள் அச்சம் போன்றவைகள் அகல வேண்டும் எனவும் கனகசுப்புரத்தினம் மயிலாசல முருகப்பெருமானிடம் வேண்டுகிறார்.

''வீழ்தலும் யாம் வாழ்தலுமே வேலவா உன் கையி லுண்டு
வீணில் நாங்கள் பட்டதெல்லாம் சொல்லவோ-நின்பால்
வேண்டி நிற்ப தெல்லாம் இன்ப மல்லவோ-இந்த
ஆழ்கடல் புவிமே லெமக்கினி
தான பாரத பூமியை நீ
அட்ட திக்கும் போற்றும் வண்ணம் ஆக்குவாய்-வானில்
எட்டவே உரிமைக்கொடி தூக்குவாய்
பாழ்படச்செய் தாரிந்நாட்டை ஊழ்வினைதானோ அறியேம்
பாரதத்தார் கொத்தடிமை ஆயினார் - சிலர்
பசி தொலைக்க வேறு தேசம் போயினார் - அந்தோ'' [16]

''வறுமை நோய்கள் அச்ச முதலாம்
வழிமறிக்கு மிக்கலி தவிர்த்தினி
வர விடாதே எமது நாட்டிற் கெடுதலை – ஈக
வாழ்க்கையில் நல் வாழ்க்கையாகும் விடுதலை ''[17]

நிலையாமை :

நிலையாமையை மூன்று வகையாகக் கூறுவது சமய மரபு : யாக்கை நிலையாமை இளமை நிலையாமை, செல்வம நிலையாமை என்பன அவை.

''காஞ்சிதானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்றானும்
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே'' [18]

என்று தொல்காப்பிய நூற்பா குறிப்பால் உணர்த்தும் வனிதையர் தரும் சுகம் பெரிதா ? தினம் அடியாரை அடைவது பெரியதா ? கனமையில் தன்னில் அழுந்துதல் சுகமா ? கலை கொண்ட விவேகம் அதைத் தொலையப்புரிவது சுகமா ? மகளிர் ஊட வருந்துதல் இனிதோ மயிலவன் சுழல் வாழ்த்தல் இனிதோ ? தொகைப் பொருள் நிலம் உடன் வருமோ? தூய்மைப் படவே செய்யும் ஒரு நற்றவமே வருமோ ? என்று வினாக்கள் எழுப்பி 'கந்தன் சிந்தனையே' நிலைத்த புகழ் உடையது ' [19] என்று கனகசுப்புரத்தினம் தரும் நிலையாமை கருத்து சிந்தனைக்குரியது.

கருவறைத் துன்பம் கூறுதல் :

பட்டினத்தடிகள், திருவிடைமருதூர் மும்மணிக் கோவை எனும் நூலில் கருவறைத் துன்பத்தை - இவ்வுலகத் துன்பத்தை எடுத்துக் கூறுவர்.

கொடிய பாவங்கள் இழுத்துசெல் கருப்பாசயம் என்னும் இருள் நிறைந்த சிறையின் அறையில் குடல் என்னும் சங்கிலி பூட்டப்பட்டு, புழுக்கூட்டாகிய உடலின் மலத்தில் அழுந்தி வருந்தி நெடுநாளாகக் கிடந்து வருகின்றேன். பலவகை நோய்கள் தொல்லை தருகின்றன. உதர நெருப்பில் பதைபதைத்தும் வா த ம் எனும் சவுக்கால் மொத்துண்டும், கிடக்கவும், நிற்கவும் நடக்கவும் இயலாமல் இடம் குறைந்த வாயில் முடங்கியும், பாவப்பகுதியில் தள்ளியும் காவற் கொடியேரர் ஐவரை ஏவியும், ஆசை எனும் விலங்கினால் கட்டுண்டும் கிடக்கின்றேன். வீடு நெறி காணேன் ; இச்சிறையிலிருந்து தப்பித்து இனி ஒரு சிறையிலும் புகாதபடி காத்து அருள்செய்ய வேண்டும்'' [20] என்று பட்டினத்தார் இறைவன்பால் வேண்டுகின்றார்.

கனக சுப்புரத்தினம் மயிலாசல முருகப்பெருமானிடம் கருவறைத் துன்பத்தை-இவ்வுலகத் துன்பத்தை நீக்கி மெய்ப்பதந்தருதல் வேண்டும் என்று வேண்டுகின்றார்.

''உளமொத்த ஒருவனிடம் ஒருத்தி போகம்
விளைவித்த விந்துசுரோ ணிதமேற் பாயக்
களிமொய்க்க அவள் வயிற்றில் கருநிறைந்து
வளர்பத்து மாதத்தில் மதலையாகி''[21]

என்றும்

''குருவையடைந் துயர்கலைகள் கற்றுத் தக்க
பருவமுறு மங்கையர்கள் மோகம் கொள்ளும்
உருவமொடு திருவனையாள் தனைமணந்து
மருவிடுசு கோததியில் ஆழ்ந்து பின்பு''[22]

என்றும்

''வாலிபம்போய் வலிவெலாம்போய் நரைமிகுத்துக்
காலிருந்த இடநோக்கித் தலையும் சாய
மூலைவிட்டு நகர்வதெனில் முனைந்துகையிற்
கோலையெடுத் தூன்றநடை கோணி வீழ்''[23]

என்றும்

''காச்சற்றும் நிலை நிற்க மாட்டாது நனிகுழறப்
பேச்சற்று விழியினிலே ஒளியற்றுப் பிரக்ஞையடுறுப்
போச்சுதுயிர் என உற்றார் பிடிப்பற்று வாடுமுடல்
மூச்சற்றுப் போகுமுன்னே இவ்வேழை மகனுக்கு''[24]

அருளும் மெய்ப்பதமும் தருதல் வேண்டும் என கனகசுப்புரத்தினம் கந்தனிடம் இறைஞ்சுகின்றார்.

வேலும் மயிலும்:

திருமுருகாற்றுப்படை, ஈட்டி எழுபது, கந்தபுராணம் போன்ற இலக்கியங்கள் வேலின் பெருமையையும் மயிலின் பெருமையையும் எழில்பட எடுத்துக்கூறும்.

''தருமங் குன்றுந் தருணங் கண்டன் றே நே ரே
தவிரென் கந்தன் பகைகண் டஞ்சும் கூர் வேல் வேல்
மறையென் குங்கஞ் சமுகந் தங்கும் தூ யோர் வாழ்
மயிலந் தங்கும் சுரர்தம் பங்கம் தீர் வே லே''[25]
''குகனேறும் மாமயிலே-ஷண்
முகனேறும் மாமயிலே
குளிர்வா னிடையே குவிதா ரகைபோ
லொளிர் தோ கையிலே சுடர்கா சுக ளார்
இறகின் விரிவிங் ககிலம் சுகனம்
பிறவும் புகஅங் கிடமின் றெனுமெனு''[26]

என்று கனகசுப்புரத்தினம் அழகுபட வேலின் சிறப்பினையும், மயிலின் பெருமையினையும் எடுத்துக்காட்டியுள்ளதை இந்நூலில் காணலாம்.

புராணச் செய்திகள் :

திரிபுரம் எரித்தல் :

வான் உலகில் மூன்று அரண்களை அமைத்து, அதனை மூன்று சிறந்த அசுரர்கள் ஆண்டு வந்தனர்; அசுரர்களால் தேவர்களுக்கு இன்னல் நேர, தேவர்கள் எல்லாம் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். சிவபெருமான் தேவர்களால் அமைத்துக்கொடுத்த தேரின் மீது ஏறிச் சென்று 'திரிபுரத்தை' அழித்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. சம்பந்தர், அப்பர், சுந்தரர் முறையே இந்நிகழ்ச்சியைத் தேவாரத்தில் குறித்துள்ளனர்.

''அடையார்தம் அரண்மூன்றும் சீரின்
மல்குமலையே சிலையாக முனிந்தான்'' [27]

''ஒட்டாத வாளவுணர் புரமூன்றும்
ஓரம்பின் வாயின் வீழ்க்கட்டானை ஐயம்'' [28]

''எண்ணார் புரம்மூன்றும் எரியுண்ண
நகை செய்தாய்'' [29]

கனக சுப்புரத்தினம், திரிபுரம் அழிந்த புராண நிகழ்ச்சியைக் கீழ்வருமாறு குறிப்பிடுவார்.

''அமரர்தம் பகைகெடும் திரிபுரம் பொரிபடுப்
பரமனம் பகம்விரிந் தாலே'' [30]

''சுடுமணற்பொரி யறுமுகனைத்
திரிபுரமெரித்தவன்............'' [31]

மேலும், பொதிகையில் அமர்குறுமுனிவனுக்கு இனிது அருள் செய்தல், கீரன் துயர் நீக்குதல், சூரபத்மனை அழித்தல், சதுர்முகத்தனைத் தோற்கடித்தல், அரவிந்தனை வெற்றிக் கொள்ளுதல், கிரவுஞ்சனை அழித்தல் போன்ற புராணச் செய்திகளை எடுத்து காட்டியுள்ளார் கனகசுப்புரத்தினம்.

கடைக்காப்பு தரும் குறிப்பு:-

சம்பந்தர் தேவாரத் திருப்பதிகங்களில் கடைக்காப்புதனில் தம்பெயரை இணைத்துக் கூறுவர்; மேலும் பாடலை ஓதினால் ஏற்படும் பயனையும் தருவர்.

''ஒருநெறிய மனம் வைத்து உணர்
ஞானசம்பந்தன் உரை செய்த
திருநெறிய தமிழ் வல்லவர்
தொல்வினை தீர்தர் எளிதாமே'' [32]

கனகசுப்புரத்தினம், இந்நூலில் கடைக்காப்பு வரியில் நம் பெயரைக் குறிப்பர்; பாடலினால் வினையும் பயனையும் எடுத்து உரைப்பர்:

''பொய்த்த ஒருசூரர்குலம்
அத்தனைஒ ரேநொடிவி
டுத்துநிரு மூலமிடு
சுப்புரத்தி னம்புகலும்'' [33]

கந்தன்படைச் செங்குந்தர்:-

வீரவாகு வழித்தோன்றல்கள் செங்குந்தர்கள்; சரவணபவ ஓம் எனச் சாற்றினால் நாத்-
புறம்பகையை நொறுக்கிடலாம்; மயிலாசல முருகன் அருளுண்டு; கந்தன் படைச்
செங்குந்தர்களாய்த் துயர் ஒழித்து எழுவோம்; இனிமேல் பயமில்லை; செங்குந்தர் குலம்
உய்யும் என்று கனகசுப்புரத்தினம் செங்குந்தர்களுக்கு வீரவுணர்வினை ஊட்டுகின்றார்:

''கையில் அவனருள் உண்டு கண்டாய்
கந்தன் படைச் செங்குந்தர் களாய்த்
துயர் ஒழித் தெழுவோ மினிமேல்
பயமிலை குலம் உய்யும் உய்யும் உய்யும்'' [34]

நிறைவுரை;-

பாவேந்தர் பாரதிதாசன் கடவுப்பாடல் பாடியுள்ளாரா? கேட்போரின் விற்புருவங்கள் விரியும். ஆம்! பாவேந்தர் முன்னாளில் - 1928 ஆம் ஆண்டுவரை அடியார்க்கு அடியாராக- தொண்டர்க்குத் தொண்டராக - மயிலாசலத்து முருகப்பெருமானின் அன்பராக - அடியாராக விளங்கினார் என்பது மயிலம் ஸ்ரீ சுப்பிரமணியர் துதியமுது மூலம் அறியமுடிகின்றது. முருகப்பெருமானின் பெருமைகளையும், செங்குந்தர்களின் மாண்பினை எடுத்துக்கூறும் நூல்களில் இதுவும் ஒன்றாகும்.

குறிப்புகள்:

1 பாரதிதாசன் குயில் 10–11–67 ப. 14
2 மேற்படி ப. 11
3 கனக சுப்புரத்தினம் (பாரதிதாசன்)
மயிலம் சுப்பிரமணியர் துதியமுது. மூன்றாம் பதிப்பு
1989 புதுச்சேரி ப. 41
4 மேற்படி ப. 25
5 மேற்படி ப. 5
6 மேற்படி ப. 6
7 மேற்படி ப. 15, 16
8 மேற்படி ப. 17
9 மேற்படி ப. 19
10 மேற்படி ப. 20, 21
11 மேற்படி ப. 24
12 மேற்படி ப. 27
13 மேற்படி ப. 31
14 மேற்படி ப. 35
15 மேற்படி ப. 38
16 மேற்படி ப. 32
17 மேற்படி ப. 33
18 தொல்காப்பியம் நூற்பா (3. 76)
19 கனக சுப்புரத்தினம் (பாரதிதாசன்)
மயிலம் சுப்பிரமணியர் துதியமுது ப. 44
20 மெய்யப்பன், ச. பட்டினத்தார் பாடல்கள்
மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம் 1982 ப. 61

21 கனக சுப்புரத்தினம் (பாரதிதாசன்)
மயிலம் சுப்பிரமணியர் துதியமுது ப. 46

22 மேற்தடி ப. 46

23 மேற்படி ப. 47

24 மேற்படி ப. 48

25 மேற்படி ப. 50

26 மேற்படி ப. 51

27 தேவாரம் பதிகம் 2 பாடல் 4

28 மேற்படி பதிகம் 4 பாடல் 50

29 மேற்படி பதிகம் 7 பாடல் 16

30 கனக சுப்புரத்தினம் (பாரதிதாசன்)
மயிலம் சுப்பிரமணியர் துதியமுது ப. 8

31 மேற்படி ப. 35

32 தேவாரம் பதிகம் 1 பாடல் 11

33 கனக சுப்புரத்தினம் (பாரதிதாசன்)
மயிலம் சுப்பிரமணியர் துதியமுது ப. 50

34 மேற்படி ப. 36

கொங்குநாட்டில் கைக்கோளர்களும் செங்குந்தர்களும்

பேராசிரியர் டாக்டர் மா. கணேசன் M. A. Ph. D.
அவிநாசி

பல்லவர்கள் காஞ்சி மாநகரைத் தலைமை இடமாகக் கொண்டு தொண்டை நாட்டை ஆண்டனர். 'தொண்டை நாடு சான்றோர் உடைத்து' எனக் குறிக்கப் பெறுபவர் கைக்கோள செங்குந்தப் பெருந்தனமக்களே ஆவர். காஞ்சி மாநகரில் மிகப்பழங்காலத்திலிருந்து இன்று வரை இக்குடிமக்கள் செல்வாக்குடன் வாழ்கின்றனர்.

செங்குந்தர்களும் கைக்கோளர்களும் வீரமரபினர்; ஆட்சியில் பொறுப்பில் இருந்து நாடாண்ட பெருமைக்குரியர். பிற்காலச் சோழர் ஆட்சி தமிழகம் முழுதுச் கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் பரவியது. செங்குந்த கைக்கோளப் பெருமக்களும் சோழர் காலத்தில் தமிழகம் முழுவதும் பரவினர். இன்றும் அனைத்து மாவட்டங்களிலும் குறிப்பிடத்தக்க அளவு இக்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். சோழ அரசர்களின் படைகளில் செங்குந்தப்படை, தெரிந்த கைக்கோளப்படை ஆகிய இரு பிரிவுகள் பிரிவுகள் செல்வாக்குடன் விளங்கினர். சோழர் ஆட்சி வலிமையான ஆட்சியாகத் திகழ்ந்தமைக்கு இப்படைகளின் வலிமையே காரணம், என்பதனைக் கல்வெட்டுச் செய்திகள் உறுதிப்படுத்துகின்றனர்.

சோழப் பேரரசின் குடைநிழலில் 9 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கொங்கு நாடு செழித்தது. அவவேளையில் கொங்கு நாட்டில் செங்குந்தர்களும் கைக்கோளர்களும் வந்து குடியேறிய செய்திகளைச் சோழன் 'சோழன் பூர்வ பட்டயம்' தெளிவு படுத்துகிறது. சில கற்பனைச் செய்திகள் இருப்பினும் இந்நூல் வரலாற்றின் அடிப்படை உண்மைகளை விளக்காமலில்லை.

கொங்கு நாடு காடு மண்டிக் கிடந்த காலத்தில் அதனை வளநாடாக மாற்றும் அரிய செயலைச் சோழர்களே செய்தனர். இந்நாட்டில் புதுப்புது ஊர்கள் தோன்றின, கச்சிவீரப் முதலி என்பவனே கொங்கு நாட்டில் பல்வேறு குடிமக்களைச் சோழ நாட்டிலிருந்தும் தொண்டை நாட்டிலிருந்தும் கொண்டுவந்து குடியேற்றினான். இவ்வாறு குடியேறிய வேளாளர், வளஞ்சியர் செட்டிமார்கள் பிற குடிமக்கள் அனைவருக்கும் கைக்கோளத் தலைவனே நாட்டாண்மை பெற்றான். இந்நாட்டில் வேட்டுவர்களைத் தவிர பிற குடிமக்கள் அனைவரும் வந்தேறிகளே, வேளாளர், செங்குந்தர் உட்பட

நாட்டாண்மைத் தலைமை ஏற்ற கைக்கோளர் 13 ஆம் நூற்றாண்டில் அரச அதிகாரிகளாகவும் விளங்கினர். இத்தலைமையை அவர்கள் வீரத்தால் இரத்தம் சிந்திப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காசுவகைகளை அச்சிட்ட இடம் அக்கசாலை எனப்பட்டது. அங்கிருந்த அதிகாரிகள் வீரராசேந்திரன் காலத்தில் 'அக்கசாலைகளோம்' எனத் தங்களைக் குறித்ததாகச் சேவூர்க் கல்வெட்டால் அறியலாம். இவ்வதிகாரிகள் ஆட்சி அதிகாரம் செலுத்திய கைக்கோளர்களே ஆவர்.

திருமுருகன் பூண்டிக் கல்வெட்டில் மூத்த சமக்கட்டு இளைய சமக்கட்டு என்ற இரு படைப் பொறுப்புகளில் செங்குந்தர்களும் கைக்கோளர்களும் இருந்தனர் என்ற செய்தி காணப் படுகிறது. அன்னூர் எனவழங்கும் 'மன்னியூரைக்' கொங்கு சோழர்காலத்தில் மேற்றலைத் தஞ்சாவூரான மன்னியூர்' என அக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

கோயில்களுக்கு நிலங்களையும் பொன்னையும் கைக்கோளப் படையினர் தானமாக வழங்கினர் என்று பேரூர், அன்னூர், திருமுருகப்பூண்டி, கரூர் ஆகிய ஊர்களிலுள்ள கல் வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

கைக்கோளர்களின் இன்றியமையாமை கருதிச் சோழர்கள் அவர்கட்குச் சில சிறப்பு உரிமைகள் வழங்கினர். வீடுகளுக்குச் சாந்திட்டுக் கொள்ளவும், இரட்டைத்தலைவாசல்வைத்து வீடுகட்டிக் கொள்ளவும், யானை, குதிரை பல்லக்கு ஏறி வரவும், நன்மை தீமைகளுக்குச் சங்கு ஊதவும், சேகண்டிகொட்டவும் சிறப்பு உரிமைகள் வழங்கப் பெற்றனர்.

கொங்கு நாட்டில் இவர்கள் இடங்கைச் சமூகமாகக் கருதப்பெற்றனர் எனச் சாசனங்கள் கூறுகின்றன. கைக்கோளர் செலுத்திவந்த 'சூளைத்திறை' என்ற வரியை நஞ்சராய உடை யார் நீக்கினார் எனச் சேவூர்க் கல்வெட்டுக் கூறுகின்றது.

கல்வெட்டுச் செய்திகளைச் சுருக்கமாகச்சொன்னால் கைக்கோளர்களும் செங்குந்தர் களும் சோழர்காலத்தில் கொங்கு நாட்டில் குடியேறியவர்கள் என்பதும், அவர்கள் படைகளி லும் ஆட்சிப்பொறுப்பிலும் இருந்தனர் என்பதும் இடங்கைச் சாதியாராகக் கருதப்பட்டனர் என்பதும் மன்னர்களால் பல சிறப்பான உரிமை வழங்கப் பெற்றனர் என்பதும் அறியத் தக்க னவாகும். கொங்குநாட்டில் குடியேறிய செங்குந்தர் கைக்கோளர் பற்றிய செய்திகள் கற்பனை யன்று; நீண்ட வரலாற்றின் உண்மைகளே ஆகும்.

இன்னும் இன்னும் பலப்பல செய்திகள்:



பெரியார் மாவட்ட செங்குந்தர் மாநாடு
சிறப்படைய எனது உளங்கனிந்த
நல்வாழ்த்துக்கள்.





V. பாலகிருஷ்ணன்,
D-1, காவேரி ரோடு,
வீரப்பன் சத்திரம்,
ஈரோடு - 4.



மாவட்ட முதல் மாநாடு
மங்காப் புகழ்பெற வாழ்த்துகிறோம்.

சீதா லக்ஷ்மி மெடிக்கல்ஸ்,
சிவசக்தி மெடிக்கல்ஸ்,
ஓம் சக்தி மெடிக்கல்ஸ்.
கோபி செட்டிபாளையம்

(24 மணி நேரமும் குறைந்த விலையில்
அனைத்து மருந்துகளும் கிடைக்கும்)

பெரியார் மாவட்ட செங்குந்தர் மகாசன சங்க
மாநாடு சிறப்படைய வாழ்த்துகின்றோம்

N. சண்முகவேலன், M.SC,.M.B.A, D.L.L.,
Lecturer,
B. B. M. Department,
Erode Arts College,
Erode-9



''செங்குந்தர் சங்கம் செழுமை
பெறச் சிறியோன் செங்கணானின்
தாள் பணிந்து செப்பு தமிழால்
வாழ்த்துகிறேன்

இவண்

ஆ. பாலதண்டபாணி

பேராசிரியர்

ஈரோடு கலைககல்லூரி
ஈரோடு-9



''பெரியார் மாவட்டச் செங்குந்தர்
முதல் மாநாடு சிறப்புற நடைபெற
வாழ்த்துக்கள்''



ஆர். பரமசிவம்

பேராசிரியர், பொருளியல்துறை,
ஈரோடு கலைக்கல்லூரி,
ஈரோடு-9



மாநாடு சிறப்புற எங்களது உளங்கனிந்த
நல்வாழ்த்துக்கள்!

Phone: Off : 76188
72894
Resi : 76088

"முரளி குரூப்ஸ்"

முரளி டெக்ஸ்,
நூல் & ஜவுளி வியாபாரம்,
34, ஈஸ்வரன் கோவில் வீதி,
ஈரோடு.

ஸ்ரீதர் டெக்ஸ்,
நூல் & ஜவுளி வியாபாரம்,
34, ஈஸ்வரன் கோவில் வீதி,
ஈரோடு.

ஸ்ரீ விஷ்ணு டெக்ஸ்,
நூல் & ஜவுளி வியாபாரம்,
11-A, மேற்கு அனுமந்தராயன் கோவில் வீதி,
ஈரோடு.

ஸ்ரீ கோகுல் டெக்ஸ்,
நூல் & ஜவுளி வியாபாரம்,
வெங்கடாசலம் செட்டி வீதி,
ஈரோடு.



மாநாடு சிறப்புற எங்களது உளங்கனிந்த
நல்வாழ்த்துக்கள்!



Phone: 73425
76515

ஸ்ரீ கணபதி ஸ்டோர்ஸ்
சுப்ரமணியம் ஜவுளி ஸ்டோர்ஸ்

காட்டன் மற்றும் பாலியஸ்டர் லுங்கி
உற்பத்தியாளர்கள்

6, வெங்கடாசலம் வீதி, ஈரோடு - 638 001.

உரிமையாளர்கள்: S. துரைசாமி, S. ஜெயபிரகாஷ்



‘‘செங்குந்தர் சங்கம் செழுமை
பெறச் சிறியோன் செங்கணானின்
தாள் பணிந்து செப்பு தமிழால்
வாழ்த்துகிறேன்



இவண்

S. செந்தாமரைகண்ணன்

B.PE.,M.P.Ed.,
ஈரோடு தொழில் நுட்பக் கல்லூரி
கவுந்தப்பாடி.

‘‘பெரியார் மாவட்டச் செங்குந்தர்
முதல் மாநாடு சிறப்புற நடைபெற
வாழ்த்துக்கள்’’





S. சம்பத், B.Tech.,
இணை விரிவுரையாளர்
ஈரோடு தொழில் நுட்பக் கல்லூரி,
கவுந்தப்பாடி-538 455.

வாழ்த்துக்கள்



K. ராமமூர்த்தி, D.T. Tech.,
ஈரோடு தொழில் நுட்பக் கல்லூரி,
கவுந்தப்பாடி-638 455

பெரியார் மாவட்ட செங்குந்தர் மகாசன சங்க
மாநாடு சிறப்படைய வாழ்த்துகின்றேன்



K. R. கந்தசாமி, M.Sc., M.Ed., M.I.S.T.E.,
ஈரோடு தொழில் நுட்பக்கல்லூரி,
கவுந்தப்பாடி-638 455.

பெரியார் மாவட்ட செங்குந்தர்
முதல் மாநாடு சிறப்புடன் நடைபெற வாழ்த்துக்கள்



A. இளங்கோவன்,
M.A., B.Sc., B.L.I.Sc
(நூலகர், ஈ. தொ. நு. கல்லூரி
கவுந்தப்பாடி)
கந்தம்பாளையம்-அ.நி., 637 203
சேலம் மாவட்டம்

பெரியார் மாவட்ட செங்குந்தர் முதல்
மாநாடு சிறப்புடன் நடைபெற
வாழ்த்துக்கள்.



E.A. மாதேஸ்வரன்
D.T. Tech., MISTE,
ஈரோடு தொழில் நுட்பக்கல்லூரி
கவுந்தப்பாடி-638 455

பெரியார் மாவட்டச் செங்குந்தர் முதல் மாநாடு சீரோடும், சிறப்போடும் நடைபெற எங்களின் இனிய நல்வாழ்த்துக்கள்



திரு. து. மணிவண்ணன் M.Sc., M. Phil.,

திருமதி. கீதாமணிவண்ணன் M.Sc., M.Phil,

ம. மலர்வண்ணன்

43A/21A, மூலப்பாளையம்,
ஈரோடு-2

பெரியார் மாவட்ட செங்குந்தர்
முதல் மாநாடு சிறப்புடன்
நடைபெற நல்வாழ்த்துக்கள்





சி. லோகநாதன், M.Sc., M.Phil.,

திருமதி. P. கற்பகம், M.A.,(His)., M.A., (Eco)., M.Ed.,

L. பிரபு, L. வித்யா,

11. மாதவி வீதி, E.B. காலனி,
ஈரோடு

பெரியார் மாவட்டச் செங்குந்தர் மகாசன சங்க
மாவட்ட முதல் மாநாடு சீரும் சிறப்பும் பெற்று
இனிதே நடைபெற மனமார்ந்த
நல்வாழ்த்துக்கள்.



சி. கணபதி செங்குந்நர்,
L. B. P. லஸ்கர்,
கடத்தூர்,
கோபிசெட்டிபாளையம்.

பெரியார் மாவட்டச் செங்குந்தர் மகாசன சங்க
மாவட்ட முதல் மாநாடு சிறப்புடன் நடைபெற
எங்கள் நல் வாழ்த்துக்கள்.



N. பசுபதி,
விரிவுரையாளர்,
மின்னணுவியல் துறை,
ஈரோடு கலைக்கல்லூரி, ஈரோடு.

P. நடராஜன்,
ஸ்ரீ சக்தி டெக்ஸ்.
77, ஆலமரத் தெரு,
கரூர் - 539 001.

மாநாடு வெற்றிபெற எங்கள்
நல்வாழ்த்துக்கள்



K. R. கந்தசாமி

E. I. T. கவுந்தப்பாடி

சிறப்புமிகு மாநாட்டிற்கு
நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்



K. ராமமூர்த்தி

E. I. T. கவுந்தப்பாடி

பெரியார் மாவட்டச் செங்குந்தர் முதல் மாநாடு
சிறப்புற நடைபெற எங்களது மனங்கனிந்த
நல் வாழ்த்துக்கள்!





உயர்தரமான பட்டு சேலைகளுக்கு

முத்து சில்க் ஹவுஸ்

பாண்டிச்சேரி - 1.

போன் : 23541
24363

நல் வாழ்த்துக்கள்!





போன் : 0413 - 25417

உயர்தர திருமண பட்டு புடவைக்கு

V. S. T. A/C

165, தியாகு முதலியார் வீதி,

பாண்டிச்சேரி.

Swastik Marketing Agencies
Swastik Panneer Bros
Swastik Enterprises
Textile Agencies

Lion. Swastik MANICKAM
Swastik PANNEER
Swastik SENTHIL
Swastik SANKAR

23, Madhavakribna street,
Erode - 638 001
Phone: Erode 70410



Branch: 90, SOUTH MASI STREET,
Pramitra Building,
MADURAI-625 001
Phone: 27328

பெரியார் மாவட்டச் செங்குந்தர்
முதல் மாநாடு வெற்றி பெற
நல்வாழ்த்துக்கள்.

டாக்டர் மா. அண்ணாதுரை

எம். ஏ., பி. லிப். எசி, பி. எட், பிஎச். டி.,

நூலகர், ஈரோடு கலைக்கல்லூரி

எழுதிய நூல்கள்:

1. பாவேந்தர் படைப்பும் வாழ்க்கையும்
2. பாவேந்தரில் அகமும் புறமும்
3. பாரதிதாசனின் இதழ்ப்பணிகள்-
(பிஎச், டி பட்ட ஆய்வுரை)



நூல்கள் கிடைக்குமிடம்:

பூங்கொடி வெளியீடு,
POONGODI PUBLICATION
கார்த்திக் இல்லம்
40P/12 பாரதி நகர்
மூலப்பாளையம், ஈரோடு-638 002.

பெரியார் மாவட்டச் செங்குந்தர் மகாசன சங்க மாவட்ட முதல் மாநாடு சீரும் சிறப்பும் பெற்று இனிதே நடைபெற மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.



அன்புடன்,

தலைவர், மற்றும் உறுப்பினர்கள்,
செங்குந்த மகாஜன சங்கம்,
அவிநாசி (கிளை)

நம் இனம் மானம் காத்திடவும், நம் உரிமைகள் பெற்றிடவும்
மாநாடு வெற்றியடையவும் வாழ்த்தும்



ஸ்ரீ காமாட்சியம்மன்

இளைஞர் நற்பணி மன்றம்

மற்றும்

Balu Chinnu Kalees Travels

33-புதிய ஆஸ்பத்திரி வீதி,
கோபிசெட்டிபாளையம்-638 452.

பெரியார் மாவட்ட செங்குந்தர்குல
மாநாடு சிறப்புற வாழ்த்தும்

லக்ஷ்மி ஜெராக்ஸ்

கவுந்தப்பாடி



பெரியார் மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்க முதல் மாவட்ட
மாநாடும் சீரோடும், சிறப்போடும் நடைபெற
ஏங்கள் நல் வாழ்த்துக்கள்

பழ. சிவசுப்பிரமணியன்

விரிவுரையாளர்
வணிகவியல் துறை
ஈரோடு கலைக்கல்லூரி

திரு. பழ. குணசேகரன்

தமிழ்நாடு காதி வஸ்திராலயம்
வெளிப்பாளையம்
புதிய பஸ்நிலையம்
நாகப்பட்டினம்

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!!

செங்குந்தர் குலம் தழைக்க
செங்குந்த மாநாடு சிறக்க

இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

பேரா. **M. R.** தாண்டவன், M.A.B.T. M Phil.

ஈரோடு கலைக்கல்லூரி,
காமேட்டுப்பாளையம், அஞ்சல்,
கவுந்தப்பாடி-வழி.

பெரியார் மாவட்ட செங்குந்தர்
மகாநாடு சிறப்புடன் நடைபெற
நல்வாழ்த்துக்கள்!



மு. சண்முகம்,
கணிதத்துறை,
ஈரோடு கலைக்கல்லூரி, ஈரோடு.

"பல் தொழில் சிறப்படைய,
பல் வேறு வேலை வாய்ப்புக்கள்
பெருகிடும் வகையில்
செங்குந்தர் மாநாடு அமைய
எங்கள் நல் வாழ்த்துக்கள்"



M. சந்திரசேகரன், M. Sc., M. Phil.,
திருமதி. C. கண்ணகி, B. A.
செல்வி C. சத்யா,
40-P / 14-B, பாரதி நகர்,
மூலப்பாளையம், ஈரோடு - 2.

வாழ்க !   வளர்க செங்குந்தம் !



எங்கள் நல் வாழ்த்துக்கள்



A. கோபால்சாமி & பிரதர்ஸ்,
ஸ்ரீ கந்தன் இண்டஸ்டிரியல்ஸ்
ஜமக்காளம் தயாரிப்பாளர்
பவானி—638 301
(வழி) ஈரோடு, பெரியார் மாவட்டம்.

பெரியார் மாவட்ட செங்குந்தர் முதல் மாநாடு சிறப்புடன் நடைபெற வாழ்த்துக்கள்





டாக்டர். சக்குபாய் பில்டிங்,
12 & 12 A. இரண்டாவது அக்ரஹாரம்.
சேலம்-636 001.

மாவட்ட முதல் மாநாடு வெற்றிபெற

உளமார வாழ்த்துகிறேன்

ஆ. ஜெகந்நாதன்,
தலைமை ஆசிரியர்,
அருள்நெறித் திருப்பணி மன்றம்
ஆரம்பப் பள்ளி, ஈரோடு-3.

உ
ஓம் சிவமயம்

நல் வாழ்த்துக்கள்!

தரமான கைத்தறி ஜமக்காளம் &

பெட்ஷீட் தயாரிப்பாளர்கள்

✆ 2176 தந்தி: PERFECT

விசாலாட்சி கார்பெட் ஒர்க்ஸ்,

"விசாலாட்சி இல்லம்"
25, பழனிபுரம்,
தபால் பெட்டி எண்: 33,
பவானி - 638 302.
பெரியார் மாவட்டம்.



வாழ்க சமுதாயம் ! வளர்க செங்குந்தம் !



வாழ்வினில்
நலம் சிறக்க !
வளம் பெருக !
எழுச்சி காட்டும் பேரணியும்
உணர்ச்சி ஊட்டும் மாநாடும்
நாளை நம் வளர்ச்சி காட்ட
நடைபெற்று
நலமாய்ச்சிறக்க வாழ்த்துகிறோம்.


இவண்,

டாக்டர். மே. அ. பாலமுருகன், எம். ஏ., பி எச் டி.,
திருமதி. பா. சண்முகவடிவு,
செல்வன். பா. செந்தில்குமார்:
செல்வி. பா. பரிமளாதேவி.

செங்குந்தா ஒற்றுமையாய் செயல்படு ! வாழ்வில் உயர்வடைவாய் !!

★

நல் வாழ்த்துக்கள்



A. R. பழனியப்பன்,
இடைநிலையாசிரியர்,
அருள்நெறித் திருப்பணி மன்றம் மேனிலைப் பள்ளி
ஈரோடு-3

செங்குந்தா வீறு கொண்டெழு!
வெற்றி பெறு!
பெரியார் மாவட்டச் செங்குந்தர் முதல் மாநாடு சீரோடும், சிறப்போடும் நடைபெற எங்களின் இனிய நல்வாழ்த்துக்கள்

T. கோபாலன்
அருள்நெறித் திருப்பணி மன்றம்
ஆரம்பப் பள்ளி ஈரோடு.



நல் வாழ்த்துக்கள்



A. சிவக்குமார், B. Sc., M. Ed.,
பட்டதாரி ஆசிரியர்
அருள்நெறித் திருப்பணி மன்றம் மேனிலைப் பள்ளி
ஈரோடு-3

பெரியார் மாவட்டச் செங்குந்தர் முதல் மாநாடு சீரோடும், சிறப்போடும் நடைபெற எங்களின் இனிய நல்வாழ்த்துக்கள்

M. P. தங்கராஜ் M. Sc.,
இணைவிரிவுரையாளர்
ஈரோடு தொழில்நுட்பக் கல்லூரி
கவுந்தப்பாடி-638 455

பெரியார் மாவட்ட செங்குந்தர்
முதல் மாநாடு சிறப்புடன்
நடைபெற நல்வாழ்த்துக்கள்

மு. தங்கவேலு D.T.Tech ,
S/o K. P. முருகேச முதலியார்,
கொண்டையம் பாளையம் (Po)
கள்ளிப்பட்டி (வழி) கோபி(Tk)
Pin: 638 505

பெரியார் மாவட்ட செங்குந்தர்

முதல் மாநாடு சிறப்புடன் நடைபெற வாழ்த்துக்கள்





க. அ. இராமசாமி, D,T. Tech.,
த/பெ. அ. ரா. அச்சுதன்
1/59 நேரு வீதி, கணக்கம்பாளையம்
கள்ளிப்பட்டி வழி,
பெரியார் மாவட்டம்

பெரியார் மாவட்ட செங்குந்தர் முதல்
மாநாடு சிறப்புடன் நடைபெற
வாழ்த்துக்கள்.





ம.ப. செல்வராஜு, D.H. Tech.,
ஆசிரியர் (E.I.T.)
மணியனூர் (P.O.),
சித்தாளந்தூர் Via, நாமக்கல் T,K,
சேலம் மாவட்டம்-637 201

மாநாடு வெற்றிபெற எனது நல்வாழ்த்துக்கள்

N. S. சண்முகசுந்தரம்

துடுப்பதி, பெரியார் மாவட்டம்.

எங்கள் குலம் வாழ்க ! வெல்க !!



★ நல் வாழ்த்துக்கள் ★



R. சண்முகசுந்தரம்,
விரிவுரையாளர்
கணிப்பொறியியல் துறை
ஈரோடு கலைக் கல்லூரி
ஈரோடு

நிறைவுடன் வெல்க !

நிறை நாள் வாழ்க !



நல் வாழ்த்துக்கள்



P. இராமசாமி, M.Sc., M. phil.,
கணிதத்துறை,
ஈரோடு கலைக்கல்லூரி
ஈரோடு-9

R. கௌரி,
R. ஆனந்த்,
R. சுரேஷ்குமார்,
ஈரோடு.

எங்கள் குலம் வாழ்க ! வெல்க ! !



★ நல் வாழ்த்துக்கள் ★



இவண்

E. சண்முகசுந்தரம்,

நெசவாசிரியர்

அருள்நெறி திருப்பணி மன்றம்

மேல் நிலைப்பள்ளி. ஈரோடு.

நிறைவுடன் வெல்க !

நிறை நாள் வாழ்க !

நல் வாழ்த்துக்கள்



S. நாகராஜன், M.Sc., M.Ed.,

முதுநிலை பட்டதாரி ஆசிரியர்,

அருள்நெறித் திருப்பணி மன்ற மேல்நிலைப்பள்ளி,

ஈரோடு-3

மாநாடு வெற்றிபெற நல்வாழ்த்துக்கள்



போன் : ஆபீஸ் : 70733
,, 77640
வீடு 72283

V. K. மாணிக்க முதலியார்

தலைவர், ஈரோடு மில்ஜவுளி வியாபாரிகள் சங்கம்

செயலாளர், ஈரோடு தாலுக்கா செங்குந்த மகாஜனசங்கம்

ராஜ் டெக்ஸ்டைல்ஸ்

193, A-நேதாஜி ரோடு ஈரோடு-1

V. K. M. சிட்பண்ட்ஸ்

25, மார்க்கெட் சந்து ஈரோடு - 1



''செங்குந்தர் சங்கம் செழுமை
பெறச் சிறியோன் செங்கணானின்
தாள் பணிந்து செப்பு தமிழால்
வாழ்த்துகிறேன்



இவண்

N. R. வரதராஜன், B. Teeh ,
AL/TEXTILES
ஈரோடு தொழில் நுட்பக் கல்லூரி
கவுந்தப்பாடி.

''பெரியார் மாவட்டச் செங்குந்தர்
முதல் மாநாடு சிறப்புற நடைபெற
வாழ்த்துக்கள்''





R. பூவராகவன், D.M.E., M.I.S,T.E.,
அமுதா டிரேடர்ஸ்
13, தெப்பக்குளம் வீதி
ஈரோடு-638 001





நல்லாசிரியர் விருது பெற்றவர்

பெயர்: **கே. எ. பழனியப்பன்,**

தலைமை ஆசிரியர்,

பஞ்சாயத்து யூனியன் உயர்தர

ஆரம்பப்பாடசாலை,

பொம்மன்பட்டி-கவுந்தப்பாடி

மாநாடு வெற்றிபெற நல்வாழ்த்துக்கள்!



Phone: ஆபீஸ்: 2479 (பவானி)
வீடு: 3045 ,,

கல்யாணி கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ்,

உயர்தர சலவைத் தண்ணீர் உற்பத்தியாளர் &
மில் சப்ளையர்

460, சேலம் மெயின்ரோடு,

கொமாரபாளையம்-638 183

உரிமையாளர்கள்: **A. P. R. A. சண்முகசுந்தரம், B.Sc.**
A. P. R. A. பொன்ராஜ், B.Tech.,

பெரியார் மாவட்ட செங்குந்தர் மாநாடு
சிறப்படைய எனது உளங்கனிந்த
நல்வாழ்த்துக்கள்!



M. M. இராமு

கோபிச்செட்டிப்பாளையம்

சங்கப் பதிவு எண்: 97/89

செங்குந்தர் முன்னேற்ற சங்கம்

செங்குந்தர் நகர்

121, ஈஸ்வரன் கோவில் வீதி, ஈரோடு - 638 001.

பெரியார் மாவட்டடம்.

R A N முத்துச்சாமி முதலியார்
தலைவர்

K N முருகேசன்
துணைத்தலைவர்

M S பழனியப்பன்
செயலாளர்

டாக்டர் **M அண்ணாதுரை**
இணைச்செயலாளர்

P K நஞ்சப்ப முதலியார்
பொருளாளர்

73214 PP.
71591 PP.
72526 PP.

நிர்வாக உறுப்பினர்கள்;

K பழனியப்பன்

V பாலகிருஷ்ணன்

B P மாணிக்கம்

K V இலட்சுமணன்

N ராமசாமி


A ஜகநாதன்

M கதிர்வேல்

R சண்முக சுந்தரம்

P குழந்தைவேலு

A நாராயணசாமி



எங்கள் நல்வாழ்த்துக்கள்!

With Best Compliments From



TNGST. RC. No. 719991
CST. RC. No. 4017

Phone No: 72016
Resi: 75973

Sivasubramaniam & Co.,

YARN & CLOTH MERCHANTS.

Post Box No. 304, ○ **ERODE - 638 001**

சிவசுப்ரமணியம் & கோ.,

நூல் & ஜவுளி வியாபாரம்,
209, நேதாஜி ரோடு. ஈரோடு-1.

நல் வாழ்த்துக்கள்



செ. மாரிமுத்து, பி.லிட்., பி.எட்.,
முதல்நிலைத் தமிழாசிரியர்
அருள்நெறித் திருப்பணிமன்றம் மேனிலைப் பள்ளி
ஈரோடு-3

பெரியார் மாவட்ட செங்குந்தர் மகாசன சங்க

மாநாடு சிறப்படைய வாழ்த்துகின்றேன்



M.சுந்தரன்
கலை ஆசிரியர்
அருள்நெறி திருப்பணி மன்ற மேல்நிலைப்பள்ளி,
ஈரோடு-3

WISHING THE FUNCTION EVERY SUCCESS:

FOR QUALITY AND DURABILITY

USE ALWAYS AEM FABRICS

A CLASSIC NAME IN LUNGIES

AEM FABRICS

A.EASWARA MUDALIAR&SONS
20.EASWARANKOVIL ST.,ERODE-1

Dealers of: TATA, MODI, BOWREAH and PCM MILL LUNGIES.

Mfrs. of : HIGH CLASS POLYESTER & COTTON PRINTED LUNGIES

Phone No. 76599

A. EASWARA MUDALIAR & SONS

P.B.No. 625

No. 20 EASWARAN KOVIL STREET, ERODE- 638 001.







வாழ்க செங்குந்தம்! வளர்க ஒற்றுமை!

பெரியார் மாவட்ட

செங்குந்தர் மகாசன சங்க

முதல் மாநாடு வெற்றிபெற

எங்கள் இதயங்கனிந்த

நல்வாழ்த்துக்கள்